# திருப்புகலூர் அந்தாதி



ஸ்ரீ சந்திரசேகரர்

(அக்னி தீர்த்த படித்துறையில் உள்ளது)

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

T. 22813

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 554

# திருப்புகலூர் அந்தாதி

பதிப்பாசிரியர்

**கோ. சேதுராமன்,**

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்,

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

மற்றும்

**ஆய்வு மையம்,**

தஞ்சாவூர்.

2014] [விலை: ரூ. 180-00

## நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | திருப்புகலூர் அந்தாதி |
| பதிப்பாசிரியர் | : | கோ. சேதுராமன்<br>சிறப்புக்கேண்மை<br>பதிப்பாசிரியர், |
| வெளியிடுபவர் | : | இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம்,<br>தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 554 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2014 |
| தாள் | : | TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : | 21 x 14 செ.மீ. |
| பக்கங்கள் | : | 312 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சுக்கோப்பு<br>மற்றும் ஒளி அச்சு,<br>சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : | லேமினேசன் அட்டை |
| பொருள் | : | இலக்கியம் |
| விலை | : | ரூ. 180-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

உலகப் புகழ்பெற்ற சரசுவதி மகால் நூலகத்தின் தமிழ்த்துறையில் நெற்குன்றவாணர் இயற்றிய திருப்புகலூர் அந்தாதி எனும் ஏட்டுச் சுவடி நூல் உள்ளது. இந்நூல் பாடல் ஒன்றுக்கு நான்கு வரிகளைக் கொண்டு அமைந்த 100 செய்யுட்களால் ஆனது. இந்நூலினை இயற்றிய புலவர் முதற்குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தவர் ஆவார். இவர் தமிழ் மொழியில் மட்டுமின்றி வடமொழியிலும் புலமைப் பெற்றிருந்தார்.

சோழ நாட்டு சிவத்தலங்களுள் திருப்புகலூரும் ஒன்றாகும். பழைய தஞ்சாவூர் மாவட்டத்து நன்னிலத்துக்கு அடுத்து உள்ளது இவ்வூர். கி. பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்தே வழிபடு தலமாக விளங்குவது திருப்புகலூர். இவ்வூரிற்கு சரண்யபுரம் என்ற பெயரும் உண்டு. வறுமைக்கு அஞ்சிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவ்வூர் இறைவனை வழிபட்டு பொற்செங்கல் பெற்றார். இரக்தாரண்யம் என்ற பெயரும் இவ்வூருக்கு உண்டு. இறைவன் அக்னீஸ்வரர், அம்பிகை கருந்தாழ்குழலி. இவர்கள் அருள்பெற்று விளங்கும் திருப்புகலூரின் பல்வேறு செய்திகளை உள்ளடக்கி அந்தாதி வடிவில் எழுந்ததே இந்நூலாகும்.

இந்நூலினை சிறப்பாகப் பதிப்பித்துள்ளார் சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் கோ.சேதுராமன் அவர்களின் பணி பாராட்டுக்குரியதாகும். முதல்ப் பதிப்பாக இந்நூல் சிறப்பாக வெளிவர ஆவன செய்துள்ள நூலக நிருவாக அலுவலர் (பொ.) திரு. ம. சங்கரநாராயணன், B. A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன் அவர்களுக்கும், கணினியில் அச்சிட்டளித்த நூலகப் பணியாளர்களுக்கும், அச்சகப்பிரிவு பணியாளர்களுக்கும், ஏனையோருக்கும் என் வாழ்த்துதலையும், பாராட்டுக் களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினை வெளியிட நிதியுதவி நல்கிய அரசிற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சாவூர்,
06-02-2014.

**டாக்டர் என். சுப்பையன்,** இ. ஆ. ப.,
**மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்**
**இயக்குநர்.**

# பதிப்பாசிரியர் முன்னுரை

உலகத்து உயிர்களை எல்லாம் ஆக்கியும் காத்தும் அழித்தும் பெருந்தொழில் புரியும் ஒரு தனித்தலைவனை "அரி" என்றும் "அரன்" என்றும் அன்றி வேறு ஒருவன் என்றும் ஆன்றோர் எழுதிவைத்தனர்.

அவரவரும் தத்தம் இறைவனைத் தலைவனாகக் கொண்டு, அவனை வழிபடும் வகையில் இலக்கியங்களைத் தமிழில் நிறையவே எழுதி வைத்துள்ளனர்.

உயர்தனிச் செம்மொழியாம் நம் தமிழ்மொழியே பேரிறை மொழி "மஹாதேவ பாஷை" சமக்கிருத மொழியை "தேவபாஷை" என்பர்.

அரிய இலக்கண நூல்கள் மற்றும் பெரிய இலக்கிய நூல்கள் மட்டுமின்றி சிற்றிலக்கிய வகை நூல்களும் சேர்ந்தே தான் தமிழை வளர்த்துள்ளன.

தமிழறிந்த ஒருவன் தன்னிறைவனாகச் சிவனைத் தலைவனாகக் கொண்டு இலக்கியம் படைத்தபோது, திருமாலைச் சிவனினும் சக்தி குறைந்தவனாகக் கூறினான். இதற்குச் சற்றும் சளைக்காமல் திருமாலைத் தலைவனாகக் கொண்டு இலக்கியம் படைத்தோர் சிவனைவிட திருமாலே திறன் மிக்கவர் என்று கதை கூறினர். ஆக இது எவ்வாறே யாயினும் தமிழுக்கே பலன் கிட்டியது எனலாம். இதில் சந்தேகமே இல்லை.

இதுவன்னியில் கிருத்துவர்களும், இஸ்லாமியர்களும் தமிழுக்குச் செய்துள்ள பணி நிறைவானதே!

நம்முன்னோர்கள் எழுதிவைத்த பல அரிய தமிழ் நூல்கள் இன்றும் கூட எழுதியது எழுதியபடி-ஏடுகளாக-சுவடிகளாக பல நூலகங்களில் அவ்வப்போது சுத்தப்படுத்தி மட்டும் வைக்கப்பெற்று வருகின்றன. அவைகளில் சில பதிக்கப்பெற்றும் வருகின்றன. அவ்வகையில், உலகப் புகழ் பெற்ற நமது சரசுவதி மகால் நூலகத்தில் தமிழ்ப் பிரிவில் உள்ள நெற்குன்றவாணரின் திருப்புகலூர் அந்தாதி எனும் இச்சிற்றிலக்கிய நூல் வெளியிடப்பெறுகிறது.

இந்நூல் பாடல் ஒன்றுக்கு நான்கு வரிகளைக் கொண்ட ஒரு நூறு செய்யுட்களைக் கொண்டது. முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் வாழ்ந்த கவிஞர் நெற்குன்றவாணர், தமிழ் மொழியில் மட்டுமின்றி சமக்கிருத மொழியிலும் வல்லுனர். ஏராளமான பழந்தமிழ் நூல்களைக் கற்ற பெரும்புலவர்.

இவர் தமது ஒவ்வொரு செய்யுளிலும் சொற்களை அடுக்கியுள்ள முறை வியப்பிற்குரியது. அப்புலவர் பெருமான் எவ்வாறு சொற்களை இணைத்துள்ளாரோ அவ்வாறே சற்றும் பிழையின்றி சொற்களைப் பிரிக்கவேண்டும், இல்லையேல் செய்யுளின் பொருளை விளங்கிக்கொள்ள இயலாது. மேலும் தமிழ் வல்ல பேரறிஞர்களால் மட்டுமே இவர்தம் சொல்லடுக்கினைப் பிரித்துப் பொருள் காண இயலும். பலாப்பழம் போன்றவை. ஒரு செய்யுளுக்குப் பொருள் சொல்லப் பல நூல்களைக் கற்றிருக்கவேண்டும். ஆனால் செய்யுட்களைப் படிக்கும்போது இனிமையாகவே இருக்கும். நினைவிற்கொள்ளக் கூட எளிமையாகவே இருப்பனவாகும். அதனால்தான் சில ஆண்டுகளுக்கு முன் இந்நூலிற் காணப்பெற்ற பாடல்களைத் தமிழில் உயர்கல்வி பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு பாடநூலாக வைத்திருந்துள்ளனர்.

“பழஞ்சுவடிகளினின்றும் அரிய தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும்போது அந்நூல் தொடர்பான, எவ்வளவு செய்திகளைத் தொகுத்துத் தர இயலுமோ, அவ்வளவையும் திரட்டித்தருவதோடு, பின்னாளில் அந்நூல் கொண்டு ஆய்வுப்

பணியினை மேற்கொள்வோருக்கு உதவியாகத் தேவையான செய்திகள் அனைத்தையும் குறிப்பிட்டு வைக்கவேண்டும்" என்பது தமிழ்த்தாத்தா, மகா மகோபாத்யாய டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் பதிப்பாசிரியர்களுக்குக் கூறியுள்ள அறிவுரையாகும்.

இத்திருப்புகலூரையே தம்மூர் போலக் கருதி நீண்ட நாட்கள் இங்குறைந்தவர்களான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவரும் இங்குறை இறைவனாரின் பேரில் பதிகங்கள் பாடியருளி உள்ளனர். புகலூரரன் பேரில் இரண்டும், வர்த்தமானீசர் பேரில் ஒன்றுமாக மூன்று பதிகங்களை சம்பந்தரும், பொதுப் பதிகங்களாக பதினான்கினையும், புகலூர்த் தலப்பதிகங்களாக ஐந்தினையும் திருநாவுக்கரசரும் பாடியருளியுள்ளார்கள். சுந்தரர் ஒரு பதிகத்தை பாடியுள்ளார். ஆக இருபத்து மூன்று பதிகங்கள் இத்தலத்திற்கு உள்ளன. அவற்றுள் எட்டுப் பதிகங்களில் உள்ள எண்பத்தெட்டு பாடல்களில், நெற்குன்றவாணர் தம் அந்தாதியில் கூறப்பெற்றுள்ள செய்திகளே மிகவும் கூறப்பெற்றுள்ளன. சுமார் எண்பது சொற்கள் முழுமையாகவே மூவர்தம் பாடல்களில் உள்ளது உள்ளவாரே அந்தாதியிலும் எடுத்தாளப்பெற்றுள்ளன.

சம்பந்தர், திருநாவுக்கரசர், சுநதரர் ஆகிய இம்மூவர் களும் வாழ்ந்த காலத்திற்கும் நெற்குன்றவாணர் வாழ்ந்த காலத்திற்கும் இடையே சில நூற்றாண்டுகள் இடைவெளி உண்டு, இதுவும் ஆய்விற்குரியதாகும். எனவே அவ்வெண்பத் தெட்டு பாடல்களை மட்டும் இந்நூலில் இணைத்துள்ளேன். இவைகளைத் தவிர, இத்திருப்புகலூரில் உள்ள திருக் கோயிலின் கண்ணுள்ள இறை திருமேனிகளைப் பற்றி திருவாமாத்தூர் மகான் வண்ணச்சரபம் தண்டபாணி

சுவாமிகள் பாடியுள்ள பாடல்கள் இருநூறு உண்டு, அவற்றில் திருப்புகலூர் மங்களப் பாடல் ஒன்றினை மட்டும் நூலின் நிறைவுப் பகுதியில் இணைத்துள்ளேன்.

இந்நூலினை வெளியிட பெருந்தன்மையுடன் அனுமதி வழங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் **டாக்டர் என்.சுப்பையன்,** இ. ஆ. ப., அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியினை உரித்தாக்குகிறேன். இப்பணிகளுக்கு ஊக்கமளித்து, தேவையான உதவிகளை செய்த மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் நூலக நிருவாக அலுவலர் **ம. சங்கரநாராயணன்,** B. A., அவர்களுக்கும், இந்நூல் முழுவடிவம் பெற அனைத்து வகையிலும் உதவி செய்த நூலகர் முனைவர் **எஸ்.சுதர்ஷன்,** M.A.,B.Lit.,M.L.I.S.,Ph.D. அவர்களுக்கும் என்னுடைய நன்றிகள். நூல் அச்சு வடிவம் பெற்று வெளிவர நிதி நல்கும் நடுவணரசிற்கும் நன்றி ! இந்நூலை நன்கு அச்சிட்டுத் தந்த சரசுவதி மகால் நூலகக் கணினிப் பிரிவில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்கி மகிழ்கிறேன். இந்நூலிற் காணும் குறைகளைச் சுட்டிக் காட்டுவோர்க்கு என்றும் நன்றியுடையவனாவேன்.

**கோ. சேதுராமன்,**
சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்.

# திருப்புகலூர் – தல வரலாறு

தமிழ்நாட்டின் வளமிக்க தஞ்சாவூர் மாவட்டத்து நன்னிலம் என்ற ஊரை அடுத்து உள்ளது திருப்புகலூர். நல்ல போக்குவரத்து வசதி உள்ளது.

இப்புகலூருக்கு அருகிலேயே, திருச்செங்காட்டாங்குடி திருமருகல், திருச்சாத்த மங்கை, திரு இராமனதீச்சரம் என்னும் சிவத்தலங்களும் திருக்கண்ணபுரம் எனும் வைணவத் தலமும் உள்ளன.

காவிரி ஆற்றின் கிளை ஆறுகளாகிய, முடிகொண்டான் ஆறும், திருமலைராஜன் ஆறும் இவ்வூரின் இருபுறமும் ஓடி விவசாயத்தை செழிக்க வைத்துள்ளன. “காவிரி பாயும் சோழ நாட்டின் வளம் கண்டறிய வேண்டில் திருப்புகலூரை மட்டும் காணின் போது” மென்பர்.

சோழநாட்டில் எண்ணலடங்கா சிவன் கோயில்கள் உண்டு. அவற்றுள் இருநூற்றெழுபத்து நான்கு தலங்களை சிறப்பித்துக் கூறுவர். இவற்றில் தேவாரப்பதிகம் பெற்றவை இருநூற்றெழுபத்து நான்கு எனவும் அவற்றுள் வைப்புத் தலங்கள் எனச் சிறப்பிக்கப் பெறுபவை இருநூற்று நாற்பத்து ஒன்பது எனவும் “திருப்பதிக் கோவை” கூறும்.

“சிவக்ஷேத்திர யாத்ரானுகூலம்” என்னும் ஒரு சிறுநூல் தஞ்சாவூர் மாவட்டம் சாரியமங்கலம் மு. சாம்பசிவ நாயனார் அவர்களால் 1903ல் வெளியிடப்பெற்றுள்ளது. (உ.வே.சா. நூலகம், சென்னை. புத்தக எண்-1282) இதில்,

கருக்குடி வாஞ்சியந் திருநன்னிலத்துப்
பெருங்கோயில் கவின் கொண்டீச்சரம்
பனையூர் விற்குடி தென் புகலூர்
இருக்கும் வர்த்த மானேச்சரமே பாயல்
பயற்றூர் செங்காட்டங்குடி.............

என சிவத்தலங்கள் வரிசையாக கூறப்பெற்றுள்ளன. இந்நூலில் சோழநாட்டுத் திருத்தலங்கள் நூற்றுத் தொண்ணூறு எனவும், இவற்றில் காவிரி ஆற்றின் வடகரைத் தலங்கள் அறுபத்து மூன்று எனவும், தென்கரையில் உள்ள தலங்கள் நூற்று இருபத்தேழு எனவும் குறிப்பிடப் பெற்றுள்ளது. இதில் நூற்று முப்பத்தெட்டாவது தலமாக இத்திருப்புகலூர் குறிப்பிடப்பெறுகிறது. இதுவன்றி சிவத்தலங்கள் ஆயிரத்தெட்டு எனவும கூறுவர். "பசுவின் மடிவழிபால் பெறுதல் போல" அஞ்சிவந்தோர்க்கு அபயம் கொடுத்து, சித்தித் தலமாயும் முத்தித் தலமாயும் விளங்குவது இத்திருப்புகலூர்.

இவ்வூர் மக்கள் விவசாயத்தையே தொழிலாகக் கொண்டவர்கள். கி. பி. ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டிற்கும் முன்பிருந்தே இக்கோயில் வழிபடுதலமாக விளங்கிவருகிறது. கிழக்குப் பார்த்த சந்நிதி-நாற்புரமும் கட்டுக்கரை அமைந்த நீர் அகழி-தோணியிற் சென்று தான் கோயிலை அடையும் நிலை இருந்துள்ளது. ஆனால் தற்போது அகழியைத்தூற்று வழி செய்துள்ளனர். தொண்ணூறு அடி உயரக்கோபுரம், ஐந்து நிலைகள்-மதில் சூழ்ந்த கோயிற் பகுதியின் பரப்பு எழுபத்து மூவாயிரத்து நூற்று இருபத்தைந்து சதுர அடிகள், இருநூற்று இருபத்தைந்தடி நீள மதிற்சுவர். இரண்டு பிரகாரங்கள், அகழிக்கும், மதிற்சுவற்றிற்கும் இடையே அப்பர் நந்தவனம், இனிய மணமிக்க பூச்செடிகள் திருமுருக நாயனார் நந்தவனம் என மூன்றரை ஏக்கர் பரப்பளவு கொண்ட வேறு ஒரு நந்தவனமும் உண்டு. இத்தோட்டத்தைச் சுற்றியுள்ள அகழியின் அகலம் ஒரு நூற்று முப்பது அடி. இப்புகலூரை இரட்டைத்தலமென்பர். ஏனெனின் இக்கோயிலுக் குள்ளேயே வடக்குப் பகுதியில், "வர்த்தமானீச்சரம்" என்ற ஒரு திருத்தலம் உள்ளது. முருகநாயனார் வழிபாட்ட இத்தலத்திற்கு திருஞானசம்பந்தரின் திருப்பாடல்கள் உண்டு. இத்திருப்புகலூரைப் போன்றே ஒரே கோயிலினுள் இரு தலங்கள் அமைந்த ஊர்கள், திரு ஏகம்பத்தில் திருமயானம், திருவாரூரில் அரநெறிமீயச்சூரில் இளங்கோயில்

என்பனவாகும். வாதாபி, வில்வலன் என்ற இரு அசுரர்களுக்கு அஞ்சி ஓடிய தேவர்கள் இப்புகலூருக்கு வந்து தஞ்சமென இறைவனைப் பற்றினார்கள். அகத்தியர் அவ்விரு அசுரர்களை அழிக்கும் காலம் வரை தேவர்கள் சரண்புகுந்த இடமாதலால் "சரண்யபுரம்" எனப்பெயர் பெற்றது இத்திருப்புகலூர்.

பிறவித்துன்பத்திற்கு அஞ்சிய பரத்வாஜர் காசியபர் போன்ற முனிவர்களும் இத்திருப்புகலூருக்கே வந்தடைந்து துயர் நீங்கினார்கள். வறுமைக்கு அஞ்சிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் வந்தடைந்து இறைவனை வழிபட்டு "பொற்செங்கல்" பெற்றதும் இவ்வூரில்தான். அரசுக்குச் செலுத்தவேண்டிய வரிப்பணத்தைக் கட்ட இயலாத நம் நெற்குன்றவாணர் வந்தடைந்ததும் இப்புகலூரே!

தலவிருட்சம்-புன்னை மரம்-ஒரு காலத்தில் அக்கினி தேவன் சிவனைக் குறித்து தவம்புரியவந்தடைந்த இடம் இது. அப்போது புன்னை மரங்கள் நிறைந்த காட்டுப் பகுதியாக இருந்ததன் காரணமாக "புன்னாகவனம்" என்ற பெயரும் இத்திருப்புகலூருக்கு உண்டு.

தலபுராணத்து கதையின்படி "இரக்தன்" என்ற ஒரு அசுரன் இத்திருப்புகலூர்த் தலத்தில் நெடுங்காலம் தங்கி இருந்து தவம் செய்தமையால் "இரக்தாரண்யம்" என்ற பெயரும் இவ்வூருக்கு உண்டு.

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள், "ஆரூர்த்தில்லை" எனத்தொடங்கும் திருச்சேத்திரக்கோவைப் பதிகத்தில் ஐந்தாம் பாடலில் "சேறை துலை புகலூர் இவை காதலித் தானவன் சேர் பதியே" என்பார்-"துலை" என்றும் அவனுடைய ஆட்சியின் பிற்பகுதியில் "மும்முடிச்சோழ வளநாட்டுப் பனையூர் நாட்டுப் பிரமதேயமான திருப்புகலூ ராயிற்று எனவும் பின்னர் முதற்குலோத்துங்கசோழன் காலத்தில் இதுவே குலோத்துங்க சோழனது வளநாட்டினை தாயிற்று எனவும் இத்திருப்புகலூரைப் பற்றிய வரலாறு கூறுகிறது.

திருமால் முரன் என்ற அசுரனைக் கொன்ற பாபம் தீர, இத்திருப்புகலூர் இறைவனை வழிபட்டார். பின்னர் அத்திருமாலே புன்னை மரமாகி நின்றார் எனவும் புராணக் கதை உண்டு. இத்திருப்புன்னை மரமானது வழிபடுவோர்க்கு செல்வ நலம் தருவதெனவும், மரத்தினின்றும் பூ காய் இலைகளைப் பறித்தோர் பொருள் நீங்கி துன்புறுவர் எனவும், இம்மரநிழலில் நின்று நியமத்துடன் இறைவனை வழிபட்டோர்க்கு செபசித்தியும், முக்தியும் கிடைக்குமெனக் கூறுவர். தலவிருட்சமாகி நின்ற இப்புன்னை மரம் கோயிலின் பிரகாரத்தில் உள்ளது.

இத்திருப்புகலூர்க் கோயிலில் உறையும் இறைவனாரின் திருப்பெயர் அக்னீஸ்வரர் என்பது, சுயம்புவானவர் தானாகத் தோன்றியவர் எனப்பொருள். அக்னிபுரீசர், சரண்யபுரீசர், புன்னாக வனநாதர், பிரத்யட்சவரதர், மற்றும் கோணப்பிரான் எனவும் வேறு பெயர்கள் உண்டு.

மூலத்தான அம்பிகை "கருந்தாழ்குழலி" கோயிலின் உட்புறத்தே கொடிமரத்திற்கெதிரே சன்னதி உள்ளது. சமக்கிருத மொழியில் "சூளிகாம்பால்" என்பர்.

இறைவன் இறைவிக்கான "பள்ளியறை"யும் உண்டு. மற்றுமொரு மூலத்தானம் "ஸ்ரீ வர்த்த மானீச்சரம்" இறைவனின் பெயர் "வர்த்தமானீசர்", "நிகழ்கால நாதர்" எனப் பொருள் கொள்ளலாம். இறைவி "மனோன்மணி" தேவியார் என்பது இவ்விறைவனார்க்கு மலரிட்டு வழி பட்டவர் முருகநாயனார். இவரது திருவுருவம் அம்மன் சன்னதிக்கெதிரில் உள்ளது. அக்கினித் தீர்த்தக்கரையில் விழாக் கொண்டருளும் பெருமானாகி சந்திரசேகரமூர்த்தியின் திருஉரு அம்மையுடன் கூட உள்ளது.

சந்திரசேகரமூர்த்திக்கும் எதிரில் ஏழு தீக்கொழுந்து எரிவது போன்ற தலையுடன் வக்கிர தந்தமும், ஏழு கைகளும், மூன்று கால்களும் நான்கு கொம்புகளும் அமைந்த

திருமேனியாக அக்கினிதேவனின் உருவு உள்ளது. எழுந்தருளும் திருமேனியும் உண்டு. உட்பிரகாரத்தில் விநாயகர் திருமேனி உள்ளது. இத்திருவுருவானது வாதாபி விநாயகனின் திருவுரு ஒத்து இருப்பதாலும், வாதாபி, வில்வலன் ஆகியோர் வழிபட்டமையாலும் இவ் விநாயகருக்கு "வாதாபி கணபதி" எனப்பெயராயிற்று.

சந்திரசேகர அகோர லிங்கத்திற்குப் பின்புறத்தே "பூதேஸ்வரர்" என்ற சிவலிங்கமும், இதற்கும் வடபுறத்தே "பவிஷ்யதேஸ்வரர்" ஆலயமும் அமைந்துள்ளது.

"பூதேஸ்வரர்", "வர்த்தமானீசர்", "பவிஷ்யதேஸ்வரர்" என்ற மூவுருக்கள் முறையே கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றிற்குத் தெயவங்களாக விளங்குவன வாகும். எனவே இறைவனார் காலம் கடந்து "காலாதீதமூர்த்தி" யானவர் ஆகிறார்.

இவ்வாறு இறைவனார்களின் திருவுருவங்களோடு கூட, ததீசிமுனிவர், பராசகர், பிருகு, புலஸ்தியர், ஜாபாலி, பரத்வாசர், வாமதேவர் போன்ற முனிவர்கள் வழிபட்ட சிவலிங்க உருக்களும் தனித்தனியே உள்ளன.

அகோரலிங்கம், நீலகண்டர் லிங்கம், சிந்தாமணீசர் திருவுருவங்களும், நாயன்மார்கள் அறுபத்து மூவரின் திருவுருவங்களும் உள்ளன. பெயர்கள் எழுதப்பெற்றுள்ளன.

உட்பிரகாரத்தில் அழகான நடராஜர் திருவுரு உள்ளது. அருகில் சிவகாமசுந்தரி-பதினோறாம் நூற்றாண்டு காலத்தியது என்பர். விநாயகர் கோவிலுக்குப் பக்கத்தில் அப்பர் சுவாமிகளின் சன்னதி விளங்குகிறது.

மேலும் இத்திருப்புகலூர் கோயிலில், கல்யாணசுந்தரர் திரிபுர சம்ஹார மூர்த்தி, பாணாசூரன் ஆகியோரின் ஐம்பொன் சிலைகளும் உள்ளன.

## கோயிற் பூசனைகளும் விழாக்களும்

திருப்புகலூர்க் கோயிலில் நாளும் ஆறுகாலப் பூசைகள் நிறைவாகச் செய்யப்பெறுகின்றன. மாலையில் வெண் பட்டாடை கட்டி இறையுருவை அலங்கரிக்கப்பது இவ்வூரின் சிறப்பாகும். அபிஷேகத்திற்குரிய பாலுக்கென பசுக்கள் வளர்க்கப்பெறுகின்றன. கோசாலை உண்டு.

**விழாக்கள்:** ஆண்டுதோறும் வைகாசி விசாகப் பெருவிழா பத்துநாட்கள் நடைபெறுகின்றன. பத்தாம்நாள் தீர்த்தவாரி.

**அப்பர் திருநாள்:** திருப்புகலூரின் மிகச் சிறப்பான பத்துநாள் விழா-முதல் நாள் "சூலை நோய்" நீங்கியது. இரண்டாம்நாள் பல்லவ மன்னன் அப்பரை சுண்ணாம்புக் காளவாயில் இட்ட வரலாறு சார்ந்த விழா, மூன்றாம்நாள் அப்பருக்கு விட மூட்டி யானையை விட்டு இடறச் செய்த போதும் பிழைத்தது. நான்காம்நாள் கற்றூணைப் பூட்டி கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே எனும் வரலாறு. ஐந்தாம் நாள் சிவபெருமானின் முன்பு அப்பர் விண்ணப்பம் செய்து இடபமுத்திரையும் சூல முத்திரையும் இட்டுக்கொண்ட நிகழ்ச்சி. ஆறாம்நாள் இறைவனாரின் ஆணையின்படி திருநல்லூரையடைந்து திருவடி தீட்சை பெற்ற நிகழ்ச்சி. ஏழாம் நாள் பாம்பு கடித்து இறந்த அப்பூதியடிகளாரின் மகனாகிய மூத்த திருநாவுக்கரசனை பதிகம்பாடி உயிர் வெற்று எழச்செய்த நிகழ்வு பகலிலும் அன்று இரவு. திருப்பழன வழிபாடு-நிகழ்த்தப்பெறுகிறது. எட்டாம்நாள்-காலையில் திருவீழிமிழலையில், பஞ்சம் தீரப் படிக்காசு பெற்றமை-இரவு திருமறைக்காட்டில் வேதம் அடைத்த கோயிற்கதவு திறக்கப்பாடிய நிகழ்ச்சி-இடபாருடக் காட்சி-ஒன்பதாம் நாள்-சமணர்கள் மறைத்த சிவலிங்கத்தைப் பதிகம்பாடி பூசித்ததும் இரவில் திருக்கயிலாய யாத்திரை ஆங்கோர் குளத்தில் மூழ்கி திருவையாற்றிலொரு பொய்கையிலெழுந்து "தட்சிண கைலாயம்" கண்ட நிகழ்ச்சியின் விழா. பத்தாம் நாள் காலைப்

போதில்-அப்பர் சுவாமிகள் திருப்பைஞ்ஞலிக்குச் செல்லும் வழியில் இறைவனார் அந்தணர் உருவாய் வந்து அமுதளிக்க அப்பர் உழவாரப்பணி செய்த இடங்களில் பொன்னும் மணியும் சிந்திக் கிடக்க அவைகளையும் பருக்கைக் கற்களோடு சேர்த்தள்ளி பொய்கைக் கரையில் வீசியெறிந்த காட்சி, அப்பரின் நிலைகுலையச் செய்ய வந்தாடிய அரம்பையர்களை சோரச் செய்த காட்சி மூன்றாம் சாம நேர இரவில் "நண்ணெறிய சிவானந்த வடிவாகிய அண்ணலார் சேவடிக் கீழ் ஆண்ட அரசு அமர்ந்திருந்த நிகழ்ச்சியிப் பெருவிழா எண்ணுகேள் என் சொல்லி எண்ணு கேளோ" எனும் பண் பாடப்பெறுகிறது. இத்தோடு அப்பர் விழா நிறைவைக் காணுகிறது. பட்டோற்சம் எனும் சிறப்பு விழா வொன்று நடத்தப்பெறுகிறது.

**தைப்பூசத் திருவிழா** - ஆண்டுதோறும் தைமாத பூசத்தன்று அதிகாலையில் சேமாஸ்கந்த மூர்த்தி அழகிய பல்லக்கில் எழுந்தருளி, புளியங்குடி, தெற்குலேரி, அண்ணா மண்டபம், கூத்தப்பட்டர் தோப்பு, போலகம் ஆகிய கிராமங்களின் வழியாக ஊர்வலம் வந்து புறக்குடி சரண்யபுரம் என்ற கிராமத்திற்குப் பல்லக்கு வந்து சேருகிறது. பின்னர் அரிசிலாறு உத்திரவாகினி தீர்த்தத்தில் ரிஷபாரூடராக தீர்த்தம் கண்டருளி சிறப்பு தீபாராதனை நிகழ்கிறது. பல்லக்கு ஊர்வலத்தின் வழி நெடுகிலும் கிராம மக்கள் பட்டு பரிவட்டங்கள் சாத்தி இறைவனை வழிபட்டு பேரானந்தம் பெறுகின்றனர். அற்புதமான ஆன்ம நேயக் காட்சி இது.

**திருக்கோயில் சார்ந்த மண்டபங்கள்:–** அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்நான மண்டபம், வஸந்த மண்டபம், நீராழி மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், அக்னி தீர்த்த மண்டபம் என்பன விளங்குகின்றன.

அர்த்த மண்டபத்தைக் கட்டியவன் ஸ்ரீகுன்றையூரை யுடையான் அரையன் கங்கைகொண்டானான சோழ விச்சாதரப்பல்லவரையன் என்பான், செங்கல் திருப்பணி.

மூன்றாம் குலோத்துங்கன் காலத்து சிற்றரசன் கோப்பெருஞ்சிங்கன் (கி.பி.1229-1278) கட்டியது நூற்றுக்கால் மண்டபம், இவனே சிதம்பரத்தில் நூற்றுக்கால் மண்டபமும் கட்டியவன். "நரலோக வீரன் மண்டபம்" எனப்பெற்ற இம்மண்டபம் தற்போது திருநாவுக்கரசர் மண்டபம் என வழங்கப்பெறுகிறது. இம்மண்டபத்தின் உட்புறத்தில் அப்பரின் திருவுருவச் சிலையுடன் கூடிய அலங்கார மண்டபமும் உள்ளது. நீராழி மண்டபத்தைக் கட்டியவர் "ஆற்காடு கிழான் சேதிராயன் என்பவராவார்.

கல்வெட்டுகள்:- இக்கோயிற் சுவர்களில் உள்ள கல்வெட்டுகளில் அறுபத்தேழு மட்டும் தமிழ்நாடு அரசு கல்வெட்டுத் துறையினரால் பதிவு செய்யப்பெற்றுள்ளன. (A.R. No. S. 42 to 108 of 1928) இவற்றுள், திருமுறைகண்ட சோழனான முதல் இராஜ ராஜ சோழனின் மகனான இராஜேந்திர சோழன் காலத்தவை மூன்று (கி. பி. 1012-1145) முதற்குலோத்துங்கன் காலத்தவை 12-(கி.பி.1072-1178), மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தவை 10-(கி.பி. 1178-1218) இக்கல்வெட்டுகளின் மூலம் திருப்புகலூர் இறைவனாரின் திருப்பெயர்களையும், தலப்பெயர்களையும், திருக்கோயிற் பணியாளர்களைப் பற்றியும் விரிவாக அறியலாம்.

திருப்புகலூரைப் பற்றிய செய்தி ஈண்டு மிகச் சுருக்கமாக கொடுக்கப்பெற்றுள்ளது. விரிவான வரலாற்றினை அறிய திருப்புகலூர் கோயில் வெளியீட்டினைப் படித்தறியவும்.

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

# நூலாசிரியர் வரலாறு

திருப்புகலூர் அந்தாதி எனும் ஒரு நூற்று ஒரு பாடல்களைக் கொண்ட அந்தாதி நூலை இயற்றியவர் பெயர் "நெற்குண்ற வாணர்" என்பது. இவரை "நெற்குன்ற வாண முதலியார்" எனவும், "ஆமூர் முதலி" எனவும் குறிப்பிட்டுள் ளார்கள்.

நெற்குன்றம் என ஒரு சிற்றூர் சென்னை சைதாப் பேட்டைக்கும் அருகில் உள்ளது. மேலும் கரந்தைச் செப்பேட்டுத் தொகுதி எனும் தொல்பொருட்துறையினரால் வெளியிடப்பெற்றுள்ள நூலில் தஞ்சாவூர் மாவட்டத்துக் கிழக்குப் பகுதியில் அம்மாப்பேட்டைக்கு அருகில் வெண்ணாற்றாங்கரையில் நெற்குன்றம் என்பதாக ஒரு சிற்றூர் குறிப்பிடப்பெற்றுள்ளது. தற்போது இது நெய்க்குன்னம் என்ற பெயரில் உள்ளது. ஆயினும் தொண்டை மண்டலத்து நெற்குன்றமே இவரது ஊர் எனலாம்.

களப்பாள கோத்திரத்து வேளாண் மரபினர், கல்வியிற் சிறந்தவரான இவர் பெருஞ்செல்வம் படைத்தவர். கொடை வள்ளல்.இப்பெருமானாரின் கொடைத் திறம் பற்றி அறிந்த "யாதவர் கோன் நம்பி காளி" எனும் புலவர், நெற்குன்ற வாணரிடம் வந்து அவரைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்றார். அப்போது காளியின் கவித்திறம் கண்டு வியந்த நெற்குன்றவாணர்

"கற்கும் கவிவல்லை யாதவர் கோனம்பி காளிக்கியாம்
விற்கும் பரிசனமாகி விட்டோம், வடவேங்கடமும்
பொற்குன்றமும் புகழ்க் கங்கா நதியும் பொதியமும் போல
நெற்குன்றமு நம் மரபு மென்னாளு நிலை நிற்கவே."

என்ற பாடலைப் பாடியுள்ளார்.

தொண்டை மண்டல சதகம் எனும் நூலின் எண்பத்து மூன்றாம் பாடல்:-

"பன்னும் தமிழ்க்கவன் மாமனைத் தாதி பரிசளிப்ப
முன்னம்பி காளிக்கு நெற்குன்ற வாண முதலியென்போன்
பின்னுஞ் சிலபல பொன்னுங் கொடுத்துத்தன் பேர் நிறுத்த
மன்னுந் தமிழுரைத்தா னவனவன் றொண்டை மணடலமே".

எனக் கூறுகிறது.

இதன்படி இவ்வாசிரியர் நெற்குன்ற வாண முதலி ஆகிறார். இவரது வள்ளற்றன்மையை அறிய ஒரு மேற்கோள் பாடல் உள்ளது.

"உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற ஒருகோடி
வெள்ளங்காலந் திரிந்து விட்டோமே-தெள்ளுதமிழ்
ஆமூர் முதலி யரசர் பிரானிங் கிருக்கப்
போமூர் அறியாமற் போய்"

என்பது அது.

மேலும், திருப்புகலூரில் உள்ள அக்கினிபுரீசுவரசுவாமி கோயிலின் உட்பிரகாரத்து வடக்குப் புறச் சுவற்றில் ஒரு கல்வெட்டு உள்ளது. அதில்,

ஸ்வஸ்தி ஸ்ரீ சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ
தேவர்க்கு யாண்டு யக்ஷவது மிதுந நாயிற்று பூர்வ
பக்ஷத்து அத்தத்து நாள் குலோத்துங்க சோழ வளநாட்டுப்
பனையூர் நாட்டுப் பிரமதேயத்து தேவலோகம்........மகா
சபையோம் இறையிலி நிலம் விலை ஆவணம் உடையார்
ஸ்ரீ புகலூர் தேவர் மத்தியான்ன சுத்தி அமுது செய்தரு
ளும் போது உத்த மாத்ர மாநம் லோக மாணிக்கச்
சதுர்வேதி மங்கலத்து வரகூர் நம்பியார் குளத்தின்
தெற்குக் கரையிலே நித்தம் 12 பிராமணர் உண்பதாக
ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்துப்

**பேரூர் நாட்டு நெற்குன்றத்து நெற்குன்றங் கிழான்**
**அற்புதக் கருவு ணாயக ரான் களப்பாள ராஜர்**
**செய்வித்த சாசனம்**

எனக் குறிப்பிடப்பெற்றுள்ளது.

மத்திய காலச் சோழர்கள், பல்லவர்களை வென்று பெற்ற தொண்டை நாட்டிற்கு ஜெயங்கொண்ட சோழ மண்டலம் என்பர். இது 21 கோட்டங்களைக் கொண்டது முதற்கோட்டம் புழல் இரண்டாவது கோட்டம் புலியூர்க் கோட்டம் என்பது.

வாணன் என்ற சொல்லுக்கு அரசன் என்பது பொருள். இதற்கேற்ப கல்வெட்டில் "களப்பாள ராஜர்" எனக் குறிப்பிடப்பெற்றுள்ளது.

இவைகளன்னியில் நெற்குன்ற வாணர் தமது தற்சிறப்புப் பாயிரத்திலும் "களப்பாள நெற் குன்றவாணன்" என்றே தம்மைக் கூறிக்கொள்கிறார்.

இனி இவர் தம் வாழ்க்கை வரலாற்றினை தமிழ்த் தாத்தா, மகா மகோத்பாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் தமது நினைவு மஞ்சரியில் கூறுவதாவது,

சிவபக்தி நெறி நின்றவராகிய இந்நெற்குன்றவாணர் ஒவ்வொரு ஆண்டும் தல யாத்திரை சென்றுவரும் வழக்கமுடையவர், சோழநாடு, பாண்டியநாடு ஆகியவற்றில் உள்ள பல சிவத்தலங்களையும் சென்று ஆங்காங்கு உறையும் இறைவர்களை வழிபடுவார். அவ்வாறு சென்ற தலங்களில் திருப்புகலூரும் ஒன்று. இவ்வூரில் குடிகொண்டுள்ள இறைவனை வழிபடுவதில் பேரின்பம் கொண்டார். எனவே அதற்கென பல நிவந்தங்களையும் அமைத்துக் கொடுத்துள்ளார்.

கொடிய ஆண்டு ஒன்றில் பஞ்சம் வந்துற்று விட்டது. தான தருமங்கள் செய்யப் பொருள் இல்லை. அரசனுக்கு செலுத்த வேண்டிய வரிப்பணம் செலுத்தக்கூட வழியில்லை. அரசின் வரிவசூல் செய்யும் அலுவலர்கள் இவரிடம் நேரில் பலமுறை கேட்டும் இவரால் வரிப்பணத்தைச் செலுத்த இயலாத நிலையில் தண்ட முறையில் இவரைக் கைது செய்து வரிப்பணத்தை வசூல் செய்யவேண்டிய நிலைக்கு வந்து விட்டனர். இந்நிலையில் நெற்குன்ற வாணர் திருப்புகலூர் இறைவனிடம் சென்று தமக்கு நேர்ந்துள்ள இடையூறைக் கூறி முறையிட வேண்டி வந்துவிட்டார். தேடி வந்த அரசு அலுவலர்களும் இவர் புகலூரில் தான் இருக்கிறார் என்பதை அறிந்து இங்கு வந்துவிட்டனர். பிடித்து மன்னரின் முன் நிறுத்த அழைத்தனர். காவலில் வைக்கவேண்டிய நிலை.

இந்நிலையில் தம்மைக் கைது செய்ய வந்த அதிகாரிகளிடம் ஒருமுறை திருப்புகலூரானை வணங்கி விட்டு வருகிறதற்காக அனுமதி வேண்டிப் பெற்று, அப்பெருமானாரின் கோவிலுக்குச் சென்று, ஆங்கே எழுந்தருளியுள்ள விநாயகப்பெருமானை தரிசித்து, பக்தியும் புலமையும் கலந்த நிலையில் அவ்விநாயகப் பெருமான் பேரில் ஒரு செய்யுளைப் பாடினார். அது “உரை செய் மறைக்கும் தெரியா” எனத் தொடங்கிய செய்யுள். இதனை இத்திருப்புகலூரின்கண் இருந்த “ருத்ர கணிகையர்” எனப்பெறும் தேவதாசிக் குலப்பெண் ஒருத்தி கேட்டாள். இப்பெண் கல்வியறிவு நிறைந்த இளம்பருவத்தினள். நெற்குன்றவாணரிடம் இச்செய்யுளையே காப்பாக்கி ஒரு அந்தாதியைப் பாடலாமே எனக் கேட்க, காப்பாக்கலாம் தான் காப்பாக்கினால் அரசனுக்குப் பணம் ஆகுமா? எனக் கவிவாணர் கேட்க, பின்னர் அம்மாது சிரோன்மணி நம் வாணருக்கு வந்துற்றுவிட்ட கொடிய கஷ்டத்தைப் பற்றி விபரமாகக் கேட்டறிந்து, சிறைப்பட வேண்டிய இவரது நிலையை, அரசு அதிகாரிகளுக்கு எவ்வளவு பணம் தரவேண்டுமோ அதனைக் கொடுத்து நீக்கினாள். பின்னர் அவ்வம்மையாரின் வேண்டுகோளின்படி நெற்குன்றவாணர்

அந்தாதியையும் பாடினார் என்பது, இது செம்மைப்படுத்தப் பெற்ற கர்ண பரம்பரைக் கதை எனும் செவிவழிச் செய்தியாகும். இஃது இவ்வாறிருக்க, மருதூர் அந்தாதி எனும் நூலைப் பதிப்பிக்கும்போது, தமிழ்ப்பேரறிஞர் கரந்தை அடிகளாசிரியர் அவர்கள் அவ்வந்தாதி நூலின் ஆசிரியரான "தலைமலை கண்ட தேவரின்" வரலாற்றை திருவாமாத்தூர் மகான் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றியுள்ள புலவர் புராணம் என்ற நூலிலிருந்து எடுத்துக் கூறியுள்ளார். சுவாமிகளின் புலவர் புராணத்தில் நெற்குன்றவாணரின் வாழ்க்கை வரலாறும் முப்பது பாடல்களினால் தொகுத்து அளிக்கப்பெற்றுள்ளது. அதன்படி,

1. கற்குன்றம் அணைய தொண்டைமான் அரசியலும் கச்சி நாட்டில் நெற்குன்ற வாணன் என்றோர் வேளான் பொறுமை, தயை, நீதி, கல்வி, பக்தி முதலாய குணம் பொற்குன்றம் எனப் படைத்தோன்- இல்லறத்தின் தருமம்.

2. புரியும் நாளில், மற்றொருவன்-பொருள் மட்டும் உடையவன்- ஒரே வங்கிசத்தோன்-தவத்தோர்க்கும்-கற்றோர்க்கும் உதவி செய்யாக் கயமைக்காரன். இருவருக்கும் விவகாரம் ஒன்று ஏற்பட்டது-நம் வாணரிடம் நீ என் முன்றில் வாய் கீழுற்று ஒரு நாளேனும் இலை தைத்திடப் பார்ப்பேன் என சூழ் உரைத்தான்.

3. இதைப்பற்றி எல்லாம் கவலைப்படாத வாணர் அவன் பொருளினும் கொடைச்செலவு மிகச்செய்தார்.

4. கைப்பொருள் யாவும் தீர்ந்தது. இராமாதி பத்தியமும் விளைநிலம் ஆய திருவும் கெட்டது. இந்நிலையில் தமிழப் புலவன் ஒருவன் வந்து வாணரைப் புகழ்ந்து பாடிப்பொருள் வேண்டினான். தன்னிடம் பொருள் ஏதும் இல்லை எனக் கூற,

5. நாணினான்-'புலவரே! நீர் என்னைக் கொண்டு போய் இவ்வூரில் எனக்கு ஆகாதவன் ஒருவன் இருக்கிறான். அவனிடம் விலைபேசி என்னை விற்றீரானால் உனக்குப் பொருள் கிடைக்கும். என் வார்த்தையைத் தட்டாமல் அவ்வாறே செய்து பொருள் பெருக என்றார்.

6. பின்னர் அப்புலவனும் நம் வாணரை அப்பொல்லாதவனிடம் விற்றுவிட்டான். அக்கயவன் தான் முன்சொல்லிய சூளுரைப்படி ஈர்க்குச்சியும், இலைகளும் கொடுத்து வாணரை இலை தைக்கும் பணியில் விட்டான். இதுவும் பரமன் திருவுளமோ ! இயற்கை என்னே என்று நொந்தார் வாணர்.

7. தலை கொடுத்த குமணனிலும், உயிர் கொடுத்த நந்தியினும் தமிழ்க்காக தான் போய் விலைபடும் இந்நெற்குன்ற வாணனை மேல் எனத் துணிந்து விளம்பலாம்.

8. அடிமைத் திறத்தோனை பாங்கறியா.வரதுங்கன் மனைவியையே அணைய பாரி அமுதருந்தும் பொருட்டு அழைத்தாள். இதற்குத் தன்னிலையை உணர்த்தி வாணர் ஒரு பாட்டெழுதித்தந்தார்.

9. கற்கும் இயற்றமிழறி வா கரனாகி வந்த அம்பி காளிக் கின்று யான்
விற்குமொரு பாத்திரமாய் விலையானேன் வேங்கடமாம் வெற்பும் வீறார்
பொற்குவரும் கயிலையும் தென்பொதியையும் போய் நம்மரபும் புகழ் பூண்ட
நெற்குன்றம் எனும் பெயரும் நிலைபெற என்றதனை அவள் நினைத் துற் றோர்ந்தே !

என்பது அப்பாடல்.

10. விருந்துக் கழைத்த மாது இவர் தம் நிலை அறிந்து வருத்தமுற்றாள். இந்நிலையில், தொண்டைமானின் சேவகர் போய் வாணரிடம் எடுத்த பொருள் கொடுத்தி-இன்றேல் அவன் முன் வருகெனச் சொன்னாரே !

11. அதற்கு வாணர் அச்சேவகரிடம் என்னை விலைக் கொண்டவன் பாற் சொன்மின் நீவிர்-அவன் என்ன விதம் சொலினும் அங்ஙன் நடப்பேன்-என்றார் அவ்வாறே சேவகர்கள் வாணரை விலை கொடுத்து வாங்கிய பொல்லாதவனிடத்தே கேட்க யான் விழைந்த பயன் முடிந்தது-இனி இவன் தொண்டாசிக்கில்லேன் மன்னவன்பாற் கொடுபோமின் என்றான். பின்னர்

12. சேவகரொடு வாணர் தம் வீட்டிற்குச் சென்றார் வந்த தன் கணவரைக் கண்டு அழுதாள். இந்த இக்கட்டொழித்த தெய்வம் இனி ஏது செய்யினும் நன்றே- எனக்கூறி தம் கணவனார்க்கும் உடன்வந்த சேவகர்களுக்கும் உணவளித்து உபசரித்தாள் - பின்னர் காஞ்சிப் பதிக்கரசன் ஆணையின்படி சென்றுவாரும் என விடையளித்தாள்.

13. 'நாரணன் நாடரும் திருத்தாட் சிவன் இயற்றும் ஆடலன்றி நவை யொன்றில்லை - போரரிநேர் வயவரந்தப் புனிதனைக் கொண் டரசவையில் புகுவித்தாரே' !

14. 'பரன் அடிமை' என்ற தோற்றத்தின ரான வாணரைக் கண்ட மன்னன் - வரிப்பணம் செலுத்தாத காரணத்தால் வாணரின்பேரில் கொண்டிருந்த கோபத்தை விடுத்து - கரவு செயலால் ஊரின் தலைமை இழந்தாய் - கவர் பொன் கணக் கோடீந்தாய் - தண்டனை விதியேன் - என்றான்.

15. அதற்கு வாணர் நின் பொருளை யான் விருட்டால் அபகரித்துக் கொள்ள வில்லை – அறப்பகுதிகளுக்கே அளித்துள்ளேன் – நாகப்பூணோ டென்பொளிர் மார்பினன் உணர்வான். ஏதுசெயினும் செய்திடுக எனை நீ! என்றார். இச்சொற்களைக் கேட்ட மன்னன் கோபமடைந்

16. தான் - இவ்வாணரைக் கொண்டுபோய் சோழநாட்டில் விட்டு விடுங்கள் - இவர் நமக்குத் தரவேண்டிய பொருளைத் தந்தாலன்றி நம்மூருக்கு வர இவனை அனுமதிக்காதீர் என காவலர்களுக்கு உத்திரவிட்டான்– நாடு கடத்தி விட்டான் –

17. தனது ஒரு கடிதத்தின் மூலம் தன் மனைவிக்குத் தெரிவித்துவிட்டு- சோழநாட்டில்-வெள்ளாறு கடந்து-சைவ நெறி நி;னறோர் போற்றும் திருத்தலங்களுக்கெல்லாம் சென்று- ஆங்குள்ள இறைவர்களை எல்லாம் வணங்கினார்.

18. இவ்வாறு பல சிவத்தலங்களை எல்லாம் சென்று வழிபட்ட பின்னர் – பத்த மலி திருநாவுக் கரசு கதி அடைந்ததுவும் பரவை கேள்வன் அத்தமதால் சமைத்த செங்கல் பெற்றதுவும் கருதி - திருப்புகலூர் வந்தடைந்தார். மகிழ்வுடன் அத்திருப்புகலூர்க் கோவிலில் உள்ள விநாயகப்பெருமான் முன்னின்று ஒரு கவி பாடினார்.

19. இவர் பாடிய பாடலை முற்றும் கேட்ட பெண் ஒருத்தி-அந்தாதிக் காப்பாம் என்றாள்-இதனைக் கேட்ட வாணர், கைக்களிறன்னான் அவட் பார்த்து மையவளோ? கலை மகளோ? கவினார் கோவில் மிக்க பணிமகளோ? "அரண்மனைப் பணம் நீ விரும்பி நல்கில் இக்கவி அப்படி ஆதற் கையமில்லை முக்காலும்" எனச் சொன்னார்-.

20. பின்னர் அம்மாது இவ்வாணரிடம் அரண்மனைக்குத் தர வேண்டிய பணம் எவ்வளவு எனக் கேட்டறிந்து, இத்தொகை எனக் கொடு பொருட்டன்று-நான் கொடுக்கிறேன் எனக் கூறி வாணரை தமது இல்லத்திற்கு அழைத்துச் சென்று உபசரித்தாள்-அங்கிருந்தபடி வாணர் மகிழ்ந்து குதூகலத்தால் பரவு திரி வந்தாதித் தமிழ்மாலை இணையிலாதாப் பாடினானே!

21. வாணர் தாம் பாடிய திரிபந்தாதியை முறைப்படி அரங்கேற்றினார். அம்மங்கை நல்லாள் நம் வாணருக்கு மன்னருக்குச் செலுத்த வேண்டிய அளவிற்கான பொருளைக் கொடுத்ததோடு மட்டுமின்றி மேலும் பொருள் நிறையக்கொடுத்து பவ்வக்குப் பணியாட்களுடன் அனுப்பி வைத்தாள்.

22. பாராட்டி வாழ்த்தினார்கள். தருமம் பல செய்தாலும் தண்டமிழ்ப் பாவலர்க்கு உதவுதல் உயர்வே என்றனர்.

23. இனி நம் கவிவாணர் காஞ்சி நகரத்திற்குப் போய் மன்னரிடம் தான் தரவேண்டிய பொருளைக் கொடுத்தார். கவிவாணருக்கு எவ்விதம் பொருள் கிட்டியது என்ற விவரத்தைக் கேட்டறிந்த மன்னன் நாணமுற்றான். அவர் கொடுத்த பொருளை அவரிடமே திருப்பிக் கொடுத்துவிட்டார். "உனது ஊர் உன் உயிர் உள்ளளவும் உனதேயாக உதவினேன். அங்கென்றனது பகுதி முழுதேற்று அவற்றில் ஆறில் ஒன்றெமற் கீ கென்றான்".

24. இவ்வாறு காஞ்சி மன்னரின் கீழ் ஒரு சிற்றரசர் ஆயினார் நமது வாணர். இவரது புலமையைப் பெரிதும் பாராட்டினார்கள். குயில் ஒன்று அன்னநடை நடந்தாற் போலும் அழகுடைய தன் மனையாளோடும் மற்றவர்களோடும் நமது கவி வாணர் நெற்குன்றத்தார் மகிழ்வாக வாழ்வாராயினர்.

25. முன்பு ஒரு சமயத்தில் தன்னை ஈர்க்குச்சி கொண்டு இலை தைக்கும் பணிக்கமர்த்திய கயவன் - தமக்கு வேறு மேலும் பணிக்கு அமர்த்தாதிருந்தமைக்காக அவனுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார். ஆனால் அக்கயவனோ இன்று தன் கைப்பொருள் யாவும் இழந்து அன்று வாணர் இருந்த நிலையில் இருந்தான். எனவே அவனுக்குப் பெருஞ்செல்வம் ஈய்ந்து அவனையும் முன்போல் செல்வந்தனாய் இருக்கும்படிச் செய்தார்.

26. மலையளவு செல்வம் இருந்தாலும் ஒருநாள் அது வற்றிப் பாழாகும்-அரசனின் கோபம் ஒருநாள் அன்பாய் மாறும் இது யாவும் பக்தர்கள் நலிவுற்றாலும் பின்பு ஒருநாள் நன்னிலை எயதிடுவர் என்பதறகு இவர் தன் கதை ஒரு எடுத்துக்காட்டாகும்.

27. ஆணுருவாய உயற்குலத்தில் பிறந்து பெரும்
செல்வம் அநுபவித் திட்டாலும்
சேணும் நிலமும் புகழும் பெரும் சீர்த்தி விளையாமல்
செத்தா ராயின்
மாணுயர் தென்புகலூரான் திருவடிக்கோர்
தமிழ்மாலை வாங்கிச் சூட்டி
நாணு மடமும் தவிர்த்து வாழ்ந்த மகளினும்
தாழ்வா நவிலலாமே!

28. நெற்குன்ற வாணரின் தமிழ்ப் புலமையை மக்கள் பாராட்டினர். மலர்மாலையை விட பாமாலை மிக உயர்வானதே!

29. அம்பிகாளி என்னும் புலவர் இவரிடம் பொருள் பெற்றது போலப் பலரும் நிறை பொருள் பெற்று வாழ்த்திப் பாடினர்.

30. செல்வமும, கல்வியும், கற்புடைய மனைவியையும் பெற்றுச் சிறப்புற்ற நெற்குன்ற வாணரின் கதையை தெரிந்தவரை சொன்னேன். என வாணரின் வரலாற்றை நிறைவுசெய்த பின்னர் தலைமலை கண்டதேவரின் வரலாற்றைக் கூறுகிறார் மகான் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்.

இச்சுவாமிகள் வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமி அவர்கள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர். இவரது நிலைவீடு விழுப்புரத்தை அடுத்துள்ள திருவாமாத்தூரில் உள்ளது. இவர் கையில் வைத்திருந்த பெரிய வேல் ஒன்றினையும் காணும் பாக்கியம் கிட்டியது. அத்தோடு அம்மகான் தம் கையால் எழுதிய ஓலைச்சுவடிகளையும் கண்ணுற்றேன். தாழை மடலைப் பக்குவப்படுத்தி இயந்திர அச்சு எழுத்துக்களைப் போல அழகான கையெழுத்து. ஆறேழுவரி மட்டுமே எழுதக்கூடிய அளவுடைய மடலில் அழகான பத்துப் பனிரெண்டு வரிகள். இவர் எழுதிய பாடல்கள் ஈராயிரத் திற்கும் மேலாம்.

தமிழகத்துச் சிவத்தலங்கள் பலவற்றிற்கும் சென்று ஆங்காங்குறையும் இறைவனார் பேரில் பாடியுள்ள பாடல்கள் மேலும் பல்லாயிரம் திருப்புகலூரில் கோயில் கொண்டுள்ள இறைத்திருமேனிகளைப் பாடியுள்ள கணக்கிது.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிவன் புண்ணிய மாலை | பாடல்கள் | 30 |
| 2. | சிவன் திருமேனி வெளுப்பு | ,, | 27 |
| 3. | சிவன் பதிகம் | ,, | 12 |
| 4. | சிவன் திருப்புகழ் | ,, | 1 |
| 5. | சிவன் பஞ்சரத்தினக் கோவை | ,, | 52 |
| 6. | சிவன் பதிகம் (தனி) | ,, | 12 |
| 7. | சக்தி பதிகம் | ,, | 12 |
| 8. | கணபதி பதிகம் | ,, | 12 |
| 9. | முருகன் பதிகம் | ,, | 13 |
| 10. | சிவன் பதிகம்-ஊர் புகழ் | ,, | 12 |
| 11. | சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதிகம் | ,, | 12 |
| 12. | திருநாவுக்கரசு சுவாமிகள் பதிகம் | ,, | 12 |
| 13. | மங்களம்-இசைப்பாடல் | பாடல் | 1 |
| | | கூடுதல் | 200 |

ஆங்கிலேயர்களின் ஆட்சியில் தாம் கண்ட நிலை பற்றி மிகப்பெரிய அளவில் எழுதியுள்ள இம்மகானின் திருப்புகலூர் மங்களப் பாடல் ஒன்று மட்டும் இந்நூலின் நிறைவுப் பகுதியில் இணைக்கப்பெற்றுள்ளது.

(ஊர்ப்பெயரும் நூற்றொகையும்-மகான் வண்ணச் சரபம் அருண்மிகு தண்டபாணி சுவாமிகளாற் பாடப் பெற்றது. திருவாமாத்தூர் கௌமார சபை வெளியீடு எண்-69-1964-பதிப்பாசிரியர் தி. மு. சங்கரலிங்கம், தமிழாசிரியர்-கௌமார மடம், பக்கம்-13)

இதுவரை நெற்குன்றவாணரின் வாழ்க்கை வரலாறு பற்றிய இரு கதைகளை அறிந்தோம். ஆயினும் அவ்விரண்டி னுள்ளும் பெரும் வேறுபாடு ஏதும் இல்லை என்றே அறியலாம். சுருக்கமாகக் கூறின்-பெருஞ்செல்வந்தரும் கல்வியாளனும் வள்ளல் தன்மையுமுடைய கவிவாணர் நெற்குன்றமென்ற ஊரின் களப்பாளர் - இவருக்கு வறுமை வந்துற்றது. புகலூர் சென்றுப் பிள்ளையாரை வணங்கிப் பாடினார். அப்போது ஒரு தேவதாசிக் குலப்பெண் இவருக்கு பொருளுதவி செய்தாள். அவளின் வேண்டுகோளின்படி திருப்புகலூர் திரிபந்தாதியைப் பாடினார் என்பது வரை மாற்றம் இன்றி அமைந்துள்ளது. இந்நெற்குன்ற வாணர் வேறு ஏதும் நூல் செய்தாரில்லை என்பர்.

கடந்த 8-7-1954ல் தருமபுர ஆதீனத்தினரால் வெளியிடப்பெற்ற "திருப்புகலூர்த் திருப்பதிகங்கள்" எனும் நூலும் 1971ல் திருவாவடுதுறை ஆதீனத்தினரால் வெளியிடப்பெற்ற திருப்புகலூர்த் திரிபந்தாதி என்னும் நூலும் திருப்புகலூர்த் திருக்கோயில் வெளியீடாகிய கோயில் வரலாறு என்ற நூலும் இந்நெற்குன்ற வாணர் தம் வரலாற்றையும் அவர்தம் அந்தாதியையும் அறியப் பெரிதும் உதவிய நூல்களாகும்.

சென்னை பெசன்ட் நகர், மகா மகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் நூலகத்தில் தலைப்புப் பக்கம் இல்லாத பைண்டு செய்யப்பெற்ற இவ்வந்தாதியின் செய்யுட்களுக்குப் பதவுரை மட்டும் கொண்டதான ஒரு புத்தகம் உள்ளது. (கையால் தொட்டாலே கிழிந்துவிடக் கூடிய நிலையில் தாட்கள் பழமையுற்றவை) இதே போல ஒன்று கரந்தைத் தமிழ்ச் சங்க நூலகத்திலும் உள்ளது. இந்நூல் கொண்டு ஆய்வினை மேற்கொள்வோரின் நலன் கருதி மூவர்தம் பாடல்கள் எண்பத்தெட்டும் இணைக்கப்பெற்றுள்ளது.

பின்குறிப்பு:- நெற்குன்ற வாணரின் திருப்புகலூர் அந்தாதி - சுவடி வடிவில் உள்ள நூலகங்கள்.

1. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் - சிதம்பரம்.

2. இந்திய தேசீய நூலகம் - கல்கத்தா

3. திருவாடுதுறை ஆதீன நூலகம் - திருவாடுதுறை

4. போடிடியன் நூலகம் - ஆக்ஸ்போர்ட்

5. டாக்டர் உ. வே. சா. நூலகம், சென்னை.

6. மௌனசாமி மடம் - சிதம்பரம்

7. பிபிலோதோ நேஷனல் லைப்ரரி-பாரிஸ்-பிரான்ஸ்

8. G.. O. M. L. திருவனந்தபுரம்

9. சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

மேலும் விபரங்களை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடாகிய ஓலைச்சுவடிகளின் அட்டவணை - என்ற புத்தகத்தில் கண்டறியலாம்.

# அந்தாதி – விளக்கம்.

பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகைப் பெறும் என்பர் அவற்றுள் அந்தாதியும் ஒன்று. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த சேந்தன் திவாகரம் என்ற நூலிலும், பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த பன்னிரு பாட்டியல் என்ற நூலிலும் பிரபந்தங்கள் பற்றிய செய்திகள் கூறப்பெற்றுள்ளன. ஆனால் முழு எண்ணிக்கை இன்னதிதுவெனக் கூறப்பெறவில்லை. பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரபந்த மரபியியலின் ஆசிரியர் இளம்பூரணார் பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு எனக் குறிப்பிடுகின்றார். கி. பி. 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிவந்தெழுந்த "பல்லவராயன் உலா" என்னும் நூல் பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு எனவே கூறுகின்றது. ஆக இவ்விரு நூல்களும் பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு எனக் கூறுகின்றனவேயன்றி அவையாவை என முறைப்படுத்திக் கூறவில்லை.

இத் தொண்ணூற்றாறு பிரபந்தங்களையும் முறையாக எடுத்தியம்பிய பெருமை வீரமாமுனிவரையே சாரும். கி.பி. 1738ல் வீரமாமுனிவர் அவர்கள் வெளியிட்ட தொன்னூல் விளக்கம் என்ற நூலில் செய்யுள் மரபில் பிரபந்தங்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை வகைப்படுத்திக் கூறியுள்ளார்.

பன்னிரு பாட்டியல் மற்றும் தொன்னூல் விளக்கம் ஆகிய நூல்களின் வாயிலாக 1) ஒலியந்தாதி, 2)கலியந்தாதி, 3)பதிற்றந்தாதி, 4) நூற்றந்தாதி, 5) அந்தாதித்தொகை (தொகை பற்றியது) என அறியமுடிகிறது. யாப்பருங்கலக் காரிகையும், தண்டியலங்காரமும் அந்தாதி பற்றிய இலக்கணங்களைக் கூறுகின்றன. டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் இரண்டு அடிகளுக்குள் அமைவது அந்தாதித் தொடை எனத் "திருமயிலை யமக அந்தாதி" என்னும் நூலில் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தாதி என்பது, மூன்று நிலைகளில் அமையும். அவை, தொடை அந்தாதி, அணி அந்தாதி (இது மடக்கு அந்தாதி எனவும் பெயர் பெறும்) மூன்றாவது செய்யுள் அந்தாதி என்பனவாகும். அந்தாதி எனினும் அந்தாதித் தொகை என்றாலும் ஒன்றே !

அறுபத்து மூன்று பிரபந்தங்கள் பற்றிக் கூறும் பன்னிரு பாட்டியலில் 1) கலம்பகம், 3) பல் சந்தமாலை, 3) இணை மணிமாலை, 4) இரட்டை மணிமாலை, 5) மும்மணிமாலை, 6) நான் மணிமாலை, 7) கலம்பகமாலை, 8) மும்மணிக் கோவை, 9) கலி அந்தாதி, 10) ஒலி அந்தாதி, 11) நவமணி மாலை, 12) அந்தாதித்தொகை, 13) ஒருபா ஒரு பஃது, 14)இருபா இருபஃது ஆகிய 14 மட்டுமே அந்தாதித்து வருவன எனக்குறிப்பிடப்பெறுகிறது.

மேலும் 19ஆம் நூற்றாண்டைச் சார்ந்த "முத்துவீரியம்" என்ற இலக்கண நூல் பதின்மூன்று பிரபந்தங்கள் அந்தாதியாக வரும் என்று கூறுகிறது.

அந்தாதி நூல்களுள் சிறப்பாகக் கூறப்பெறுவது "மண்டலித்தல்" என்பதாகும் இதுவே அந்தாதியின் சிறப்பு உத்தியும் ஆகும்.

ஒரு நூலின் முதல் தொடக்கச் சொல்லே அந்நூலின் இறுதிச் சொல்லாக அமைத்துப்பாடுவது மண்டலித்தல் எனப்பெறும். அதுபோலவே ஒரு பாடலுக்குள்ளும் மண்டலித்தல் அமைவதும் உண்டு.

காரைக்கால் அம்மையாரின் "அற்புதத் திருவந்தாதி" "பிறந்து மொழிபயின்ற"வெனத் தொடங்கி "பேராத காதல் பிறந்து" என நிறைவடைகிறது. இதுவன்றி யாப்பெருங்கல விருத்திப் பாடல் ஒன்று "உலகுடன் விளக்கும் ஒளிதிகழ் அவிர்மதி" எனத் தொடங்கி "பன்னருஞ் சிறப்பின் விண்மிசை உலகே" என நிறைவடைகிறது.

திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் உலககெலாம் எனத்தொடங்கி "நிலவி உலகெல்லாம்" என நிறைவடைகிறது எனவே இது மண்டலித்தல் என்ற வகையில் அமைந்துள்ளது எனினும் இது அந்தாதி நூல் அன்று எனவே அந்தாதியின் சிறப்பு மண்டலித்தல் எனவும் மண்டலித்து வருவனவெல்லாம் அந்தாதி அல்லவெனவும் அறியலாம்.

மேலும் மண்டலிக்காது வரும் அந்தாதிப் பாடல் களையும் நூல்களையும் "செந்நடை அந்தாதி" என்பர். இச்செந்நடை அந்தாதியும், செந்நடை எழுத்தந்தாதி, செந்நடை அசையந்தாதி, செந்நடைச் சீரந்தாதி, செந்நடை அடியந்தாதி, செந்நடை மயக்கந்தாதி, செந்நடை இடை யிட்ட அந்தாதி என விரிவு பெறும்.

மேலும் தொடை அந்தாதி என்பது, மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை எனப்பெறும் ஐந்து தொடைகளுடன் கூடி, மோனை அந்தாதி, எதுகை அந்தாதி, முரணந்தாதி, இயையந்தாதி, அளபெடை அந்தாதி என விரிவு பெறும்.

"அம்மை அழகு தொன்மை தோல் விருந்
தியைபு புலனிழை பென வனப் பெட்டே" (செய்.சூ-1)

இதில் விருந்து என்பது புதிதாகப் புனையப் பெறுவது என்பது இளம்பூரணார் கருத்து. "தோல்" என்பது பழைய ஒரு கதையையே மீண்டும் புதிதாகக் கூறுதல் என நச்சினார்க்கினியர் உரை மூலம் அறியலாம.

பண்டை இலக்கியங்கள் பலவற்றுள்ளும் அந்தாதியின் அமைப்புகள் பலவும் பரவியிருப்பதை அறியலாம். திருககுறளில்,

பொருள் அற்றார் பூப்பர் ஒருகால் அருள் அற்றார்
அற்றார் மற்றாதல் அரிது (248)

மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டுபவர். (602)

இவையிரண்டும் ஒரு செய்யுளில் அந்தாதித்து வந்துள்ளன.

ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாய்ப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு (357)

பிறப் பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பதறிவு (358)

இவ்விரண்டு பாடல்களும் இரு செய்யுட்கண் அந்தாதித்து வந்தள்ளன,

இதுபோன்றே, புறநானூறு, நற்றினை, சிறுபாணாற்றுப் படை, சிலப்பதிகாரம், ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து மற்றும் பிற்கால நூல்களான உதயணன் கதை, தேசிகமாலை போன்றவைகளிலும் அந்தாதிப் பண்புகள் நிறைந்துள் ளமையை சான்றோர் அறிவர். நால்வர்களில் அப்பரும், சம்பந்தரும் தங்கள் பதிகங்களில் அந்தாதியைக் கையாள வில்லை, ஆனால் கி. பி. 6, 7ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முதலாழ்வார் மூவரும் அந்தாதி பாடியுள்ளனர் என கல்வெட்டு இதழ் இரண்டில் திரு. இரா. நாகசாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கி. பி. எட்டாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையிலான சோழப் பேரரசர் காலத்தில் பிரபந்த வகையைச் சேர்ந்த சிற்றிலக்கியங்கள் முதன்மை பெற்ற காலமென தென்னிந்திய வரலாறு எனும் நூலில் திரு. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் கூறியுள்ளார்.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த மாணிக்க வாசக சுவாமிகள், 1) 100 பாடல்களைக் கொண்ட திருச்சதகம், 2) 50 பாடல்களைக் கொண்ட நீத்தல் விண்ணப்பம், 3)10பாடல்களை உடைய கோயில் மூத்த திருப்பதிகம்,

4)10பாடல்களைக் கொண்ட திருப்பதிகம், 5)11பாடல்களைக் கொண்ட பிரார்த்தனைப் பத்து, 6) 10 பாடல்களைக் கொண்ட குழைத்த பத்து, 7) 10 பாடல்களைக் கொண்ட யாத்திரை பத்து, 8) 7 பாடல்களைக் கொண்ட பண்டாய நான் மறை ஆகிய அந்தாதிகளைப் பாடியுள்ளார்.

எனவே சங்ககால முதல் இந்த நூற்றாண்டு வரை வளர்ந்தே வரும் இலக்கியம் அந்தாதி என்பதை தெளிவாக அறியலாம்.

இனி அந்தாதியின் பண்பியல்கள் காலப்போக்கில் எவ்வாறு வளர்ச்சிபெற்றுள்ளதெனின், 1) வெண்பா அந்தாதி, 2)கலித்துறை, 3) அகவற்பா அநதாதி, 4) கலிவிருத்தி அந்தாதி, 5)வஞ்சித்துறை அந்தாதி (இதற்கு இராமலிங்க வள்ளளாரின் "முக்தி உபாயம்" எனும் பகுதி சிறந்த உதாரணமாகும்) 6)இருசீர் அந்தாதி, (கி. வ. ஜெகந்நாதன் அவர்களின் இருசீர் அந்தாதி) 7) முச்சீர் அந்தாதி, 8) நாற்சீர் அந்தாதி, 9) திரிபு அந்தாதி, 10) திரிபு வெண்பா அந்தாதி, 11) கொம்பில்லா எழுத்துக்களைக் கொண்டு செய்யுள் அமைக்கும் அந்தாதியை கொம்பிலா வெண்பாஅந்தாதி என்பர்-"திருச்சுழியிற் கொம்பிலா வெண்பா வந்தாதி" எடுத்துக் காட்டாக அமையும். 12) தண்டியலங்காரத்தின்படி

எழுத்தின் கூட்டம் இடைமிறி தின்றியும்,
பெயர்த்தும் வேறு பொருடரின் மடக்கெனும்
பெயர்த்தே -(சொல்-92)
அடிமுது மடக்கலு மாங்கதன் சிறப்பே-சொல்-94)

என சொல்லணிகளுள், இடையிட்டு வந்த "ஆதி மடக்கு" என்ற இலக்கண முறைப்படி அமைவது "யமக அந்தாதி" எனப்பெறும், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின், "திருத்தில்லை யமக அந்தாதி " எடுத்துக் காட்டாக இதற்கு அமையும். மேலும் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள் "சித்திர யமக அந்தாதி" என ஒரு நூலையும் இயற்றியுள்ளார்.

13) அடுத்து இதழுடன் இதழ் ஒட்டாதவாறு எழுத்துக்களை அமைத்து, அதாவது இதழ்குவித்தலால் ஒலிக்கப்பெறும் உயிர் எழுத்துக்களையும் மெய்யெழுத்துக் களையும் நீக்கி செய்யுள் அமைத்துப் பாடுவது "நிரோட்டக யமக அந்தாதி" எனப் பெறும். இது நிர்+ஓஷ்டகம் எனப் பிரியும். ஒட்டுவ ஒட்டகம் என்பர். "உ ஊ ஒ ஓ பமவ விவற்றியை ப சேரா நிரோட்டகத் திறத்து" என்பது சூத்திரம். நிரோட்டகம் என்பதற்கு உதாரணமாக அமையும் திருக்குறள்,

யாதெனின் யாதலின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன் (341)

இக்குறளை வாய்விட்டுப் படித்தால் உதடுகள் ஒட்டாது படிக்க இயலும். இதற்கான உதாரணச் செய்யுள் தண்டியலங் காரத்திலும் உள்ளது. துரை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றியுள்ள "திருச்செந்தில் நிரோட்டக யமக வந்தாதி" யும், "சென்னைக் கந்தர் இதழலகலந்தாதியும் இவ்வகைச் செய்யுளுக்கு உதாரணங்களாக அமையும்

14) ஏகத்தாள் இதழகல் அந்தாதி-இத்தகைய அந்தாதியை இருபதாம் நூற்றாண்டைச் சார்ந்த தண்டபாணி சுவாமிகள் இயற்றியருளியுள்ளார்கள்.

15) ஒரு செய்யுளின் நான்கடிகளும் ஒரே விதமாக மடக்கி வருவது நான்கடி மடக்கு. இதனை "ஏக பாதம்" எனவும் கூறுகிறார். எனவே ஏக பாதமாகவும், அந்தாதி யாகவும் அமைந்த 100 பாடல்கள் பாடப்பெறின் அதனை "ஏக பாத நூற்றந்தாதி என்பர்.

சேந்தன் திவாகரத்தில்-சித்திரகவி வகை சார்ந்த இதனை "மாலை மாற்றே சக்கரம் சுழிகுளம் ஏக பாத நூற்றந்தாதி" எனக் குறிப்பிடப்பெற்றுள்ளது.

திருஞான சம்பந்தரும், திருமூலரும் ஏக பாதம் பாடியுள்ளனர். ஆனால் அவை அந்தாதி அல்ல - புலவர் அரசஞ்

சண்முகனார் அவர்கள் இவ்வகை "ஏக பாத நூற்றந்தாதி" எனும் நூலை எழுதியுள்ளார்.

16) ஒரு சொல் பல பொருட்களை தரின் சிலேடை என்பர். பின்னர் வெண்பாவாலோ, கலித்துறையாலோ ஆக்கப்பெற்ற பாடல்களில் சிலேடை அலங்காரமும் அமைந்து அந்தாதித் தொடை ஏற்றும் வந்தால் அதனை "சிலேடை யந்தாதி" என்பர். எடுத்துக் காட்டாக "சிங்கைச் சிலேடை", "கலைசைச் சிலேடை" ஆகியவை அமையும்.

17) ஒலியந்தாதி-இதனை ஒலியலந்தாதி எனவும் கூறுவர். கலை என்பது காலத்தின் அளவீட்டுச் சொல், ஆயிரம் தாமரை இதழ்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி அதனை ஓர் ஊசி கொண்டு அடிவரை குத்திட ஆகும் காலம் ஒரு கலை என்பது. இசையின் தாளவகை அறிந்தோர் இதனை நன்கறிவர் இனி இவ்வாறு,

பதினாறு கலை ஓரடியாக வைத்து, நாலடிக்கு அறுபத்து நான்கு கலையாக வகுத்துப் பல சந்தமும் வண்ணமும் கலை வைப்பும் தவறாமல் முப்பது பாடல்களை அந்தாதியாகப் பாடப்பெறின் அதனையே ஒலியந்தாதி என்பர். தவிரவும், வெண்பா, அகவல், கலித்துறை என்னும் பாவினங்களில், இனத்திற்குப் பத்துவீதம், அந்தாதி பாடினாலும் ஒலியந்தாதி என்பர். இதுவே முதலொலி யந்தாதி, பேரொலியலந்தாதி, நடுவொலியல் அந்தாதி என விரிவுபெறும் தன்மையது ஆகும்.

18) கலியந்தாதி என்பது பாடல்களில் முப்பத்திரண்டு கலைகள் அமையும்படி முப்பது பாடல்களை அந்தாதியாகப் பாடுவது.

19) பல்சந்த அந்தாதி-இது நான்கு முதல் இருபத்தாறு எழுத்துக்கள் வரை கூடிய சொற்களை சந்தங்களாக அமைத்து பாடல்கள் பாடப்பெறுவது.

20) மும்மாலை அந்தாதி, இது கலித்துறை, விருத்தம், யமகம் ஆகிய அந்தாதி அமைப்புகளுடன் கூடியது. மும்மணிக்கோவை போன்றதே மும்மாலை அந்தாதி. "பஞ்சாட்சர மும்மாலை யந்தாதி "என்ற நூல் ஒன்று "குழந்தைக் களத்தில் வென்றார்" எனும் புலவரால் பாடப்பெற்றுள்ளது.

21) ஒரெழுத்தந்தாதி, ஓரெழுத்து யமக வந்தாதி, மகரவந்தாதி எனப் பலவேறுபட்ட பெயர்களிலும் அந்தாதி நூல்கள் உள்ளன.

22) வாய்மொழி அந்தாதி, வீரசோழியம் இதனை தூசங் கொளல் எனக் குறிப்பிடுகின்றது. இதன் பொருளாவது, ஒரு புலவர் முதலில் ஒரு வெண்பாவைக் கூறுவார். அந்த வெண்பாவின் கடைசிச் சொல்லையோ, சொற் றொடரையோ முதலாகக் கொண்டு மற்றொரு புலவர் வெண்பா ஒன்றைக் கூறுவது.

23) உரைநடையிலுங் கூட அந்தாதி அமைவது உண்டு. அடுத்து ஒரு நூலின் கண் அமைந்துள்ள பாடல்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு நூலுக்கு பெயரிடல், அமைவது பற்றிக் காண்போம்.

அந்தாதி நூல்கள் குறைந்த அளவில் ஐந்தே பாடல்கள் கொண்டதாகவும் நிறைந்த அளவில் ஆயிரத்திற்கும் மேற்பட்டதாக அமைந்துள்ளதென அறியலாம்.

1) பத்துப் பாடல்களைக் கொண்டு அமைவது பதிற்றந்தாதி எனப்பெறும். "வெண்பா பத்துக் கலித்துறை பத்துப் பண்புற மொழிதல் பதிற்றந்தாதி" என்பது சூத்திரம்.

2) நூறு பாடல்களைக் கொண்டது நூற்றந்தாதி என்பதாகும். "நூறு வெண்பா நூறு கலித்துறை கூறுதல் நூற்றத்தந்தாதிக் கோளே என்பது சூத்திரம். பத்துப் பாட்டிற்கும் குறைவானதற்கு இலக்கண சூத்திரம் ஏதும் கிடைக்கப்பெறவில்லை.

3) "சிஷ்டரந்தாதி " எனும் நூல் ஐந்தே பாடல்களைக் கொண்டதாகும்.

4) மாணிக்கவாசகரின "பண்டு ஆய நான் மறை" ஏழு பாடல்களால் தொடுக்கப்பெற்ற அந்தாதி நம்மாழ்வாரின் "திருவாசியம் " எட்டு அந்தாதிப் பாடல்களைக் கொண்டதாகும்.

மாணிக்கவாசகப் பெருமானின் பிரார்த்தனைப் பத்து என்பது பதினொறு பாடல்களைக் கொண்டது. இதனை ஏகாதசம் எனவும் கூறுவர்.

கி. பி. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நயினார் ஆசாரி என்பவர் இருபது பாடல்களைக் கொண்ட "பிள்ளையந்தாதி" என்ற நூலை இயற்றியுள்ளார்.

கி. பி. 20ஆம் நூற்றாண்டைச் சார்ந்த "சித்தர் அந்தாதி" இருபத்திரண்டு பாடல்களைக் கொண்டது. கம்பரின் முப்பது பாடல்களைக் கொண்ட "சரசுவதி அந்தாதி" கி. பி. 12ஆம் நூற்றாண்டினது.

கி. பி. 9ஆம் நூற்றாண்டின் மணிவாசகப் பெருமான் இயற்றிய "நீத்தல் விண்ணப்பம்" ஐம்பது பாடல்களைக் கொண்டது.

இருபதாம் நூற்றாண்டின் "திருக்குறள் அந்தாதி" அறுபத்து நான்கு பாடல்களைக் கொண்டது.

"பெரிய திருவந்தாதி" என்ற எண்பத்தேழு பாடல்களைக் கொண்ட நூல் கி. பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நம்மாழ்வார் அவர்கள் இயற்றியதாகும்.

கி. பி. 7ஆம் நூற்றாண்டில் திருமழிசை ஆழ்வார் அவர்கள் தொண்ணூற்றாறு பாடல்களைக் கொண்ட "நான் முகன் திருவந்தாதி" யினை இயற்றியுள்ளார்கள்.

நவநீதப் பாட்டியலின் 37வது சூத்திரப்படி ஐம்பது எழுபது, தொண்ணூறு பாடல்களைக் கொண்டதாக அந்தாதி நூல்கள் அமைந்திருப்பன என அறிய இயலும். ஒரு நூற்றுப் பத்துப் பாடல்களைக் கொண்டது.

கி. பி. 16ஆம் நூற்றாண்டின் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் அவர்கள் இயற்றிய "நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி" எனும் நூல்;

"சிவபூசை யந்தாதி" எனும் நூல் நூற்று இருபத்தேழு பாடல்களை உடையது இது கி. பி. 19ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

"பாண் பெருமாளந்தாதி" எனும் 20ஆம் நூற்றாண்டு சார்ந்த நூல் இருநூற்று இருபது பாடல்களைக் கொண்டதாகும்.

கி. பி. 20ஆம் நூற்றாண்டின் "ஆன்மநாதன் பதிற்று நூற்றந்தாதி" எனும் நூல் ஆயிரம் பாடல்களைக் கொண்டது. திருவாய் மொழி அந்தாதி எனும் நூலில் ஆயிரத்து நூற்று இரண்டு பாடல்கள் உள்ளன. இது கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் நம்மாழ்வார் அவர்கள் இயற்றியது. ஆக இவ்வாறு அந்தாதி நூல்கள். செய்யுளின் எண்ணிக்கை அடிப்படையில், வேறுபாடுகள் கொண்டுள்ளவை எனத் தெளிவாக விளங்கும்.

பெண்பாற் புலவர்களான காரைக்கால் அம்மையார் "அற்புதத் திருவந்தாதி"யையும் மனோண்மணியம்மை (1863-1904) என்பார், 1) திருவாரூர் அகிலாண்ட நாயகி அந்தாதி, 2) திருமயிலைக் கற்பகாம்பாள் அந்தாதி, 3)திருமுல்லைவாயில் கொடியிடை அந்தாதி ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். மேலும் ஔவையாரின் (கி.பி. 12ஆம் நூற்றாண்டு) பந்தன் அந்தாதி என்ற நூலும் குறிப்பிடத் தக்கனவாகும்.

அந்தாதி நூல்கள் இந்து சமயத்தினதாக மட்டுமின்றி சமணம், மகமதியம், கிருத்தவம் சார்ந்தனவாகவும், பல படைக்கப்பெற்றுள்ளன.

அவிரோதியாழ்வார் இயற்றிய திருநூற்றந்தாதி மற்றும் திருமேற்றிசை அந்தாதி, தர்மதேவி அந்தாதி ஆகிய மூன்றும் சமணம் சார்ந்தவை.

18 மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் , 1) மெதினத் தந்தாதி, 2) பதிற்றந்தாதி, 3) முகையீதீன் அப்துல் காதிறாண்டவர் பேரில் அந்தாதி, 4) திருமதீனத்துப் பதிற்றுப் பத்தந்தாதி, 5) திருமதீனத்து வெண்பா அந்தாதி, 6)திருமதீனத்து மாலை அந்தாதி, 7) திருமதீனத்து யமக அந்தாதி, 8)குணங்குடி நாதர் பதிற்றுப் பத்தந்தாதி, 9)நாகை அந்தாதி, 10) நாகூர்த் திரிபந்தாதி, 11) திருபகுதாதந்தாதி, 12)திருமக்கா திரிபந்தாதி, 13 அகமதுல் கபீறுற்றிலாகி ஆண்டகை மீது அந்தாதி ஆகிய மகமதிய சமய நூல்கள் இடம்பெற்றுள்ளமையும், கிருத்தவ மதம் சார்ந்த 18ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் இயற்றியதான "அன்னை அழுங்கல் அந்தாதி"யும் பின்னர் 19ஆம் நூற்றாண்டில் "அபிடேக நாதர் மாலை அந்தாதி, தேவமாதா பேரின்ப அந்தாதி, திருவருள் அந்தாதி, தேவமாதா அந்தாதி ஆகியனவும் குறிப்பிடத்தக்கனவாகும். ஆகவே அந்தாதி நூல்வகை சமயம் கடந்த ஒன்று எனவும் தெளியலாம். இதுவரை கிடைத்துள்ள அந்தாதி நூல்களின் பட்டியல் மிகப்பெரியதாகும். மேலும் அந்தாதி பற்றிய செய்திகளை அறிய விழைவோர், இலக்கண நூல்களை மட்டுமின்றி விளக்கவுரை நூல்களையும் உற்றுநோக்கின் விரிவாக அறிய இயலும்.

காணப்பெறும் இவ்வுலகம் அழிவதும் இல்லை, அழிந்தபின் தோன்றுவதுமில்லை, எப்பொழுதும் இருப்பதாகிய ஒரு நிலையிலேயே அது இருக்கும், எனவே இதற்காக வேண்டி, கடவுள் என ஒருவர் வேண்டுவதில்லை என்பது சில சமயவாதிகளின் கருத்து. ஆனால் சைவ சமயக் கொள்கை இதற்கு முற்றிலும் மாறானதாகும்.

அவன், அவள், அது என்பதாகிய அவயப் பொருட்கள் அனைத்தும் உண்டாதலையும், தோன்றுவதையும், நாம் கண்கூடாகக் காண்கிறோம். எனவே இவைகளின் ஆக்குதல், காத்தல் ஆகிய தொழில்களைச் செய்ய பேரறிவுப் பொருள் வேண்டப்பெறுகிறது எனக் கூறுவர்.

கடவுளையே அந்தாதி எனக் கந்தபுராணத்து காமதகனப் படலப்பாடல் 27 கூறுகிறது.

"எந்தாய அருளென் றொரிளங் குமரன்
அந்தாதியை யேத்தலும் வைதுசினக்
கொந்தா ரழல் போல் வருகூற்றுவனை
அந்தாள் கொடுதுதைத்த தறிநதிலையோ!"

எனக்கூறும்,

மெய்கண்டதேவர், தமது சிவபோகத்தில், இவ் வுலகத்திற்கு "அந்தத்தைச் செய்பவனே ஆதலைச் செய்யும் ஆதியுமாவான்" என்னும் பொருள்பட அந்தம் ஆதி என்மனார் புலவர் (சி.போ-1) எனக்கூறுகிறார். ஆகவே அந்தாதி என்ற சொல்லே கடவுளுக்குமாதி-சைவ சமயக் கருத்தையும் கூறி இலக்கிய வகையுள் ஒன்றாகவும் அமைந்து நிற்கின்ற சிறப்புடையதென்பதை தெளிவுற அறியலாம்.

அந்தாதிகள் இவை என ஒரு பட்டியலை பல நூலகங்களுக்கும் சென்று தேடி-அகர வரிசைப்படுத்தி கொடுக்கப்பெற்றுள்ளது. அறிவார்ந்த பெரியோர்கள் இதனினும் வேறு உண்டெனக் காணின் எமக்குத் தயை கூர்ந்து தெரிவித்தல் வேண்டும். அவைகளை அடுத்த பதிப்பில் சேர்க்க இயலும்.

• • • • • • •

# திருப்புகலூர் அந்தாதி

## காப்பு

**உரைசெய் மறைக்கும் தலை தெரியவொரு கொம்பை என்றே**
**பரசுமவற்குப் பெருநிழலாக்கும் பழனமெல்லாந்**
**திரைசெய் கடற்றுறைச் சங்கமுலாவுந் ;திருப்புகலூ**
**ரரசனிடத்து மகிழ் வஞ்சி யீன்றவோர் அத்தி நின்றே !**

*அலைகள் வீசும் கடலில் விளையும் சங்குகள், வயல் நிலங்களிலெல்லாம் உலாவுகின்ற சிறப்பினையுடைய திருப்புகலூரின் இறைவனாரிடத்தில் வயல் நிலங்களி லெல்லாம் உலாவுகின்ற சிறப்பினுடைய திருப்புகலூரின் இறைவனாரிடத்தில் மகிழ்கின்ற, கொடி போன்ற இடையை யுடைய உமாதேவியார் பெற்றருளிய, வேதத்திற்கும் தலைதெரியாத ஒற்றைக்கெம்பையுடைய விநாயகர் என்றே புகழ்ந்து பணிவோருக்கு பெருநிழலாய் விளங்குவார் அவ்விநாயகர்.*

*அத்தியென்பது ஒருமரம் அதனை விநாயகருக்குக் கூறியது-கொம்பு உடையது-நிழல் தருவது கொண்டு சிலேடை.*

*அத்திமரம், வெய்யிலால் களைத்து வந்தோர்க்கு நிழலைத் தருவதுபோல, துன்பத்துழன்றவர் துதிக்கின், அவர் இடர்களைக் களைபவர் விநாயகர் எனப்பொருள் கூறி நின்றது இப்பாடல்.*

**பூக்கமலத்து விழிவளர் வானென்றும் போற்றியவூர்**
**மாக்கமலத்து மகிழ்கின்றவூர் மது வானிறைந்த**
**தேக்கமலத்து வழியே பரக்குந் திருப்புகலூர்**
**நோக்கமலத்துயர் சோதி நெஞ்சே நம்மை**
**நோக்குதற்கே. (1)**

பொலிவு மிக்க நீரிடை தூங்கும் திருமால் போற்றிடும் ஊர், தாமரையில் உறையும் இலக்குமியும் மகிழ்வுடன் வசிக்கின்ற ஊர் திருப்புகலூர். வயல்களின் உழவர்கள் உழும்போது அத்தேக்கு மரக் கலப்பைகளின் வழியே தேன் வடியும்படியான வளம் மிக்கது இப்புகலூர். ஏ, மனமே ! நிர்மலமான உயர்ந்த சோதிவடிவினனான சிவபெருமா னாரின் இப்புண்ணியத் தலத்தை தரிசிப்பாயாக.

கமலத்து-நீரினிடத்து, மா-இலக்குமி, கமலத்து-தாமரைமேல், மதுவால்-தேனால், அலத்து-கலப்பையின், அமலத்து-நிர்மலமான; நோக்குதற்கு-அருள் செய் வதற்காக, தேக்கு+அமலத்து=தேக்கமலத்து தேக்குமரக் கலப்பை. மதுவால்+நிறைந்த=மதுவானிறைந்த. இப் பாடலில் அத்தி, மகிழ்வஞ்சி எனும் மரப்பெயர்கள் வருகின்ற தாயினும் பொருள்பெறா நின்றமை காண்க.

கலப்பைகளை கிராமங்களில் சாதாரணமான கருவேல மரம் போன்ற நார் தன்மையுள்ள எளிதில் தேய்மானம் அடையாத மரங்களால்தான் செய்வர். ஆனால் இங்கு தேக்கு மரத்தால் ஆன கலப்பை எனக் கூறப் பெற்றுள்ளது.

**நோக்க மருக்கும் விழிச்செல்வர் பாற் கவி நூறுரைத்துத்**
**தாக்க மருக்கு முருகா வருளென்பர் தண்செருந்தி**
**பூக்க மருக்குலவும் புகலூரரைப் போற்றியுய்யார்**
**பாக்க மருக்குதென்கொல் சொல்வாணர்**
**பரிவிதுவே! (2)**

புலவர்களே! பொருள் வேண்டி வந்தவர்களை அருட்கொண்டு பாராது, கண்களை நெருக்கிப் பார்க்கும்

தன்மையுடையவர்களின் முன்னே சென்று கவிகள் நூறு கூறிப்புகழ்ந்து, போரில் வெற்றியே பெரும் முருகனுக்குச் சமமானவரே என்று கூறியும் பொருள் ஏதும் தாரார். இவ்வாறான செயல், பாறை வெடிப்பிற்குள் பாலை வார்க்கும் செயலை ஒக்கும். எனவே இதனை விடுத்து, குளிர்ச்சி மிக்க செருந்தி மரங்களின் பூக்கள் மலர்ந்து நறுமணம் வீசும் புகலூரானைப் புகழ்ந்து பாடி அவனுடைய அருளைப் பெற்றுய்யுங்கள்.

அருக்கும் விழி -நெருக்கிய கண்கள், செருந்தி- ஒருவகை மரம், மருக்குலவும்-மரு+குலவும்+பூ=வாசனை வீசும் பூ, கமர்-வெடிப்பு, கமருக்குப்பா- வெடிப்பிற்குள் பால், பா-பால், உகுத்தல்-ஊற்றுதல், சொல்வாணர்- புலவர்கள், தாக்கு+அமருக்கு=தாக்க மருக்கு

**பொய்மையளரைப் பாடாதே எந்தை**
**புகலூர் பாடுமின் புலவீர்காள்**

எனும் சுந்தரரின் தலப்பதிகங்களைக் காண்க.

**இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்**
**கரப்பார் இரவன்மின் (குறள்-106)**

என்று என வள்ளுவர் பொருளேதும் தராதவரிடத்துப் போய் ஏதும் கேட்காதீர் என இரப்போரை வேண்டிக் கொள்வார்.

**பரிக்குமரிக்கு விழியான பங்கயஞ் செய்கையிலே**
**கிரிக்குமரிக்கு மருவு மெப்போதுங் கிளர் விசும்பி**
**லரிக்குமரிக்கு மயனுக்கு மேற்பத மன்பர்க்கென்றே**
**தெரிக்குமரிக் குலஞ் சூழ் புகலூரர் தஞ்சேவடியே ! (3)**

திருமாலின் விழிகளாகிய் தாமரையைக் கையிலே சுமக்கும் மலைமகளாகிய பார்வதிதேவியுடன் என்றும் கூடி இருக்கும் திருப்புகலூர் வாழும் இறைவனாரின் திருவடிகள், தேவர் உலகத்தவர்களாகிய திருமாலும், பிரமனும், உலக அழிவு காலம் வரை தேடியும் காணக் கிடைக்காதவை எனவும்,

அவ்விறைவனாரிடத்து மெய்யன்பு கொண்ட அடியவர்களின் கண்களுக்கு மிகவும் எளிமையாகத் தெரியக் கூடியன வென்றும், வண்டுகளின் கூட்டங்கள் தெரிவிக்கின்றன.

அரி-திருமால், இந்திரன், பரிக்கும்-சுமக்கும், பங்கயம்-தாமரை, கிரிக்குமரி-மலைமகள், மருவும்- இணைந்திருக்கும், விசும்பில் + அரிக்கும் = விசும்பி லரிக்கும், மரிக்கும்-உலக அழிவின் காலம் வரைக்கும். விழியான பங்கயம் என்பது-சக்கராயுதம் பெறவேண்டி ஈசனை மலர் கொண்டு அருச்சித்த திருமாலுக்கு ஒரு மலர் குறைவுபட்டபோது மலருக்குப் பதிலாக தன் கண்ணையே மலராகக் கொண்டு அர்ச்சித்தார். அம்மலர் தாமரை- அதனையே உமாதேவியார் தன் கையில் கொண்டுள்ளாள்.

அயன்-பிரம்மன், தெரிக்கும்-தெரிவிக்கும், அரிக்குலம்-வண்டுகளின் கூட்டம், தெரிக்கும்+அரி+குலம்= தெரிக்குமரிக்குலம். தேவாரத்தில்,

**நூறுகோடி பிரமர்கள் நொந்தினார்**
**ஆறுகோடி நாராயண ரங்ஙனே**
**ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்**
**ஈறி லாதவ னீச னொருவனே**

என்னும் பாடலை நோக்கின் கர்பாந்த காலமெனும் முற்றழிவு காலம் பற்றி அறியலாம்.

தஞ்சையை ஆண்ட (1684-1711) சஹஜி மன்னரால் இயற்றப்பெற்ற விஸ்வாதீத விலாச நாடகம் என்னும் நாடக நூல் திருமாலும், பிரமனும் சிவனாரின் அடிமுடியைச் காண முயன்ற வரலாற்றைக் கூறும். (சரசுவதி மகால் வெளியீடு)

**சேவடி வந்திப்பவர் வினை தீர்ப்பவர் தென்னன் முன்னே**
**மாவடி வந்திக்கு மண்சுமந்தோர் மருவும் புகலூர்த்**
**தூவடி வந்திப் புதுநிற வேற்கண் சுடர்க் குழைமேற்**
**றாவடி வந்திப்படி யென தாவி தளர்வித்ததே ! (4)**

சிவந்த திருவடிகளை வணங்குகின்றவர்களின் துயரங்களைத் தீர்ப்பவரும், முன்னொரு நாளில் தென்னவனாகிய அரிமர்த்தன பாண்டியன் முன்னே, மாவை வடித்துப் பிட்டாக்கி விற்றுப் பிழைத்த வந்தி யென்பாளுக்காக கூலியாளாக வந்து மண்சுமந்து காட்சி தந்தவனுமாகிய, எமது இறைவனார் எழுந்தருளியுள்ள திருப்புகலூரிலே, தூய வடிவும், அந்திச் செவ்வானமெனச் சிவந்த வேலையொத்த கண்களையுடைய உமாதேவியார், சுடர்விட்டுப் பிரகாசிக்கும், மகரக் குழையைத் தொடுமாறு தமது காலைத் தூக்கிய இறைவனாரைக் காணும் காட்சியை, நான் காணும்போது எனது ஆவி தளர்வுற்றது.

அந்திப்புது நிறம்-மாலைச் செவ்வான நிறம், மருவும்-எழுந்தருளிய, தூ-தூய, தாவடி என்ற சொல்லைக் கொண்டு பொருள் கூறின்-காலானது குழையைத் தொடச் சென்ற காட்சி-குழையோடு போரிட, கால் சென்றது என்று கற்பனை நயம் உடையது. தாவடி போதல்-தாவிச் செல்லுதல் எனவும் பொருள் கொள்ளலாம். கந்தரலங் காரத்தில்-தாவடி யோட்டு மயிலும் என வரும். தாவடி போர்- இதனை ராவடி என பழகுமொழியிற் காணலாம். தாவடி-பயணம் எனவும் பொருள் உண்டு. தளர்வித்ததே- ஏகாரம் ஈற்றசை, வேல்-வேலைப்போன்ற, சேவடி-சிவந்த பாதங்கள், மாவடி-மாவை வடித்து பிட்டாக்கி விற்கும், ஆவி-உயிர், குழை- காதணி, (மகரக்குழை என்பர்) தலைவன் உற்றது உரைத்தல்-எனும் வகையது தலைவி தலைவனை வியந்து காணும் காட்சியைக் காண ஆவி தளர்வுற்றது என்பது கருத்து.

**வித்த கனத்துப் பனைய செம்மேனியன் வெவ்வழற்கண்**
**மத்தகனத்துப் பயில் புகலூரான் முன் மாதர் சொல்லா**
**ரத்த கனத்துப் பொடியாய் மடிந்த வனம் பசல**
**மொத்த கனத்துத் தனத்திடையே பட்டுழைக் குன்றதே! (5)**

சங்கினங்கள் நிறைந்த வயல்கள் சூழ்ந்த வளமான, திருப்புகலூரில் வாழும் இறைவன், முற்றும் உணர்ந்த

முழுமுதற் கடவுள், பவளம் போன்ற சிவந்த மேனியை யுடையவன், நெருப்பின் வெப்ப மிகுந்த நெற்றிக் கண்ணை யுடையவன், இப்படிப்பட்ட இறைவனார் முன் சென்று எம்பெண்கள், அன்றொரு நாள், தங்களால் எரிக்கப்பட்ட மன்மதனுடைய காமக்கண்கள், பொன்னங்கிரியை யொத்த கனத்த எங்களது இரு கொங்கைகளிடையே பட்டுப் பெரிதும் வருத்தஞ் செய்கின்றன வென்று கூற மாட்டார்கள்.

வித்தகன்-வித்தைகள் யாவும் அறிந்தவன், துப்பு-பவளம், மத்தகன்-அகன்ற நெற்றியையுடையவன், நத்து-சங்கு, அத்+தகனத்து=ஆங்கே சிவன் எரித்தபோது- அத்த கனத்து, உழைக்கின்றது-வினையால் அணையும் பெயர், ஏ - இரண்டும் அசை, (தனத்திடையே-உழைக்கின்ற (து+ஏ)தே), மடிந்தவன்-இறந்தவனாகிய மன்மதன், அசலம்-மலை, தனத்திடை-இருகொங்கைகளுக்கிடையே, மத்தகன்+ நந்து+ பயில=மத்தகனத்துப் பயில, மடிந்தவனம் பலசலம்= மடிந்தவ+அம்பு+அசலம். செய்யாத வொன்றை செய்யவும் மாட்டார்கள் என்று கூறுவது இப்பாடல் தலைவி கூற்றாக அமைந்தது.

**உழைக்கை யிலைத்தரு வெவ்வாய் மழுப்படைக் குற்ற கையர்**
**கழைக் கையிலைக் குன்றர் தென்புகலூரிலென் கண்ணகலா**
**பிழைக்கை யிலைக் கொடி யென் றழுதேற்குப் பெருங்களிற்றின்**
**புழைக்கையிலைப் பொலி வேலாற்றடிந் தெம்மைப்**
**போமென்றதே! (6)**

தன் கையிற் பிடித்த மானுக்குக் கூர்மையைத்தராகி, இலைபோன்று விரிந்த வெப்ப மிகுந்த மழுவாயுதத்தைக் கையில் ஏந்திய, மூங்கில்கள் விளையும் கயிலை மலையினரான, சிவனார் வாழும், அழகிய தென்புகலூரில் எந்நெஞ்சைவிட்டகலா நின்ற இறைவனார் முன் சென்று எம்பெண்கள் காமவலைப்பட்டு, பிழைக்க இயலார் ஆகி உயிர் துறக்கும் நிலையினர் ஆயினர் என்று கூறி அழுத போது, அச்சிவனார், பெரிய யானையின் துளைகளை யுடைய துதிக்கையை, இலையைப் போன்ற வடிவினதான

வேலைக்கொண்டு தாக்கிக் கொன்று காட்டி பயப் படாதீர்கள் போங்கள் என்று கூறினார்.

உழை-மான், கழை-மூங்கில், பிழைக்கயிலை- பிழைக்க மாட்டாது, இது களிறு தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல் எனும் வகையது. கொடி-கொடி போன்ற இடையையுடைய பெண்கள், புழை-துளை, கை- துதிக்கை, பொலி-ஒளிமிக்க-விளங்குகின்ற எனவும் பொருள் கொள்ளலாம். தடிந்து-கொன்று, இராமன் தன் ஒரே அம்பினால் ஏழு மரா மரங்களைத் துளைத்துக் காட்டி, சுக்ரீவனை சமாதானஞ் செய்த காட்சியை யின்னவிற் கொள்க.

**போமென்று வந்திப் புதுமாலை மேல் வரும்போது நெஞ்சம்**
**வேமென்று வந்தித்தவள் கிடந்தாள் செய்யின் மென் கழு நீ**
**ராமென்று வந்திக் கருந்துந் திருப்புகலூரிறைவர்**
**தாமென்று வந்தித் தனி கெடுப்பார் கொன்றைத் தாரளித்தே ! (7)**

சூரியன் மறையும் நேரமாகிய மாலை நேரம் வரும் போது என் மனம் வெந்து உருகிப் போகிதே என்று புகலூர் இறைவனைத துதித்துக் கிடந்தாள், எம்பெண்; மாடுகள், வயல்களில், மென்மையான செங்கழுநீர் மலர்களை மென்று தின்ற பின்னரும் விரும்பிக் கரும்பையும் கடித்துத் தின்னும்படியான வளம் மிக்க புகலூரில் வாழும் இறைவ னாரே! நீர் எக்காலத்து வந்து உம்முடைய கொன்றை மாலையைக் கொடுத்து இவளது தனிமையைக் கெடுப்பீரோ?

போம்-மறைந்துபோம், என்று-சூரியன், அந்தி- மாலை நேரம், வேம்-வேகும், இத்தனி-இத்தனிமையை, கொன்றைத் தார்-கொன்றை மலர்மாலை, ஆ-பசு வினங்கள், இக்கு-கரும்பு.

அந்திப்புதுமாலை:- வீழ்கதிர் மறைந்த அந்தி மாலை என மணிமேகலையில் மாலை நேரத்திற்கும் அந்தி நேரத்திற்கும் உரிய வேறுபாடு விளக்கப் பெறுவதைக் காணலாம். *(24:160)*

செய்யில்-வயல்களில், வந்தித்து-துதித்து, மென் கழுநீர்+ ஆ+மென்று+உவந்து + இக்கு + அருந்தும் = மென் கழுநீரா மென்று வந்திக்கருந்தும், வேம்+என்று+ வந்தித்து+ இவள் வேமென்று வந்தித்தவள். உருகிய அன்பு நிலையை உணர்த்தும் இப்பாடல் தலைவியின் "கூற்றா[illegible]ந்தது".

**தாரக் கடுக்கை யவர்க் கென்ற போதெம்மைத்**
**தாயரெல்லாஞ்**
**சேரக் கடுக்கை திருவுளமோ தெளியா விருவர்**
**பேரக் கடுக்கை யணி புகலூரிற் பெருந்தகையே**
**யாரக் கடுக்கைம் மலர் மீதுகொண்ட வருட்கடலே! (8)**

"இக்கொன்றை மாலை எம் இறைவனார்க்கு" என்று சொன்னபோது எம் தாயரெல்லாம் ஒருசேரக் கோபங் கொண்டு நெருங்கினர் இதுவும் உன் திருவுளச் சம்மதமோ? செருக்கின் காரணமாக, மனத்தெளிவிலாது நின்ற திருமாலும், பிரமனும் ஆகிய இருவரின் பெரியதாகிய எலும்புகளை அடுக்கடுக்காகக் கட்டிய மாலையை ஆபரணமாகத் தரித்து திருப்புகலூரில் வாழும் பெருந்தன்மையுடையவனே! அழகிய மலர் போன்ற கரத்தில் விஷத்ததைத் தாங்கிய அருட்கடலே !

கடுக்கை-கொன்றை, கோபித்தல், தாயார்- உறவினர்கள், சேர+அக்+கடுக்கை=சேரக்கடுக்கை, அக்கடுக்கை-எலும்பை அடுக்காகக் கட்டிய,கடு-விஷம்,தார்அக்+கடுக்கை=தாரக் கடுக்கை: தார்- மாலை.

"தாயார்" என்ற சொல்லுக்கு தாயாதிகள் என்ற பொருள் ஏற்றி-உறவினர்கள் எனப் பொருள் கூறப்பெற்ற உ. வே. சா. நூலகப் புத்தகம் தவிர திருவாவடுதுறை ஆதீன வித்வான் சித்தாந்த சைவமணி த. ச. மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் தாய்மார்கள் எல்லாம் எனப் பொருள் கூறியுள்ளார்.

பேர்+அக்கு+அடுக்கை=பேரக்குடுக்கை, அக்கு- எலும்பு, தெளியா இருவர்-இறைவனாரின் அடியும் முடியும் எதுவென அறிய இயலாத, இருவர்-பிரமனும், திருமாலும் இவர்கள் செருக்கின் காரணமாக உண்மையை

உணராதாராயினர். ஆர+கடு+கை+மலர்=ஆரக்கடுக்கை மலர், ஆர=உண்பதற்காக: கை+மலர்= கையாகிய தாமரை மலரிலே என்பதும் ஒரு பாடம். இப்பாடல் தலைவி கூற்றாக அமைந்துள்ளது. கடைசி வரி:- யாரக் கடுக்கை-ஆரக்கடுக்கை-என பாடபேதம்.

**கடற்றானை மானும் விசும்பும் வெளாமற் கறுத்ததிரு**
**மிடற்றானை யானை வுரித்த பிரானைனை வெகுண்டிலங்கை**
**யுடற்றானை யூரும் புகலூரனைத் தொழு தொண்டொடிக்கை**
**யடற்றானை மாரன்கை யம்பு பெற்றாள் பெற்ற தத்தனையே!(9)**

கடலை ஆடையாக உடுத்த பூமியும், அமரர் உலகமும் வெந்து நீராகிப் போகாமல், இருக்கவேண்டி ஆலகால விஷத்தையுண்ட திருநீலகண்டனாகியவனும், யானையை உரித்தவனும், இலங்கையில் வாழ்ந்த, இராவணன் முதலானவர்களை அழித்த திருமாலை, காளை வாகனமாகக் கொண்டவனும், திருப்புகலூரின் கண் உறைபவருமாகிய எமதிறைவனாரைப் பணிந்து, வளையல்களைக் கைகளில், அணிந்த எமது பெண், பல மிக்க தனது படைகளுடன் கூட மன்மதன் தனது கையில் உள்ள, அம்புகளை அவள் மீது எறிந்த காரணத்தால், துன்புறுகின்றாள், அவ்வளவுதான் என்பேன் !

தானை-ஆடை: மான்-பூமி: ஒண்-ஒளிமிக்க: விசும்பு-விண்ணுலகம்-ஆகாயம்: தொடி-வளையல்: தானை-சேனை, மாரன்-மன்மதன், இலங்கை உடற்றான்-இலங்கையிலிருந்த அசுரர்களை அழித்த திருமால் தஞ்சாவூர் மாவட்டம் வழுவூர் கோயில் தலபுராணத்தில், தாருகாவனரிஷிகளால் சிவன் பேரில் ஏவப்பட்ட யானையைக் கொன்றதோடு மட்டுமின்றி அதன் தோலை உரித்து தமது இடுப்பாடையாக சிவன் உடுத்த கதையைக் காணலாம். ஒண்+தொடி+கை=ஒண் டொடிக்கை. (முந்தானை-முன்தானை, முன்புறமணியும் ஆடை) இது தோழி அல்லது செவிலித்தாய் ஆகியோர்களில் ஒருவரின் கூற்றாக அமைந்த பாடல்.

**அத்தக் கமல மனவைய மேற்கின்ற வையர் துய்ய**
**புத்தக் கமல வடிவிலுள்ளார் கிடம் புண்டரீக**
**சுத்தக் கமல வயற் புகலூரு மெய்த் தொண்டர் கடஞ்**
**சித்தக் கமலமும் வேதங்கணான் கின் சிரங்களுமே! (10)**

கையில் உள்ள பிர்ம கபாலமெனும் பிச்சை எடுக்கும் ஓடு நிறையவேண்டி பிச்சையெடுக்கின்றவரும், தூய, உத்திராட்ச மாலையை உடலில் அணிந்தவருமாகிய எமதிறைவனார் வாழுகின்ற ஊர், தாமரை மலர்கள் நிறைந்த நீர் நிலைகளை யுடைய **திருப்**புகலூராகும், மேலும், அவ்விறைவனார் மெய்யடியார்களுடைய இதயக் கமலத்துள்ளும், நான்கு வேதங்களின் முடிவுகளுள்ளும் உறைகின்றார்.

அத்தம்-ஹஸ்தம்-கை:கம்-தலை-(பொதுப் பொருள்): கம்-பிரமனின் மண்டையோடாகிய பிச்சை ஏற்கும் பாத்திரம்: அலம்-குறையாதிருத்தல்: அக்கு- உத்திராட்சை மாலை: கமலம்-நீர் நிறைந்த: புண்டரீகம்- தாமரை: தொண்டர்கள்+ தம்+சித்தம்=தொண்டர் கடஞ் சித்தம்: அத்தம்+அக்+கம்+ அமலம்=அத்தக்கமலம்: புத்து+அக்கு+அமலம்=புத்தக் கமலம்: சித்தக்கமலம்- இதயக்கமலம்: (சித்தம் என்பது இதயமாகாது; எனினும் இவ்வாறே பொருள் கூறப்பெற்றுள்ளது): தொண்டர்கள்+தம்=தொண்டர்கடஞ்: வேதங்கணான்கின்= வேதங்கள்+ நான்கின்: வேதங்கணான்கின் சிரங்கள் என்பது வேத சிரஸ் எனும் உபநிடதங்கள் எனப்பொருள் கொள்க. ஏ- ஈற்றசை, வேதங்களின் முக்கியக் கருத்துக்களை விளக்கிக் கூறுங் காரணத்தால் உபநிடதங்களை வேத சிரஸ் என்பர். வேதங்களின் முடிவுகளை-தீர்வான கருத்துக்களைக் கூறுவன எனக் கொண்டு வேதங்களின் முடிவே ஈசன் என்றானது. முடியானது எனவும் கொள்ளல் தகும்.

**சிரந்தரிக் குங்கையர் தென் புகலூரரென் சிந்தையுள்ளே**
**கரந்தரிக்குந் தெரியாத பொற்பாதர் கறை யரவும்**
**பரந்தரிக்கும் புனற் பாகீரதியும் பனி மதியும்**
**நிரந்தரிக்குஞ் சடையார் நகைபோல நிலா வருமே ! (11)**

நிலவின் உதயத்தைப் பார்க்கின்றபோது, பிரமனின் மண்டையோடாகிய பிச்சைப் பாத்திரத்தைக் கையில் ஏந்திய, என் மனத்திடையே மறைந்துறைகின்ற, திருமாலி னாலும் காணப்பெறாத பொன்னடிகளையுடைய, விஷமுடைய பாம்பையும், நிலத்தை அரித்துக் கொண்டு ஓடும் கங்கையையும், குளிர்ந்த நிலவையும், ஒருசேரத் தலைமுடியில் நிரந்தரமாக அணிந்து புகலூரில் வாழும் எமதிறைவனாரின் புன்னகையைப் போன்று தோன்றுகிறது.

சிரம்-பிரமனின் தலை: கரந்து-மறைந்து: கறை- விஷம்: அரிக்கும்-மண்ணை அரித்துச் செல்லும்: பாகீரதி-கங்கை: புனல்-நீர்: பனி-குளிர்ந்த: காணும் காட்சியை மாறாகக் காணுவதாகக் கூறுவது மற்றொன்று: இறைவனின் புன்னகை யால் திரிபுரங்கள் எரிந்து போயின: உதயநிலவு பகீரதனின் முயற்சியால் பூமிக்குக் கொண்டுவரப்பெற்ற கங்கைக்கு "பாகீரதி" எனப்பெயராயிற்று. இறைவனின் புன்னகையைப் போன்று இருப்பதால், இப்புன்னகை என் பெண்ணின் உள்ளத்தை எரித்து காமவேதனையைத் தந்து எரிக்கின்றது என்பது ஒருபாடம். உருகிய அன்பு நிலையை உணர்த்தும் இப்பாடல் தலைவியின் கூற்றாக அமைந்த பாடல், "சிரம் தரிக்கும் கையர்" எனும் செய்தி பல பாடல்களிலும் வருவதைக் காண்க.

**வரு காவிரிக் கெதிர் மாமலராடையை மாரற் கம்பு**
**தருகா விரிக்கும் புகலூரிறைவர் தமது தில்லைக்**
**கருகா விரிச்சுரநீர் கடந்தீரினியம் புயத்தேன்**
**பருகா விரிப்பித்து வண்டிசை பாடும் பழனங்களே ! (12)**

பூமிக்கு மலையிலிருந்து வருகின்ற காவிரி ஆற்றிற்கு எதிர்ப்புறமாக உள்ளதும், மலர்களையே ஆடையாக உடுத்தியது போன்ற வளமுடையதுமான, மன்மதனுக்கு அம்பினைக் கொடுத்த இறைவனார் வாழும் புகலூரை வந்தடைந்துவிட்டீர்கள், ஆகவே பாலை நிலங்களைக் கடந்த வராவீர்கள். தாமரை மலர்களில் உள்ள தேனை உண்டு

வண்டுகள் இசைபாடுகின்ற சிறப்பினையுடைய மருத நிலத்தின் (சிதம்பரத்திற்கு) மிக அருகில் வந்துவிட்டீர்கள்.

மா-பெருமை மிக்க, மாரர்க்கு-மன்மதனுக்கு, கா-சோலை, அம்புத்தேன்-தாமரை மலர்களில் உள்ள தேன். இப்பாடல் இடங்களின் சிறப்பைக் கூறுவதால், இலக்கண வகையால் "இடமணித்தென்றல்" என்பர். புகலூர் வந்தடைந்ததால் பாலை என்னும் உங்கள் துயர் தீர்ந்தது - சிதம்பரத்திற்கு காவிரியில் வரும் வெள்ளமானது ஆங்காங்கே யுள்ள மரஞ்செடி கொடிகளினின்றும் மலர்களை ஏந்தி வரும். இது மலராடை விரித்தாற் போற்றோன்றும். அதற்கு எதிராக புகலூரில் உள்ள சோலைகளும் மலர்களை நிறைத்ததாகி மலராடை விரித்தாற் போற்றோன்றும் எனும் பொருளும் உடையது இப்பாடல்.

அருகாமையில் வந்துவிட்டீர் என்பது இறையருளால் பிறவிப்பிணி நீங்கும் நிலைக்கு வந்தீர் என்பது பாடம். காவிரிக்கும்-சோலைகள் நிறைந்த என்பதுற்கு மாரனுக்கு மலர்க்கணைகளைக் கொடுக்கும் ஐந்துவிதமான மலர்களும் நிறைந்த சோலை எனவும் பொருள் கொள்ளலாம்.

**மன்மதனின் அம்புகளாகப் பயன்படுபவை ஐந்துவித மலர்கள்:-** *1) அரவிந்தம்-இக்கணை பட்டோர் தம் காதலன் மீது ஓயாத நினைவுடையவராவார். 2)மாம்பூ-இக்கணைப்பட்டோர் 'பசலை' நோயுறுவர்-ஏக்கம் இவர்தம் நிலை. 3) அசோக மலர் கணையால் தாக்குண்டவர்கட்கு உணவு செல்லாது-பால் கசக்கும். 4) முல்லை மலர்கணை-சோகத்தைத்தருவது. 5) நீலம்-இம்மலர்க்கணை மரணத்தைத் தருவது "இனியும் அவைனைக் காணேன் எனின் எம்முயிர்த் துறப்பேன்" எனல்-(பிங்கல நிகண்டு)*

**நங்களங் கம்பித் திடரொழித்தார் புகலூரர் நல்லோர்**
**தங்களங் கம்பித்திட நூன்மொழிபவர் தம் புயத்துந்**
**திங்களங் கம்பித் திகைசேர் முடியிலுஞ்சேர் கொன்றை கா**
**ளுங்களங் கம்பித் திகைப் போற் பசப்ப துரை செயுமே ! (13)**

நாம் செய்யும் குற்றங்களால் உண்டாகிய துன்பங்களை எல்லாம் நீக்கியவர் இப்புகலூர் இறைவன். வேதங்களைக் கழுத்து அசைவுறப் பாடுபவர் தம் சொற்களில் விளங்கும் சிவனாரின் தோள்களிலும், அவரது திருமுடியிலும் அழகாய் அமைந்துள்ள கொன்றை மலர்களே ! பைத்தியம் பிடித்தவளைப் போன்றுள்ள, எமது பெண்ணின் உடல் பசலைப் பூத்திருப்பதைப் போல, நீங்களும் பசலை நோய் கொண்டீர்களோ? கூறுங்கள்.

நம்+களங்கம்+பித்து+இட-நங்களம்பகம் பித்திட, தம்+களம்+கம்பித்திட-தங்களங் கம்பித்திட, திங்கள்+அங்கம்+பித்திகை-திங்களங்கம் பித்திகை, கொன்றைகாள்+உங்கள்+அங்கம்+பித்திகை போல-கொன்றை காலுங்களங்கம் பித்திகை போல.

பித்து- பிடுங்கி, களம்-கழுத்து, கம்பித்தல்-அசைதல், அங்கம்-எலும்பு, பித்திகை-செண்பகப்பூ, பித்திகைப்போல-பைத்தியம் பிடித்த தொப்ப, பசப்பது-காம வசப்பட்ட பெண்களின் உடல் வெளுத்து காணப்பெறும் என்பர். மேலும் பொன் "பூத்தல்" என்றும் கூறுவர். இப்பாடல் "தலைவி வேண்டல்" எனும் தலைப்புடையதாகும். கடைசி வரி-"திகைப்போற் பசப்ப" என்பதும்-"தியைப் போற் பசப்ப" - பாடபேதம்.

**உரைத்த வப்பாவை முற்சங்கத்திலேறி நின் றோதுமைய**
**வரைத் தவப் பாவை மகிழ் புகலூர விண் மண்ணழல் கா**
**லிரைத்தவப் பாவை யென வுன்னை யேத்து மவரொடென்னை**
**நிரைத்த வப்பாவை யடியே னயர்ப்பினு நின்னருளே ! (14)**

முற்காலத்தில், மதுரைத் தமிழிச்சங்கத்திற்குச் சென்று பாடல் ஒன்றைக் கூறியவரும், உமாதேவியார் மகிழும்படியும் இப்புகலூரில் உறையும் இறையவரே ! "விண்ணும், மண்ணும், நீரும், நெருப்பும், காற்றும் நீரே !" எனப் புகழ்ந்து பாடும் அடியார்களின் கூட்டத்தோடு என்னையும் வைத்தருளிய எந்தையே ! நான் உம்மை மறந்துவிட்டாலும் கூட எனக்கு அருள்செய்வீராக !

*வரை+தவ+பாவை-மலைமகளாகிய உமாதேவி, வரைத் தவப் பாவை, அவரோடு-அடியார்களோடு, அயர்ப்பினும்-மறந்துவிடினும், தருமி எனும் ஏழைப் புலவனுக்கிரங்கி, தமிழ்ச் சங்கத்திற் சென்று நக்கீரன் முன்னே "கொங்கு தேர் வாழ்க்கை" எனும் பாடலை உரைத்த கதை இங்கு கூறப் பெற்றுள்ளது. "வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி" எனும் பாடலையும் இங்கு கவனத்திற் கொள்க.*

*தருமிக்குப் பொற்கிழி அளித்த செய்தி கல்லாடத்தில்*

*"பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினை*
*கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ்க் கூறிப்*
*பொற்குவை தருமிக் கண்புட னுதவி"*

*எனும் வரிகள் மூலம் அறியலாம்.*

*மேலும் திருவிளையாடல் புராணத்துள்ளும்-சீகாளத்திப் புராணத்துள்ளும் இச்செய்தி உள்ளது. உரைத்த+அ+பா+ஐ-உரைத் தவப் பாவை, பா-பாடல்.*

*"நிரந்தர ஆகாய நீர் நிலம் தீ கால்*
*ஆயவை அல்லையாய் ஆங்கே*
*கரந்ததோர் உருவே" (திருவாசகம்)*

*"மண்ணல்லை விண்ணல்லை கடலல்லை*
*வாயுவல்லை எரியும்மல்லை பிறிதல்லை*
*ஆனாயும் பெரியாய் நீயே" - (திருநாவுக்கரசர்- தேவாரம்)*

*என்ற வரிகளின் மூலம் பஞ்சபூதமாய் நின்றவர் சிவனார் என்பதறிக.*

**நின்னகத்தைப் பணிந்தேத்தா தெடுத்தவ னீண்முடி தாட்**
**பொன்னகத்தைக் கொண் டடர்த்தவனே புகலூரரசே**
**பன்னகத்தைப் படுத்தோதத்தின் மேவுவார் பல்சமயஞ்**
**சொன்ன கத்தைப் பழித் தைந் தெழுத் தோ**
**மெய்த்தொண்டர்களே ! (15)**

நீர்வாழும் கயிலாய மலையைப் பணிந்து வணங்காது, செருக்குற்று, அதனைத் தூக்கியவனாகிய இராவணனின் தலைகளை உன் அழகிய பெருவிரல் நகத்தைக் கொண்டு அழுத்திய, புகலூரில் வாழும் இறைவனே! பாற்கடலில் ஆதிசேடனைப் பாயாக விரித்துப் படுத்திருக்கும் திருமாலை யொத்த அடியார்களே! பல மதத்தினர் கூறும் பொய் யுரைகளை எல்லாம் விடுத்து, ஐந்தெழுத்தெனும் பஞ்சாட்சரத்தை, மட்டும் ஓதுங்கள், அவ்வாறு ஓதுபவர்களே உண்மையான அடியார்கள்

அகத்தை-வாழுமிடமாகிய கயிலாய மலையை எடுத்தவன்-தூக்கிய இராவணன், நீண்முடி-பத்து தலைகள், நீண் முடி பத்து என திருநாவுக்கரசர் கூறுவார். அடர்த்த-அழுத்திய, பன்னகம்-ஆதிசேடன் எனும் பாம்பு, படுத்து-பாயாக விரித்துப் படுத்த, ஓதம்-பாற்கடல், கத்தை-பொய்யுரை, ஐந்தெழுத்து-"நமசிவாய" என்பது, "ஐந்தெழுத் தோதும் மெய்த் தொண்டர்களே பன்னகத்தைப் படுத்து ஓதத்தில் மேவுவார்" எனப் பிரித்துக் கொண்டும் பொருள் கூறலாம் என்பர். இதன்படி உண்மையான சிவனடியார்கள திருமாலை ஒப்பர் என்பது வைக்கருத்து.

**திருநாவுக்கரசின் தேவாரத்தில்,**

"கடுகிய தேர் செலாது கயிலாய மலை மீது
கருதேலுன் வீரம் ஒழி நீ
முருகுவ தன்னு தன்ம மென நின்று பாகன்
மொழிவானை நன்று முனியா
விடுவிடு என்று சென்று விரை வுற்றரக்கன்
வரையுற் றெடுக்க முடிதோள்
நெடுநெடு இற்று வீழ விரலுற்ற பாதம்
நிறை வுற்ற றென்றன் மனனே."

என்ற பாடலின் மூலம் இராவணனின் செருக்கொழித்த செயலை அறியலாம்.

**தொண்டகலா மதியன்பர்க்கருள் புகலூரண் றுண்ட**
**விண்டகலா மதிவேணிப் பிரான் செங்கை வீணை தந்த**
**பண்டகலா மதி சீதள மென் சொற் பசுந்திருவே**
**கொண்டகலா மதி வள்ளல் வந்தா னெஞ்சிற் கொள்வதன்றே!(16)**

*பசும்பொன்னிறமுடைய இலக்குமிதேவியாருக்குச் சமமான எம்பெண்ணே! அறிவாற் சிறந்த சிவனடியார்களுக்கு அருள்செய்யும் புகலூரில் வாழும் எமதிறைவனார், துண்டாகப் பிளந்த பிறைநிலவைத் தமது சடையிற்றரித்த, தெட்சணாமூர்த்தியினுடைய சிவந்த கைகளிலேயுள்ள, வீணையின் இசையைப் போன்று மிகவும் குளிர்வான தன்மையுடைய மென்மையான என் சொற்களைக் கேட்டு (அவ்விறைவனார்) உன்னைத்தேடி வரும்போது சற்றும் யோசிக்காமல் நீ கொண்டிருக்கும் வாடலை மனத்திற் கொள்ளாமல் விட்டுவிடுவாயாக.*

*மதி-அறிவு, துண்ட-துண்டுகளாக, விண்ட-பிளந்த, கலமாதி-சந்திரகலை, வேணி-சடை, பண்-இசை, சீதளம்-குளிர்ச்சி,பண்+தகலாம்-பண்டகலாம், சிவபெருமான் வீணை வாசித்தார் என்பதை, "உலகமெல்லாம் ஒடுங்கிய பின் வேதத்தொலி கொண்டு வீணை கேட்பார்", "வருங்கடல் மீள நின்றெம்மிறை நல்வீணை வாசிக்குமே" எனும் திருநாவுக் கரசரின் தேவார வரிகள் கூறும். பசுந்திருவே-பசும்பொன்னின் னிறம் கொண்ட இலக்குமிக்குச் சமமானவளே! கலாம்-ஊடல், மதி-ஆராய்ந்து, வள்ளல்-நமது தலைவனாகிய இறைவனார்; தலைவன் வரும்போது சற்றும் யோசியாமல் "ஊடலை விடு" என்பது, தோழியின் கூற்றாக அமைந்ததிச் செய்யுள்.*

**கொள்வன சங்கத்த வேலோன் பலியவன் கொள்வ தன்று**
**தெள்வன சங்கத் தற நூலை யாய்தரிற் செங் கழுநீர்ப்**
**புள்வன சங்கத் தற மேதிமேயும் புனற் புகலூர்க்**
**கள்வன சங்கத் தனிக் குழைப் பாகமின் கைத் தொழவே! (17)**

செங்கழுநீரி மலர்களிலும், தாமரை மலர்களிலும் வண்டுகள் சென்று தேனை அருந்துவது போல, நூல்களை ;ஆய்வு செய்யும் புலவர்கள் நிறைந்ததும், எருமைக் கூட்டங்கள் குளங்களிலுள்ள மலர்களை மேயும்படியான சிறப்பினையுடைய வளமிக்க, புகலூரில் வாழும் கள்வனெனும் சிவனாரின் ஒப்பற்ற காதணியாகிய குழையை அணிந்த அவரது வலது பாகத்தை நம் பெண்ணானவள் தொழலாம். கதறக் கதற வெட்டப்படும் ஆட்டை வெட்டுவதால் உண்டாகும் பாவம், வெறியாட்டமாடி அவ்வாட்டை வெட்டக் கூடியவனுக்குப் போகாது அப்பலியைக் கொள்ளும் இறைவனாரையே சென்றடையும். (என்பது தனி)

அசம்-ஆடு, கத்த-கதறும்படி, அசங்கு-ஆடப்பெற்ற, வேலோன்-வெறியாட்டமாடி ஆட்டை வெட்டுபவன், புள்-வண்டினங்கள், மேதி-எருமை, கள்வன்-சிவன், பாகம்-வலது பாகம். “புள்வன சங்கத்தற” என்பதை வனசம்+புள்+கத்து+ அற எனப்பிரித்து வண்டினங்களின் ஓசை வண்டினங்களின் ஓசை அடங்கும்படி எனப்பொருள் கொள்க. தமது அடியார்தம் (உள்ளங்கவர் கள்வன்) கள்வன்+அசங்கு+அ+ தனிக்குழை-கள்வனசங்த்தனிக் குழை.

பலியால் வரும் பாவம் அப்பலிக்காக ஒரு உயிரை அறுப்பவனுக்கு ஆகாது அப்பலியை ஏற்ற இறைவர்க்கே ஆகும் என்பது தனிக் கருத்தாக கூறப்பெற்றுள்ளது.

“கொள்வன சங்கத்த மேலோன் பலியவன் கொள்வதன்று” பலிகொள்வன்+அசம்+கத்த+ வேலோன்+ அவன்+கொள்வதன்று எனப்பிரித்துப் பொருள் கொள்க.

இறைவனைக் கண்டதால் தான் பெண்கள் மயக்கமுற்றனர் எனவே இது பெண்களின் தவறன்று-இவ்வாறான மயக்கத்தைத் தந்த இறைவனாரின் குறையே எனவும் விரிவுரை கூறுவர்.

**தொழுந்துதிக்கைக்குப் புகலூரெது வென்னுஞ் சொன்ன வப்போ**
**தெழுந்துதிக்கைக் குறித்தெங்கள் பிரானெனன்னு மீசனெனன்னும்**
**விழுந் துதிக்கைக்குன்ற மொன்றுரித்தோ னென்னும் வெண்**
**ணெருப்பின்**
**கொழுந் துதிக்கைக்குப் பகல் போன தென்னுமென்**
**கோமளமே.! (18)**

தொழுவதற்குரிய திசை எதுவென்று கேட்ட அப்பெண்ணிற்கு, புகலூர் இறைவனார் இருக்கும் திசையைக் காட்ட, அப்போதே எழுந்து, அத்திசையை நோக்கி நின்று அவரே என் கடவுள் என்றும் ஈசன் என்றும் கூறுவார். தொங்குகின்ற துதிக்கையையுடைய மலையைப் போன்ற உடலைக்கொண்ட யானையை உரித்தவர் அவரே என்பாள். சூரியன் மறைந்து, சந்திரன் தோன்றும்போது அச்சந்திர கிரணங்கள் என்னை வெண்ணெருப்பாகி எம்மைச் சுட்டெரிக்கின்றதென்பாள்.

துதிக்கைக்கு-வணங்கும் கைகளுக்கு, விழும்-தொங்கு கின்ற, பிரான்-தலைவன், வெண்ணெருப்பின் கொழுந்து-நிலவு, அதன் கிரணங்கள், உதிக்கைக்கு-தோன்றுவதற்கு, கோமளம்-அழகிய பெண்.

சூரியன் மறைவதும் நிலவு தோன்றுவதும் இயற்கை. இதனை என்னைச் சுட்டெறிக்கவே இந்நிலவு தோன்றியது எனக்கூறியிருப்பது நல்ல கற்பனையாகும். விழும் துதிக்கைக் குன்றம்-என்றது குன்றினையொத்த பெருத்த உடலைக் கொண்டதும்-தொங்கும் துதிக்கையை உடையதுமான யானையை, சூரியன் மறைந்ததே சந்திரன் தோன்றி என்னைச் சுடுவதற்கோ என்பதும் ஒருபாடம்.

இது "செவிலி கூற்று" எனும் வகையது. இதே கருத்தினை ஒத்த வரிகள் இவ்வந்தாதியின் பதினொன்றாம் பாடலில் "சடையார் நகைபோல நிலா வருமே" என வருவதை நினைவிற் கொள்க.

**கோமள வாமத்தர் பத்தர் நித்தஞ்செய் குறை பெறினுங்**
**தாமள வாமத்தர் தென்புகலூரர் தருக்க ளைந்தின்**
**றேமள வாமத்தஞ் சேகர மேற்பவர் சேவடி நாம்**
**போமள மாவத் தனிக்கு முன்னே வந்து போதென்னுமே! (19)**

*அழகிய உமையாளை இடப்பாகத்தேக்கொண்ட நமது புகலூர் இறைவனார், தமது அடியார்கள் செய்யும் குற்றங்களை யெல்லாம் ஆராய்ந்து பார்க்காத பெருந் தன்மையுடையவர், ஐந்து வகைக் கற்பகத் தருக்களின் மலர்களின் வாசனைக்கு சமமான வாசனை பொருந்திய (தாகக் கொண்டு அவ்வாறல்லாது மணமேதுமற்ற) ஊமத்தம் பூவைத் தமது தலையிலே சூடுபவராகிய அவரது திருவடிகளைத் தொழுது, அவை நாம் சாகுங் காலத்தே ஏற்படும் தனிமைக்கு முன்னே நேரில் தோன்றி "வருவாய்" என அழைத்துச் செல்லும்.*

*கோமளம்-அழகிய உமையாள், பத்தர்-அடியார்கள், வாமத்தார்-இடப்பாகத்தே கொண்டவர். அளவா-ஆராய்ந்து பார்க்காதவர், மத்தர்-பெருந்தன்மையுடையவர், உன்மத்தர். தேம்-வாசனை, மத்தம்-ஊமத்தம்பூ. தேம்+அளவு+ஆம்+ மத்தம- தேமளவாமத்தஞ்........ தாம்+அளவா+மத்தர்- தாமள வாமத்தர். தருக்கள் ஐந்தின்-ஐந்துவகை கற்பக மரங்களின், அளவாம்+அத்தம்+சேகர-அளவாமத்தஞ் சேகர. சேகரம்-சடாமுடி. ஐந்துவகைக் கற்பகத் தருக்களாவன. 1) கற்பகம், 2)சந்தனம், 3) சந்தானம், 4) பாரிசாதம், 5) மந்தானம் என்பனவாகும். (பிங்கல நிகண்டு)*

**போதகத் தாவர் புணரியிலாவர் வெம்போர் விரும்பும்**
**பாதகத்தாவர் பதத்திலுமாவர் பகைப் புரத்தே**
**தீதகத்தா வரணமுகத் தானவ தென் புகலூர்**
**வேதகத் தாவர வென்று கொண்டேத்திய மெய்யன்பரே. (20)**

*அடியார்களால் அரனே என்று புகழப்பெறும் புகலூர் உறையும் எம்பெருமானாரே, பிரம்மனும் ஆகியவர் பாற்கடலில் துயிலும் திருமாலும் அவரே! போரை விரும்பி ஏற்று அனைவரையும் அழிக்கும் தன்மை வாய்ந்த ருத்திர*

மூர்த்தியும அவரே! பகைவர்களின் முப்புரங்களையும் எரித்தவராயும், வேதங்களுக்கெல்லாம் தலைவராகவும் நின்றவரும் அவரே !

போது+அகத்தவர்-போதகத்தவர், பிரமன்-தாமரைப் பீடத்து அமர்ந்தவர். புணரி-திருப்பாற்கடல், ஆனவ-எதிர்த்தவன், பாதகத்தவர்-பாதகமாகிய கொலை செய்யும் ருத்திர மூர்த்தி, வேதகத்தவர்-வேதங்களின் தலைவன், அர-அரனே! ஏத்திய-தொழுத, அணைத்து தேவர்களாகியவர் களுக்கும் தலைவனும் அவர்கள் அனைவரையும் அழிக்கும் தன்மை கொண்ட உருத்திரன் என்பனும் சிவனே என்பது இவ்வந்தாதியின் மூன்றாம் பாடலிற் கூறப்பெற்ற கருத்துக்களை மீண்டும் நினைவிற் கொள்க. “அர” என்பது வடசொல் இதனை “ஹர” எனக்கொள்ள வேண்டும் இதன் பொருள் “அழித்த” என்பதாகும். புணரி-கடல்-ஈண்டு திருப்பாற்கடலைக் குறித்தது. ரணமுகம்-போர் முனை, கத்தா-கர்த்தா-காரணமாகிய தலைவர், வெம்போர் செய்து தேவர்களை அழித்த செயலை பாதகமான செயல் எனக் குறிப்பிடுகிறார்.

**அன்பதரத்துக் களைவந்து மாற்றியவர்க் கலகைத்**
**துன்பரதத்துப் பவந்தீர்த் தருள்வன சொல்லரிய**
**வின்பரதத்துக் கனங்குழை பாகரெயிற் புகலூர்**
**மன்பரதத் துணைப் பாதங்களான வனசங்களே ! (21)**

சிவனாரின் ஆனந்தத் திருநடனத்தைப் பார்த்து உடனிருந்து, ரசிக்கும்படியான, கனமான, கூந்தலையுடைய உமையை இடப்பாகத்தே கொண்ட இறைவனார், அவரது நடனமாடும் தாமரை போன்ற திருவடிகளை வணங்கும் அடியார்களுக்கு, எதிர்பாராமல் ஏற்படும் விபத்துகளால் துன்பம் ஏதும் நேராவண்ணம் காப்பதோடு, அலகை எனும் பேய் பிசாசுகளால் உண்டாகும் பில்லி சூனியம் ஆகியவற்றின் தீவினைகளையும் அணுகாவண்ணம் காத்து, பிறவிப் பிணியையும் அகற்றியருள்வார்.

அகத்துகள்-விபத்துக்கள் (எதிர்பாராதேற்படுவன), அலகை+துன்பம்+அரதத்து-பேய் பிசாசுகளால் ஏற்படும் தீவினை-அலகைத்துன்பரத்தது. துணை-இரண்டு, ரதம்-ரசம்-சுவை, வனசம்-தாமரை மலர், எயில்-மதிற்சுவர், அப்பர்+அதத்துக்களை-அபரதத்துக்களை அடியார்களின் பிறவிப் பிணியாகிய துன்பங்களை, புகலூர்+மன்+பரதம்+துணை+பாதங்கள் புகலூர்/மன்பரதத்துணைப் பாதங்கள். புகலூரில் நிலைபெற்ற சிவனாரின் நடனஞ் செய்யும் இருபாதங்கள். துணை-இரண்டு.

மகுடாகமம் என்ற நூலில் இறைவனின் முப்பத் தெட்டுவித நடனங்களைப்பற்றிக் கூறப்பெறுகிறது. திருமூலர் தமது ஒன்பதாம் தந்திரத்தில்

“கொடுகட்டி பாண்டரங்கம் கோடு சங்காரம்
நாடும் எட்டோடு ஐந்தாறு நாடியுள் நாடும்
திடமுற்று எழும் தேவ தேவதாரு வாம்
தில்லை வடமுற்ற மாவன மன்னவன் தானே”

எனக் கூறுவார்.

மகுடாகமத்தில்-“அஷ்டத்திரிம்ஸத் பரம நிருத்தம்” நடம் எட்டோடு ஐந்தாறு என விளக்கப்பெறுகிறது. 5+6=30+8=38. சிவனடியார்கள் துன்புறும் வண்ணம் எவராலும் பேய் பிசாசுகளின் துணைகொண்டு தீவினை செய்ய இயலாதென்பர். கணம் குழை-அன்மொழித்தொகை, அலகை ரதம்-பேய்த்தேர்-கானல் நீர், (பாடபேதம் உண்டு) பரதம் துணைப் பாதங்கள் - நடமாடும் இரு திருவடிகள்.

**வன கன கற்பகக் காவன சோலை வயற் புகலூ**
**ரன கன கத்தி லமர்ந்தவனே யகிலாண்டவல்லி**
**தன கனகத்தில்லை யம்பலத் தாடிய சங்கரனே !**
**நினகனகக் கொன்றை மாலை யெந்நாள் வந்துநேர்படுமோ. (22)**

மேகங்களாற் சூழப்பெற்ற, கற்பகச் சோலையை யொத்த அழகிய சோலைகளும் வயல்களும் சூழ்ந்த புகலூரில்

வாழும், பாபங்களை எல்லாம் அழிக்கவல்ல எமதிறைவனார், கைலை மலையில் வீற்றிருப்பவர், உமாதேவியின் இரண்டு தனங்களுக்கும் உரியவர், தில்லைக் கனகசபையில் திருநடனஞ் செய்தவர், அவரைச் சென்றடைந்து "சங்கரனே" உன்மனம் மகிழ்வுற்று என்றைக்கு உமது கொன்றை மாலையை எமக்குத் தருவீர்களோ ? (எனக்கேட்பது)

வன-அழகிய, கன-மேகங்கள் சூழ்ந்த, அன-ஒத்த, கற்பகக்கார்- கற்பக மரச்சோலை, அனகன்-பாபங்களைத் தீர்ப்பவன், நகம்-மலை, கயிலைமலை, தன-தனங்களுக் குரியவள், வனம்-நீர், அகனக-உள்ளம் மகிழ்ந்து, நேர்படுமோ-கிடைக்குமோ. வயலூர்+அனக+நகத்தில்+ அமர்ந்தவனே வயலூரனகனகத்தில் அமர்ந்தவனே, நின்+ அகன்+நகு+அ+கொன்றை மாலை-நின கனகக் கொன்றை மாலை (கு+அ=க) இறுதிப்போலி. கொன்றை மாலையைத் தாருமென்றதால் இது தலைவி தலைவனிடம் "அது கேட்டு வேண்டல்" ஆனது. ஆகவே இது தலைவி கூற்றென்க. அன்றி செவிலி கூற்றெனினும் சரியே !

**படவரவப்பணி மெய்ப் புகலூரர் பொற் பாவை கொண்ட**
**விடவரவப் பணி நீண்முடி யாரிமையோர் பரவு**
**நடவரவப் பணிபூண்ட பொற்றாளினர் நன்னுதன்மே**
**மடவரவப் பணியேவிய வேளை யறிந்திலரே ! (23)**

திருப்புகலூரில் வாழும் எமதிறைவனார், ஒலித்தலைச் செய்யும் படத்தையுடைய பாம்பினைத் தன் மேனியில் ஆபரணமாக அணிந்தவர். அழகிய உமாதேவியாரைத் தன் இடப்பாகத்தே கொண்டவர். கங்கையை அணிந்த நீண்ட சடைமுடியினையுடையவர், தேவர்கள் பாராட்டித் துதிக்கும்படியாக நடனம் ஆடுபவர், ஒளிமிக்கத் தம் பாதங்களில் சிலம்பினை அணிந்தவர். இவ்வாறாகிய இறைவனார் எம்பெண்ணின் மீது தனது அம்புகளை ஏவிவிடும் மன்மதனின் செயலை மட்டும் தெரிந்து கொள்ளாதிருப்பதேனோ ? (என்பது)

படம்-படத்தையுடைய, அரவப்பணி-அரவமாகிய பாம்பு, மெய்-உடல், அப்பு-கங்கை, நீண்ட முடியார்-நீண்ட சடாமுடியரான சிவன், இமையோர்-தேவர்கள். மன்மதனின் ஐந்து வித அம்புகள் மற்றும் அதன் குணங்கள் பற்றி ..துங்க பாண்டியனார் கூறும் பாடல்,

நினைக்கும் அரவிந்தம், நீள்பசலை மாம்பூ
அணைத்திடர் உண்டாக்கும் அசோகம், வனத்திலுறு
முல்லைக் கிடைக் காட்டு மாதே ! முழுநீலம்
கொல்லும்! மதன் அம்பின் குணமே !

கரும்பு வில், இரும்பு வில், பூவில் என மூன்றுவித விற்களை உடையவன் மன்மதன், "புஷ்ப தனுவ" என்பது காமனின் வடமொழிப் பெயர். நட-நடனமாடுகின்ற, பூண்ட-அணிந்த, நன்னுதல் மேல்-நல்ல அழகிய நெற்றியை யுடைய எம்பெண்ணின் மேல் அம்பு வகைகளை வரிசையாக (ஐநதுவித அம்புகள்), அப்பு+அணி-அப்பணி, அடவர-கொல்லவர், வேள்-மன்மதன், அப்பு-அம்பு, மன்மதன் தன்னுடைய ஐந்து அம்புகளையும் வரிசையாக விடுப்பின் அப்பெண்ணின் நிலை என்னவாகும் என்பதறிக ! "இவை யெல்லாம் அறியும் என் தலைவரே! இது மட்டும் அறியாத தேனோ" வென்றது. இது செவிலி கூற்று.

**அறிவறியாரு மயனுங் கெடக் கரந்தாடு மையர்**
**பொறி யாரு மெய்ப்பூணுடையார் புகலூரை யென்றும்**
**பிறி வரியா ருமை பங்கர் கங்காளர் மிறங்கலின் மேற்**
**செறிவறியாருந் தழையோ சிலைசில சேவகர்க்கே.** (24)

திருமாலும், பிரம்மனுங்கணை இயலாதபடித்திரு நடனஞ்செய்தவர், பொறியும் வரிகளுமுடைய பாம்பினைத் தன் உடலில் அணிந்தவர், இப்புகலூரை விட்டென்றும் அகலாதுறைபவர், உமையை ஒரு பாகமாகக் கொண்டவர், கங்காளமூர்த்தியாய் நின்றவர், அவர் வாழும் கயிலாய மலையில் உள்ள உள்ள சில பச்சிலைகளையும் கூட வண்டுகள் சூழ்ந்திருக்கும் இதனைச் சில வீரர்கள் விற்கள் என எண்ணுவர்.

கரந்து-ஒளித்து, ஐயர்-கடவுள், மெய்+பூண்-உடலில் அணியக் கூடிய பிறங்கல்-மலை, தழை-பச்சிலை, சிலை-வில், கங்காளர்-கங்காளமெனும் இசைக்கருவியைக் கையிற் கொண்டு பசுமைநிறங் கொண்ட திருமேனியராய் சிறுத்தொண்ட நாயனார் இல்லந்தேடி அமுது கேட்டு வந்த கோலம், "அறிவரி யாரு மயனும் கெட" என்பதை-அரியாரும் அயனும் அறிவு கெட எனப் பிரித்து இணைத்துப் பொருள் கொள்க.

"தோழி கூற்றாய்" அமைந்த பாடல், "கங்காளர்" என்பதற்கு முழு எலும்புகளை அணிந்தவர் எனவும் பொருள் கூறப்பெற்றுள்ளது. "சிறுத்தொண்டர் இசை நாடகம்" என்னும் சரசுவதி மகால் வெளியீடான நூலில் "கங்காளர் வந்தாரே" எனும் பாடலைக் காண்க. இவ்வந்தாதியின் 27ஆம் பாடலில் "தண்டைக் காலும் கையும் பணடரி கைக்குப் பசித்து வந்தோர்" எனும் வரிகளைக் காண்க.

கங்காளம் எனும் இசைக்கருவி வட்ட வடிவினதான வெண்கல உலோகக் கணத்த தகடு இதனைக் கயிற்றில் கோர்த்து ஒரு கையில் தொங்கவிட்டுக் கொண்டு அதே கையில் ஒரு தடித்த குச்சியைக் கொண்டு தட்டி ஒலி எழுப்புதல், மற்றொரு கையால் சங்கையும் ஊதுவர். இரண்டு ஒலிகளும் ஒரே சுருதியில் அமைந்திருப்பது சிறப்பாகும்.

**சேவகராகத் தக்கன் றிரட்டிய தேவரைக் கொல்ல**
**பாவக ராகவ னேத்தும் பதத்த பனி வண்டு சூழ்**
**பூவகராக வனந்திகழும் புகலூர வென்னைக்**
**காவகராக வருத்தந்தவிரக் கடுக்கை தந்தே ! (25)**

தக்கனுடைய யாகத்தில் கலந்து கொள்ள வந்திருந்த தேவர்களை எல்லாம் அழித்த வீரபத்திரன், திருமாலால் வணங்கப்பெறும் திருவடிகளை உடையவன். வண்டுகளாற் சூழப்பெற்ற தாமரை மலர்கள் நிறைந்துள்ள குளிர்ந்த நீர் நிலைகளையுடைய, செந்நிறப்பூக்கள் நிறைந்துள்ள புகலூரில்

எழுந்தருளும் எமதிறைவனாரே! உமது கொன்றை மாலையைக் கொடுத்து உம்மீது கொண்ட ஆசையினால் என் மனத்தே தோன்றிய வருத்தங்களை நீக்கிக் காப்பாற்றுவீராக !

அத்தக்கன்-அந்த தக்கன், பனி-குளிர்ச்சி, பாவக-பாவத் தொழிலாகிய கொலைகளைச் செய்த வீரபத்திரன், பதத்த-பாதங்களையுடையவன், பாவகம்-நெருப்பு, ராக-ஆசை யினால் உண்டாகும், கா-காப்பாற்று, ராக வனம்-செந்நிறம், சேவகர்+ஆக+அ+தக்கன்-சேவகராகவத்தக்கன், பாவக+ ராகவன்+ஏத்தும்-பாவகராகவனேத்தும், பூ+அகம்+ராக+ வனம்-பூவகராகவனம். கடுக்கை-கொன்றை, "கொன்றை மாலையைத் தாரும்" எனக் கேட்டதால் இது "தலைவியின் கூற்று" ஆகியது. தட்சன் செய்த யாகத்திற்கு வந்திருந்த தேவர்களை அழித்த செய்தி இவ்வந்தாதியில் முன்னும் பின்னும் பாடல்களில் வருகிறது. உரையாசிரியர்கள் தட்சனைச் சிவத்துரோகி எனக்குறிப்பிட்டுள்ளனர்.

**தந்த மருந்துயர் தீர்வனவாகச் சதுமுகன் மால்**
**வந்த மருந்துய தென் புகலூரர் வரையின் மதன்**
**முந்த மருந் துணையாக நின்றேற் கொரு மொய் குழல் போ**
**லிந்த மருந்துய வந்த தென் காதலிடும்பை கண்டே. (26)**

திருமாலும், பிரமனும், தங்களின் துயர் நீங்கிட வேண்டி வந்து வணங்கும்படியான இடமாகிய அழகிய இத் திருப்புகலூரில் வாழும் இறைவனைக் காணும்போது, மன்மதன் என்னிடம் வந்து தன்னுடைய அம்புகளை விடுத்துப் போரிடும் வேளையில் அவனை எதிர்த்திட எனக்கு ஒரு அடர்ந்த கூந்தலையுடைய பெண் துணையாகக் கிடைத்தது போலவும், பின்னரும், அம்மன்மதனின் அம்புகளாற் காயம்பட்ட எனக்கு அக்காயங்களை ஆற்றிட உதவும் மருந்து போலவும் தோன்றுகிறது.

சதுமுகன்-பிரம்மன், மால்-திருமால், மதன்-மன்மதன், முந்து-எதிர்த்து, அமர்-போர், இடும்பை-துன்பம், மருந்துய-

உய-மருந்து-பிழைக்க மருந்து-தேவாமிர்தம். தம்+தம்+ அருந்துயர்-தந்த மருந்துயர் வந்து+அமரும்+து-வந்த மருந்துய. துய்யவ-துய-தொகுத்தல் விகாரம். முந்து+ அமரும்+-முந்தமரும்+துணை-முந்த மருந்துணை. இலக்கண வகையால் இது "இடந்தலைப் பாடுதுறை முந்துறக் காண்டல் (காண்டல்துறை) இது தலைவியின் கூற்றாக அமைவது. நின்றேற்கு-வினையாலணையும் பெயர், மொய்குழல்- அன்மொழித்தொகை. "பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட ..... ......மாலுக்குச் சக்கரம் அன்று ஈன்றபிரான்" என்ற வரிகளை கவனத்தில் கொள்க. "நல்ல மருந்து சுகம் நல்கும் வைத்திய நாத மருந்து" எனும் வள்ளளாரின் பாடல்களை நிறைவிற் கொள்க.

**கண்டரி கைக்குப் படையளித் தோர் தண்டைக் காலுங் கையும்**
**பண்டரி கைக்குப் பசித்து வந்தோர் பயிலும் புகலூர்ப்**
**புண்டரி கைக்கு நிகரா மிவடன் பொருட்டரசே**
**மண்டரி கைக்குங் கரியாற்றிரவு வருவதன்றே ! (27)**

கண்ணை மலராகக் கொண்டு தமது திருவடிகளில் சாற்றித்தொழுது திருமாலுக்குச் சக்கராயுதத்தைக் கொடுத்தவன், முற்காலத்தில், சிலம்பும் தண்டையுமணிந்த கால்களையுடைய சீராளன் எனும் பிள்ளையின் கை கால்களை அறுக்கக் காரணமாகி (கங்காளர் உருவினராக) சிறுத்தொண்டர் வீட்டிற்குப் பசித்தவர்போல் வந்தவர், இத்திருப்புகலூரில் நீங்காது வாசஞ்செய்பவர், இலக்குமிக்கு நிகரான இப்பெண்ணின் பொருட்டு, சிங்கங்களும், யானைகளும் சண்டையிட்டுக் கொள்ளும்படியான, அச்சத்தைத் தரக்கூடிய இவ்வழியில் இரவு நேரத்தில் வருவது நல்லதல்ல.

தரி-பாதங்களில், தண்டை-சிலம்பு, படை-சக்கராயுத மென்னும் படைக்கலத்தை பயிலும் வசிக்குமிடம், கைக்கும்- கோபித்துக்கொள்ளும். பிள்ளை-சீராளன் எனும் பிள்ளை, ஆற்று-வழியாக, அரிகைக்கு-அறுப்பதற்கு, புண்டரிகை-

இலக்குமி, பண்டு+அரி+கைக்கு-பண்டரிகைக்கு, மண்டு+ அரி+கைக்கும்-மண்டரினக்கும், மண்டு-நெருங்கிய, மண்டரி கைக்குங்கரி-என்பதனை, மண்டு+அரி+காரிகைக்கும்-எனப்பிரித்தறிக. கண்+அரி-கண்ணரி எனாது, 'கண்டரி' என வந்தது. கண்+தரி எனக்கொள்வது பாடம். இது இரவுக்குறி இறை மகளிர் இறைவனைக் குறி வழியில் விலக்கல் எனும் இலக்கண வகை சார்ந்தது.தோழி கூற்றும் செவிலி கூற்றும் ஆம் பாடல் இது.

தண்டைக்காலும் கையும் பண்டரிகைக்கும் பசித்து வந்தோர்- சீராளன் கதையை இந்நூலக வெளியீடான சிறுத்தொண்டர் இசைநாடகம் புத்தகத்தில் காண்க. மேலும் விபரங்களை இவ்வந்தாதியின் 24ஆம் பாடலில் காண்க.

**அன்றரத் தக்கவின் மூவிலை வேல ரரிய தில்லை**
**மன்றரத்தக்க விதி வேள்வி செற்றவர் வண் புகலூர்த்**
**தன்றரத்தக்கவிர் மேனியர் தாந்தொழுந் தாளர் நல்கார்**
**மின்றரத் தக்க விடைக் கழலாய் நிற்கும் வெண்ணிலவே ! (28)**

உலகமுற்றழிவு காலத்தில், இரத்தம் தோய்ந்த உடலினராக அழகுற்று விளங்குபவர், மூவிலை போன்ற சூலாயுதத்தைக் கையிலே ஏந்தியவர், சிதம்பரத்தம்பலத்தாடு கின்றவர். உத்திராட்ச மாலையை அணிந்தவர். அடியார்கள் தொழும் திருவடியினராகிய இப்பெருந்தகையினர் இத்திருப்புகலூரின்கண் வாழ்கின்றார், மின்னலைப் போன்ற இடையையுடைய எம்பெண்ணிற்கு, வெண்ணிலவே சுட்டெரிக்கும் தீயாய் ஆகிவிட்ட இந்நிலையில் அருள் செய்யாதுள்ளாரே !

அரத்த-இரத்தம் தோய்ந்த, தக்கவிதி-தக்கன் செய்த யாகம், அக்கவிர்-உத்திராட்ச மாலையுடன் கூடிய, 'தன் தரத்து' என்பது சிவனடியாரும் சிவனே ஒப்பர் என்பது. தன்+ தரத்து+அக்கு+அவிர்+மேனியர்-தன்றரத்தக்கவர் மேனியர். தாளர்-பாதங்களை உடையவர், மின்றரத்தக்க விடைக்கு-

*மின்+தர+தக்க+இடைக்கு, மின்னலைப் போல-விளங்கும் இடையையுடைய பெண்ணிற்கு, அழல்-தீ, இதனைச் "சந்திரோபாலம்பனம்" என்பர், நிலவொளியே தீயானதால் இவ்வாறு கூறுவர், காமியர்களை மயக்குவன-மாலைப் பொழுதும் இளம் பிறையுமாகும். இடை-அன்மொழித் தொகை, தோழி கூற்று-செவிலி கூற்றுமாம் இப்பாடல்.*

**நிலாவம் பராவிதழ்க் கொன்றைவைக் குஞ்சடை நின்மலனே**
**யிலாவம் பராவியற் றென் புகலூர வென் றேத்துதற்குக்**
**கலாவம் பராவி கவர்கின்ற கூற்றெனக் காதை யடர்ந்**
**துலாவம் பராவி கழிக்கின்ற வாலின்றென் னுள்ளத்தையே! (29)**

*பிறை நிலவு, பாம்பு மற்றும் வண்டுகள் சூழ்ந்த மடலுடைய கொன்றை ஆகியவைகளைத் தரித்த சடைமுடியோனே! குற்றமேதுமில்லாதவனே! ஆடையேதும் உடுத்தாதிருப்பவரே! அழகிய தென்னாட் டிலுள்ள புகலூரில் வாழ்பவனே! என்று இவ்வாறு உன்னைப போற்றாதவர்க்கும் எமனைப் போன்றாகி அவர்தம் உயிரைக் கவர்கின்றவனே! காதளவோடிய உன் கண்களைக் காணும்போது அவை அம்புகள் போன்று என் உள்ளத்தை அறுக்கின்றன. இப்போது என்ன செய்வேன் ?...*

*அம்பரம்-ஆடை, இயல்-அழகுடைய, வம்பர்-வீண் பேச்சு பேசுபவர்கள், கூற்றுவன்-எமன், அம்பு-கண்களாகிய அம்பு, அராவி-அறுக்கின்றன. இரும்பை-அரம் கொண்டு ராவுதல்-இலா+அம்பரா-யிலாவம்பரா-ஆடையில்லாத, அலா+ வம்பர்-அலாவம்பர், உலா+அம்பு+அராவி-உலா வம்பராவி, நிலா+அம்பு+அரா+இதழ்+கொன்றை-நிலாவம்பராவிதழ்க் கொன்றை, வைக்கும்+சடை-வைக்குஞ் சடை. இலா-இல்லாத தொகுத்தல் விகாரம். கல்லா வம்பர்-என்பது கலா வம்பர் எனவாகியது தொகுத்தல் விகாரம். நிலவு+அம்பு+அரவு+ இதழ்க் கொன்றை-நிலாவம்பரா விதழ்க் கொன்றை, இலா+ அம்பரா+இயல்-இலாவம்பரா. உலா+அம்பு+அராவி- உலா வம்பராவி.*

காதலியின் கடைக்கண் பார்வை
காதலனைக் காய்வது
காதலனின் பார்வை கூட
காதலியைச் காயும்
என்பது இப்பாடல் மூலம் அறிக.

"இன் கண் உடைத்தவர் பால்"
எனக் குறள் கூறும். (1152)

நிலா+அம்பு+அரா+இதழ்+கொன்றை-நிலாவம்பரா விதழ்க் கொன்றை, வைக்கும்+சடை-வைக்குஞ்சடை. இது குறிப்பறிதல் வகை சார்ந்த பாடல். இலா-இல்லா தொகுத்தல் விகாரம். கல்லா வம்பர்-என்பது கலா வம்பர் எனவாகியது தொகுத்தல் விகாரம். இலா+அம்பரா+இயல்- இலாவம்பதரா. உலா+அம்பு+அராவி-உலா வம்பராவி.

**உள்ளத்திருக்குந் திருப்புகலூர ருணரு மன்பர்**
**கள்ளத் திருக்குங் கவலையுந் தீர்ப்பவர் கற்பவெல்லை**
**வெள்ளத்திருக்கும் பதினாலுலகும் விழாமலுய்யக்**
**கொள்ளத்திருக் குங்கும முலை சேர் புயக் குன்றத்தரே ! (30)**

அழகிய செஞ்சாந்தினை யணிந்த கொங்கைகளை உடைய உமையவளை மலைபோன்ற தன் தோள்களால் அணைத்துள்ள, அடியார்கள் உள்ளத்துறையும், திருப் புகலூரில் வாழும் சிவனார் தம்மை உணரும் அன்பர்களின் உள்ளத்தேயுள்ள, கள்ளமெனும் இருளையும், எண்ணங் களின் மாறுபாடுகளையும், அவர்தம் துன்பங்களையும் தீர்ப்பவர், உலக முற்றமிழிவின் காலத்தின் வெள்ளப் பெருக்கின்போது வேதங்களையும், பதினான்கு உலகங் களையும் அழிந்துவிடாமல் காப்பாற்றும் தன்மையர்.

உள்ளத்து-அடியார்கள் மனத்தில், திருக்கு-மாறுபாடு, கற்பவெல்லை-உலகம் முற்றிலும் அழியுங்காலம், குங்குமம்-செஞ்சாந்து (முலைக்கிடுவர்), முலை-கொங்கைகளை உடைய

உமாதேவியார், புயக்குன்றம்-குன்றனைய புயங்கள். புயக்குன்றத்தாராகிய திருப்புகலூரர் அடியார்தம் திருக்கும் கவலையும் தீர்ப்பவர் என்பது கருத்து. குங்குமமுலை-அன்மொழித்தொகை, புயக்குன்று-பண்புத்தொகை.

"உள்ளத்திருக்கும் திருப்புகலூர ருணருமுமன்பர் உணரும்" என்பது எவர் மனத்துள்ளும் இருப்பவர் நம் இறைவரே! ஆனால் அதனை எவரும் உணர்தற்கு எளிதான தன்று-ஆயினும் மெய்யடியார்கள் தவத்தாலும், தியானத் தாலும் உணர்தற் கெளிதாகும். அவ்வாறு இறைவனார்தம் உள்ளத்தே தான் இருக்கிறார் என்பதை உணர்ந்த மெய்யடியார்களின் துன்பங்களையும், பிறவிப் பிணியையும் ஒழிப்பவரே புகலூரர் என்பது விரிவான கருத்து.

**குன்றருந்துந் திரைவேலையர் கோகனத்தர் கொன்றைப்**
**பொன்றருந்துங்கச் சடாடவியார் புகலூரர் தம்மை**
**வென்றருந் தும்பையும் வாகையுஞ் சூடிய வில்லி தென்றற்**
**கன்றருந்துங் கொடி மேலெய்யு மாறென் கொல் கற்பித்ததே.(31)**

குன்றுதோறும் நின்றாடிய சுப்பிரமணியர், திருப்பாற் கடலில் துயிலும் திருமால், தாமரையில் அமரும் பிரம்மன் ஆகியோரை வெற்றிகொண்டு, தும்பைப்பூ மாலையை வெற்றிமாலையாகச் சூடிய கனமான அடர்ந்த சடையினை யுடைய திருப்புகலூரில் வாழ்பவனாகிய சிவனார் ஆகியோர் களை வென்ற கரும்பு வில்லினையுடைய மன்மதனால் வீசப்பெற்ற தென்றற் காற்றினால், "இளங்கன்றினால் கடித்துத்துப்பப் பெற்ற கொடியினைப் போல நைந்து கிடக்கும் இப்பெண்ணின் மீது, அம் மன்மதன் மேலும் பல கணைகளைத் தொடுக்குமாறு விட்டது ஏன் என்று தெரியவில்லையே !

குன்றர்-குன்று தோராடும் வேலவர், மலை-மலையும் மலை சார்ந்த இடமும், குறிஞ்சி-இந்நிலக் கடவுள் முருகன்-குன்றுடையான்-உந்து திரை வேலையர்-தள்ளக் கூடிய அலைகளையுடைய கடலில் தூங்கும் திருமால், வில்லி-

கரும்பு வில்லினையுடையவனாகிய மன்மதன், கோகன கத்தர்-தாமரையில் வீற்றிருக்கும் பிர்மா, கோகனம்-தாமரை, பொன்றவரும்-பொன்னைப் போல ஒளி வீசும். "தென்றல் இளங்கன்றென்பது-மதுரைக் கலம் பகம்-எனவே இளந் தென்றற் காற்றினால் துன்புறும் பூங் கொடி போன்ற பெண்ணின் மேல்" எனவும் பொருள் கூறுவர். "தென்றற் கன்றருந்தும் கொடி" என்பதற்கு

வெற்றி என்பது - வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, என எண் வகைப்படும் என்பர். வில்லி என்ற பெயர் - மன்மதனுக்கு ஆகியது - ஏனெனில் முத்தேவரையும் வெற்றிகண்ட வில்லை யுடையவள் மன்மதன் என்பதால், துங்க-கனமான, வாகை - வெற்றிமாலை, மிக்கோர் செருவென்றது, கன்று+அருந்தும்+ கொடி கன்றருந்து கொடி, இளங்கன்று தனது பற்களால் கடிக்க இயலாது சிறிதே மென்று பின் துப்பியதால் நைந்து போன கொடியினைப் போல, சடா+அடவி-சடாடவி தீர்க்க சந்நி தீர்க்கம் நெட்டெழுத்து. தென்றற் காற்றினாலேயே துன்புற்ற தன்றி மன்மதனின் அம்புகளாலும் துயருற்றாள் என்பது: இது செவிலிக் கூற்றாய் அமைந்த பாடல்.

**கற்பனை யத்தனை யென் பிறவிக்கினிக் கார்மதத்துப்**
**பொற்பனை யத்தனைப் பெற்றவனைப் புகலூரரசை**
**வெற்பனை யத்தனை வேதங்க ணாறிய வெண்டலை யோட்**
**டற்பனை யத்தனை யான் மறவே னெழுத்தஞ்சு கொண்டே. (32)**

கரிய பனை மரத்தைப் போன்ற துதிக்கையை உடைய விநாயகரைப் பெற்ற திருப்புகலூரில் வாழும் இவ்விறைவனாரை, மலையிடத்துப் பிறந்த பார்வதி தேவியரை தன் ஒரு பாகத்தே வைத்தவனை, வேத நாயகனை, வெண்மையான மண்டை ஓட்டை ஏந்தி பிச்சை எடுத்த அற்பனை எந் தலைவனை இப்பிறவியில் ஐந்தெழுத்தாகிய பஞ்சாட் சரத்தைக் கொண்டு என்றும் ஜெபித்து வாழ்வேனேயன்றி மறக்கவே மாட்டேன்.

கல்+பனை-கற்பனை, கற்பனை-ஏற்பாடு, அத்தனை-அவ்வளவே, கார்-கறுத்த, பனையத்தனை-பனைமரம் போன்ற கைகளை உடைய யாகையை உரித்தவன், அத்தனை-பாதியுடலில் கொண்டவனை, நாறிய-பொருந்திய, அற்பன்-பிச்சை எடுப்பவன், நாறிய-மணம் வீசக்கூடிய, வெண்+தலை+ஓடு+அற்பனை- வெண்டலை யோட்டற்பனை, பிரமனின் தலை வெண்மையானது எனவே அவனது மண்டையோடும் வெண்மையானதே! பிறப்பொழிப்பது அஞ்செழுத்தே என்பதனை,

"நமச்சிவாய வென்னும் அஞ்செழுத்தும்
சாமன்று உரைக்கத் தகுதி கண்டாய்"

என்ற நாவுக்கரசரின் தேவாரப்பண் வரிகளின் வழியறியலாம். அற்பன்-அன்பன் எனப் பொருள் கொள்ளின் அது வலித்தல் விகாரம் ஆம்.

"பனைக் கை மும்மத வேழ முரித்தவன்"

என்ற தேவார வரிகள் பனை போன்ற கையுடைய யானை என்பதனைக் குறிப்பது அறிக.

**அஞ்சக் கரவரியற் புகலூர ரயின் மழுவாட்**
**கஞ்சக் கரவ ரிகழா தணிவன கங்கை திங்கட்**
**பிஞ்சக் கரவரி சூழ் கொன்றை வாசம்பெறா வெருக்கு**
**வெஞ்சக் கரவரி கண்மலர் நான்முகன் வெண்டலையே! (33)**

திருப்புகலூரில் உறையும் எம்பெருமானார் பஞ்சாட்சரமெனும் ஐந்தெழுத்தினையுடையவர். தாமரை போன்ற தம் சிவந்த கைகளில் கூர்மையான மழுவாயுதம் ஏந்தியவர், புகழுக்குரியதாக இவர் அணிவதோ, கங்கை, மூன்றாம் பிறை, பாம்பு, வண்டுகள் சூழ்ந்த கொன்றை மலர், வாசனையே இல்லாத எருக்கம்பூ, கொடிய சக்கராயுதத்தையுடைய திருமாலின் கண்கள்களாகிய மலர்கள், நான்முகனின் வெண்மையான மண்டையோடு ஆகியனவேயாகும்.

அஞ்சக்கரவர்-பஞ்சாட்சரமுடையவர், அயில்- கூர்மை யான திங்கட்பிஞ்சு-மூன்றாம் பிறை. கஞ்சம்-தாமரை. அரிசூழ்-வண்டுகள் சூழ்ந்த, கண்மலர்-கண்ணாகிய மலர், இகழாதணிவர்-இகழ்ச்சிக்குறியதாயினும் அவ்வாறு இகழாது. வெஞ்சக்கரம்- என்பதற்கு ஒளிமிக்க சக்கரம் என ஒரு பாடம் உண்டு. ஆயினும் கொடிய எனும் பொருளே சரியென ஏற்கப் பெறுவது. வெஞ்சக்கரம்-வெம்+சக்கரம், வெண்+சக்கரம் என இருவகையாகப் பிரிக்கலாம் என்பர். அக்கரம்-அக்ஷரம்- அட்சரம்-எழுத்து. அஞ்சு+அக்கரவர்-அஞ்சக்கரவர். அயில்+ மழு+வாள்+கஞ்சம்+கரவர்-அயின் வழுவாட் கஞ்சக்கரவர். திங்கள்+பிஞ்சு+அக்கு+அரவு+வரிசூழ்-திங்கட் பிஞ்சக்கரவரி சூழ். வெம்+சக்கர+அரி+கண்+மலர்-வெஞ்சக்கரவரி கண்மலர். புகழ்க்குரியதாகவே கருதி அணிவார். இளம்பிறையை "திங்கட் பிஞ்சு" எனக்குறிப்பது சிறப்புச் சொல்.

"ஆலைப் படு கரும்பின் சாறுபோல
அண்ணிக்கும் அஞ்செழுத்தின் நாமந்தான் காண்

என்ற திருநாவுக்கரசரின் வரிகள்

"நமசிவாய", எனும் ஐந்தெழுத்து மந்திரத்தின் பெருமையை விளக்குவது உணர்க. யஜுர் வேதத்தில்-ஸ்ரீருத்ரம் என்ற பகுதியில்தான் "நமசிவாய" என்ற பஞ்சாட்சர மந்திரம் வருகிறது. இம்மந்திரத்தைச் சொல்லித்தான் சிவனுக்கு அபிசேகம் செய்யப்பெறுகிறது. முற்பிறப்பில் நளாயினியாக இருநத திரௌபதி இவ்வஞ்செழுத்தை முறைப்படி ஜபித்து அவ்வைந்தெழுத்தின் அருவ வடிவின ரான ஐந்து கணவன்மார்களை அடைந்தாள்.

நக்கீரர் தமது "கயிலைபாதி காளத்தி பாதி" எனும் நூலில் "வாயிலே வைக்கும் அளவில் மருந்தாகி தீய பிறவி நோய் தீர்க்குமே-தூயவேகம் பெருமா தேவி யொரு மன்னு கயிலாயத் தெம்பெருமான் ஓரஞ்செழுத்தே" என பஞ்சாட்சரத்தின் பெருமையைக் கூறுகிறார்.

## 34

**தலைக் கண்ணியன் சடைத் தென் புகலூரன் றலைக யெருக்கின்**
**குலைக் கண்ணியந் தொடை சாத்தும் பிரான் குன்ற மீன்றவல்லி**
**முலைக் கண்ணியன் கங்கை நாயகன் மாலை முடிவு மெய்தா**
**நலைக் கண்ணியன்புற் றழுவ தெவ்வாறவ் வலங் கலுக்கே! (34)**

*தேவர்களின் தலைகளை அறுத்து அவைகளை மாலை யாகத் தொடுத்து அணிபவன், சடையன், அழகிய திருப்புகலூர் அரசன், எருக்கன் பூங்கொத்துக்களைத் தொடுத்து மாலையாக அணிபவன். மலைமகளாகிய உமா தேவியின் இருமுலைகளும் அணைய நிற்பவன். கங்கைக்கு நாயகன், ஆகிய இப்பெருமான் அணிந்திருக்கும் கொன்றை மாலையானது உமக்கு எப்போதும் கிடைக்காது ஆகையால் நீ அதனை விரும்பி கண்ணீர்விட்டு அழுவதால் என்ன பயன்? ஏதுமில்லை.*

*தலை+கண்ணியன்-தலைக்கண்ணியன், தலைகளை மாலையாக அணிந்தவன், அம்+தொடை-அந்தொடை, அழகிய மாலை, குன்ற மீன்ற வல்லி-மலைமகள், அவ்+ அலங்கல்-அந்த மாலை உனக்கு வேண்டுமென்று, அலங்கல்- மாலை, குலை-கொத்து.*

*"மாதர்ப் பிறைக் கண்ணியானை" எனும் தேவாரப் பாடலை நினைவிற் கொள்க. பிரமனும், திருமாலும் அழிந்தழிந்து பின்னும் அவதரிக்கும் நிலை உடையவர்கள் என்பர். எவரும் விரும்பாத எருக்கன் பூவினையே தான் விரும்பி அணியும் தன்மையர் ஈசர்.*

*தோழிதலைவனைப் பற்றித் தலைவியிடம் கூறுவது. முன்னரே இரு பெண்டிற்கு நாயகனாய் நின்றவன் எனவே உன்னை ஏற்கமாட்டான் என்பது. உமாதேவியை மனைவி எனவும் கங்கையை வைத்திருப்பவர் எனும் கருத்தில் "வைப்பாட்டி" எனவும் கூறுவர். ஏனெனில் கங்கையைத் திருமணம் செய்துகொண்ட செய்தி எங்கும் கூறப் பெறவில்லை என்க.*

**அலங்கலை யிற்கயல் பாய்புகலூரவிர் சடைமேற்**
**சலங்கலை யிற்குறை திங்கள் லவத்தோர் தமைச் சாரலர் போற்**
**கலங்கலை யிற்கண்ணி வந்தது தேருநின் கையணையிற்**
**பொலங்கலை யின்றலை யிற்றுயின் மாற்றும் புரிசங்கமே. (35)**

அசைகின்ற அலைகளையுடைய நீரில் மீன்கள் துள்ளும் வளமுடைய திருப்புகலூரில் வீற்றிருப்பவரும், தன் விரிந்த சடையினிடத்தே கங்கையையும், பிறை நிலவையும் வைத்துள்ளவருமான சிவபெருமானை அடைந்து தம் துன்பம் நீங்கப்பெறாதவர் போல, வேலையொத்த கண்களையுடைய பெண்ணே நீ கலங்காதே! நம் தலைவனார் ஏறிவரும் தேரும் வந்துவிட்டது. அவருடைய வலம்புரிச்சங்கின் முழக்கமானது கேட்கிறது. எனவே இனி அது உன் பொன்னாடையின் முகப்பை விரித்துத் தலைக்கு அணையாக கையை வைத்துக் கொண்டு உறங்கும் உன்னுடைய தூக்கத்தை நீக்கிவிடும் என்பதை அறிவாயாக !

அலங்கு+அலை-அலங்கலை-அசைகின்ற அலை, சலம்+கலை-சலங்கலை, சலம்-கங்கை, கலையிற்குறை திங்கள-பிறை நிலவு, (முழு நிலவுக்குப் பதினான்கு கலை) "வந்தது தேரு" என்பது "கண்டேன் சீதையை" என்பதொத்தது.

கையணை என்பது தலைக்கு தலையணை ஏதும் வைத்துக் கொள்ளாது, தன் முந்தானையை விரித்து தனது கையையே தலையணையாக வைத்துக்கொண்டுறங்கும் தன்மையைக் காட்டியது.

கலங்கல்+ஐயில்+கண்ணி-கலங் கலையிற் கண்ணி. ஐயில்-அயில், ஐயில்-கண்ணி-வேலையொத்த கண்களை யுடைய பெணணே ! என்றாகியது.

பொலம்+கலை- பொலங்களை-பொன்னாலாகிய சரிகை வேலைப்பாடு களுடன் கூடிய சேலை, பொலங்கலையின்-தலை-முந்தானை, இப்பாடல் தோழியின் கூற்றாக அமைந்தது.

**சங்க மலைக்குந் திருப்பாற்கட னொந்து தான் பயந்த**
**செங்கமலைக்கு முன்பிற் சென்றதோ மின்னுஞ் செம்மலும் போய்ப்**
**பங்க மலைக்கு வழங்கு பிரான் புகலூர் பயில்வார்**
**துங்க மலைக்குமி தொக்கு மென்னே யன்னை சொல்லியதே !(36)**

உமையவளுக்கு தனது ஒருபாகத்தை வழங்கிய எம்பெருமானார் திருப்புகலூரில் வாழ்கின்றவர். அப்படியாயின் இதுவும் இமய மலைக்கே ஒப்பது ஆகுமோ ! சங்குகள் அலையும் பாற்கடல் எனும் அன்னை, தன் வயிறு நொந்து பெற்ற செந்தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமி தேவிக்குப் பின்னால் தொடர்ந்து சென்று விட்டதோ ? என இவ்வாறு பலவாக எமது அன்னை சொல்லியது வியப்பாயுள்ளது.

சங்கம்-சங்குகள், தான் பயந்த-தான்பெற்ற, நொந்து-வருந்தி, பங்கம்-ஒருபாகம், துங்கம்-தூய்மையான, செங்கமலை-இலக்குமிதேவியார், தம் பெண்ணின் நிலை கண்டு தாயானவள் ஏதோதோ பிதற்றியழல், என்னே-வியப்பு, அலைக்கும்-கொண்டுவந்து சேர்க்கும், இலக்குமியைத் திருமால் மணந்துகொண்டு வைகுண்டம் சென்றபோது அவளோடு, துங்க மலை-தூய்மையான இமயமலை.

கூட அவளது தாயான பாற்கடலும் சென்றதோ வெனில் இல்லை. அதுபோல இமாவானின் மகளை சிவனார் மணந்துகொண்டு கயிலைக்குச் சென்றுவிட்டபோது தன் மகளுடன் கூட இமாவானும் சென்றுவிடவில்லை என்னும் பொருளைத் தந்து நின்றது.

இது "தோழி கூற்றாக" அமைந்த பாடல்.

பங்கு+அமலைக்கு-பங்க மலைக்கு, அமலை-உமா தேவி. சங்கம்+அலைக்கும்-சங்க மலைக்கும் கடலில் உள்ள சங்குகளை கரைக்குக் கொண்டுவந்து சேர்க்கக்கூடிய மின்னும் செம்மலும்-மின்னலைப் போன்ற இடையை உடைய உமாதேவியும்-சிவபெருமானும்.

**சொல்லியலைச் சங்க மேவி நின்றா யைய துய்யவன்னம்**
**புல்லியலைச் சங்கமேய் புகலூர பொதுவர் குழற்**
**கொல்லியலைச் சங்கம் வேவா விழியுப்பு கோத்திளைத்த**
**மெல்லியலைச் சங்க ராவிடுமோ வந்த வேள் கணையே.** (37)

சொல் இலக்கணத்தைப் பயிலும் தமிழ்ச் சங்க மேவி நின்ற ஐயனே ! தூய்மையும் அழகும் மிக்க சங்குகள் நீர் நிலைகளில் உருளுகின்ற புகலூரில் வாழ்பவனே! சங்கரனே! ஆயர்கள், புல்லாங்குழல் கொண்டு இசைக்கும் கொல்லி எனும் பண்ணானது துன்பத்தை உண்டாக்க, உடல்வெந்து, கண்களில் கண்ணீர் நிறைந்து, கைகளில் வளையல்களை அணிந்த உடலானது இளைத்து, நிற்கும் மென்மையான எம்பெண்ணை, அநதக் காமன் விடும் கணைகள் விட்டு விடுமோ? விடாது.

ஐ-அழகிய, ஐய-அய்யனே! மேய-உருளுகின்ற, குழற் கொல்லி-குழலால் இசைக்கப்பெறும் கொல்லிப்பண் சங்கம்-சங்கு, பொதுவர்-ஆயர் குலத்தவர். வேள் கணை-மன்மதன் விடும் அம்புகள்.

சங்கத்திலே நின்றவனே என்றது மதுரைத் தமிழ்ச் சங்கத்திற் சென்று நக்கீரன் முன் நின்று கவியுரைத்த திருவிளையாடற் புராணக்கதை:-

“பண்ணொலி” கேட்டுத் துன்புற்ற தலைவியின் நிலையைத் தோழி அல்லது செவிலி கூறுவது.

இறைவனார் சங்கமேவி நின்ற செய்தியை நாவுக்கரசர், “நன் பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி, நற் கனகக் கிழி தருமிக் கருளினோன்” என்பார்.

சொல்+இயலை-சொல்லியலை-சொல் இலக்கணம் துய்ய+அன்னம்-துய்ய வன்னம், புல்லி-நிறைந்த, விழி+அப்பு+ கோத்து-விழியப்பு கோத்து-கண்களில் நீர் நிறைந்து-வடிய.

**வேய்ந்த சலஞ்சல மாகாமற் பாகத்து மின்னை வைத்தோர்**
**காய்ந்த சலஞ்சல மாகக் குனித்தவர் கார்க்கடல் வாய்**
**வாய்ந்த சலஞ்சல மாரஞ்சொரியும் வயற் புகலூர்த்**
**தோய்ந்த சலஞ்சல நூபுரப் போதென்றுயர் கெடவே. (38)**

"சலஞ்சல" வென சத்தத்தை எழுப்பக் கூடியதான, சிலம்புகளைத் தன் கால்களில் அணிந்த, தாமரை மலரை யொத்த பாதங்களையுடைய இப்பெண்ணின் காமவேதனை ஒழிவதன் காரணத்தால், எனது துயரம் நீங்கும்படியாக, கங்கையானவள் கோபம் கொள்ளாதவாறு, தமது இடப் பாகமாக உமாதேவியாரை வைத்தவரும், மேரு மலையை மலை எனக் கொள்ள இயலாதபடி அதனை திரிபுர அசுரர்க்கு எதிராக வில்லாக வளைத்தவருமான, எமதிறைவனார், கருத்த நிறக்கடலில் விளைவதான "சலசல" வென முத்துக்களை உதிர்க்கும் சங்குகள் நிறைந்த வயல்கள் சூழ்ந்த திருப்புகலூரில் அகலாது பொருந்தியிருந்தருள்கின்றார்.

சலம்-கங்கை, சலம்-மலை, குனித்தல்-வளைத்தல், அசலம்-மேரு மலைக்கு ஆகி நின்றது. மின்னை-மின்னலைப் போன்ற ஒளிமிக்க இடையையுடைய உமையவளே, நூபுரம்-சிலம்பு, போது-கமலமலர், துயர்கெட என்பது, எம் பெண்ணின் காமவேதனை அழிவதன் காரணமாக என்துயரம் தீர்ந்தது எனப்பொருளாகியது. சலமாகாமல்-கோபங் கொள்ளாமல், சஞ்சலம்-சங்குகள், ஆரம்-முத்துக்கள், கார்க் கடல்வாய்-கறுத்த நிறக் கடலினிடத்தில். இது தலைவன் கூற்று-தெளிதல் என்னும் வகையதான பாடல்.

இரு மனைவியர் ஒருவருக்கு இருப்பின் அவ்விரு பெண்டிரும் ஒருவரோடொருவர் கோபங் கொள்ளல் இயற்கை என்பதாகக் கொண்டமையால்-ஈண்டு உமையும் கங்கையும் ஒருவரோடொருவர் கோபங்கொள்ளாது ஒரு சேர வைத்தவர் எனச் சிவனை சிறப்பித்துக் கூறியுள்ளார்.

**துயரந்தகாம லெவரும் தொழும் புகலூரர் செந்தீக்**
**கையரந்தகாரங் குடிகொண்ட கண்டர் கவுரி பங்கர்**
**பெயரந்த காலத்துதவு மெம்பால் வரும் பெற்றியை நீ**
**யயரந்த காவந்தச் சேவடி தானென் னர ணென்பதே.** (௩9)

துன்பம் வந்து அணுகாமல் என்றும் இன்புற்றிருக்க வேண்டி, அனைவராலும் வணங்கப்பெறும் இறைவனார் தான் புகலூரில் உறைபவர். அவர் ஒரு கையில் செந்தீயை ஏந்தியவர், இருள் போன்று கரிய நிறமுடைய விஷத்தை கண்டத்திலே உடையவர், பார்வதிதேவியை ஒரு பாகமாகக் கொண்டவர், உடலை விட்டு உயிர் பிரியக்கூடிய அநதக் கடினமான நேரத்தில் அருள்செய்பவர். அவரின் திருவடிகளே எனக்குக் கோட்டையாக விளங்குகின்றன. எனவே எனக்கு வரும் பெருமையை மறந்துவிட்டு எமனே நீ என்னிடம் அணுகாதே !

இயாவரும்-எல்லோரும், செந்தீ-மழு, அந்தகாரம்-இருள், இருள் என்பது நிறத்திற்காகி ஆலகால விஷத்தைக் குறித்தது. அயர்த்தல்-மறத்தல், பெற்றி-பெருமை, அந்தகன்-எமன் மார்க்கண்டேயனுக்கு உதவிய சிவனைத்தான் நானும் துணையெனக் கொண்டுள்ளேன். எனவே எமனே என் பெருமையை அறியாமல் நீ என்னிடம் வந்தால் அன்று மார்க்கண்டேயனைப் பிடிக்கச் சென்றபோது சிவனாரால் தண்டிக்கப்பட்டது போல் இப்போதும் தண்டிக்கப்படுவாய் என்பதை எமனுக்கு உணர்த்துவதாக அமைந்தது. அரண்-கோட்டை, பெயர்-அந்தக்காலம் என்பது உடலை விட்டு உயிர்பிரியும் காலத்தைக் குறித்தது. கண்டர்-கழுத்தினையுடைய இறைவனார். கவுரி- பார்வதி தேவியார்.

**என் பணியத்தர் திருப்புகலூர ரிளைத் திமையோர்**
**முன் பணியத்தழ னஞ்சை யுண்டோர் முது வாளெயிற்று**
**வன்பணியத்தர் மழுவிடை மேலிம் மறுகில் வந்தென்**
**மின் பணியத்தனந் தந்து கொண்டேகினர் மேகலையே !** (40)

திருப்புகலூரில் வாழும் இறைவனார், எலும்புகளை மாலையாக அணிபவர். துன்புற்ற தேவர்கள் வந்து பணிந்து வேண்டியபோது ஆலகால விஷத்தை அமுதமாக உண்டவர், வாள் போன்று கூர்மையான கங்கணமாக அணிந்த கையினர், இளமை மாறாத காளை வாகனத்தின் மீதேறி இத் திருப்புகலூர்த் திருவீதிகளில் உலா வரும்போது என்னுடைய பெண்ணானவள் வந்து வணங்கிட அவளுக்குப் பொன் போன்ற தேமலைக் கொடுத்து அவளது இடையில் அணிந்திருந்த மேகலையை எடுத்துக்கொண்டு போயினார். இது வியப்பாகவன்றோ உள்ளது என்றது.

அத்தர்-தலைவர், அத்தகையவர்-என்பணி-என்பு+அணி (எலும்பு மாலையணிந்த), இளைத்து-துயர்உற்று, இமையோர்-தேவர்கள், தழல்-நெருப்பு, எயிற்று-பற்களையுடைய, வன்பணி-கொடிய நாகம், மின்-மின்னலொத்த இடையுடைய பெண், மேகலை-மேலாக அணியும் ஆபரணம். ஆடையை எடுத்துக்கொண்டு ஏகினார். எனப் பாடம் சொல்வதை விட, அவளுக்குண்டான தேமல் நோய் காரணமாக உடல் இளைத்துவிட, இடையில் அணிந்திருந்த மேகலை எனும் ஆபரணம் கழன்றுத் தானாகக் கீழே விழ அதனை எடுத்துக்கொண்டு இறைவர் ஏகினார் என்று பாடம் கொள்வது சிறப்பு. ஆபரணம் ஏதும் அணிந்த செய்தி இல்லை எனவே சேலையைத்தான் கொண்டு சென்றார் எனவும் அறிஞர் பலர் கூறியுள்ளனர். அடுத்துள்ள பாடலை நோக்கின் இதுவே சரியென்றாகும். இது செவிலிக் கூற்றாக அமைந்தது.

**கலைக்கு முழைக்கும் பிரிவு கண்டாய் வெய்ய காமனின்ற**
**நிலைக்கு முழைக்கும் பழிவரும் போலு நிருத்த மெல்லா**
**மூலைக்கு முழைக்குந் தரும்புகலூர் முதுமறைக**
**ளலைக்கு முழைக்குன்று மென்னெஞ்சு மேவிய**
**வாண்டகையே. (41)**

மானின் கண்களைப் போன்ற கண்களையுடையஎன் மகளுக்கும், அவளது இடையிலே உடுத்திய சேலைக்கும் பிரிவு

ஏற்பட்டுவிட்டதைக் கண்டாய், முல்லைப் பண்ணிற்கும், உழைப்பண்ணிற்கும், நடனமாடியபடி, புகலூரில் வாழும் இறைவா! மன்மதன் நிற்கும் நிலையைப் பார்த்தால், உமக்கும் பழி வந்து சேர்ந்தாலும் சேரும்போலும், குகைகளையுடைய கைலைமலையிலும், என் மனத்துள்ளும் பொருந்தி வாழும் ஆண்மையிற் சிறந்த இறைவரே ! பழமையான நான்கு வேதங்களும் உம்மையடைந்து உமது புகழைப் பாடுகின்றன.

கலை-ஆடை; நிருத்தம்-நடனம்; சொல்லின் பொருள் விளங்க ஆடுதல்; முலைக்கும்-முல்லைப் பண்ணிற்கும்; உழைக்கும்-உழை எனும் பண்ணிற்கும்; தாண்டவம் என்பது தாளத்திற்கேற்றவாறு ஆடுவது. எனவே நிருத்தம் வேறு தாண்டவம் வேறு என அறிக. கலை-ஆண்மான்; உழை-பெண் மாண்; நிருத்தம்- நாட்டியம்-தாண்டவம்-நாட்டியக்கலை-நயம் காண்க. முதுமறைகள்-பழைமையான வேதங்கள். முழைக்குன்று-குகைகளையுடைய கயிலை மலை. முழை-குகை.

பசலை நோய் காரணமாக உடல் இளைத்து, இடையிற் கட்டிய சேலையனது நில்லாது தரையில் வீழ்ந்து பிரிவுற்றது என்றதும். ருக்மாங்கதன் எனும் ஏகாதசி விரதயிருந்த மன்னனை, அவ்விரதத்தை அழிக்கவேண்டி பிர்மதேவனால் படைக்கப்பட்ட ஒரு மோகினியின் அழகினைக் கண்ட தேவர்களின் இடையில் கட்டிய ஆடை தானாகக் கீழே விழுந்ததெென ஒரு நாடகக் கதையில் கூறப்பெற்றுள்ளது. காண்க-ருக்மாங்கத நாடகம், சரசுவதி மகால் வெளியீடு. அனைத்து தேவர்களையும் அழிக்கும் தன்மை பொருந்திய ஆண்மை படைத்தவர் என்பதால் “ஆண்டகை” எனக் குறிப்பிடப்பெற்றுள்ளதும் சிறப்பாகும். உழைப்பண் முல்லைப்பண் பற்றிய விரிவான செய்திகளை, சிலப்பதி காரத்து, அரங்கேற்றுக் காதையின், ஆய்ச்சியர்க் குரவைப் பகுதியில் கண்டறியலாம். இது செவிலி கூற்றாக அமைந்த பாடல்.

**ஆண்டவம் பஞ்சு கொண்டாலைச்சிலை கொண்டனனங்**
**கனும்போர்**
**மூண்டவம் பஞ்சுக மெந்நாண்மொழிவது முத்தணிந்து**
**மாண்டவம் பஞ்சு தனத்தாண் மகிழும் வயற்புகலூர்த்**
**தாண்டவம் பஞ்சுரம் பாடநின்றாடிய சங்கரற்கே ! (42)**

*அழகிய கிளியே ! முத்து மாலையை அணிந்ததன் மகிழ்ச்சியினால் விம்முதற் காரணமாக, எந்நேரமும் இற்று வீழ்ந்து விடுவோமோ என முலைக்கச்சு பயம் கொள்ளும் படியான திரண்ட தனங்களைக் கொண்ட உமாதேவியார் மகிழ்ந்து உடனிருக்க, வயல்கள் சூழ்ந்த திருப்புகலூரில் பஞ்சுரமெனும் பண்ணிற்கு அம்பலத்தே நின்று தாண்டவ மாடி நடித்த சிவனார்க்கு, கையிலே கரும்பு வில்லைக் கொண்டு தன்னுடைய ஐந்துவகை அம்புகளையும் விடுத்து தாமாக வம்புக்காகி என்னோடு போருக்கு வந்துவிட்ட மன்மதனுடைய செயலை நீ எப்போது போய்ச் சொல்வாயோ!*

*அம்பஞ்சு-அம்பு+அஞ்சு=ஐந்து அம்புகள்; ஆலை-கரும்பு; சிலை-வில்; சங்கரன்-சுகம் தருபவன்; அனங்கன்-மன்மதன்; வம்பு-முலைக்கச்சு ஆடை; தாண்டவம்-நடனம்; பஞ்சுரம்-பஞ்சுரப்பண்; தலைவி தலைவனுக்கு கிளியை தூதாக விடுவது காதல் மறபு; "சொல்ல வல்லாயோ கிளியே"! என்பது சுவையான பாடல். தங்களின் மேல் இறுக்கமாகக் கட்டப்பெறும் துணி கச்சு எனப்பெறும். இக்கச்சு தான் எந்நேரமும் இற்றுவிட நேரிடும் என அஞ்சுவதாக கற்பனை செய்திருப்பது சிறப்பு. சங்கரன் நன்மையே செய்யும் தன்மையானன் ஆதலால் கிளிபோய் சொன்னாலே இறைவனார் அருளுவது உறுதி என்பது தலைவியின் கருத்து. கவிகாளமேகப் புலவரின் கிளிவிடு தூது-தாதி தூது தித்தித்ததோது தத்தை-கிளி-என்ற வரிகைகளையும் நினைவிற் கொள்க. அம்+சுகம்=அழகிய கிளி. அருணைக் கலம்பக-29, 18வரிகளில் சுகமே சுகமே யிரும் என்ற வரிகளை நினைவிற் கொள்க; இது தலைவி கூற்றாய் நின்ற பாடல்.*

**சங்கு கைக்குத்தரல் வேண்டுமென்றேற் குயிர் தானலரான்**
**மங்குகைக்குத்தர மொன்னுஞ் சொல்லார் மருவார் புலர்தீப்**
**பொங்குகைக்குத்தர வெற்பெடுத்தோர் புகலூரர் பொல்லா**
**வெங்குகைக்குத்தர வென்பார்க் கொழிக்கும்**
**விழிச் செல்வரே! (43)**

என் இருகைகளுக்கும் சரியாகப் பொருந்தும்படியான அளவினதாக வளையல்களைத் தர வேண்டும் எனப் பணிந்து கேட்க, அதற்கு என் உயிரும் உடலும் அவமானத்தால் குன்றும்படி, மறுமொழி ஏதுங் கூறாது சென்றார் இறைவர்; அவர் வடக்கிலுள்ள மகாமேரு மலையை வில்லாக எடுத்து, விரோதிகள் வாழும் திரிபுரத்தைத் தீப்பட்டு எரியும் வண்ணம் செய்தவர்; அவரே இத்திருப்புகலூரில் வாழ்பவர். கொடிய தீப்பற்றி எரியும் குகைபோன்ற வயிற்றின் பசிக்கு உணவு தரவேணும் எனக்கேட்கும் அன்பர்களுக்கு அவர்களின் பசியையே ஒழிக்கும்படியாக கண்களாலேயே அருள் செய்திடும் அன்பர்.

சங்கு-வளையல்; அலர்-பழிச்சொல்; உத்தரம்- மறு மொழி (பதில்); மங்கைக்கு-மங்கும்படி உடற்குன்றும்படி; மருவார்-பகைவர்; உத்தரம்-வடக்கு; விடை-பதில்; அலர்-பழிச்சொல், மலர் அம்புகள்; என்றேற்கு-வினையால் அனையும் பெயர். உத்தரவெற்பு-வடக்கே அமைந்த மலை. "ஒருநாளைக்கு ஒழி என்றால் ஒழியாய் இருநாளைக்கு ஏலென்றால்ஏலாய்"-இடும்பை கூர் என் வயிறே!என்ற ஔவையின் பாடல் மூலம் வயிற்றுப்பசியின் கொடுமையை அறியலாம். பசியின் கொடுமையை அருட் பெருஞ் சோதியார் கூறியதுபோல் வேறெவரும் கூறினாரில்லை. எனவே வயிற்றைப் பொல்லா வெங்குகை என்றார். கண்காட்டி களிம்பறுத்தல் என்பது இறைவனின் அருட்செயல்-அடியவர்கள் தம் தீக்கருமங்களை தம் கண்களை விழித்துப் பார்ப்பதன் மூலுமேயே ஒழித்துவிடும் தன்மையவர் இறைவர் என்பது கருத்தாகும். இதனை உள்மறைத்துள்ளது இப்பாடல். (விழிச்செல்வர் என்பது)

**விழியனலங்கணை மாரற் களித்தவன் மெய்வழுவா**
**மொழியனலங்காரத் தேந்திய வீர முராரி செல்லா**
**வழியனலங்கலை சூழ்புகலூரன் மடைப்பள்ளியாங்**
**கழியனலங்க வர்ந்தேகினர் தேர்வரக் காண்கிலமே ! (44)**

யோக நிலையில் அமர்ந்திருந்த இடத்திற்கு அந்த யோக நிலையை மாற்றவேண்டிக் காமக்கணைகளைத் தொடுக்க நெருங்கி வந்த மன்மதனுக்குத் தமது நெற்றிக் கண்ணின் தீயை அளித்தவர் நமது இறைவர், சொன்ன சொல் தவறாத சொல்லுக்கு இலக்கியமாய் நின்ற கலப்பையைக் கையிலே ஆயுதமாக ஏந்திய வீரமிக்க "பலபத்திர ராமன்" சொல்லுதற்கரிய நெறியை அறிந்து தாம் அவ்வழிச் செல்பவன், அசைகின்ற அலைகளையுடைய நீர் சூழ்ந்த திருப்புகலூரில் இருந்தருள்பவன் என்னுள்ளத்திலிருந்த நல்லனவெல்லாவற்றையும் தான் கவர்ந்து சென்றவர், அவர் ஏறிவரும் தேரானது கடல்நீரை இரண்டாகக் கிழித்துக் கொண்டு இன்னமும் வரக்காணேனே !

விழியனலம்-நெற்றிக்கண்ணின் பெருந்தீ; மாரன்-மன்மதன்; அலம்-கலப்பை; மடைப்பள்ளி என்பது கோயில்களில் இறைவர்க்கான உண்பொருளைச் சமைக்கும் இடம் இது. கடலுக்கு ஆகி வந்தது ஏனெனில் கடலில் உண்டாக்கப்பெற்ற ஆலகால விஷத்தை இறைவனார் உண்டமையால் என்க. அலங்கு-அசைகின்ற. வீரமுராரி-பலராமன்; மெய்வழுவா-சொன்னசொல் தவறாத்; "காமன் கணை வலங் காய்ந்த முக்கண்ணினர்" என்பது திரு நாவுக்கரசரின் தலப்பதிக வரி. தீயை அளித்தவன் என்பது மன்மதனை அழிக்கும் பொருட்டன்றி, அவனுக்கு நன்மை உண்டாக்கவே என்பதால் அளித்தான் எனப்பெற்றது. இப்பாடல் தலைவி தலைவனின் வரவை எதிர்நோக்கி இருந்தலைக் காட்டுவது. தலைவி கடலை விளித்துக் கூறுவது பெருங்கற்பனை என்க. எப்போ வருவாரோ எந்தன் கலிதீர செப்பிய தில்லை சிதம்பர நாதன் என்ற பாடலைக் காதில் ஒலிக்கச்செய்யும்.

மடைப்பள்ளி+ஆங்கு+அழியஎனவும், மடைப்பள்ளி+ யாம்+கழிய எனவும், இரு வகையாகப்பிரித்துக் பொருள் கொள்ளலாம். இறைவன் ஏறிவரும் தேரைச் சிறப்பிக்கவே கடல்நீரைக் கிழித்துக் கொண்டு என இங்குப் பொருள் கூறப்பெற்றது.

**காணப் பணிமன்று ளாடிய காலு மென் கன்மனமும்**
**பூணப்பணியறம் வேறில்லை காண் புகலூரரசே**
**சேணப்பணிமுடி யாயடியேன் பிழை செய்கையெல்லாம்**
**பேணப்பணியுனக் கென்னை யெந்நளும் பெருந்தகையே !(45)**

பதஞ்சலி முனிவர் கண்டு இன்புறும் வண்ணம் சிற்சபையில் நடித்தாடிய உன்னிருத் திருப்பாதங்களும் கல்லைப் போலக் கடினமான என்மனமும் ஒன்றறக் கலந்து பொருந்தி இருந்திட கட்டளையிட்டு அருளவேண்டும். இதுவே தருமநெறியாகும். ஆகாய கங்கையைத் தரித்த சடையையுடையவனே! புகலூர்க் கடவுளே! எந்நாளும் பெருந்தன்மையுடையவனே! அடியேன் செய்யும் பிழைகளையெல்லாம் பொறுத்தருள்வது உனது கடமை யாகும்.

காணப்பணி - ஆதிசேடனது அவதாரமாகிய பாம்பு எனும் பதஞ்சலி முனிவரைக் குறிப்பது (பணி+காண)-இவர் காணும்படியாக; மன்னுள்-சிற்சபையினிடத்தில், சேணப்பு-ஆகாயகங்கை; அடியவர்கள் இறைவனது திருப்பாதங்களை தம்மனத்தோடு ஒன்றச் செய்யின் அவர்க்கு எந்நாளும் இன்பமே அன்றி துன்பம் ஒருநாளுமில்லை என்பது இப்பாடலின் உட்கருத்து.

"அப்பா நான்
வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்"

.............................................................

"தப்பேதும் நான் செயினும்
நீ பொருத்தருள வேண்டும்"

என வடலூர் வள்ளலார் கூறுவதைக் காண்க..

"நான் துன்பமின்றி இருக்க வேண்டுமாயின் என் கல்நெஞ்சோடு நின் திருப்பாதங்களைப் பொருந்தச் செய்" என்பது- சேண்+அப்பு+அணி-சேணப்பணி; கல்+மனம்-கன் மணம், கல்போன்ற மனம்; பேண-காப்பாற்றுவது. பணி-கடமை.

**தகைமாலையாகத்தை வெல் புயத்தேயணை தையனெஞ்சிற்**
**புகைமாலையாகப் பசப்பைத் தணி புகலூரரசே**
**பகைமாலையாக வந் தைந்தலாரலுமிப் பாவையை வேள்**
**வகை மாலையாகத் தொடுத்தானினி யென்ன வாசகமே ! (46)**

பெருமையுடையதும், மயக்கமெனும் குற்றமுடையது மான தக்கனது வேள்வியை வென்ற எம்மிறைவனாரின் தோளோடு தோளாக இப்பெண்ணைச் சேர்த்து விடுவாய், இப்பெண்ணினது நெஞ்சில், புகையும் பூமாலை போலும், உடலில் உண்டாகிய தேமலையும் பசப்பையும் நீக்கிவிடுவாய், திருப்புகலூர்த்தலைவனே! மாலைக் காலம் எனக்கு பகையாக வந்து தோன்றுகிறது. மன்மதன் வந்து தோன்றி தன்னுடைய ஐந்து வகையான மலர் அம்புகளினால் இப்பெண்ணின்மேல் வரிசை வரிசையாகத் தொடுத்தான். இவ்வளவே இனியும் என்ன சொல்ல ?

மால் - குற்றம் - மயக்கம்; தக்கன் தான் எனும் மயக்கத் தால் சிவனை அழையாத குற்றம் செய்து யாகம் இயற்றினான்; தணி-தணித்துவிடு; வேள்-மன்மதன்; தகை+மால்+ஐ+ யாகத்தை = தகைமாலையாகத்தை; வெல்+ புயத்தே+ அணை+ தையல் + நெஞ்சில்+புகை = வெல்புயத் தேயணை தையனெஞ்சிற் புகை; வந்து + ஐந்து + அலராலும்- வந்தைந்தலராலும் வகை மாலை ஆக- வரிசை வரிசையாக. இது,

களவியல் வரைவு கடாதற் கிளவி காமமிக வுரைத்தற் றுறை யினது-ஆண்டாளின் பல பாடல்களை இங்கு நினைவு கூறலாம். பொழுது கண்டு இரங்கல் எனும் அதிகாரத்தில் வள்ளுவர்

*காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து*
*ஏதிலர் போல வரும் என்பார் - (குறள்-1224)*

காதலர்கள் தாம் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து நின்ற காலத்து வரும் மாலை நேரமானது-கொலைக் களத்திடையே கொலையைச் செய்ய வருபவர்களைப் போல சற்றும் ஈவு இரக்கமின்றி வருகிறது என்பது பொருள்.

**வாச வனந்தரத் தூர்க்கின்ற சோலை வயற் புகலூ**
**ரீசவனந்தர விக்கதிரோ வெண்டிசா முகமுங்**
**கூசவனந்தர வந்த நஞ்சோவெனக் கொள்ளை நிலா**
**வீச வனந்தர மாரனுந் தோன்றினன் விற்குனித்தே.** (47)

இந்திரனுடைய பொன்னுலகத்தையே அடைக்கின்ற வாறு உயர்ந்த மரங்களும் சோலைகளும் நிறைந்த புகலூர்க் கடவுளே! வீசுகின்ற நிலவின் கொள்ளை ஒளி எனக்குப் பல சூரியன்கள் ஒருசேர வந்து வீசும் கிரணங்களைப் போலவும், எட்டுத்திசைகளிலுமுள்ளவர்கள் பயங்கொள்ளும்படி திருப்பாற்கடலிலிருந்து வெளியே வந்த விஷமோ என்னும் படியாகவும் உள்ளது. இதே நேரத்தில் தன்னுடைய கைவில்லை வளைத்துக்கொண்டு மன்மதனும் வந்து தோன்றிவிட்டார்.

வாசவன்-இந்திரன்; அனந்தம்-அதிகமான; வனம்-சமுத்திரம், வனம் என்பது நீரைக்குறிக்கும், இங்கு நீர் நிறைந்த கடலைக்குறித்தது. மேலும் சிறப்பாக ஆலகால விஷம் தோன்றிய திருப்பாற் கடலைக் குறித்தது; நீர்-ஆகுபெயர்.

ஈசனை முன்னிலை யாக்கி, தட்சயாகத்தின் போது ஈசனால் தண்டிக்கப்பட்ட சந்திரனும் நெற்றிக்கண் தீயினால் எரிக்கப்பட்ட மன்மதனும் ஒருசேர வந்து செய்யும் துன்பங்களைக் கூறினாள். ஏனெனில் இப்போது அவ்வீசனால் மட்டுமே இவ்விருவரையும் தண்டிக்க இயலும் என்பதால். அட்டவசுக்களுக்குத் தலைவன் என்பதால் இந்திரனை வாசவன் என்பர். அனந்த ரவி என்பது-சூரியர்கள் பன்னிருவர்

என்பர் அதன்படி அணைத்து சூரியர்களும் ஒருசேர எனும் பொருள்பட அனந்தரவி எனப்பெற்றது. இதுவும் "தலைவி யிரங்கல்" வகை சார்ந்தது.

**குனித்தரங்கத்துறை தென்புகலூரர் குலவு சென்னிப்**
**பனித்தரங்கத்துறை யாரருளாற்பட முஞ்சமைத்து**
**மனித்தரங்கத்துடன் வெண்ணீரும் பெண்ணை மடலும் பெற்றே**
**னினித்தரங்கத்துங் கடற்புவி காண மன்றேற்றுவனே ! (48)**

தமது இரு திருவடிகளைக் குஞ்சித்து குஞ்சிதபாதனாக கனகசபையில் உறைகின்ற அழகிய புகலூரரான குளிர்ந்த அலைகளையுடைய கங்கையை தலையில் அணிந்த சிவனது அருளால், படமுமுண்டாக்கி, மனிதர்களுடைய எலும்பு களையும் வெள்ளிய திருநீரும், பெண்ணை மடற்குதிரையும் பெற்றுக்கொண்டேன். இனி சங்குகள் ஓசையை எழுப்புகின்ற கடல்சூழ்ந்த இவ்வுலகம் அறியும் வண்ணம் எம் மன்னரின் அவையில் ஏற்றுவேன்.

பனி-குளிர்ந்த; பெண்ணை மடல்-பெண்ணை மடற் குதிரை; தரம்-சங்குகள்; கடற்புவி-கடலால் சூழப்பெற்ற உலகம், மனிதர் மனித்தர் ஆனது விகாரம்; படமும்+சமைத்து-படமுஞ் சமைத்து. படமுஞ் சமைத்து-படமுண்டாக்கி; குனித்த+அரங்கத்து-குனித்தரங்கத்து. இது மடலூர்தல் என்னும் இலக்கண வகையது. ஆண்மக்களே மடலேறுவர். மகளிர் மடலேறுதல் மரபன்று (தொல்-அகத்-35) கடலன்ன காம முழந்தும் மடலேறாப் பெண்ணிற் பெருந்தக்க தில் (குறள்-1137) என நாணுத்துற வுரைத்தில் அதிகாரத்தில் வள்ளுவர் கூறியுள்ளார். ஆயினும் மடலேறுவமென்று பெண்கள் கூறுவதாக கவி அமைத்தல் சில புலவர்க்கு இயல்பு ஆகியது.

**ஏற்றரவிந்தப் புனிதை நின்றேத்த விமய வில்லான்**
**மாற்றாவிந்தப் புரந்தீயவெய்தவர் வண்புகலூர்ச்**
**சேற்றரவிந்தத் திருமாளிகை சென்ற தெய்வ மின்னர்**
**தோற்றரவிந்தப் புனத்துளதோ கணி சொல்லுகவே ! (49)**

விந்திய மலையில் தோன்றிய துர்காதேவியானவள் எதிர்நின்று புகழும்படியாக, காளை வாகனத்தையுடைய வரும், மேருமலையை வில்லாக ஏந்தி பகைவர்களாகிய அசுரர்கள் அழியும்படியும், அத்திரிபுரங்களும் எரிந்து நராகும் படியும், அம்புகளை எய்தவர் நீங்காதுறையும் வனங்கள் நிறைந்த இத்திருப்புகலூரிலே, சேற்றிலே மலர்ந்துள்ள தாமரைத் திருமாளிகையிற் சென்ற திருமகள், இத்தினைப் புலத்தின் கண் இன்னமும் தோன்றாதிருப்பதேனோ நீ சொல்லுவாய் வேங்கை மரமே !

ஏத்த-புகழ; அவிந்து-கெட்டு; அப்புரம்-திரிபுரங்கள்; தீய-நீராக; அரவிந்தம்-தாமரை; கணி-வேங்கைமரம்; ஏற்றார்-ஏறு+அர்-காளைமீது ஏறியவர். இதுவும், களவியல் இரவுக்குறி, புனம்-தினைப்புலம்; "பாங்கியர் ஆடிடம் விடுத்துக் கொண்டகலப் பின்னாள் நெடுந்தகை குறிவயினீடு சென்றிரங்கல்" என்னும் வகையது. இது தலைவன் கூற்றாய் அமைந்தது. அண்மை விளியுங்கூட. மாற்றார்+அவிந்து+அ+புரம்+தீய-மாற்றரவிந்தப்புரந்தீய. தினைப்புலத்தில் வேங்கை மரம் நிற்பது ஒரு கற்பனை. இத்தனை நாளும் இத்தினைப் புலத்திற்குத்தானே வருவாள் ! உனக்கது தெரியுமே! ஆனால் இன்று மட்டும் இன்னமும் அவள் வராதுள்ளாளே ! அவள் ஏதும் உன்னிடம் காரணம் சொல்லிச் சென்றிருந்தாளாயின் அதைக் கூறுவாய் எனக் கொள்வது மேலும் பெருங்கற்பனை என்க.

**சொல்லலையாறு சமயத்தையுமின்ப துன்பமென்று**
**மல்லலை யாறுனக் குள்ளே யறி யறிவே பழன**
**மல்லலையாறு, நள்ளாறு, வெண்காடு மருதுகந்தோ**
**னொலலையாறு சடையில் வைத்தோன் புகலூரனையே ! (50)**

அறிவே! ஆறுவகையான சமயங்களையும், இன்ப துன்பமென்று சொல்லப்பெறும் அலைச்சலையும், உன்னுள்ளே அறிந்துகொள்வாயாக, வெளியில் எவரிடத்தும் சொல்லாதே! வயல்கள் சூழ்ந்த திருப்பழனம், திருவையாறு,

திருநள்ளாறு, திருவெண்காடு, திருவிடைமருதூர் ஆகிய ஊர்களை விரும்பி அவ்விடத்தேயும் உறைகின்றவனான, ஓசையை எழுப்புகின்ற, அலைகளையுடைய கங்கையை சடையில் தரித்தவனாகிய புகலூரில் எழுந்தருளியுள்ள சிவனை அறிந்துகொள்வாயாக !

சொல்லலை-சொல்லாதே! ஒல்லையாறு-கங்கை; ஆறு-தணிப்பாய் அமைதிகொள், அல்லல்-துன்பம்; ஒல்-ஓசை எழுப்புகின்ற, புகலூரில் உறையும் இறைவனாரைப் பற்றி மனத்திற்குள்ளே உணர்வாயாக என்று இவ்வந்தாதியில் உள்ள மற்ற தொண்ணூற் றொன்பது பாடல்களிலும் புகலூரில் வாழும் இறைவனார் எனப்பெற்ற இறைவன் மற்ற, பழனம், ஐயாறு, நள்ளாறு, வெண்காடு, இடைமருதூர் ஆகிய இடங்களில் உறைபவரும் இவரே எனக்குறிப்பிட்டது. "யாதும் ஊரே" என்ற கொள்கையின் பாற்பட்டது. மேலும் துன்பம் வரும்போது எவரிடத்தும் சொல்லாதே என்பது நம் துன்பத்தைச் சொல்லி பிறரையும் துன்பப்படுத்தக் கூடாது என்பதனால் என்க. ஆறு சமயத்தையும் அறிக என்றது மற்ற சமயக் கருத்துக்களை இகழாது அறிதல் வேண்டும் என்ற கருத்தினைக் கூறுவதாகும்.

**ஊராகவன் பகை யன்னையு மப்படி யுன்னை யெய்த**
**போராகவன் படையென்னை விடாது, கைப்போது கொண்டு**
**சீராகவன் பணி தென்புகலூர திருமிடறு**
**காராக வன்ப மரர்க் களித்தாய் முடிக் கங்கையனே ! (51)**

சிறந்தவனான திருமால் தன் கைகளினாலே ஆயிரம் தாமரை மலர்களைக் கொண்டு அருச்சித்து வணங்கும்படி யாகவும், ஆலகால விஷத்தை உண்பதினாலே அழகிய கண்டம் கறுத்தாலும் அப்படியே ஆகட்டும் என விடுத்து தேவர்களுக்கு அன்புடன் கூட அமிர்தத்தைக் கொடுத்தவனே! திருமுடியிலே கங்கையை அணிந்தவனே! கைகளிலே மலர் அம்புகளைக்கொண்டு தங்களோடு வன்மையாக போர் செய்த அந்த மன்மதன் என்னையும்

விடாது என் மேலும் அவ்வைந்துவித அம்புகளையும் எய்து கொல்கிறான். இதனால் ஊராரெல்லாம் மட்டுமின்றி என் தாயும் என்மேல் பகை கொள்கின்றனர். அது அப்படியே யானாலும் ஆகட்டும்.

போர்+ஆக+வன்=வன்மையான போர் செய்யவந்த மன்மதன். படை-ஐந்து வித அம்புகள் மன்மதன் படையாகும். போது-மலரும் பருவத்து தாமரை மலர்கள்; மிடறு-கழுத்து; அன்பு+அமரர்க்கு+அளித்தாய்-அன்புடன் கூட அமரர்களுக்கு அமிர்தத்தைக் கொடுத்தாய். ஊர்+ஆக+வன்+பகை-ஊரார் என்மேல் வன்மையான பகை கொள்கின்றனர்; சீர்+ராகவன்-சிறப்புமிக்க இராகவன் (திருமால்) காராக-கருமையாக, ஊர்-ஆகுபெயர்; ஆகவன்-போரைச் செய்தவன்; படை-ஆயுதம்;

ஆலகால விஷத்தை உண்பதால் தமக்கேது ஆகினும் ஆகட்டும் ஆனால் தேவர்கள் நன்மைபெற வேண்டும் எனத் தியாக உள்ளத்தோடு அவ்விஷத்தை உண்டமையால் இறைவனைத் "தியாகேசன்" என்கிறோம்.

**கங்கையம் போருகம் வந்த வம்பாய் வரக் கண்டணிந்தாய்**
**வெங்கையம் போருகவென்ற கையாயன்று வெற்பளித்தாள்**
**கொங்கை யம்போருக மோப்பக்குழை புகலூர மதன்**
**செங்கையம் போருக வெந்தபின் போதச் செயம் பெற்றதே.(52)**

யுகாந்தம் எனும் பிரளய காலத்தில் (முற்றழிவு காலம்) கங்கை நீரானது பெருகிவரக் கண்டு அதனைத் திருமுடியில் அணிந்தவனே! போர் வெறிகொண்ட யானையுடன் போரிட்டு அது மாண்டுபோகுமாறு செயித்த கைகளை யுடையவனே! மலைமகளாகிய பார்வதி தேவியின் தாமரை மொட்டுக்கள் போன்ற இரு கொங்கைகள் குழைந்து போகும்படி அணைந்து இத்திருப்புகலூரிலே உறைபவனே! மன்மதன் தன் கையில் இருந்த அம்புகளை உன்மேல் விடுத்து உம் நெற்றிக்கண் தீயினால் வெந்து நீறாகிய பின்னுங் கூட அவன் வெற்றியே பெற்றான் என்ற பெருமையை நீ அறிவாயாக !

கங்கை+அம்பு+ஓர்+உக=கங்கையம்போருக- கங்கை யாற்றின் நீர் பெருகிவர; ஓருக-ஆராய்ந்தறிவீராக. சிவனாரின் தலைமுடியில் ஒடுங்கிய கங்கையை பகீரதன் என்னும் அரசன் பெருந்தவம் செய்து மீண்டும் பூமிக்குக் கொண்டுவந்தான் என்பது புராணக்கதை: அம்போருகம்-தாமரை மொட்டுக்கள்; வெங்கயம்-வேகம் கொண்ட யானை, சிவனை அழிக்க தாருகாவன ரிஷிகளால் ஏவப்பட்டது. உக=மாண்டுபோகு மாறு; வெற்பு+அளித்தாள்-மலைமகள் பார்வதி; வெற்பு-மலை; செயம்-வெற்றி (ஜெயம்) உன்னோடு போர்புரிந்த மன்மதன் எரிந்து போனாலும் வெற்றியே பெற்றான் என்பது மன்மதன் எந்த நோக்கத்தோடு சிவன் பேரில் அம்புகளை எய்தானோ அது நிறைவேறிய காரணத்தால் அவன் வெற்றி பெற்றவனாகிறான்.

**பெற்றத்துவந்திவ் வகலிடத்தேற்கும் பிரான் புகலூர்**
**நற்றத்து வந்திகழ் மேனியன் வெற்பினி னாங்களஞ்சு**
**மற்றத்து வந்திப மன்று கொன்றாவி யளித்தவர்க்கோ**
**முற்றத்து வந்திம் முரச நின்றார்த்து முழங்குவதே !** (53)

காளை வாகனத்தின் மீதேறி, விரிந்த இப்பூவுலகிற்கு வந்துப் பிச்சையெடுத்து உணடவன். இப்புகலூரில் எழுந்தருளியுள்ளான், அவனுடைய உடல் சிவதத்துவமாகிய சுத்தவித்தை, ஈசுவரம், சாதாக்கியம், சத்தி-சிவம் ஆகிய இவ்வைந்துமாகியது. இச்சிவனார் உறைகின்ற மேருமலையில் அன்றொரு நாள் நாங்கள் ஒரு யானையைக் கண்டு அஞ்சி நடுங்கிய போது. பயமற்றவராக விளங்கி அவ்வாணையைக் கொன்று எங்கள் உயிரைக் காத்தவர். அவர் வரும்நேரமிது என்பதனை முனகூட்டியே அறிவிக்கவோ நம் தலைவாசலில் முரசறையலாயிற்று?

பெற்றம்-காளை மாடு; வெற்பு-மலை; அற்றத்து-அந்த சமயத்தில்; முற்றம்-தலைவாயில்; ஆவி-உயிர்; இபம்-யானை; அவர்க்கோ என்றது அவருக்காக எனவும், அவர் வரும் நேரமிது என அறிவிப்பதற்காகவும் எனவும் பொருள்

விரிவுற்றது. ஏற்கும் பிரான் என்றது - தமக்குப் பிடித்த பிர்மஹத்தி தோஷம் நீங்கவேண்டி பூவுலகிற்கு வந்து பிச்சை எடுத்துண்ட கதை-இடபம் அன்று கொன்றது. பாடல் எண் 6ல் யானையைக் கண்டு பயங்கொண்ட பெண்""ளை அவ்வானையைக் கொன்று காத்தார் என வருவதை அன்று என்பதற்கு கொள்க. இடபம்-யானை.

இது, வர விடைவைத்துப் பொருள் வயிறபிரிந்த தலைவன் வருதலைப் பாங்கி முரசொலி கேட்டுத் தலைவிக்கு அறிவுறுத்தல் என்னும் துறை சார்ந்தது. பிச்சை எடுத்துண்பவன் காளை மாட்டின் மீது ஏறி சென்றதுண்டு. காளை மாட்டின் மீது ஏறி வந்து பிச்சை எடுப்பதும் உண்டு என்க.

**முழங்காரணம் பயிலும் புகலூர ரிம் மூவுலகின்**
**கிழங்காரணங்கொரு பாலுடையார் கிரி மீதிருக்கும்**
**பழங்காரணர்தம் பவனி கண்டார்க்குயிர்ப்ப பாடொழிய**
**வழங்காரணந்தரு மாரனம்பாய மதுமலரே.** **(54)**

வேதங்களை ஓசைபட ஓதி பயிற்சி செய்வோரின் சத்தம் ஓங்கிக் கேட்கும் ஊராகிய புகலூரையுடையவராகிய எம்பிரான், மூவுலகிற்கும் மூலகாரணமானவர், உமாதேவியை ஒரு பாகத்தேக் கொண்டவர். யுக உற்பத்தி காலமுதலே வெள்ளி மலை மீது வாழும் காரணத்தர்; இவர் வீதியுலா வருவதைக் கண்டவர்களுக்கு பிறவிப் பிணியொழித்து பிறவா வரம் அளிப்பார். அவ்வாறு அவ்வுலாவை காணாதவர்கள் மன்மதனுடைய தேன் நிறைந்த மலர் அம்புப்பட்டு காம விகாரமுற்று ரணமடைவர், துன்பமடைவர்.

ஆரணம்-வேதம்; கிழங்கார்-மூலகாரணமானவர்; பவனி-உலாவருதல்; உயிர்ப்பாடு-பிறவிப்பிணி; மாரன்-மன்மதன்; மதுமலர்-தேனிறைந்த மலர்; கண்வழி கண்டு மனவழி ஒன்றின் மன்மதன் பாணம் வீணே! என்பர். காமவிகாரத்தின் காரணமாக மேலும் பல பிறவிகள் எடுத்து அல்லற்படும் நிலை இறைவனார் தம் உலாக் கண்டார்க்கில்லை என்பது உறுதி.

இதற்கு மாறாக தலைவி இறைவனின் உலாவைக் கண்டே மன்மதனின் அம்புகளால் ரணமடைந்தாள் என இரங்கினாள் எனவே இது தலைவி கூற்று என்பதும் ஒரு பாடம். காரிய உருக்களெல்லாம், மாயையாகிய காரணத்தில் ஒடுங்க் சக்தி சிவத்தில் ஒடுங்கி நின்று, மீண்டு ஒடுங்கிய வாறே தோன்றுதலின்-கிழங்கு எனப்பெற்றார். எனவே மாயை என்பது முதற்காரணம், சக்தி துணைக் காரணம், இவ் விவரங்களை நானா ஜீவ வாதக் கட்டளை, கைவல்ய நவநீதம் ஆகிய நூல்களைக் கற்பதன் மூலம் மிக விரிவாக அறியலாம்.

**மலராக வைங்கணை விற்கரும்பாக வடிவிலி நின்**
**றலராகவன் செய்யு மாண்மை யெல்லாமன்று பார்த்த கண்ணாற்**
**பலராகவண்டு பயில்புகலூரரும் பார்த்தருளார்**
**நலராகவன்பு கொண்டாயிழை சோரு நடுக்கமுற்றே ! (55)**

பலவித இராகங்களைப் பாடிக்கொண்டுலாவும் வண்டுகள், நிறைந்த சோலைகள் சூழ்ந்த புகலூரில் வாழும் இறைவனார், அன்றொருநாள், மன்மதன் தன்னுடைய கைகளில் கரும்பினை வில்லாகவும் மலர்களை அம்பாகவும் கொண்டு சிறப்பாகச் செய்த அவனது போரின் ஆண்மையைக் கண்டு அவனை தமது நெற்றிக் கண்ணினால் எரித்தருளினார். ஆனால் இப்போது அதே மன்மதனின் போர்ச் செயலால் எம்பெண் போகத்தில் இச்சைகொண்டு அச்சமடைந்து சோர்வடைந்துள்ளாள். நம்பெருமானார் அம்மன்மதனை அதே நெற்றிக் கண்ணால் இப்போது பார்த்தருளாதிருக் கிறாரே !

மலராக+ஐங்கணை; அம்புகளாக ஐந்துவித மலர்களை நின்றலர்+ஆக+வன்+செய்யும்-நின்றலராகவன் செய்யும்; வடிவிலி-உருவமற்றவனான மன்மதன்; ஐங்கணை:- அந்தண ரவிந்த மாம்பூ வசோகப்பூப் பைந்தளிர் முல்லை பனிநீலம் ஐந்துமே, வீரவேள் மைந்தரையும், வேனெடுங்கண் மாதரையும் மாரவே செய்யுமலர்-இவை திரவிய பாணம், இங்கிதம், மதனம், வசீகரணம் மோகனம், சந்தாபம்-

இவைகளைப் பாவ பாணங்கள் என நச்சினார்க்கினியா் கூறுவார். (சீவக சிந்தாமணி செய்யுள்-706 உரை காண்க.) (இவ்வந்தாதியின் இருபத்து மூன்றாம் பாடலை மறுமுறை நோக்கியும் அறிக.) பல+ராக+வண்டு-பலராக வண்டு பல இராகங்களைப் பாடும் வண்டுகள்.

மன்மதனிடம் கரும்புவில் பூ வில் இரும்பு வில் ஆகிய மூன்று வகை விற்கள் உண்டு. மன்மதன் கரும்பை வில்லாகவும் மலர்களை அம்பாகவும் கொண்டிருப்பது தனது கொடிய தன்மையை மறைப்பதற்கே என்க. ராகமென்பதன் பொதுக்கருத்து ஆசை என்றாலும் இடங்கருதி இவ்விடத்து சிற்றின்ப ஆசைக்கு எனப்பொருளாகி நின்றது. கிழவோன் கழற்றெதிர் மறுத்தல்- என்ற வகையால் தோழி கூற்றாக அமைந்த பாடல் இது.

**நடுக்கண்டனையல்லை கொங்கை கண்டாயல்லை நண்பவென்ற**
**னிடுக்கண்டனையிப் படியோ தணிப்ப திமய வெற்பில்**
**வடுக்கண்டனை யொரு பாகனைப் பூக வயற்புகலூர்க்**
**கடுக்கண்டனையு மலைத்தது மாரன் கடுங்கணையே ! (56)**

தோழனே! இடையையும் பார்க்கவில்லை, கொங்கை களையும் கண்டேனில்லை, எனது துன்பத்தை நீக்குவது இவ்விதமாகவோ! பாக்குமரங்கள் நிறைந்த வயல்கள் சூழ்ந்த திருப்புகலூரில் எழுந்தருளிய இமயமலையிற் பிறந்த, மாவடுவின் வகிர் போன்ற கண்களையுடையஉமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டவனான நஞ்சுண் கண்டத்தை யுடைய சிவனாரையும் மன்மதனுடைய கொடிய அம்புகள் துன்பஞ் செய்ததே.

நடு-இடை; பூகவயல்-கமுகு எனும் பாக்குமரங்கள் சூழ்ந்த வயல்கள்: அலைத்தது-துன்பம் செய்தது; நண்ப-தோழனே!

இது "பாங்கற் கூட்டம் கிழவோன் வேட்கை தாங்கட் கருமை சாற்றல்" எனும் இலக்கண வகையைச் சார்ந்தது. கடுக்கண்டன்-விஷத்தையுடைய கண்டன்.

"சங்கர நயினார் கோயில் அந்தாதி"யின் 33வது பாடலில் "நடுக்கண்டனையல்லை, கொங்கை கண்டாயல்லை" என்கிற விஷயம் பற்றி மேலும் விரிவாகக் காணலாம். மேலே அண்ணாந்து உயர்ந்து பரந்து வளரும் கொங்கைள், இடையை அழச்செய்தன-அது எவ்வாறெனின் கொங்கை களின் கனம் தாங்க இயலாத இடை கீழ் நோக்கித் தாழ்ந்து பரித்து அழுதது என்பது-இப்போது மேலே நின்ற கொங்கைகள் நடுவே நின்ற இடையை அழச்செய்தது கண்டு அதனைப் பரிகரிக்க வேண்டி அக்கொங்கைகளுக்குத் தக்கபடி தாமும் வளரவேண்டுமென, நிதம்பம் நினைத்தது. இதனாலேயே உமையவளை

"ஆவுடைமாது தழைத்தவள நகரம்
புனைவ நாயகனேமுன் னமன் படரை
நிகரம் புனையும் பொருதன்றோ"

என்றவாறு கூறும் அந்நூல்.

எண்டிசைகளின் அகன்று விரிந்து நின்ற
நிதம்ப தடத்தை யுடையவள்

என்பது உவமை பற்றிய செய்தி.

**கடுங் காலகால புகலூரிறைவ வென் காதலினுட்**
**படுங்கால காலங்களாகி நின்றோய் பதினாலுலகு**
**நடுங்கால காலமெனவே வருமிற்றை நாண்மதியஞ்**
**சுடுங்கால கால மரணமுண்டோ தெழுந்தோகையர்க்கே! (57)**

புகலூருக்குத் தலைவனே! கொடுங்காலனாகிய எமனுக்கே எமனாகி நின்றவனே! எனது காதல் நிறைந்த உள்ளத்தில் பொருந்திய திருவடிகளையுடையவனே! முற்றழிவு காலத்தில் பதினான்கு உலகங்களும் அழிவுற்ற காலத்திலும் அழியாது நிற்பவனே! இன்றைய தினம் உதித்த நிலவின் ஒளி என்னை ஆலகால விஷத்தினின்றும் வீசுகின்ற அக்கினிச் சுவாலையை போன்று சுடுகின்றது. உன்னைக் கண்டு வணங்கும் பெண்களுக்கு அகால மரணமென்பது இல்லை.

மதியம்+சுடும்+கால்+அகால மரணமுண்டோ: கடுங் கால+கால; படுங்கால்+அகாலங்க ளாகி: காலன்-எமன், கால-திருவடிகளை உடையவனே, இன்று+நாள்+மதி+அம்= இற்றை நாண் மதியம்-(அம்+மதி=மதியம்) இன்று உதித்த அழகிய நிலவு:

காலன் எனினும், கூற்றுவன் எனினும், ஒருவனையே சாரும்-இவன் எம தூதர்களின் தலைவன்-இவனுக்குத் தலைமையாய் இருப்பவன் தருமராசன்-அதாவது எமதருமன்-இதனை "தரும ராசர்க்காக வந்த கூற்றினைக் குமைப்பர் போலும் குறுக்கை வீரட்டனாரே" என்ற தேவார வரிகள் மூலம் தெளிவாக அறியலாம்.

அகால மரணம் என்பது காலத்தால் மூப்படைந்து மாள்வதன்றி சிறுவயதிலேயே, விஷம் அருந்தல் நீரில் மூழ்கிப் போதல் நெருப்பிடைப்படுதல் ஆகிய பல வகையான விபத்துக்களின் காரணமாக ஏற்படும் மரணம் "கடுங்கால கால" என்பதில் "கடும்" எனும் அடைமொழிச் சொல் எமனுக்கேயன்றி இறைவற் காகா தென்பது பாடம். இது தலைவி கூற்றும் எனலாம். தோழி கூற்றும் எனலாம் என அமைந்த பாடல்.

**தோகைக்குமார வரைமார்பளித்த துயரமெல்லாம்**
**போகைக்குமாரன் பொருதுவது பார்க்கிலிர் போர் கடந்த**
**வாகைக் குமாரன் வணங்க நின்றீர் மன்னர் வான் கரும்பா**
**லாகைக்கு மார வயற் புகலூரி லருந்தவரே ! (58)**

பள்ளர்கள், உயர்ந்த கரும்பினைக் கொண்டு தங்கள் பசு மாடுகளை அதட்டி ஓட்டுகின்றனர். இப்படிப்பட்ட சிறப்பு மிக்கதும், முத்துக்கள் நிறைந்த வயல்கள் சூழ்ந்ததுமான திருப்புகலூரில் வாழும் அரிய தவங்களை இயற்றிய தட்சிணாமூர்த்தியே! போர் செய்து செயித்து வெற்றிவாகை சூடிய சுப்பிரமணியர் வந்து வணங்கும்படியாக நின்றவரே! சந்தனம் பூசப்பெற்றதான உமது மலைபோன்ற மார்பினைக்

கண்ட இப்பெண்ணிற்கு துன்பமென உள்ளதெல்லாம் வந்தடைந்தது. இறைவனாகிய தங்களின் பொருட்டு மன்மதனானவன் இவள் இறக்கும்படியாக சண்டை செய்வதைத் தாங்கள் பார்க்கவில்லையோ !

தோகை-பெண்: ஆர-சந்தனம் பூசப்பெற்ற போகைக்கு-இறந்துபோகும்படியாக, தோகைக்கு+உம்+ஆர+வரை+மார்பு=தோகைக்குமாரவரை மார்பு; கரும்பால்+ஆ+கைக்கும்+ஆர+வயல்=காரும்பா லாகைக்குமார வயல்; போகைக்கு+மாரன்=போகைக்குமாரன். ஆ-பசு: வாகை-வெற்றிமாலை.

1. குமாரன்-சிவனின் மகனாகிய சுப்பிரமணியர் சூரனை செயித்த கதை; "சரவணவத்தான் கைதொழுது சாரும் அடி" என்பது தேவாரம்.

2. தவமியற்றுவோர்க்கு ஆன முதற்கடமை சீவ காருண்யமெனும் பிற உயிர்களிடத்து அன்பு செலுத்துவது. அருந்தவரே என விளித்து, எமது பெண் உமது மார்பினைக் கண்ட காரணத்தால் மன்மதன் அவளது உயிரைப் போக்கவும் துணிந்துவிட்ட நிலையில் இதனைப் பார்க்காதவர்போல் இருக்கிறீரே! என்றது சிறப்பு.

3. கம்பைக்கொண்டு மாடுகளை விரட்டாது கரும்பைக் கொண்டு மாடுகளை விரட்டினர் என்னும் செய்தி தானியங்களைக் காய வைத்திருந்த போது அதனை உண்ண வந்த கோழி முதலிய பறவைகளைத் தம் காதில் அணிந்திருந்த பொற்குழையைக் கழற்றி வீசி விரட்டிய கதையைக் காதில் ஒளிக்கச் செய்கிறது.

**அருந்தவ ரந்தணர் நால்வருந்தேவரு மாகியன்றங்**
**கிருந்தவ ரந்தண் வயற்புகலூர ரியமவெற்பிற்**
**றிருந்தவ ரந்தரு கூர்வேலொருவர் திருநெடுங்கண்**
**முருந்தவரந்த முனுவல் கெட்டேனென் மொழிவதுவே. (59)**

அரிய தவத்தவர்களாகிய சனகர், சனத்குமாரர் சனத் சுஜாதர், சநந்தனர் ஆகிய ரிஷிகள் நால்வரும் தேவர்களும் சூழ்ந்திருக்க அப்போது ஆலமரத்தினடியில் வீற்றிருந்தவரும் அழகிய, குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருப்புகலூரையுடைய வருமான சிவனுடைய இமயமலையில், அரங்கொண்டு திருத்தமாக ராவிய கூரிய வேல் போன்ற அழகு மிகுந்த நெடிய கண்ணினையுடைய ஒருபெண் இருந்தாள் அவள் சிரித்தபோது அவளது பற்களோ மயிலிறகின் அடிப் பாகத்தைப் போல வெண்மையாக இருந்தன. என் மன மழிந்தது. என்ன ஆச்சரியம்! இதை என்னவென்று சொல்லக்கூடும்.

அருந்தவர்-அரிய தவத்தை இயற்றியவர்கள்; அந்தணர் நால்வர்-சனகர் சனத்குமாரர், சனத்சுஜாதர், சுநந்தனர் ஆகியோர், அம்-அழகிய; தண்-குளிர்ந்த; முருந்து-மயிலிறகின் அடிப்பாகம், அவரந்த முறுவல்-அழகிய பற்கள் வெளியே தெரியும்படி, தட்சணாமூர்த்தியிடம் பாடம் கேட்ட நால்வரை; சனகர், சனற்குமாரர், சனந்தனர், சனாதனர் என்பர், சிவஞானபோத காப்புச் செய்யுட் பகுதியின் உரையின்படி, கல்லா னிழன்மலை, வில்லா ரருளிய, - கயிலாசத்தில் கல்லால் நிழலின் கீழ்த் தக்ஷிணாமூர்த்தமாகி எழுந்தருளி இருந்து, சனகர், சனத்குமாரர், அகத்தியர், புலத்தியர் ஆகிய நால்வருக்கும், தர்மார்த்த, காம மோட்சமும் பிரமவிட்டுணு வாதிகளுக்கு வேதமும் அனுக்கிரகம் பண்ணிச் சிட்ட பரிபாலனஞ் செய்தும்.........என்பதனைப் படிப்பதன் மூலம் பாடம் கேட்ட நால்வரைப் பற்றிய வேறுபாட்டினைக் காணலாம்.

கெட்டேன்-ஆச்சரியப்பட்டேன். அறிவிழந்தேன். தலைவன் தலைவியின் தன்மை விளம்பல் என்பது "களவியல பாற்பட்டது".

பற்களின் நிறம் வெண்மையாக இருத்தல் வேண்டும். அவ்வெண்மையை எதனோடு ஒப்பிடுகிறார் எனின் மயிலிறகின் அடிப்பாகம் எப்படி வெண்மையாக உள்ளதோ அந்தப்படியான வெண்ணிறம் எனக் கூறியிருப்பது அறிவிற் கெட்டாத உதாரணம்.

**மொழிப்பா கருந்தியும் கொங்கையிற் றோய்ந்து முந்நீர்ப் பிறந்த**
**பழிப்பாகருந்திகைப் பாறினமுத்தம் பருந்தரசின்**
**வழிப்பாகருந்தியில் வந்தவரத்தர் மணிக்குழைதோய்**
**விழிப்பாகருந்திய நீர்ப்புகலூரன்ன மென்கொடியே! (60)**

சுழித்துச் செல்லும் நீர் சூழ்ந்த புகலூரில் மெல்லிய கொடிபோன்ற இடையை உடைய பெண்ணே! நம் இறைவனார், கருடன் மீதேறிச் செல்லும் திருமால், மற்றும் அவர்தம் உந்தியில் தோன்றிய பிரம்மதேவன் ஆகிய இருவருக்கும் மேலானவர்; காதில் இரத்தினக் குழையணிந்த, கடலிற் பிறந்ததினால் ஆகிய அரிய குற்றங்கள் யாவும் நீங்கப்பெற்றதான முத்துக்களை மாலையாக அணிந்த உமாதேவியை இடப்பாகத்தே கொண்டு சர்க்கரைப் பாகு போன்ற அவர்தம் சொற்களைச் சுவைத்துக் கேட்டுக் கொண்டே அவர்தம் இரு கொங்கைகளிலும் அணைந்து இருப்பவர்.

பாகு-சர்க்கரைப்பாகு; முந்நீர்-கடல்நீர்; ஆறின-நீங்கப் பெற்ற; உந்தி-தொப்புள்; அத்தர்-மேலானவர்; குழை-காதணி உந்தியநீர்-சுழித்துச் செல்லும்நீர்; மென்கொடி-மெல்லிய கொடிபோன்ற இடையையுடைய பெண் உமாதேவி. பருந்து+அரசு=பருந்தரசு=கருடன். மணிக்குழை,தோய்விழி= அன்மொழித்தொகை.

இராமனுஜதாஸர் எனும் வைணவ அடியாரின் பாடல்களில் ஒன்று "காக்க நீ வருவாயே கருடனேறி காக்க நீ வருவாயே எனத் தொடங்கும் யானையைப் பிடித்த முதலையைக் கொல்ல கருட வாகனமேறி விரைவாகத் திருமால் வந்ததாக வைணவக்கதை கூறும்.

உமையின் சொற்கள் வெல்லப் பாகுபோல் இனிப்புடையதென்பது எவ்வாறெனின், புகலூரை அடைந்தவர்க்கு அவ்வூரை அடைந்ததால் கிட்டிய இன்பம் மட்டுமின்றி இவ்வுமையாளும் இன்பத்தைக் கொடுப்பாள் எனக் கூறுவது இப்பாடல்; "இறைவி கையுறை யேற்றமை பாங்கு வியத்தல்" என்னும் வகைப்பாடல் இது.

**கொடியாதரிக்கு மிடத்திருப்பாக குறிக்கவென்று**
**முடியாதரிக்கு மெனும்புகலூரவென் மொய் குழற்கு**
**விடியாதரிக்கு முலைமேல் வடமுயிர் மெய்யிற் சற்றும்.**
**துடியாதரிக்குங் கடைமணி நாவிற்குந் தோற்றமுண்டே. (61)**

கொடிபோன்ற இடையையுடையஉமாதேவியார் அன்புடன் கூடி உன்னுடைய இடப்பாகத்தே இருக்கப் பெற்ற எம் இறைவரே! உமது பெருமையை திருமாலாலும் நிச்சயிக்க இயலாது என வேதங்களாற் கூறப்பெற்ற சிறப்புடன் திருப்புகலூரில் உறைபவனே!

அடர்ந்த கூந்தலையுடைய எம்பெண் தன்னுடைய முலைகளின்மேல் அணிந்த முத்து மாலையானது உறுத்துகின்ற காரணத்தால் இரவுப்பொழுது விடியாததாகவே ஆயிற்று, அவளது உடலில் உயிர்த்துடிப்பு இருப்பதாகவே தோன்றவில்லை. எமனுடைய உருவமும், அவனது கடைவாயிலிற் கட்டிய மணியின் நாக்கும் அவளுடைய கண்களுக்குத் தெரியத்தொடங்கிவிட்டது எனத் தோன்றுகிறது.

அரிக்கும்-உறுத்தும்;துடியாது-தோன்றவில்லை; கொடி+ஆதரிக்கும்+இடம்+திரு+பாக - கொடியாதரிக்குமிடந்திரு பாக; மொய்குழல்-அன்மொழித்தொகை; அரி எனும் சொல்லுக்கு எமன் எனும் பொருளுமுண்டு; துடியாது--துடிக்காது இருப்பது போல அரிக்கும். முலைமேல் வடம்-கொங்கைகளின் மேல் அணியும் முத்துவடம். மொய்குழற்கு-அடர்ந்த கூந்தலையுடைய எம்பெண்ணிற்கு

இது காதல் வயப்பட்ட மங்கையின் பத்தாவதான மரணாவஸ்தையைக் குறிக்கின்றது. இவளது உடலில் உயிர் இருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை எனக்கூறுவது. இப்பாடல் நற்றாய் இரங்கல்-செவிலி இரத்தலுமாம்.

சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய கோடீச்வரக் கோவை என்றும் நூலில் காதலின் இலக்கண வகை அனைத்தும் வரிசையாகக் கூறப்பெற்றுள்ளதைப் படித்து காதல் வசப்பட்ட மங்கையரின அவத்தைகள் பற்றி அறியலாம்.

**தோற்றந்த மாவின் வசைமென் கொங்கை பங்கன் சுருதி**
**போற்றந்த மாவின் வரும்புகலூரன் பொருப்புமின்பார்**
**கூற்றந்தமாவின் வடுவகிர் போலுருக் கொண்டுலவு**
**மேற்றந்தமாவி கொண்டுய்வலர் தமக்கிது வெற்பலவே! (62)**

யானையின் தந்தங்கள் எனவும், தடாகத்தில் மலரும் தாமரை மொட்டுக்கள் எனவும் கூறப்பெற்ற கொங்கைகளை யுடைய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டவர் நமது இறைவனார், வேதங்கள் போற்றிட குதிரையின் மீதேறி உலாவரும் புகலூரில் உறையும், சிவபெருமானது மலையில் வாழும் பெண்களிடத்தில், கூற்றுவன் பிளந்த மாம்பிஞ்சின் உருவத்தில் திரிகின்றான். அப்படியும் இப்பெண்கள் இன்னும் உயிரோடு இருப்பதற்கு இது மேரு மலையல்லவே !

தோல்-தோலைத்தந்த யானை; (அதனுடைய) தோல்+ தந்தம்-தோற்றந்த; வனசம்-தாமரை மொட்டுக்கள்; மா-குதிரை; மாவின் வடு-மாவடு-மாம்பிஞ்சு; சுருதி-வேதம்; தம்+ தம்+ஆவி-தந்த மாவி-தங்கள் தங்கள் உயிர்-உய்வார்-பிழைப்பார்; வெற்பு+அல-வெற்பல-மலையல்ல; கூற்று+ அந்த-கூற்றந்த; வெற்பு-மலை-இங்கு இமயமலைக்காகியது.

1) சிவமூர்த்தத்தில் இறைவரை குதிரை மீதேறி வருபவர் எனும் பொருள் தரும்படி “அசுவாரூடர்” எனக் குறிக்கப் பெறுவதால் மா-என்ற சொல்லுக்கு இங்கு குதிரை எனப் பொருள் கொள்ளப்பெற்றுள்ளது.

2) குதிரையின் மீது ஏறிவரும் இறைவனின் அழகினைக் கண்ட பெண்கள் இமயமலையில் உள்ளவராயின் உயிரோ டிருப்பர், இப்பூவுலகத்து வாழும் பெண்கள் இறந்தே படுவர் எனப்பொருளாயிற்று.

கொங்கை-அன்மொழித்தொகை; இது "குறிப்பறிதல்" எனும் வகைப் பாடல். ஆவிகொண்டு "உய்வலர்" எனவும் "உய்வார்" எனவும் பாடபேதம் உள்ளது.

**வெற்பாசனத்தார் திருப்புகலூரர்தம் மெய்யிற்றுய்ய**
**பொற்பாசனத்தார் முடிக்கங்கை நாதர் புவிபடைத்த**
**நற்பாசனத்தார் பலிக்ககந்தோறு நடந்து பெற்ற**
**வற்பாசனத்த ரமுதா சனத்தர்க் கரியவரே ! (63)**

திருக்கயிலாய மலையில் அமர்ந்திருப்பவர், திருப் புகலூரில் வாழ்பவர், தூயஒளி மிக்க பசுமை நிறத்தையும், அன்னத்தைப் போன்ற நடையையும் உடைய உமாதேவியை தமது உடலில் ஒரு பாகமாகக் கொண்டு உடனுறைபவர், உலகத்து உயிர்களை யெல்லாம் படைக்கும் கடவுளாகிய பிர்மதேவனின் ஒருதலையைக் கையில் பிச்சைப் பாத்திரமாகக் கொண்டு பூவுலகில் வீடுவீடாக அலைந்து திரிந்து பிச்சை கேட்டும் சிறிதளவே சோறு கிடைத்தது. அமுதத்தையை உணவாகக் கொள்ளும் தேவர்களுக்குக் காணக்கிடைக் காதவர்.

வெற்பு+ஆசனம்-வெற்பாசனம்-மலையே அமருமிடம். பசுமை+அன்னம்-பாசன்னம்; பாசனம்-பாத்திரம்; புவி படைத்தோன்-பிரமன், புவியென்பது பூமியில் உள்ள உயிர்களையெல்லாம் படைத்தவன் எனவாகியது. பாசு-பசுமை. பொன்+பாசு+அனத்தர்-பொற்பாசனத்தர்; அனம்-அன்னம்; அற்ப+அசனம்-அற்பாசனம். அற்பசனம் என்பது அற்+பா-சனம் தீர்க்கசந்தி-தீர்க்கசந்தி; ஊர் சிரித்தது என்பது ஊரில் உள்ள மக்கள் சிரித்தனர் என்பதொக்கு.

அகந்தோறும் - வீடு வீடாக; அமுது + ஆசனம்- அமுதாசனம் அமிர்தத்தை உணவாகக் கொள்பவர்-அரியர்- காணக்கிடைக் காதவர்.

சிவன் கையில் ஏந்திய பிச்சைப் பாத்திரமாகிய பிரம்மனின் மண்டையோட்டில் எவ்வளவு சோறிடினும் நிறையாது-எனவே அதிற் கிடைத்த சோற்றை அற்பாசனம் (அற்ப+ஆசனம்) அதாவது மிகக் குறைந்த அளவினதான சோறு எனக் குறிப்பிடப்பெறுகிறது. அது எவ்வாறெனின் அற்பாசனத்தார்-பாத்திரம் நிறைவுறும் வண்ணம் பிச்சை கிடைக்காதவர்-இதனை பிரபுலிங்க லீலை எனும் நூலில்- (கைலாசபடலம்-41)

"காதியாயிர மால்களைப் பிழிந்து மாங்கனி போற்
கோது வீசினுங் கடல் கவிழ்த்தனைய செங்குருதி
பாதியாயினும் நிரம்புறாக் கபால பாணியனாய்
மாது பாதிய னவை யிடைப் புகுந்தனன் வடுகன்"

என்ற இப்பாடல் மூலம், பிர்மாவின் மண்டையோட்டைக் கையில் ஏந்திய சிவன் திருமாலிடம் சென்று உதிரப்பிச்சை கேட்க அவரும் எடுத்துக்கொள் என்றார். அவ்வப்போது சூலாயுதத்தால் அவரது நெற்றியிற் குத்தி அதன் வழிவந்த உதிரத்தை மண்டையோட்டில் பிடிக்க அது பாதி கூட நிரம்பவில்லை. எனவே அற்பாசனத்தார் எனப்பெற்றார்.

ஆயிரம் திருமால்களை மாங்கனியைப் பிழிந்து சக்கையை விட்டெறிவது போலப் பிழிந்தெடுத்தாலும் கூட பாதிபாத்திரங்கூட நிறையாது-எனப்பொருள்.

திருஞான சம்பந்தரின் தேவரப்படி

"புகலி நிலாவிய புண்ணியனே!
எழில் மலரோன் சிரமேந்தி யுண்டோர்
இன்புறு செல்வமிது என்கொல் சொல்லாய்"

என்ற வரிகள் பிச்சை கேட்டுப்பெற்று அதனை உண்டு உண்டு

இன்புற்றாகக் கூறும்-எனவே மண்டையோட்டை ஏந்தி ஊர்தோறும் சென்று பிச்சை கேட்டும் அப்பிச்சைப் பாத்திரம் நிறையவில்லை என்ற கதைப்படி அற்பாசனத்தார் என்பது சரி என்பர்.

தக்கையாகப் பரணி 224ன் படி

"உலகிற் பெரிய கபாலத்தே
யொருவருதிர மேற் நூற்றி
விலகிற் பிழையாச் சூலத்தே
கொண்டார் கணவர் வெற்றுடலே"!

என்ற பாடல் மூலம் பிர்ம கபாலம் ஏந்திய செய்தியையும், திருமாலின் உதிரத்தை ஊற்றியதையும் அறியலாம்.

**அரியதரத்த மருந்திடு கங்குலென் றானை யஞ்சிற்**
**திரிய தரத்த மயில் பொருட்டா வரல் செய்கையாற்**
**சரியதரத்த நஞ்சேற்றுண்டபோது கலந்தமுதே**
**புரியதரத்த னஞ்சேர் புகலூரர்தம் பொன் வரைக்கே ! (64)**

பொன்னிறங்கொண்ட மலையில், கரிய நிறங்கொண்ட விஷத்தை தமது செந்நிறம் கொண்ட கையினால் எடுத்து உண்டபோது, அங்கு அதனை அமுதம்போல் ஆக்கிய, அழகிய உதடுகளையும், அன்னம்போன்ற நடையுமுடைய பார்வதி தேவியாருடன் சேர்ந்து புகலூரில் வாழுங் சிவனே ! எந்தலைவரே! சிங்கங்கள் விலங்கினங்களை அடித்துக் கொன்று அதன் இரத்தத்தை உறிஞ்சி உணவாக அருந்தும் கொடுமையான இருள் சூழ்ந்த காட்டுப்புதர்கள் இவை யெனப் பயம் கொண்ட யானைகள் இவ்விடத்திற்கு வாராது மறைந்து வேறிடம் போகும். இத்தகைய இடத்திற்கு மயில் போன்ற சாயலையுடைய இப்பெண்ணைத் தேடி வராதீர்.

அரி-சிங்கம்; கங்குல்-இருட்டு; ஆனை-யானை; அதரம்-உதடுகள்; அரி+அது+அரத்தம்+அருந்திடு; அரிய தரத்த மருந்திடு; திரி+அதர்+அத்த=திரியதரத்த அதர்-வழி, பாதை;

அத்த-தலைவனே;கரிய+தரத்த+நஞ்சு=கரிய தரத்த நஞ்சு கருமை நிறத்து ஆலகால விஷம். புரி+அதரத்து+சேர்- புரிய தரத்தனஞ:சேர்; அனம்சேர்- அன்னத்தைப்போன்ற நடையை யுடைய பார்வதி தேவியார் உடன் இருக்க; பொன்வரை- பொன்னாலான மலை. இது "களவியல் இரவுக் குறி தோழி", பின் சென்ற தலைவனின் வரவை விலக்கல் என்றது.

இரவுக்குறி பற்றி திருக்கோவையார் பாடல்களில்

"மழைக்குமிழி நாட்டம் புதைத் தன்ன
நள்ளிருளில் நாகம் நடுங்கச் சிங்கம்
வேட்டந்தரு சரிவாய்" - எனவும்,

"முழங் காரரிமுரண் வாரண வேட்டை செய்
மொய் யிருள்வாய் வழங்கா வதரின்"

எனவும் கூறப்பெற்றுள்ளதறிக:-

கரும்புற்ற செந்நெல் வயற்கமலேசர் கண்டார்க்கு மச்சம்
தரும்புற்றினிற்றிற் குடி கொண்டிருந்தாரது தானுமன்றி
விரும்புற்று மாசுணப் பூணணிந்தார் வெவ்விடமுண்டார்
சுரும்புற்ற கார்வரைத் தோகை பங்கான துணிவு கொண்டே

எனத் திருவாரூர் நான்மணி மாலை (35) கூறும். இறைவனார் பாம்பை அணிந்ததும், புற்றில் அமர்ந்ததும் விஷத்தை உண்டதும், தம் உடலில் பாதியாக உமாதேவியார் இருக்கிறார் என்கிற தைரியத்தினாலேயே யன்றி அவருக்கென ஏதும் துணிச்சல் கிடையாது எனப் பொருள் தருவதாகும்.

**வரைத்தவரால மராரெயின் மூன்று மடியச் செந்தீ**
**நிரைத்தவரால மராதித்திருமுனி நீருடன்வந்**
**திரைத்தவரால மராவதி காத வெழும் புகலூ**
**ருரைத்தவரால மராவிடடாட லுகந்தவரே !** **(65)**

மேருமலையை வில்லாக்கி விரோதிகளின் மூன்று மதில் களையும் நெருப்பினால் எரித்தவர். ஆல மரத்தினடியில்

தக்ஷிணாமூர்த்தியாக அமர்ந்தவர். விஷத்தையுடைய பாம்பானது தன்னுடைய விஷத்தை உமிழும்படியாக அதன் மீது ஏறி நடனம் செய்து களித்த திருமாலானவர், நீர் எழும்பி தேவருலகம் வரைத் தெரிக்கும்படியாக நீர்வழியே பிரால் மீன் உருவில் வந்து துதித்து நின்ற பெருமை மிக்க புகலூரின் கண் உறைபவர் எம்பெருமான்.

தவர்-வில், அமரார்-விரோதிகள், விரும்பாதவர்: எயில்-மதில், அரண்: ஆல்-ஆலமரம்; திருமுனி-தட்சிணாமூர்த்தி: அமர்தல்-விரும்புதல் வரால்-விரால் மீன்; அரா-காளிங்க மெனும் பாம்பு ஆடல் உகந்தவர்-நடனம் செய்து மகிழ்ந்தவர், இந்திரனின் நகரம்-அமராவதி; அவைக்களம்-சுதன்மை: உப்பரிகை-வைசயந்தம்; மாடம்-வசந்தம் என்பர்.

சிவபிரானைத் துதித்தமையால் தான் திருமாலுக்கு பாம்பின் மீது ஏறி நடனமாடும் திறன் கிடைத்தது என்பர். ஆலமரத்தினடியில் தக்ஷிணாமூர்த்தியாய் அமர்ந்து பாடம் சொன்ன விளக்கத்தை இந்நூலின் 59ம் படலில் மீண்டும் கண்டுதெளிக.

மச்சாவதாரம் எடுத்த திருமாலே வரால் மீனாக வருவதாகக் கூறப்பெற்றுள்ளதும் சிறப்பானதே! திருமால் பாம்பின் மீது ஆடியதைத் தனியாகவும் பின் விரால் மீன்கள் துள்ளுவதால் உண்டாகும். நீர்த்திவலைகள் இந்திரனின் அமராவதிப் பட்டினம் வரைக்கும் எழுந்து தெரித்தன என்று கொண்டாலும் சரியே- இது பாடபேதமன்று.

**உகந்தந்த வாமத்திடத்தே யொருத்தியை வைத்தொருத்தி**
**சுகந்தந்தவா முடியாள வைத்தோன் றொல்லை யாகமத்தி**
**னகந்தந்த வாரணத்தையன் பணி புகலூர னண்ணி**
**முகந்தந்தவா வெனக் காற்றா தொழிகை முறைமை**
**யன்றே! (66)**

மகிழ்ச்சியுடன் கூட பார்வதிதேவியை இடப்புறத்திலே வைத்து, மற்றொருத்தியாகிய கங்காதேவியை நடு

மணத்துடன் கூடிய சடாமுடியிலே இருக்க வைத்தவன், பழமையான ஆகம சாத்திரத்தின்படி பிரணவத்தின் முதன்மை யானவனான, யானை முகத்தினையுடைய விநாயகப் பெருமானால் வணங்கப்பெற்ற சிறப்பினையுடைய திருப்புகலூரில் உறைபனாகிய எமது இறைவனார், தாமே உவந்து வந்து எனக்கு தரிசனம் கொடுத்து அருளவேண்டு மென்ற எனது ஆசையை தணிக்காமல் நீங்குவது நியாயமல்ல;

உகந்து-மகிழ்ச்சியுடன்;வாமம்-இடப்பாகம்; தொல்லை-பழமை; சுகந்தம்-வாசனை; தவா-நீங்காத; அவா-ஆசை; வாரணத்தையன்-யானை முகத்தினையுடைய விநாயகர். சக்திப் பிரணவம், சிவப்பிரணவும் என்னும் பிரணவங்களின் கூட்டுறவால் தோன்றியதே யானை முகக் கடவுள். இதனை

"பிடியாத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு பவரிடர்
கடி கணபதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே"

எனும் திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகளின் தேவாரத் தினால் நன்கு உணரலாம். இப்பிரணவ வடிவினிடத்தே யிருந்து தோன்றியதே வேதாகமங்கள் என்பதை "மறையாதி யெழுத்தென்று கந்த பிரணவத்தின் உண்மை" எனக் கந்தர்கலி வெண்பா கூறும். சிவனார் கங்கையை சிரத்துச் சடையில் முடித்த கதையை வேறோர் இடத்தே காண்க.

"சல முகத்தாலவன் சடையிற் பாய்ந்திலேல்
தரணி எல்லாம் - பிலமுகத்தே புகப்பாய்ந்து
பெருங் கேடாம் சாழலோ"

என்பது திருவாசக வரிகள்.

முகந்தந்து-காட்சி தந்து விநாயகர் பிரணவ ஸ்வரூபமானவர், கல்வி கற்றல்-வேறேதும் காரியம் தொடங்கல் ஆகிய நேரங்களில் முதற் பூசை விநாயகருக்கே எனவே இவ்விநாயகர் ஆகமத்தின் அகந்தந்த நாயகர் ஆகிறார்.

**அன்றிருக்கைக்கும் முதலாய பூதத் தடவை நல்க**
**நின்றிருக் கைக்குத் திருக்கை தந்தாளினு நீண்முடிமேற்**
**சென்றிருக்கைக்குமக் கங்கைக்கு மேலென் கொல்**
**சிந்தையிலென்**
**வன் றிருக்கைக் குலைக்கும் புகலூரின் மகிழரசே ! (67)**

அண்டத்தின் தோற்றம் நிகழ்ந்தவக் காலத்தில் தன் கையில் இருந்த ஆயுதத்தைக் கொடுத்து வேதம் முதலான பூமி மற்றும் எல்லாப் பிரபஞ்சங்களையும் தோற்றுவிக்கக் காரணராயிருந்தவர், உமாதேவியாரின் இருப்பிடத்தைக் காட்டிலும் உயர்ந்த இடமாகிய நீண்ட சடாமுடியில் கங்காதேவியை இருக்கச்செய்த காரணத்தால் என் மனத்தில் உண்டாகிய கொடிய மாறுபாட்டை அழிக்கும்படியாக இத்திருப்புகலூர் என்னும் தலத்தில் எழுந்தருளி மகிழ்வுடன் இருக்கும் எம்பெருமானே !

இருக்கை-வேதம்; பூதத்து-பிரபஞ்சத்தினது; வன்றி ருக்கை-வன்+திருக்கை-கொடிய மாறுபாட்டை; குலைக்கும்-கெடுக்கும்; கு-பூமி; நீண்டமுடி-நீண்ட சடாமுடி; அன்று-உலகின் தோற்றக்காலத்து; நின்+திருக்கைக்கு+திருக்கை+ தந்தாள்-உன்னுடைய அழகிய கைகளுக்குத் தன்னுடை அழகிய கைகளைத் தந்தவன்-திருமணம் செய்துகொண்டு மனைவியானவள்; அடைவு-முறைமை என்றது- ஒன்றி லிருந்து ஒன்று உண்டாகும் முறைமை; அது தன் மாத்திரையில் பஞ்ச பூதங்கள் தோன்றும் முறைமை பற்றியது. இதனை 'நானா ஜீவ வாதக்கட்டளை' எனும் நூல்வழி அறியலாம்.

இறைவனார், உமாதேவியை விட உயர்ந்த இடத்தில் கங்கையை வைத்தது, மனத்தில் மாறுபாட்டை ஏற்படுத்தியது. அம்மாறுபாட்டின் காரணம் இன்னதிதுவென்று அறிவில் தோன்றச் செய்து மாறுபாட்டை நீக்கிய தலம் புகலூர் என்பது கருத்து.உமாதேவியை மனையாட்டி எனவும், கங்காதேவியை வைப்பாட்டி எனவும கூறுவர். மனையாட்டி கீழிருக்க வைப்பாட்டியை யன்றோ மேலாக வைத்தீர் என்பது.

**அரசமலங்கு தடந்தோறு நீலமு மம்புயமும்**
**விரசமலங்கு புனற்புகலூரரை மெய்ப்படவே**
**பிரசமலங்கு மலர்க்குழலா திலல பெற்ற திட்டுப்**
**பரசமலங்கு லவும் பவம் போந் தொழும் பத்தர்களே ! (68)**

*சிவனை வழிபடுகின்ற பக்தர்களே ! மீன்களுக்கெல்லாம் தலைமையான மீன் என்று சொல்லப்பெறுகின்ற விலாங்கு மீனும், நீலோற்பலம் மற்றும் தாமரை மலர்களும் ஒன்றை யொன்று நெருங்கி நிறைந்துள்ள நீர் நிலைகளும் வயல்களும் சூழ்ந்த புகலூரில் உறையும் எம் இறைவனாரை, உண்மையகத் தேன் நிறைந்த மலர்கள் கிடைக்கவில்லையே என்று வருத்தப் படாது கையிற் கிடைத்த ஏதேனும் ஒரு பச்சிலையைக் கொண்டு அருச்சித்து வழிபட்டாலே போதும் ஆணவத்தி னால் உண்டான பாவங்கள் எல்லாம் தொலைந்து விடும்.*

*அரசமலங்கு மீன்-மீன்களின் அரசனான விலாங்கு மீன், தடந்தோறும்-குளங்களிலெல்லாம்; விரச-ஒன்றையொன்று நெருக்கும்படி; மலங்கு-மீன் வகைகளில் ஒன்று இதனை (விலாங்கு மீன் என்பர்); மலங்குதல்-கலக்குதல்; மலங்கு-பாய்கின்ற; மெய்ப்பட-உண்மையாக; பிரச மலங்கு-பிரசம்+ அலங்கு-தேன் நிறைந்த; உழலாறு-வருத்தப்படாமல்: பரசு-துதித்தால்; நீலம்-கரு நெய்தல்; பவம்-பிறவித்துயர். மலம்-ஆணவ மலம்; ஆணவ மலமானது செம்பிற் களிம்பு போல அநாதியே உயிரைப் பற்றி நின்று பிறப்பினை மாறாது, கொள்ளி வட்டமும், காற்றாடியும் போலக் கொடுத்து வருதலின் 'மலவும், குலவும் பவம்' என்றார்.*

> *"யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை*
> *யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை*
> *யாவர்க்குமாம் உண்ணும்போது ஒருகைப்பிடி*
> *யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே" (252)*

*என்ற திருமூலரின் வாக்கு இறைவழிபாட்டை இதனினும் எளிதாக்குவதை உணர்க.*

**பத்தர தத்தி லறுகுக்கு முத்திப் பதங் கொடுக்கும்**
**பித்தரத்தத்தி லணங்குடையார் பெற்றமூருமையர்**
**புத்தரத் தத்தின் மலர்போல்பவர் புகலூரரொன்னார்**
**சுத்தரத் தத்திற் குளித் தொளிராநின்ற சூலத்தாரே!** (௬௨)

*பித்தர் எனும் பெயர்கொண்ட எம் இறைவனார் பாதியுடலில் பெண்ணெனும் பார்வதிதேவியையுடையவர், இளங்காளையின் மீதேறிச் செல்பவர், அடியார்கள் அருகம்புல்லினால் அருச்சித்தாலும் போதும் அவர்களுக்கு முத்தியைத் தருபவர், கையில் சூலத்தை ஏந்தி விரோதிகளைக் கொன்று அவர்களின் உடலிலிருந்து பொங்கிவரும் ரத்தத்தில் மூழ்கி எழுந்து புத்தம் புதிய செவ்வரத்தை மலரின் நிறத்தினராக இத்திருப்புகலூரில் ஒளிர்கின்றவர்.*

*பத்தர்-அடியார்கள்; அறுகு-அறுகம்புல்; பித்தர்- பித்தம் சிவனது நடனம் ஆகையால் அவனைப் பித்தர் என்பர்; அணங்கு-பெண்-பார்வதி; புத்து-புதிய; அத்தம்-கை; பாதி; பெற்றம்-காளைமாடு; ஒன்னார்-விரோதிகள்; சூலத்தவர்-கையில் சூலாயுதமேந்தியவர். பத்தர்+அத்தத்தில்+அறுகுக்கும்-பத்தரத்தில் அறுகுக்கும்; பித்தர்+அத்தத்தில்+அணங்குடையார்-பித்தரத்திலணங்குடையார்; புது+அரத்தத்தின்+மலர்போல்-புத்தரத்தின் மலர்போல்; சுத்த+இரத்தத்தில்-சுத்த ரத்தத்தில்.*

*இறைவன், அடியார்கள் அற்பப் புல்லைக் கொடுத்த போது அதனை ஏற்றுக்கொண்டு மிக அரியபொருளாகிய முத்தியைத் தரும் குணத்தினர் ஆதலினாலுங் கூட அவரைப் பித்தர் என்பர். ஒரு ரூபாயைவாங்கிக்கொண்டு கழுத்தில் இருக்கும் இரண்டு பவுன் எடையுள்ள தங்கச் சங்கிலியைக் கொடுப்பவனை என்னவென்று சொல்வது. சிவபெருமானின் பூசனைக்குறிய இலை வில்வம் இதனைப் போன்றே அருகம் புல்லுங்கூட இவர்தம் பூசனைக்குரியதாம். "தாளி அறுகினர் சந்தனச் சாந்தினர்" எனத் திருவாசகம் கூறும்.*

**சூலத்திருப்புக்குத் தெவ்வீழ் சுடலைத் துகளணிந்த**
**சீலத்திருப்புக்கு வான்போற்றுவவுமை செய்ய கண்டத்**
**தாலத்திருப் புக்குந் தென்புகலூர் பதி யானதற்கு**
**நீலத்திருப்புக்கு வாழ்கின்ற பாகத்து நீர்மைக்குமே ! (70)**

கையிலே சூலப்படையேந்தி விரோதிகளான தேவர்களைக் கொன்ற பின்னருங்கூட, அவர்களைத் தீயினால் சுட்டுச் சாம்பலாக்கிய, மயான பூமியிலிருந்து அவர்களின் சாம்பலை எடுத்து உடல் முழுவதும் பூசிக்கொண்டதாக ஒரு வரலாற்றினையுடையவரே! உமது சிவந்த கண்டத்தில் ஆலகால விஷம் இருப்பதாலும், நீல நிறத்தினையுடைய பார்வதிதேவியாரை இடப்பாகத்தே கொண்டமைக்காகவும் இவ்வழகிய திருப்புகலூரிலே வந்துறைகின்றமைக்காகவும், உப்புநீர் நிறைந்த கடல்சூழ்ந்த இப்பூவுலகினர் மட்டுமின்றி வானுலகினரும் கூட உம்மைப்போற்றி நிற்கின்றனர்.

திருப்பு-சுழலூதல்; சுடலை-மயானம்; துகள்-சாம்பல், பொடி; தூள் நீலத்திரு-பச்சை நிறப் பார்வதி. செய்ய-சிவந்த; புக்கு-புகுந்து; நீர்மை-உயர்வு;

ஆலகால விஷத்தை அருந்தாமலும், உமாதேவியை ஒருபாகமாகக் கொள்ளாமலும் விட்டிருப்பின், மண்ணுலகும் விண்ணுலகும் பாழாய்ப் போயிருக்கும். அதுபோலவே இறைவனார் இத்திருப்புகலூரிலே இருந்து அருள்செய்யா விடினும் முன்சொன்னது போலாகும் என்பது கருத்து. சிவரகஸ்ஸிய-உபதேச காண்டத்தில், திருமால் பிரமன் முதலாய தேவர்களைச் சூலாயுதத்தாற் குத்தியும், நெற்றிக் கண் தீயினால் எரித்துப் பின்னும்கூட அவர்தம் சாம்பலை எடுத்து உடல் முழுதும் பூசிக்கொண்டார் என்ற வரலாற்றைக் காணலாம். மேலும்,

"சவந்தாங்கு மயானத்துச் சாம்ப லென்பு
தலையோடு மயிர்கயிறு தரித்தான் தன்னைப்
பவந்தாங்கு பாசுபத வேடத்தானை"

என திருநாவுக்கரசரின் திருவீழிமிழலைத் தேவாரத்திலும் கண்டு தெளிக.

**மைக்குவளைக்குத் துயிலுக்கு மால்விடை முன்றொழுத**
**கைக்குவளைக்கும் வளைத்திவாருங் கனங்குழையீ**
**ரக்குவளைக் குழை யாகத்தார் காதரெட்டானை நின்ற**
**திக்குவளைக்கு மெயிற்புகலூரர்தந் தேர் வரினே. (71)**

பொன்னாலாய காதணிகளைஅணிந்த தோழிகளே! கருத்த நீலோத்பல மலரின் இதழ்களைப் போன்ற மை தீட்டிய நம் கண்கள் துயில்கொள்ள வேண்டியும், திருமாலாகிய காளை வாகனத்தின் மீதேறி வரும் நம் இறைவனாரைத் தொழுதும், அத்தொழுத கரங்களுக்கு வளையல்களைப் பெற வேண்டியும், கழுத்திலே ருத்ராட்ச மாலையும், மார்பிலும், காதுகளிலும் சங்கு மணி அணிந்தவரும், எட்டுயானைகள் நின்று சுமக்கும் இப் பூவுலகின் எட்டு திசைகளையும் வளைத்து நிற்கும் பொன்னாலாய மதில்களைச் சுற்றி, இப்புகலூரில் நம்மிறைவனார் ஏறிய தேர்வலம் வரும்போது, அத்தேரினைச் சுற்றி வளைத்துக்கொள்ள வாருங்கள்.

குவளை-குவளைமலர்; மை-கருத்த; துயில்-தூக்கம்; மால்விடை-திருமாலாகிய காளை வாகனம்; வளைக்கும்-வளையல்களைப் பெறவும்; கனம்-பொன்மயமான; அக்கு-ருத்ராட்ச மாலை; எட்டு+யானை-எட்டானை; வளைக்கும்-சூழ்ந்த; மால்-மயக்கம்; மதில்கள் பொன்னாலாயது என்றதும் எட்டுத் திக்கும் வளைத்து நின்றன என்றதும் மிகப் பெருங்கற்பனை என்க. திருப்புகலூர் ஆலயத்தின் திருவிழாவில் ஐந்தாம் நாள் இடப வாகனக் காட்சியும் (இன்றுமுதல் அவள் உறங்கினாலில்லை) திருத்தேரில் ஏறி எம்பெருமானார் உலாவருங் காட்சி, ஒன்பதாம் நாள் விழாவாகவும் நடத்தப்பெறுகிறது. மால் விடையேறி வந்து எனக்கு மால் கொடுத்தார் இன்று அம்மாலுக்கு விடை கொடுக்குமாறு அவர் அணிந்து வரும் மாலையைப் பெறுவேனாக என்றது சிறப்பு. சிவனின் காளை வாகனமாய் நின்றவை மூன்று. 1. திருமால் இது-மால்விடை; 2. நந்தி இது நந்தி விடை; 3. தருமம் இது, தருமவிடை என்பனவாகும். இப்பாடல் தலைவி கூற்றாய் அமைந்தது.

**தேரிரவிக்குமுற் காகளமான முட் சேவலில்லா**
**வூரிரவிக்குப் பகையாயின புகலூறைவர்**
**பேரிரவிக்கு நகப் பூண்டவர் கொன்றை பெய் வளையீர்**
**தாரிர விக்கும்படி யெங்ஙனீரித் தழு லெனக்கே ! (72)**

கொன்றை மலர்களைத் தொடுத்து கைகளில் வளையல்களாக அணிந்த தோழியர்களே! பூமியிலுள்ளோர் பார்த்து நகைக்கும்படி பிச்சையெடுத்தவர் நம் இறைவனார் மீது, தேரில் ஏறி சூரியன் வருவதை முன் கூட்டியே கூவித் தெரிவிக்கின்ற முள்போன்ற கால்விரல்களையுடைய சேவல்கள் இல்லாத நகரமும், இரவும், கரும்பு வில்லும் நமக்குப் பகைமையாயின. இப்படிப்பட்ட இறைவன் மீது நான் கொண்ட காதலால், எனக்குள் எழுந்த காமத்தீயை நீர் அவிக்கும் வழியைக் காட்டமாட்டீர்களோ! என்றாள் என்பது.

காகளம்-வரைவை அறிவிக்க ஒலிக்கப்பெறும் இசைக் கருவி-முரசு அல்ல-உலோகத்தகடு-இதனைச் சிறுத்தடிக் கோல் கொண்டு அடிப்பர். முட்சேவல்-முள்போன்ற விரல்களையுடைய சேவல்; இக்கு-கரும்பு வில்; பேர்+இரவு-பேரிரவு பெரிய பிச்சை; நக-சிரிக்கும்படி; தாரிர்-தோழிகள்; பூண்டவர்-மேற்கொண்டவர்; கொன்றை-கொன்றை மலர்களால் தொடுக்கப்பெற்ற மாலை; "மாலை இரத்தலின் விரவிய காமமிக்க கழிபடர்கிழவி" எனும் இலக்கண வகையதிப்பாடல்; இ-இந்த; கு-குவலயம்-பூவுலகம்;

இது நெருப்பினால் உண்டாகிய தீயன்று ஆதலால் இதனை நீர் கொண்டு அவித்தல் இயலாது எனவே, "நீர் இத்தழல் அவிக்கும்படி எங்ஙன்" என்றாள்-என்ற நயம் பாராட்டிற்குரியது. "பாணிக் கவித்தடங்காது வெங்காமப் படர் கனலே"- என அழகரந்தாதியில் (34) காண்க. எனவே அத்தலைவரிடமிருந்து அக்கொன்றை மாலையை வாங்கித் தந்தாலன்றி எனக்குள் எழுந்த இக்காமத்தீயை அவித்தல் இயலாது என்பது கருத்து. எனவே நீர் என்ற சொல் இருபொருள்பட நின்ற சிறப்புச் சொல்.

**என்னை யன்பா லடித்தொண்டு கொண்டோன் புகலூரனில்லா**
**வன்னை யன்பால னருந்தமிழ்ப்பாவலனறு முகத்தோன்**
**றன்னை யன்பாலனங் காள நின்றோனடி தாழ்குலத்துப்**
**பின்னையன் பாலரி தாமெளிதா மன்பர் பேதமைக்கே ! (73)**

திருப்புகலூரில் உறையும் எம் இறைவனார், தம் அன்பினால் என்னைத் தம் திருவடிக்கே அடிமையாகக் கொண்டவர். தாயில்லாப்பிள்ளையாகிய திருஞானசம்பந்த மூர்த்திகளால் பாடப்பெற்ற பாமாலைகளையுடையவன், ஆறுமுகத்தோனாகிய சுப்பிரமணியனுக்குத் தகப்பனானவர், அணங்கெனும் உமாதேவிக்குத் தன் இடப்பாகத்தைக் கொடுத்தவன், தாழ்ந்த குலத்தவராகிய இடையர் குலத்தவரிடையே வளர்ந்தவனும் இலக்குமிதேவியின் கணவனுமாகிய திருமாலுக்குக் காணக்கிடைக்காதவன், ஆனால் அடியார்களின் அறியாமைக்கு அவன மிக எளிதாகக் காணக்கிடைப்பவன்.

இல்லாவன்னையன்-இல்லா+அன்னை+அய்யன்; பாலன்+அருந்தமிழ்+பாவலன்-பாலனருந் தமிழ்பாவலன்; பின்னைக்கு ஐயன்-பின்னையன்-மூதேவிக்குப் பின் பிறந்த இலக்குமியின் கணவன்.தாயின்றி பாலுக்குக் கழுத பாலகன் திருஞான சம்பந்தன், மூதேவிக்குப் பின்னர் பிறந்தமையால் சீதேவியாகிய இலக்குமியை பின்னை என்பர். (நப்பின்னை) எனவே பின்னையன் அய்யனாகிய திருமால் எனப் பொருளாயிற்று; பேதமை-அறியாமை; அருந்தமிழ்ப்பா-தேவாரப் பாடல்கள்; இல்லறத்தார்க்கு அன்பே முதன்மை என்பதால், இறைவனுக்கு மகனையும் மனைவியையும் இங்கு குறிப்பிட்டுக் கூறப்பெற்றது. பின்னையன்+பால்+அரிதாம்- பின்னயைன் பாலரிதாம்; இல்லா+அன்னையன்-இல்லா வன்னையன் தாயில்லாதவன்; இதனை பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணத்தின் "தந்தை தாய் பிறறின்றி வருகின்ற தனிக்கூலி மைந்தனார். தந்தையொடு தாயின்றித் தனிக்கூலியாளக, வந்த வெனக்கு" எனும் வரிகள் தெளிவாகக் கூறுகின்றன.

**பேதம்பலவன் பிதாவும் பிதாமகனும் பழமை**
**யோதம்பலவன் புகலூர் மருங்கி னொளி சிறந்த**
**சூதம்பலவன் புயரி சோலை வல்லி சுடர்க்குழை மேற்**
**போதம்பலவன் பகைகாணின் கொங்கை புவிதனக்கே. (74)**

*பலவகையான பேதங்களையுடையவனும்; பிர்ம னாலும், அவனது தந்தையாகிய மகாவிஷ்ணுவாலும் பழமையான புராணங்களினாலும் புகழ்ந்து சொல்லப்பெற்ற அம்பலவாணருறையும் திருப்புகலூரென்னும் தலத்திற் கருகில், மிகுதியாய் இருக்கின்ற மாமரங்களும், பலா மரங்களும், உயரமாக வளர்ந்திருக்கப் பெற்ற சோலையில் நிற்கின்ற, கொடிபோலும் இடையுடைய பெண்ணே! ஒளிமிக்க உன் காதணிகளின் வரை நீண்டு பரந்த உன் விழிகளை விட உன்னுடைய இரு கொங்கைகளே உலகத்தார்க்குப் பகையாகி நின்றன.*

*1) இறைவன், ஆறுவகை சமயத்தவர்க்கும் அவரவர் தம் கோட்பாடுகளுக்குத் தக்கவாறு உருவம் கொண்டவராய் நின்றமையால் "பேதம்பல" எனப்பெற்றது.*

*2) தலைவனைக் கண்ட தலைவி நாணம் கொண்டு தன் தலையைத் தாழ்த்திக் கொண்டபோது, அவளது கண்ணைக் காண இயலாது அவளது இரு கொங்கைகளை மட்டுமே தலைவன் கண்டான் என்பது- இது தலைவன் கூற்றாய் அமைந்த பாடல்.*

*சூதம்-மாமரம்; பல-பலா மரம்; குறிஞ்சித் திணைக்குரிய பலா மரத்தினை, மருதத் திணைக்குரிய மாமரச் சோலையில் இருப்பதாகக் கூறியது. "திணை மயக்கம்" என்பர். இவ்வாறு திணை மயக்கம் வராதிருக்கப் பொருள் கொள்ள வேண்டின் "சூதம் பல" வென்பதை "பல சூதம்" எனப் பிரித்துப் பொருள் கொள்ள வேணும். அப்போது அனேக-அதிகமான மாமரங்கள் எனப் பொருளாகி திணை மயக்கம் அற்றதாகிடும் என அறிக.*

ஒரு ஊருக்குப் போக ஆறு வழிகள் உண்டு அதில் இதுவே நல்ல வழி என்போர் மலையைப் பார்த்துக் குரைக்கும் நாயைப் போன்றவர்களே எனும் பொருள்பட திருமந்திரம் *(1558)* கூறும் "ஒன்றது பேரூர் வழியாறதற்குள என்றதே போல இரு முச்சமயமும் நன்றிது தீதிது வென்றுறை யாளர்கள் குன்றுகுரைத் தெழு நாயை யொத்தவர்களே" என்பது பாடல்.

**தனகன கற்பகஞ் சங்கு சிந்தாமணி தாமரையே**
**யுன கனகக்கைக ளென்றும் பிறரை யுரைத்திளைத்தே**
**னனகனகத்தும் புகலூரிடத்து மமர்ந்தவனே**
**நினகனகத் தும்பை யிட்டா ரொடென்றென்னை வைப்பதே ! (75)**

அன்புள்ளம் கொண்டு, பிறர்க்கு சிறிதும் ஈயாத குணம் கொண்ட கீழ்த்தரமானவர்களையடைந்து, அவர்களின் மனம் மகிழும்படி அவர்களைக் குபேரனே! கர்ணனே! கற்பகத் தருவே! சங்கநிதியே! பதும நிதியே! உமது கைகள் பிறர்க்குக் கொடுத்துச் சிவந்து பொன்போல் பிரகாசிக்கின்றன! எனப் பலவாறு புகழ்ந்து கூறியும் அவர்கள் சிறிதளவும் பொன் கொடுத்தாரில்லை; ஆதலால், என்மனம் மிகவும் வருந்தியது. பரிசுத்தமான கயிலை மலையிலும், திருப்புகலூரிலும் எழுந்தருளியிருப்பனே! நீர் மனம் மகிழும்படி தும்பை மலர்களைக் கொண்டு அருச்சித்த அடியார்களுடன் கூட என்னையும் சமமாக வைப்பது எந்நாளோ !

தன-தனத்தையுடைய குபேரன்; கன-கர்ணன்; கனகக்கை-பொன்போல் சிவந்த கைகள்; உன்+கனக+கை-உனகனகக்கை; இளைத்தேன்-வருந்தினேன்; அனக-பரிசுத்த மான; நின்+அக+நக-நின கனக; உன் மனம் மகிழும்படி; அகம்-அகன் ஆனது இறுதிப் போலி; சுந்தரமூர்த்தி சுவாமிகளின் புகலூர்ப்பதிகம்-கொல்லிப்பண் பதிகப்பாடல்கள் பத்தும் இவ்விடத்து நினைவு கூறத்தக்கவையாகும்.

கர்ணன்-கன்னன்-கன ஆனது தொகுத்தல் விகாரம்; இந்நூலின் இரண்டாம் பாடலில் பிறர்க்கேதும் கொடுக்க தோரைப் புகழ்ந்து பாடுஞ் செயல் "பாறைப் பிளவினிற் பாலை ஊற்றிய தொக்கும்" என்ற செய்தியை மீள நினைவிற் கொள்க. தகுதி இல்லாதோரை பெருமையாகக் கூறிப் புகழ்ந்தும் கூட அவர் ஏதும் கொடுத்தாரில்லை எனும் செய்தி பின்னும் பாடல்கள் பலவற்றிலும் வருவது காண்க.

**வைப்போராரிக்குமழல் போன் மென வந்தென் வன்பிறப்பை**
**நைப்போராரிக்கு நகையொழித் தோரற்றை நாள் விசயன்**
**கைப்போராரிக்குக் கமுகோடிகல் புகலூரார் கருப்**
**பைப்போராரிக்குத் தசவவதாரம் படைத்தவரே ! (76)**

கரும்பும், பாக்கு மரங்களும், பின்னிப் பிணைந்து வளரும் சிறப்பினையுடைய திருப்புகலூரில் வாழும் இறைவனார், வைக்கோர்ப் போரை எரித்தழிக்கும் தீயைப் போல எனது பிறவிப் பிணியை நீக்கிடுவார். சூரியனின் பற்களை ஒழித்தவர், அன்றொருநாள் அருச்சுனனுடன் விற்போர் செய்தவர், கருப்பமாகியப் பையைப் போர்த்த திருமாலை பத்து அவதாரங்கள் எடுக்கும்படிச் செய்தவர்.

வை+போர்+அரிக்கும்+அழல்-வைப்போராரிக்குமழல்; பிறப்பை நைப்போர்-பிறவிப் பிணியயை நீக்குபவர் நகை ஒழித்தோர்-சிரிக்கவான பற்களை ஒழித்தவர். விசயன்+ கைப்போரர்+இக்கு+கமுகு+ஒடு+இகல்-விசயன் கைப்போரேரிக்குக் கமுகு கோடிகல்; வை-வைக்கோல்; அரிக்கும்-எரிக்கும்; நைத்தல்-அழித்தல்; அற்றைநாள்-முன்னொரு காலத்தில்; விசயன்-அருச்சுனன்; இக்கு-கரும்பு; கமுகு-பாக்குமரம்; இகல்-இணைய, பிணைந்து;

சூரியனின் பல்லை உகுத்த செய்தியை திருக்கோவை(4) பகல் குன்றப் "பல்லுக்குத்தோன்" எனவும்; "எச்சன் நினைத்தலை கொண்டார், பகன் கண் கொண்டார்; இரவிகளிலொருவன் பல் லிறுக் கொண்டான்" என திருநாவுக்கரசரும் கூறுவர்.

பிறப்பின் வினை தொலைந்த பின் பக்குவம் நோக்கிக் கதியளிப்பவர் சிவபெருமான்- சோதிப்பதில் சுகங்காணுபவர்- சிறுத்தொண்டர் புராணம் காண்க-ஆதலின் இக்கும் கமுகும் இணைதலைக் கூறியதன் காரணம் இறையடியார்களாகிய இக்கோடு கூட கமுகொத்த என்னையும் இணைத் தருள்க என வேண்டுவதாகக் கொள்ளின் சிறப்பாகும். "பூவுடன் சேர்த்து நாரையும் மணக்கச் செய்" என்றது.

**படையிலங்கைக் குரங்கைப் படையாகப் படைத்துவெற்றி**
**யமை யிலங்கைக்குலஞ் செற்றவனென்றறி யாமலந்த**
**விடையிலங்கைக்கு மரிதேடிய புகலூர ரென்றன்**
**கிடையிலங் கைக்குயிர் மாறாமுன வந்து கிடைப்பவரே ! (77)**

ஆயுதங்கள் ஏதுமில்லாத அழகிய கைகளையுடைய குரங்கினங்களைப் படையாகக் கொண்டு இலங்கை இனத்தவராகிய அரக்கர்களை அழித்தவன் என்று தெரியாமல், இடையர்கள், வீடுதோறும் அவ்விஷ்ணுவை வெறுத்தனர், இப்படிப்பட்ட விஷ்ணுவால் தேடப்பட்ட புகலூரிறைவன், நான், நடையிழந்து, படுக்கையிற் கிடந்து, சேத்துமத்தினால் துன்புறும் வேளையில், என்னுயிர் பிரியும் முன்னதாக எழுந்தருளி எனக்குக் காட்சி தந்து முத்தி அளித்திடுவார்.

அங்கை-அழகியகை; குரங்கினமாக இருந்தபோதும் அவைகளின் கைகள் மனிதர்களின் கைகளைப் போல் இருந்தமையால் அழகிய கைகள் என்றார். ஐ-மிடறில் ஊறும் கோழை; விடை+யிலங்+கைக்கும்-இடையர் வீடுகள் தோறும் வெறுப்பர்; இராமவதாரை காலத்தில், செய்த பெருஞ் செயல்களின் திறன் அறியாத இடையர் குலத்தவர், தற்போது கிருஷ்ணாவதார காலத்தில், வீடுகள் தோறும் சென்று வெண்ணெயைத் திருடித் தின்ற காரணத்தால் வெறுத்தனர் என்பது

"சான்றே பேருரலால் உறிதொறு
மெட்டாத் தயிருடன் நறு நெய் பாலருந்தி
ஆன்றதாய் கண்டு வடத்தினிற் பிணிப்ப
அணியுர லுடனிருந் தழு தான்"

என வில்லி பாரதத்தின் இராசசூயயாக சருக்கத்தில் கூறப் பெறுவதை நோக்குக.

இலங்கையில் அரக்கர் குலத்தவர் தவிர வேறெவரும் இல்லை என்பதால், அரக்கர்களை இலங்கைக் குலத்தவர் என்றார். இல்லம்-இலம் ஆனது தொகுத்தல் விகாரம்;

"புலனைந்தும் பொறி கலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட்டைம் மேலுந்தி அலமந்த
போதாக அஞ்சேலென்றருள் செய்வான்"

என்பது சம்பந்தர் தேவாரம்.

**கிடைப்பரவைக்கும் பதினாலுலகிற்குங் கேசவற்கும்**
**படைப்பரவைக்கு மற்றியாவைக்குந் தோற்றம் வன்பாதலத்துப்**
**புடைப்பரவைக் குறித்தாடும் பிரான் புகலூரன்ன**
**நடைப் பரவைக்குத் திருத்தூது சென்ற நளினத்திலே ! (78)**

பரந்து கிடக்கும் கடல்வாழ் உயிர்களுக்கும், பதினான்கு உலகத்தில் உள்ளவர்களுக்கும், திருமாலுக்கும், உயிர்களைத் தோற்றுவிக்கும் தொழினினையுடைய பிர்மதேவனுக்கும், அவனுடைய கூட்டத்தினருக்கும், பாதாள லோகத்தில், புடைத்த படத்தினையுடைய ஆதிசேஷன் எனும் பதஞ்சலி முனிவருக்கும் காட்சி கிடைக்கும்படியாக. நடனமாடிய சிவனார், திருப்புகலூரில் உறைபவர். அழகிய தாமரை போன்ற திருவடிகளால் நடந்து, அன்னத்தைப் போன்ற நடையினையுடைய, பரவை நாச்சியார் பொருட்டு சுந்தரமூர்த்தியிடத்து தூதுசென்ற பெருமானுவிவரே !

கிடை-பரந்து விரிந்து; பரவை-கடல்; கேசவன்-திருமால்; பரவைக்கு-பரவை நாச்சியாருக்காக; நளினத்திலே-தாமரை போன்ற திருவடிகளிலே; புடைப்பு+அரவை+குறித்து-புடைப்பரவைக் குறித்து என்பது படங்களின் புடைப் பினையுடைய ஆதிசேடனாகிய பதஞ்சலி முனிவரின் பொருட்டு-அவர் காணும்படி-ஆடும்பிரான் எனப் பொரு ளாயிற்று. "பதஞ்சலிக் கருளிய பரம நானக" என்பது திருவாசகம்.

முதலில் சுந்தரமூர்த்திக்காகத்தான் பரவைநாச்சி யாரிடம் தூது சென்றார் ஆயினும் அப்பரவை நாச்சியாரின் கருத்தை ஏற்று அதனைச் சுந்தரரிடம் தெரிவிப்பதற்காக வேண்டி-பரவையாரிடமிருந்து நடந்தமையால் பரவைக்காக தூது சென்றவரென்றார். இதுவன்றி பரவையாரைச் சம்மதிக்கச் செய்ய வேண்டி தூதாகச் சென்றார் எனினும் பொருந்தும். "பாதஞ்சிவக்கப் பசுந்தமிழ் வேண்டிப் பரவைதன் பாற் றூதன்று போனவர்" என்பது திருவாரூர்க் கோவை கூறும் செய்தி.

**நளிநகத் தாமரைத் தாதையுமொக்கு நகுதலை கொய்**
**யொளிநகத்தாமரைக் கைப்புகலூரை யூருகின்ற**
**நெளிநகத்தாமரை வேள்விக்கு நீத்ததென் னீலவண்ணக்**
**கிளிநகத்தாமரை மாத்திரைக்கே தலை கெட்டனரே ! (79)**

குளிர்ச்சி பொருந்திய மலையிடத்தையுடைய சிவனார், பிரமனும் தமக்கொப்பரே வென்று சொல்லுதற்கு இடமாயிருந்த, அப்பிரமனது பிரகாச மிக்க நடுத்தலையை சேதித்த, காந்தியுடைய நகத்தோடு கூடிய கமலக்கையை யுடைய திருப்புகலூருறையிறைவரை, ஊர்ந்து செல்வதும், நெளியும் இயற்கையுடையதுமான நாகத்தை மாலையாக யுடையவரான சிவனை, தக்கன், தன் யாகத்தினின்றும் நீக்கிட, நீலநிறத்தினையுடைய கிளி போன்ற மொழியினையுடைய வளாகிய பார்வதி தேவியார் இதுகண்டு நகைக்க, தக்கன் முதலானோர் அரைக்கண நேரத்தில் தலையிற்றழிந்தனர்.

நளி-குளிர்சி; தாதை-பிரமன்; கொய்-துண்டித்த; நகத்தாமரை-மலையிடத்தை உடையவன், நாகத்தை மாலையாகயுடையவன்; நக-சிரிக்க; நாகம் என்பது நகம் எனக் குறுகியது எதுகை காரணமாக; அரை மாத்திரை-அரை நொடி நேரத்தில். சிவனுக்கும் பிரமனுக்கும் ஐந்து தலைகளே இருந்தன. இதில் நடுத்தலை இருவருக்குமே பிரகாசமாய் இருக்கும். தன்னை யொத்ததே பிரமனும் இருப்பது கண்டு பொறுத்துக் கொள்ள முடியாத சிவன், பிரமனின் நடுத்தலையை தன் நகத்தினார்க் கிள்ளி எடுத்தார் என்பது:

தக்கன் நடத்திய யாகத்திற்கு சிவன் அழைக்கப் பெறவில்லை. இதைக் கண்டு பார்வதிதேவியார் நகைத்தாள். இதனால் ஆத்திரமடைந்த சிவன் அத்தக்கன் முதலான வர்களை அழித்தான் என்பது. வீரபத்திரன், சிவனின் ஆணைப்படி தக்கன் முதலானோரை அழித்தது, தக்கனுக்கு ஆட்டுத்தலை வந்தது, பின் இறந்தவர்கள் அனைவரையும் உயிர்பெற்று எழச்செய்த செய்திகளை, தேவாரம், திருவாசகம், கந்தபுராணம், லிங்க புராணம் ஆகியவற்றில் காணலாம். கூர்ம புராணத்துள்ளும் இக்கதை உள்ளது.

**கெட்டவிருப்பு மனமே யுனக்கொன்று கேண் மடவார்**
**துட்டவிருப்பு மெய்யென்று கொள்ளாது சுடர்ப் பவளம்**
**விட்டவிருப்பு வளை புகலூரரை மேவு நமக்**
**கிட்டவிருப்புச் சிவலோக மாக்குவ ரிப்பொழுதே ! (80)**

கெட்ட இரும்பைப் போன்று உருகாத என் மனமே! உனக்கொன்று சொல்கிறேன் கேள் ! பெண்களிடத்தே ஏற்படுகின்ற காம இச்சையை உண்மையென்று கொள் ளாதே! அதனை நீக்கிவிட்டு சுடர்விட்டு ஒளி வீசுகின்ற நற்பவளத்தை யுடையதும், உப்பு நீரையுடையதுமான கடல் சூழ்ந்த திருப்புகலூரானையே துணையென்று வந்தடை வாயாக. நமதிறைவர் இந்த நொடியிலேயே நமக்கு சிவலோக பதவியை அருள்வார்.

கெட்டவிருப்பு-கசடுகள் நிறைந்த இரும்பு; மடவார்-இளம்பெண்கள் துட்டவிருப்பு-கெட்ட ஆசை; சுடர்ப் பவளம்-ஒளி வீசுகின்ற பவளங்கள்; உப்பு வளை- உப்பு நீர் சூழ்ந்த; கடல் சூழ்ந்த; ஆகுபெயர்;

நல்ல இரும்பு உருகும் தன்மையுடையது. பலவித அழுக்குகளும், மண் முதலானதும் கலந்துள்ள இரும்பை எவ்வளவு காய்ச்சினாலும் உருகாது.

இறைவழிபாட்டிற்கு முதன்மையானது ஆசையை நீக்குதல், அதிலும் கெடுதலைத் தரக்கூடிய பெண்ணாசையை நீக்குதல், எனவே காமத்தை அகற்றிவிட்டு வாருங்கள் என்றார்.

ஆக்குவாரிப்பொழுதே என்ற எதிர்காலச் சொற்களி னால் உறுதித் தன்மையைக் காட்டினார். இருப்பு மனம்-வலித்தல் விகாரம்; இப்பொழுதே-ஏகாரம் உறுதியைக் காட்டியது.

**பொழுதுகத்தும் பெரிதானதிரா வென்றன் பூவை கொன்றைக்**
**கழுதுகத்தும்பைச் சருகுங்கொடா னைய மேற்குமையன்**
**கழுதுகத்துஞ்சுடு காட்டகத்தாடி கபாலி யென்னும்**
**பழுதுகத்துள்ள வற்கோ புகலூரைப் பதியென்ரே ! (81)**

கலியுகத்தில் பகற்பொழுதினைவிட இரவுப்பொழுது அதிகமாய்விட்டது போலும் என்று எண்ணும்படியாக எனது மகள் இரவு முழுதும் தனக்குக் கொன்றை மாலையைத் தரும்படி இறைவனை வேண்டி அழுதுநின்றாள், ஆனால் அவனோ, காய்ந்து சருகாய்ப் போன தும்பை மாலையைக் கூடத்தரவில்லை, கையிலே மண்டையோட்டினை ஏந்தி ஊர்ச்சுற்றி பிச்சையெடுப்பவன், சுடுகாட்டிலே பேய் பிசாசுகளுடன் சேர்ந்து கூத்தாடுபவன் ஆக இப்படிப்பட்ட கெட்டபெயரை உடையவன் இருக்கும் ஊரைத் திருப் புகலூர் என்று கூறுகிறார்களே !

என்பூவை-என் மகளை; கொன்றைக்கு-கொன்றை மாலைக்கு காதலை ஏற்றதற்கு கடையாளமாகத் தருவது.

கழுதுகத்தும்-பேய் பிசாசுகள்; கபாலி-தலையோட்டை ஏந்துபவன்; பழுதுகத்து-குற்றமுடைய பெயருடையவன். இப்பாடல் நிந்தாஸ் துதி எனும் "வஞ்சப் புகழ்ச்சி அணி" வகையைச் சார்ந்தது. தாமடைந்த துன்பம் நீங்க வேண்டி அடைக்கலமாகப் புகும் ஊர்தான் புகலூர், ஆனால் எதுவுங் கொடாத உலோபியும், பிச்சைக்காரனும் சுடுகாட்டில் பேய் பிசாசுகளுடன் கூத்தாடுபவனும் இருக்கும் ஊரைப் போய் புகலூர் என்றார்களே! என்ற கருத்துடன் அமைவது! இது செவிலி கூற்றாய் அமைந்த பாடல்.

இந்நூலாசிரியரான நெற்குன்ற வானரே தனக்குப் புகலிடமாகக் கொண்டணைந்தது இப்புகலூரரையே என்பதை அறிக. "பூம்புகலூர் வந்தணைந்தார் பொய்ப் பாசம் போக்குவார்" (திருநாவுக்கரசர் புராண-412)

**பதியை யன்றானு மரியம் பணிபுகலூரன் பண்டை**
**விதியை யன்றா நகு சென்னிகொய்தோன் செய்ய**
**வேணியின்மே**
**னதியை யன்றாடு மமுதத்து முன்வந்து நாளுமிந்த**
**மதியை யன்றாயி னெத்தெய்வத்தை யான் றொழ**
**மற்றிலையே! (82)**

மருதநிலத்திற்குரிய மக்களின் இறைவனாகிய இந்திரனோடு கூட திருமாலும் வந்துவணங்கும்படியான பெருமை மிகு இறைவன் இப்புகலூரில் உறைபவன். முன்னொரு நாளில் விதியை நிர்ணயிப்பவனான பிர்மாவின் ஒளிமிக்க ஒரு தலையை வெட்டியவன். இத்திருப்புகலூரில் உள்ள இறைவனாரின் தலைமை முடியில் உள்ள சந்திரன், முன்னம் திருப்பாற்கடலிலிருந்து அமுதம் தோன்றுவதற்கும் முன்னதாக தோன்றியவன் பின்னர் சிவனாரின் சடைமுடியில் உள்ள கங்கைநதியிலும் மூழ்கி வந்து நிற்பவன், எனவே இந்த சந்திரன் தானே வணங்கப் பெற வேண்டிய பெருந் தெய்வமேயன்றி வேறு தெய்வத்தை ஏன் வணங்கவேண்டும? வணங்கேன் !

விதியை-பிர்மனை, நகுசென்னி-ஒளிமிக்க தலை; வேணி-சடை, முடி; யான்றொழ-நான் வணங்குவது? பதி+ஐயன்+தானும்+அரியும்-பதியயைன்றானுமரியும். நதியை+அன்று+ஆடு-நதியையன்றாடு; மதியை+அன்று+ ஆயின - மதியையன்றாயின; மூன்றாம் பிறை கண்டு வணங்கல் என்பது சைவ நெறியாளர் தம் சிறப்பு வழிபாடுகளில் ஒன்று இது இறைவனாரின் திருமுடி கண்டு வணங்கியதற்கொப்பாம் என்பர்.

கூர்ம புராணத்து பலியிரந்த அத்தியாயச் செயதி யின்படி, தம்மிற் சிறந்தோர் யாவர் எனப்பூசல் கொண்ட பிரமனும் திருமாலும், சிவனார் வந்து உங்களிற் சிறந்தோன் யாமே எனக் கூறியதை ஏற்கா நின்றபோது, வைரவக் கடவுள் பிரமனின் ஐந்து தலைகளில் ஒன்றை தம் நகத்தாற் கிள்ளி யெடுத்தான் எனவும், பின்னர் பலகோடி சூரியன்களின் ஒளியினை ஒத்தத் தம் திருவடியினைக் காட்டி அருள் செய்தார் எனவும் அறியலாம்.

**மற்றிலை யாவி தளரும்பொழுது முன் வந்து நிற்பார்**
**நற்றிலை யாடக மன்றுடையாரன்றி நாமவரைப்**
**புற்றிலையா புகலூரிலையா வெனப் போற்றி யின்றே**
**சற்றிலை யாயினுந் தூவு நெஞ்சே பிணைச் சாவிலையே. (83)**

உடல் தளர்ந்து, உயிர் வருந்துங் காலத்தில், மேன்மை மிக்க, தில்லைக் கனகசபையையுடைய நடேசப் பெருமானன்றி வேறெவருந்துணையாக வந்து நிற்கப் போவதில்லை, ஆதலால் அச்சிவனாரை புற்றை இடமாகக் கொண்டவரே! என்றும் புகலூரை இடமாகக் கொண்டவரே எனவும் சிறிது பச்சிலைகளைக் கொண்டாவது இன்றே துதித்து வணங்கிடுவோமெனில் சாவென்னும் துன்பமே இல்லாது போகும்.

மற்றிலை-வேறு ஆதரவு இல்லை, நல்ல+தில்லை- நற்றிலை; சிதம்பர கனகசபை; புற்றில்+ஐய-புற்றிலையா- சற்று+இலை-சற்றிலை; பவன்-எல்லாவற்றையும் தோற்றுவிப்

பவன். "யாவர்க்குமாம் ஒரு பச்சிலை" என அறுபத்து எட்டாம் பாடலிற் கூறப்பெற்றுள்ள செய்தியை மீண்டும் நினைவிற் கொள்க. சாவிலை-சாவு+இல்லை. மரணமென்பதில்லை.

வீமநாத பண்டிதர் இயற்றியுள்ள கடம்பவனப் புராணத்தில் (தருமநெறி வெளியீடு-1978) பஞ்சாட்சரத்தின் பெருமை, உத்திராட்சத்தின்-முகங்கள் வகைகள்-அணிவதன் பலன்-பக்கம் 145இல் ஈசனாரின் உயரம் இருபது லட்சம் யோசனை அளவு. அவர் நடனமாடும் பொன்மன்றத்தின்-விமானத்தின் உயரம் ஒன்றரைக்கோடி யோசனை தூர அளவு எனக்கூறப் பெற்றுள்ளது. இதன் 384ம் பாடலில் "திருமால் புருஷ வடிவில் உள்ள தேவி" எனக் கூறப்பெற்றுள்ளது. பிரதோஷ விரத மகிமை பற்றியும் கூறப்பெற்றுள்ளது.

மக்கள் யாக்கையைப் பெற்றதே இறைவனை அறிந்து அருச்சித்துப் பிறப்பினின்று நீங்குதற் பொருட்டேயாம்.

"பாரிடை யுதித்திடும் பாரைச் சூழ்தரு
நீரிடை யுதித்திடு நெருப்பில் வாயுவிற்
சீருடை விசும்பிடை சேரு மன்னவைக்
கோரிடை நிலையென வுரைக்கற் பாலதோ"!

பிறந்திடு முன்செலும் பிறந்த பின்னர் மெய்
துறந்திடுஞ் சிலபகலிருந்து துஞ்சுமாற்
சிறந்திடு காளையிற் றேயு மூப்பினில்
இறந்திடு மதன் பரிசியம்ப லாகுமோ

எனும் கந்தபுராணச் செய்யுட்களின் மூலம் இதனை நன்கு உணர்தற்கியலும்.

**சாவிலையாக வக்காமனைச் செற்ற தழற் கண்ணனே**
**மூவிலையாகவ வேற்படையாய் முதல்வா கமலப்**
**பூவிலையாக வண்வண்டுகள் பூசலிடும் புகலூர்க்**
**கோவிலையாக வல வழும் பேதை நின் கொன்றை**
**யென்றே! (84)**

அழிவு என்பதாக ஒன்று ஏற்படாவண்ணம் காமனை எரித்த தீக்கண்ணனே! போருக்குரிய ஆயுதமாகிய மூன்று இலைகளைப் போன்ற வடிவினதான சூலாயுதத்தை யுடையவனே! முத்தேவர்களுக்கும் முதல்வனே! தாமரைப் பூக்களில் வண்டுகள் ரீங்கார ஓசையிடும் வளமை மிக்க புகலூர்க் கோயிலில் எழுந்தருளியுள்ள எம்மிறைவனாரே! உம்முடைய கொன்றை மாலையே வேண்டுமென்று, என்னுடைய பெண் பேதைபோல கவலை கொண்டு அழுகின்றாளே !

சாவிலையாக-உயிர்போகா வண்ணம்; பூசல்-ஓசை; மூவிலை-மூன்று இலைகளைப் போல, வேற்படை-சூலாயுதம்; கவல-துன்பப்பட்டு; கோவிலையாக வலவழும்-கோவில்+ஐயா+கவல+அழும்; கொன்றை யென்று- கொன்றை மாலை வேண்டுமென்று; தழற்கண்-தீக்கண் எனும் நெற்றிக் கண்; ஆகவம்-போர்; சாவிலையாக வக் காமனைச் செற்ற-என்று காமனை எரித்தார் என்பது உண்மை என்றாலும் அவனுக்கு சாவு என்பது இல்லை என ஆகிடச் செய்தரு ளினமையைக் குறிக்கும். துன்புற்று அழும் இப்பெண்ணை கருணை உள்ளம் கொண்டு அவள் வேண்டுவது போல அக் கொன்றை மாலையை இவளுக்களித்து இவளது கவலையை மாற்றுவாயாகவென செவிலித்தாய் வேண்டுவதாக அமைந்தது இப்பாடல்.

**என்றையலங்கலை கொள்வானென் னென்று சென்றேத்தி நின்பொற்**
**கொன்றை யலங்கலை நல்கெனவாருங் குறிக்கவொட்டா**
**வொன்றையலங்கலை நான்மறையோர் பெற வுண்மை சொன்ன**
**நன்றையலங்கலை நீர்ப் புகலூரனை நாம் பணிந்தே ! (85)**

கருத்திற்கெட்டாத அரிய பொருளை, சனகர் முதலான நான்கு ரிஷிகளும் உணரும் வண்ணம் உபதேசம் செய்த நன்மைக்குரிய வரும், அலைகளுடன் கூடிய நீர்நிலகளை

யுடைய தடாகங்கள் நிறைந்த திருப்புகலூரில் உறைபவனு மாகிய நம்மிறைவனிடஞ் சென்று எனது பெண்ணினுடைய அழகிய ஆடைகளை எடுத்துக்கொண்டு உம்முடைய பொன் வண்ணக் கொன்றை மாலையைத் தரவேண்டுமென்று புகழ்ந்துரைத்துக் கேட்க வருங்கள்.

என் + தையல் - என்றையல் + அலங்கலை - எனது பெண்ணின் ஆடைகளை; கொன்றை+அலங்கலை-கொன்றை யலங்கலை கொன்றை மாலையை; ஒன்றை+அலங்கலை-ஒன்றை யலங்கலை-சந்தேமமற அமைதியாக; அலங்கலைக் கொள் என்றது அப்பெண்ணை நீர் மனைவியாக ஏற்றுக் கொள்ளவேணும் என்றது. ஏத்தி-புகழ்ந்து, அலம்- அமைதி யாக. இப்பாடல் செவிலி கூற்றாய் அமைந்தது.

அலங்கலை நீர்-அலங்கு+அலை; வீசுகின்ற அலைகளை யுடைய நீரால் சூழப்பெற்ற; கலை நான் மறையோர்- கலைகள் யாவையும் கற்ற நான்கு ரிஷிகள் (சனகர், சனற்குமார், சனாதனர், சனந்தனர்) கலைகள் பலவாயினும் - ஆய கலைகள் பலவாயினும்-ஆய கலைகள் அறுபத்து நான் கென சரசுவதி யந்தாதி கூறும்;

மேற்கூறிய மாணாக்கர்கள் நால்வரும், யாவும் கற்றவர்கள் ஆதலில் இவர்களுக்கு இனியும் ஏதும் கற்பிக்க இல்லை ஆதலால், தன் பொற்கைகளால் மோன முத்திரையைக் காட்டி, உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்த மய தேனினைச் சொரிந்தருளினார் என்க.

**பணிப்பாயலையுடைப் பச்சைப் பொருப்பொரு பாகத்தனே**
**மணிப்பாயலை வளை தென்புகலூரவென் மையல் வந்து**
**தணிப் பாயலையது தானிற்க யாமந் தனி லிளைத்தேன்**
**றுணிப் பாயலை நகை தோற்றானை யென்னெதிர்**
**தோற்றுவித்தே! (86)**

பாம்பினைப் படுக்கையாகக் கொண்ட பச்சை மலையைப் போன்ற திருமாலைத் தம் இடப்பாகத்தே

கொண்ட முத்துக்கள் நிறைந்த, அலைபாயும், கடல் சூழ்ந்த அழகிய தென்புகலூரிறைவனே! நான் உன் மேற்கொண்ட காதலின் காரணமாக ஏற்பட்ட விரகதாபமானது நள்ளிரவு நேரத்தில் மிகவும் துன்பத்தைக் கொடுக்க அத்துன்பம் தாளாமல் மிக இளைத்தேன், எனவே ஒன்று என் விரக தாபத்தை தீர்ப்பாயாக அல்லது இவ்விரவுப் பொழுதினை நீக்கிடவேண்டி பல்லிலழந்த சூரியனையாவது என்முன் தோன்றச் செய்வாயாக!

பனிப்பால்-பாம்புப் படுக்கை; பச்சைப் பொருப்பு-பசுமை நிறத்து மலை/பச்சை மா மலைபோல் மேனி-பவளவாய்........./மையல்-விரக மயக்கம்; யாமந்தன்னில்-நள்ளிரவு நேரத்தில்; இளைத்தேன்-துன்பமுற்றேன்; அல்+ஐ-அலை-இருட்டை; நகை தோற்றான்-பல்லை இழந்தவனாகிய சூரியன்; தோற்றுவித்து-உதயமாகும்படிச் செய்து. தோற்றானை என்முன் தோற்றுவித்தது என்பது முரண்; நகை-சிரிப்பு; பற்கள்; நகைதோற்றானை என்பது தக்கன் வேள்வியிற் கலந்துகொண்ட 'பூடா' எனும் சூரியனுடைய பற்களை வீரபத்திரக் கடவுள் தகர்த்தருளினார் என்பது- தேவாரப் பாடல்கள் பலவற்றில் இச்செய்தியைக் காணலாம்;

வீமநாத பண்டிதர் இயற்றியுள்ள கடம்பவனப் புராணம் என்னும் நூலின் 384ம் பாடலில் "ஈசனார் இச்சை தேவி இசைந்தனு சரித்தாற் போலும் நேசமாம் விண்டுத் தானும் அனுசரித்திடு வார்" - எனக் கூறப்பெற்றுள்ளது. திருமால் புருஷ வடிவில் உள்ள தேவியே! எனப் பொருள் கூறப்பெற்றுள்ளது. (தருமை ஆதீன வெளியீடு-1978)

பச்சைப் பொருப் பாகத்தான் என்பது திருமாலை இடப்பாகமாகக் கொண்டவன் எனவாகிறது. அபிராமி அந்தாதி (35)ல் அம்பிகையே திருமாலாக இருந்து உலகை ஆள்பவள் எனவும், லலிதா ஸகஸ்ர நாமம்-63ல் கோவிந்த ரூபிணி எனவும் கூறப்பெறுவதை நோக்குக. நாராயணனுக்கும் உமாதேவிக்கும் பேதம் கிடையாது என்பதறிக.

"கொடியார் கொடுமையின் தாம் கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா"
என்ற குறட்பாவின் கருத்தினைக் கொள்க. (1169)

**தோற்றுவராக வரிபணியும் புகலூரன் றுய்ய**
**நூற்றுவராக வரனருளோ வென்பர் நுண்ணிடையைப்**
**போற்றுவராகவ வேல்விழி பார்ப்பர் நின் பொன்றை வீழ்ந்**
**தாற்றுவராக வணங்கே யிவை மன்னராதரவே ! (87)**

வராக அவதாரமெடுத்த திருமால் வணங்கும் புகலூரில் வாழும் நமது இறைவனார், தமது பவள நிறமுடைய மார்பில் தூய்மையான பூணூலை அணிந்திருப்பார். மனத்தில் ஆசையுடைய பெண்ணே! அவரது அன்பும் ஆதரவும் உமக்குக் கிட்டுமாயின், உனது நுட்பமான இடையைப் போற்றுவார், போருக்குக்குரிய வேல்களைப் போன்ற உன்னிரு கண்களைப் பார்ப்பார், படத்தில் எழுதப்பெற்ற உன் உருவத்தின் அடி வீழ்ந்து காட்டி உன் துனபத்தைச் சற்றே போக்கிக் கொள்ள உதவுவார்.

தோற்று+வராக-தோற்றுவராக-வராக உருவெடுத்த; துய்ய+நூல்+துவர்+ஆக=துய்ய நூற்றுவராக; துவர்-பவளம்; ஆக-அணிந்த; அரன்-சிவன்; ராக+அணங்கு-ராகவணங்கு-ஆசைகொண்டபெண்-வீழ்ந்து+ஆற்றுவர்-வீழ்ந்தாற்றுவர்; துய்ய-பரிசுத்தமான; வெண்மை நிறத்தினையுடைய; வராக அரி-வராக உருவம் கொண்ட திருமால், இறைவனாரின் அடிமுடியைக்கான பிரமனும் திருமாலும் முயற்சித்தபோது திருவடியைக் காண எடுத்த உருவம் வராகம் என்னும் பன்றியின் உருவம்.

அன்பின் மிகுதியால் படத்தில் எழுதப்பெற்ற உருவின் அடியின் கீழ் வீழ்ந்து வணங்கினாற் போல் காட்டி துன்பம் நீக்கி இன்பமடையச் செய்தார் என்க. இவ்வாறு தோழியானவள் தலைவியிடம் கூறுவதாக அமைந்த பாடல் இது.

**ஆதரவாமனம் வெற்பிற் குயிலுட னாயினிந்த**
**மாதரவாமன மீளவிடாதென் வண்புகலூர்ச்**
**சீதரவாமன வென்ன நின்றோன் பணி சேவடியாய்**
**பூதரவாமன வா நகையாநின் புகழ் நினைந்தே ! (88)**

வளம்மிகத்தாங்கிய புகலூரில் நின்றவராகி இலக்குமி தேவியின் கணவன் எனும் வராக அவதாரம் கொண்டவன் எனப்பெற்றவனுமாகிய சீதரன்,வாமனன் எனப்பெற்ற திருமால் வணங்கும் சிறப்புமிக்க பாதங்களை யுடையவனே! நீரின் வடிவமான அன்னத்தின் நடையைப் போன்ற நடையினையுடைய கங்காதேவியும், மலையில் தோன்றிய, குயில் போன்ற இனிய குரலையுடைய உமாதேவியும், உம்மீது கொண்ட ஆசையை மீளவொட்டாமல் வைத்திருப்பதன் காரணம் என்ன? எலும்பு மாலையை அணிந்தவனே! உனது புகழை நினைத்தால் சிரிப்புத்தான் வருகிறது.

அனம்-அன்னம் (தொகுத்தல் விகாரம்) அன்னத்தின் நடையுடைய கங்காதேவிக்கு ஆகியது; வெற்பில்-மலையில், வாமன-வாமன அவதாரம் எடுத்தவர்; சீதர-இலக்குமியின் கணவன்; அனவா-எலும்பை அணிந்த; பூதரவா-மலையை யுடையவனே ! நகை-சிரித்தல்.

தலையிலே கங்கையும், இடப்பாகத்தே உமையையும் கொண்ட செய்தியை,

"இட மருங்கின் மருங்கிலாதவள்
குடி யிருக்கவு முடியில்வே
றிவ ளொருத்தியை யிருத்தி வைத்துமதி
மோக மோகினியி னுருவமாய்
நடமிடிங்கி வடன் மேலும் வைத்துள
நயந்தோர் பிள்ளை பயந்த நீர்
நங்குலத்திருவை மருவி னின்று பிறர்
நாவளைக்க விட மாகுமோ"

எனக் காசிக் கலம்பகச் செய்யுட்பகுதி கூறும்.

உன்புகழை நினைத்தால் சிரிப்புத்தான் வருகிறதென்பது வஞ்சகப்புகழ்ச்சி அணியைச் சேர்ந்ததே ஆயினும் முழுப் பாடலின் கருத்தும் உடன்பாடாக இல்லாமையினால் இது வஞ்சகப்புகழ்ச்சி அணியிற் சேர்க்க இயலாது எனவும் கூறுவர். இது செவிலி கூற்றாயும், தோழி கூற்றாயுங் கூடவமைந்த பாடல்.

**நினையா வருந்து நகைக்குமுயிர்க்கு நினது கொன்றை**
**புனையா வருந்துயர் போவதெப்போ தெனும் பூவு நெல்லுஞ்**
**சினையா வருந்துந் திருப்புகலூரவென் சேயிழையின்**
**றுணையாவருந் துதிக்குந்திருநாம முரைத்தழுமே ! (89)**

கருக்கொண்ட பசுக்கள், தாமரை போன்ற மலர்களையும், நெல்லையும் உணவாகக் கொள்ளும், வளமிக்கப் புகலூரில் வாழும் இறைவரே! எனது பெண்ணானவள், இன்று, எல்லோராலும் போற்றித் துதிக்கப் பெறும் உன்னுடைய அழகிய பெயரைச் சொல்லி அழுகிறாள்! உன்னை நினைந்து வருந்துகிறாள், உன்னுடையக் கொன்றை மாலையை அணியாத காரணத்தால் சிரிக்கிறாள், ஏக்கப் பெருமூச்சு விடுகிறாள்! துன்பம் மிகுதியாகி, எப்போது அக்கொன்றை மாலையை அணிந்து இக்கடுந்துன்பம் நீங்குவது என்று சொல்லி ஏங்கி நிற்கிறாள்.

நினையா-நினைந்து; நகைக்கும்-சிரிப்பாள்; உயிர்க்கும்-பெருமூச்சு விடுகிறாள். கொன்தைத்தார்-கொன்றை மலர்களால் ஆன மாலை; திருநாமம்-அழகிய பெயர். சினை+ஆ+அருந்தும்-சினையா வருந்தும்; சினைஆ-கருப்ப மடைந்த பசு; வரும்+துயர்-வருந்துயர்; சேயிழை-அன் மொழித் தொகை; திருநாமம்+உரைத்து+அழுமே- திருநாம முரைத்தழுமே; நினையா-நினைந்து; விளையா-விளைந்து என்பன உடன்பாட்டு எச்சங்கள்.

அழுவதும் சிரிப்பதுமாக பைத்தியம் பிடித்தவள் போல உனது கொன்றை மாலையே வேண்டுமென ஏங்கும் இப்பெண்ணின் மீது இரக்கங்கொண்டு நீர் அணிந்து கொண்டுள்ள கொன்றை மாலையைக் கொடுத்து இவளது துயரை நீக்க வேண்டுமென இறைவனை செவிலித்தாய் வேண்டுவது போல் அமைந்ததிப்பாடல்.

**அழவிடைக்கே யுரல் கட்டுண்டு பின்வர வாயர் வெண்ணெய்**
**துழவிடைக்கேசவன் காணாத பங்கயஞ் சுற்றமெல்லாம்**
**விழவிடைக்கேயுயிர் கால்வைத்தலமரும் வேலை வெள்ளை**
**மழவிடைக்கே வருந் தென்புகலூர் தொழ வல்லவர்க்கே. (90)**

ஆயர்களின் வீடுகளிற் சென்று வெண்ணெய்யைத் திருடித் தின்றமையால், அவ்வாயர்கள்,கண்ணனை ஒரு உரலில் கட்டிவைத்தனர், அவ்வுரலானது அவன் பின்னால் உருண்டுவர, அழுதவனாகிய கேசவன், எனும் திருமாலாற் காணப்பெறமாட்டாத, தாமரை மலர்களைப் போன்ற உன் திருவடியானது, வெண்ணிறத்துக் காளை மீதேறி நீர் உலாவரும் இப்புகலூரில், உறுதியுடைய அடியார்களுக்கு, சுற்றத்தாரெல்லாம் உடல்மீது வீழ்ந்து அழ உயிர் பிரியும் காலத்தில், துணையாகப் பற்றுதற்குரிய தாகி விளங்கு கின்றனவையாகும்.

அழ-அழத்தக்க; துழவு-கையினாற் துழாவி; பங்கயம்-தாமரை; அலமலரும் வேலை-சுழலுங்காலத்தில்; கால்- உயிர் மூச்சுக்காற்று; மழு-இளமையான; சுற்றமெல்லாம்-உறவினர்கள் எல்லாம்; தொழவல்லார்- தொழும் மனவுறுதி பூண்ட மெய்யடியார்; விடை-அனுமதி; “வேண்டு நடை நடக்கும் வெள்ளே றேறி வெண்காடு மேவிய விகிர்தனாரே” என்பது தேவார வரிகள்; வெள்ளை மழ விடைக்கே-வெண்மையான இளமைமிக்க காளை; வர+ ஆயர்-வர வாயர்; கண்ணன் உரலில் கட்டப்பெற்றழுத கதையை வில்லி பாரதத்தில்,

"சான்ற பேருரலா லுறிதோறும்
எட்டாத் தயிருட ளறுநெய் பாலருந்தி
ஆன்ற தாய் கண்டு வடத்தினிற் பிணிப்ப
வணியுர லுடனிருந்த மூதான்"

என்ற வரிகள் தெளிவாய்க் கூறும். (வில்லி-இராஜசூய யாகப் படலம்-118)

**வல்லிக்குழைமுலை வார்த்தைகண் வெண்ணகை வால்
வளைக்கை
வல்லிக்குழைமுலை காந்தளொப்பீர் மலையான் மகிழும்
வல்லிக்குழைமுலை பாடிநின்றாடி வரும்புகலூர்
வல்லிக்குழைமுலை யாந்தாளி நாளை மலர்கின்றதே ! (91)**

சூதாடும் கருவியையும், கரும்பையும், மாலையையும், முலையையும், வார்த்தைகளையும், கண்ணையும் ஒத்தவரே! வெண்மையான பற்களும், வளையல்களையணிந்த கைகளையும், நீண்ட தளிர்களையுடைய முல்லையரும்பையும், காந்தள் மலர்களையும ஒத்தவரே! மலையரசன் மகிழ்ந்து பாராட்டும் பெண்ணாகிய உமாதேவியின் எதிரே நின்று, உழை எனும் பண்ணையும், முல்லை எனும் பண்ணையும் பாடிநின்றாடும் சிறப்பினையுடைய புகலூரில் இந்த நாயகிக்காக உழைக்கின்ற வெற்றிபொருந்திய "மடல்மா" வானது நாளைய தினம் மலர்கின்றது.

வல்-சூதாடுங் கருவி; இக்கு-கரும்பு; வெண்ணகை-வெண்ணிறப் பற்கள்; வால் வளைக் கை- வெண்ணிற வளையல்கள் அணிந்த கை; முலை-1. முல்லையரும்பு, 2.முல்லையெனும் பண். உழை-உழை எனும் பண். தாளி-மடல் மா; தாளி மலர்கின்ற தென்று சத்தச் சிலேடையாற் கூறப்பெற்றது. தாள்-முயற்சி; தாளி-முயன்று செய்யும் செயல்; மலர்தல்-வெளிப்படுதல்; நாளை என்பது விரைவுக் குறிப்பு. தாளி மலர்கின்றதென்பது. மடன் மாவேறி வருதலைக் குறித்தது இப்பாடல் "தலைவன் கூற்றாக" அமைந்ததென்பர்.

**மலரப்பணயி லுழை விழிநீருமிவ் வல்லிரவும்**
**புலரப்பணையி லுழைவழல் மாறிடப் பூங்கை மள்ள**
**ரலரப் பணையி லுழை யெழுஞ்சேலோ டமர் தொலைந்த**
**பலரப்பணையி லுழை புகலூரகண் பார்த்தருளே ! (92)**

*அழகிய கைகளையுடை மள்ளர்கள், நிறைந்து நின்றுள்ள வயல் வெளிகளிடையே, ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொண்ட சேல் கெண்டை மீன்கள், சண்டையிட்டு தோற்ற பின்னருங் கூட, நீரைத்தடுத்த அணைகளில் புரளுகின்றன சிறப்பினையுடைய புகலூருறை அய்யனே! மலர்க்கணையாகிய படுக்கையில், மானின் கண்களைப் போன்ற கண்களிலே நீர் அகற்றிடும்படியும், இந்தக் கொடிய இரவு நேர முழுதும், விடியவும், புல்லாங் குழலினால் இசைக்கப்பெற்ற உழை எனும் பண்ணாகிய தீ நீங்கிடவும் உன் கடைக்கண் பார்த்தருள்வாயாக !*

*மலரப்பு-மலர்க்கணை; அலர்-பரவி இருக்கின்ற; அணை-படுக்கை; சலம்-இரவு; பணை-புல்லாங்குழல்; சேலோடு அமர்-சேல் கெண்டை மீன்கள் சண்டையிட்டுக் கொண்டு; அணை-வயல்களில் நீரைத் தேக்கக் கட்டும் அணை; உழை-பெண்; வல் இரவு-வலிய இருட்காலம் வலிமையாவது இரவு நீளுதல்; மள்ளர்-உழவர்; பணை-பண்ணை; இரவு நீண்டதென்பது-அழுது விழி நீர் சிந்தியவப் பெண்ணிற்கு மட்டுமே! ஆதலின் சீக்கிரமாக விடியச் செய்வீர் என்பதும் அவளுக்காகவே. எனவே இது தோழி அல்லது செவிலியின் கூற்றாக அமைந்த பாடல். அவள் வேண்டுவது போல் அமைந்தது. காதல் வயப்பட்டோர்க்கு அவர்தம் தலைவனையோ தலைவியையோ காணாதவிடத்து இரவு நீளும் என்பதை வள்ளுவரும் கூறுவார்.*

*ஆயன் குழல் போலும்*
*கொல்லும் படை -குறள் (1228)*
*வாராக் கால் துஞ்சார் வரின் துஞ்சார் ஆயிடை*
*ஆரஞர் உற்றன கண்கள். -குறள்(1179)*

**அருளோதனம் பெறிநுள்ளவர் பின்சென் றளகமும்மக்**
**கிருளோ தனங்குவடோ வென்பரே சிலரின் பணில**
**முருளோதனந்தும் புகலூரரைத் தொழிணுண்மை யிம்மை**
**பொருளோ தனந் துகி லின்பந்தருவர் புரிகிலரே. (93)**

பொருள் உண்டாயின் அப்பொருளைப் பெற்ற சில மூடர்கள், பரத்தையர் பின்னே சென்று, அப்பெண்டிர் தம் கூந்தலை இருளோவெனவும் அவர்தம் தனங்களை மலைகளோ வென்றும் புகழ்ந்து அவர்பின்னலைவர்; இனிய ஓசையை எழுப்பக் கூடிய சங்குகள் புரளுகின்ற கடலில் உள்ள நீரானது பொங்கிச் சூழப்பெற்ற சிறப்பினையுடைய புகலூரிலிலுறையும் கடவுளை வணங்கினால் அவர் நமக்கு உண்மையான செல்வத்தினையும், உண்பதற்கான உணவையும் உடுப்பதற்கான உடைகளையும், மனத்திற்கு மகிழ்ச்சியையும், தருவார். எனத்தெரிந்தும் சிலர் இவ்விறைவனை வழிபடாது புரியாதலைகின்றனரே !

அளகம்-கூந்தல்; தனம்-கொங்கை; குவடு-மலை; பணிலம்-சங்கு; தொழில்+உண்மை-தொழிணுன்மை; பனிலம்+உருளு+ஓதம்+அனந்தம் சங்குகள் உருளும் கடல் சூழும்-பனிலமுருளோத மனந்தும். ஓதனம்-சோறு. பரத்தையர் பின்னலையும் மூடர்தம் செல்வமானது சீக்கிரமே அழிந்துவிடும் எனவே அது பொய்ச் செல்வம் எனப்பெற்றது. உண்மையான செல்வம் என்பது பெற்றவர்தம் மன மகிழ்ச்சிக்கு மட்டுமின்றி அவர்தம் இறைவழி பாட்டினையும் உடையதாய் அமைந்து அழியாது நிறைந்து நிற்கும் என்பது கருத்து. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருப்புகலூர்த் தலப்பதிகம் கண்டு விரிவுரை கொள்க.

தருக்காவலா வென்று புல்லரைப் பாடித் தன விலைமா
தருக்காவலாய் மயிலே குயிலே யென்று தாமதராய்த்
தருக்காவலா நெறிக்கே திரிவீர் -என

திருவரங்கத்தந்தாதியில் பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் கூறும் செய்திகளையும் நோக்குக.

**புரிதவத்தைக்குறித் தந்தணர் வாழ்புகலூரரசே**
**கிரிதவத்தைக்கு மயிற்கையனத்த கிளர் மறையின்**
**சரிதவத்தைக் கடந்தப் பாலுமாய் நின்ற சங்கரனே !**
**யரிதவத்தைக்கு நின்றாளரள்வாயென் னவசத்திலே !** (24)

*தாங்கள் செய்த தவத்தைப் பற்றிப் பெருமையாக எண்ணி வாழ்கின்ற அந்தணர்கள் நிறைந்த புகலூரில் வாழும் கடவுளே! கிரவுஞ்ச மலையைப் பிளந்த வேலைக் கையிற் கொண்ட சுப்பிரமணியருக்குத் தந்தையே! வேதங்களின் உட்பொருளுக்கப்பாலும் கடந்து மேலேயும் நின்ற சிவனே! எம்பெண் விரகத்தீயினால், மரண அவத்தைக்குள்ளாகி நிற்கும் இவ்வாவசரமான நேரத்தில் உனது திருவடிகளைத் தந்து காத்தருள்வாயாக !*

*புரி-புரிந்த-செய்த; தவ-குன்றும்படி; புரிதவம்-வினைத் தொகை; தைக்கும்-பிளந்த; அவத்தை-மரணாவத்தை, அவசத்தில்-அவசரமான நேரத்தில்; என் வசமிழந்த நேரத்தில்; கிரி-கிரிவுஞ்சமலை; அயிற்கையன்-வேலைக்கையிலே யுடையவன்-முருகவேள்; கிரி+தவ+தைக்கும்+அயிற்+ கையன்+அத்த-கிரிதவத்தைக்கு மயிற்கையன்த்த; சரித+ அத்தை+கடந்து-சரிதவத்தைக் கடந்து, சரி-வேதம்-சரித்திரம் வரலாறு, அத்தை-முடிவை; அரிது+அவத்தை-யரிதவத்தை; நின்+தாள்+அருள்வாய-நின்றாளருள்வாய்; அநதணர்- அழகிய தண்ணளி யுடையோர் முனிவர், அத்து-எல்லை (தெலுங்கு மொழி வார்த்தை) சிவபெருமானை,*

‘குறவி தோள் மணந்த செல்வக்குமரவேள் தாதை’ எனவும்,

‘முருகவேட்டு தந்தை’ எனவும்

‘வேற்குமரன் தாதை’ எனவும்,

திருநாவுக்கரசர் குறிப்பிடுவார்.

**அவசங்கரா சலங் கொண்டு நின்பேர் சொல**
**வாழியங்கைத்**
**துவசங்கரா விழத் தோற்றுவித்தோய் தொலையா**
**நிலவை**
**நவசங்கராசி தரும்புகலூரவென் னாவைக் கொண்டு**
**சிவசங்கராவென மாட்டேனெனக்குன் றிருவுளமே! (95)**

முதலையொன்று தன் காலைப் பிடித்துக்கொண்டே போது கஜேந்திரன் எனும் யானை தன்னினைவிழந்த நிலையில் உம்பெயனர் சொல்லித் துதித்தபோது, உன்னுடை கொடியிலே இடப்பாகமாக இருந்த விஷ்ணுவைக் கையில் சக்கரமேந்திச சென்று அம்முதலையைக் கொல்லும்படி அருள்செய்தாய், குறையாத நிலவையும், இளஞ்சங்கினங் களையும் தருகின்ற புகலூரில் உறைகின்ற இறைவனாரே உன்னை என்னாவினால், சிவனே! சங்கரனே! எனத் துதிக்கும் பக்குவநிலை அடையாதவனாக இருக்கிறேன். ஆயினும் எனக்கு உன் திருஉளமே துணையாகும்.

அவசம்+வசம்-அவசம்-துணையின்றி; கராசலம்- மலை யைப் போலக் கையினையுடைய யானை; ஆழியங்கை-சக்கரத்தினை ஏந்திய அழகிய கை; துவசம்-கொடி (துவஜம்-வடசொல்); கரா-விழ-முதலை இறந்துபடும்படியாக. நவ-இளமை;

சிவனாரின் கொடியாக அமைந்து தருமதேவதை, திருமால், இடபம் ஆகியவை திருமால் இடபமாகியதால ஆழியாங்கைத் துவசம் எனப்பெற்றது.

சாபத்தின் காரணமாக ஊ-ஊ எனும் கந்தருவன் முதலையாகவும், இந்திரத்யும் நன் என்னும் அரசன் யானையாகவும் தோன்றினர் என்பது கதை. தீவினை செய்தோர் நாவு "சிவசிவ" என்று கூறாது என்பர்.

கஜேந்திர மோட்சம் என்பது வைணவ இலக்கியக் கதையிது எனினும் சைவத்தை உயர்த்தவேண்டி யானையைக் காத்திடச் செய்வித்தது ஈசன் செயல் எனக் குறிப்பிடப் பெற்றுள்ளது.

**திருப்பதத்தத்தி கிரிக்கரிவீழ் சிவனுக்கிருப்பப்**
**பருப்பதந்தத்தி யுரிபோர்வை பாய்புலித் தோலுடுக்கை**
**நெருப்பதத்தத்திற் புகலூரர் நாம நிலாமுடிப்ப**
**திருப்பதத் தத்தி லிளமயின் மூவெயி லெய்ததுவே. (96)**

சக்கராயுதத்தை வேணடி, திருமாலால் வீழ்ந்து வணங்கப்பெற்ற பாதங்களையுடைய சிவனுக்கு, இருப்பிடம் கைலைமலை, யானையின் தோல், உடலில் போர்த்திக் கொள்ளும் போர்வையானது, பாயும் புலியின் தோல் இடுப்பில் கட்டும் ஆடையானது, கையில் வைத்திருப்பது நெருப்பு, வசிக்கும் ஊரின் பெயர் திருப்புகலூர், முடியில் தரிப்பது நிலவு, பாதி உடலாய் இருப்பது, இளமையான மயிலைப் போன்ற உமாதேவி, அவ்விறைவனால் எய்தழிக்கப்பெற்றதோ முப்புரங்களாகும்.

திரு+பதத்து+அத்+திகிரிக்கு+அரி=திருப்பதத்தத்திகிரிக்கரி; திகிரி-சக்கரம்; அரி-திருமால், அத்தி-யானை; யுரி-தோல் உடுக்கை-இடுப்பில் உடுத்தும் ஆடை; அறையாடை; அத்தத்தில்-அர்த்த சரீரத்தில்-பாதியுடலில்; இளமயில்-இளமையான மயிலைப் போன்ற உமாதேவி. அவ்விறை வனால் எய்தழிக்கப்பெற்றதோ முப்புரங்களாகும்.

உமையஞ்ச விறல் வேழம் உரித்தாராம்
உரிபோர்த்து மதில் மூன்றும் ஒருகயைால்
எரித்தாராம்

என்பது சம்பந்தர் வாக்கு.

இப்பாடலில் இறைவனாரின் அருஞ் செயல்கள் யாவும் குறிப்பிடப்பெற்றுள்ளது. மேலும் திருமால் சக்கராயுதம் வேண்டி இறைவனின் திருப்பாதத்தை வணங்கிய செய்தி வேறு பல பாடல்களிலும் சொல்லப்பெற்றவையே என்பதறிக.

**எய்தவந்தப்புரங் காட்டியவேளு மெரிநகையாற்**
**பெய்த வந்தப்புரப் பேறுபெற்றான்பெற்ற தாதைசென்னி**
**கொய்தவந்தப்புர மாதின் பொற்றோளினை கூடுதற்கு**
**மொய்தவந்தப்புர வோன் புகலூரன் முருக்கிடவே ! (97)**

இப்புகலூரில் உறையும் இறைவன், தன் அருகில் நெருங்கிவந்து அவனது காமக்கணைகளின் பலத்தைக் காட்டிய மன்மதன், மற்றும் சிரிப்பினாலேயே எரிக்கப்பட்ட திரிபுரங்கள் பெற்ற பேற்றினைப் பெற்றவன்.

அந்தப்புரமெனும் உள் மனையிலுள்ள உமாதேவியின் பொன் போன்ற தோள்களைப் பற்றுவதற்காக அவளைப் பெற்ற தந்தையைக் கொன்றதோடு மட்டுமின்றி, தான் செய்துவந்த தவத்தையும் கூட விட்டுவிட்ட வீரமிக்கவன்.

வேள்-மன்மதன்; எரி-நெருப்பு-தீ; புரப்பேறு- திரி புரங்கள் பெற்ற பேற்றினைப் பெற்றவன்; தாதை-தகப்பன்; பொன்+தோள்-பொற்றோள்; கொய்த-அறுத்த; மொய்-மிகுந்த; உரவோன்-பலமிக்கவன்; முருக்கிட-கொன்றிட; எய்த+வந்து+அப்+புரம்-எய்தவந்தப்புரம்; சென்னி-தலை; கொய்த+அந்தப்புர+மாதின்=கொய்தவந்தப்புரமாதின்.

இறைவனாரது இறைமைத் தன்மையினை உணராது செருக்குற்றமையினாலேயே தக்கனும், மன்மதனும், திரிபுரங் களின் தலைவர்களாகிய அசுரர்களும் அழிவுற்றனர் என்பதை உணர்ந்து இறைவனாரின் இறைமைத் தன்மையை இனியாவது உணர்வீர் எனக்கூறுவது இப்பாடல்.

"பெற்றதாதை சென்னி கொய்த" என்பது உமாதேவி தனது தந்தையின் தலையைத் தன் கணவனே கொய்திடக்

காரணமாய் இருந்தாள் எனக்கூறுகிறது. இதன் விளக்கத்தை இவ்வந்தாதியின், எழுபத்தொண்பதாம் பாடலில்,

"வேள்விக்கு நீத்த லென் - நீல வண்ணக்
கிளி நக தாம் அரை மாத்திரைக்கே
தலை கெட்டனரே"

என்ற வரிகளின் மூலம் அறியலாம். மேலும்,

"பழித்தொழில் தக்கன் வேள்வி பாழ்படுத் துமையாள்
சீற்றம், ஒழித்தி என்றருளிச் செய்தான் ஒள்ளிழை
யுமையும் அவ்வா றழித்துநீர் வருதீர் என்று
விடை கொடுத்தருளப் பெற்று............"

எனும் காஞ்சிப்புராணத்தக்கேசப் படலத்து 34ஆம் பாடல் மூலம் தெளியலாம்.

**முருகவிராமன் முடியாமுடிவின் முதல்வவென்று**
**பெருகவிராமன் பணிபுகலூரவென் பேதைநெஞ்சம்**
**பருகவிராமன் மதன்வரும்போது பவளஞ் செவ்வி**
**தருகவிராமன் பிலர்க்குரு வென்னுந் தனியடைந்தே! (98)**

இரவுக்குத் தலைவனாகிய, இளமை பொருந்திய சந்திரனைச் சடையில் அணிந்தவரே! முடிவில்லாத முதல்வனே என்றும், தலைவனே எனவும் பெருமையாய்ப் பாராட்டி திருமாலால் வணங்கப்பெறும் திருப்புக லூரையுடையவரே! தனியே இருந்து கொண்டிருக்கும் பேதையாகிய எம்பெண்ணின் நெஞ்சத்தைப் பருக மன்மதன் வரும்போது, முருங்கை மரத்தின் பூவினைப் போல அன்பு என்பது சிறிதும் இல்லாத எம் தலைவனாரின் உருவம் பவளம் போன்று அழகானது என்று கூறுவாள்!

முருக-இளமை பொருந்திய; இராமன்-இரவுக்குத் தலைவன், சந்திரன்; இராமன்-திருமால்; பருக-உண்ண; இரா-இல்லாத; கவிர்+ஆம்-கவிரா+மன்மதன்-கவிராமன் மதன் கவிர் முருங்கை மரத்தின் பூக்கள்.

முருங்கைமரத்தின் பூக்கள் மரமெங்கும் பூத்து அழகிய வெண்மை நிறத்தையுடையது. ஆயினும் மணம் ஏதும் இல்லாதது-மேலும் அனைத்துப் பூக்களும் காயாகாது, கருகி வீணே தரையில் வீழும் தன்மையது எனவே "தயையில்லாத" என்னும் பொருள்பட அன்பிலார்க்கு மெனக் கூறப்பெற்றது. அழகுமிக்க அவ்விறைவனாரின் அழகை நான் அனுபவிக்கும் பாக்கியமில்லாதவளானேன் எனவும் குறிப்பால் உணர்த்தியது. தரு+கவிர்+ஆம்+அன்பிலார்க்கு-தருக விராமன் பிலார்க்கு+உரு; உரு-உருவம். தலைவியாகிய தம் பெண்ணின் நிலையைச் செவிலியான்வள் மனம் நொந்து கூறுவதாக அமைந்த பாடல் இது.

**அடைக்கலனானுன் னடித்தாமரையினைக் கைந்தெழுத்தாம்**
**படைக்கல னாவி லுண்டஞ்சேனெவர்க்கும் பணிமொழியா**
**ருடைக்கல னானல முள்ளம்பலியோடுகந்து கொள்ளு**
**முடைக்கலனாத புகலூரயாவர்க்கு முன்னவனே ! (99)**

கையிலே, நாற்றமெடுத்த பிர்மகபாலமெனும் மண்டையோட்டை எடுத்துக்கொண்டு பிச்சை எடுக்க தாருகாவனத்திற்குச் சென்று, அவ்விடத்திருந்த, மென்மை யான சொற்களைப் பேசக்கூடிய, ரிஷி பத்தினிகளின் ஆடைகள், ஆபரணங்கள், கற்பு, மனம் ஆகியவற்றை மகிழ்ச்சியுடன் பலியாகக் கொண்ட நாதனே! திருப்புகலூரில் உறைபவனே! எல்லாக் கடவுளர்க்கும் முன்னவனே! நான் உனது தாமரை மலரினையொத்த திருவடிகளுக்கு அடைக்கலமானேன், உனது பெயராகிய ஐந்தெழுத்தே எனக்கு ஆயுதமாகியது. அதனை நான் எப்பொழுதும் எந்நாவால் சொல்லிக்கொண்டேயிருப்பேன். ஆகையால் நான் எவருக்கும் பயப்படமாட்டேன்.

ஐந்தெழுத்து-பஞ்சாட்சரம் எனும் "நமசிவாய" படைக்கலம்-ஆயுதம்; பணிமொழியர்-தாருகாவன ரிஷி பத்தினிகள்; பணிமொழியார், உடை, கலன், நலம் உள்ளம் பலி யொடு கந்து (உகந்து) கொள்ளும்-என்ற குறிப்பின்

காரணமாக-பணி மொழியார் என்ற சொல்லுக்குத் தாருகாவன ரிஷிபத்தினிகள் என்ற பொருள்கொள்ள வேண்டியதாயிற்கு பின்னால் வரும் விளக்கம் கொண்டு முன்னால் வந்த சொல்லுக்குப் பொருள் காணும் ஒருவகைச் சிறப்பு கொண்டதாகும்.

ஐந்தெழுத்தின் விபரமாவது:- சி-சிவம், வ-அருள், ய-ஆன்மா, ந-நிரோதம், ம-ஆணவமலம் இதனுள் மலத்தைக் கீழ்ப்படுத்தி சிவத்தை முன்னாகக் கொண்டு கணிக்க வேண்டும். நாமார்க்கும் குடியல்லாம் நமனை அஞ்சோம் என்ற வரிகளை நினைவிற் கொள்க.

இறைவனாரின் பிச்சாடன உருவினைக் கண்ட ரிஷி பத்தினிகள் அவரது அழகினைக்கண்டு மையல் கொண்டு காமம் மீக்குற அப்பெண்டிரது ஆடைகளும், ஆபரணங்களும் தானாகவே கழன்று கீழே விழுந்து விட்டது. இதன் காரணமாக அப்பெண்டிர் தங்களது கற்புடன் கூட நாணத்தையும் இழந்தனர் என்பது கதை. பிச்சாடர் உருவம் மகேசுவர மூர்த்தங்கள் இருபத்தைந்தனுள் பதினொன்றாவது என்பர். சமக்கிருத இலக்கணத்தில் இதனை தூர வம்யம் என்பர்.

**முன்னஞ்சயிலத் தருகவென் றேற்றது முல்லைப் பச்சை**
**யன்னஞ் சயிலத் தையாற்று மென்றோவரி யோடமரர்**
**வென்னஞ் சயிலத்தர் தென்புகலூரரையர் மேருவென்னும்**
**பொன்னஞ் சயிலத் திருச்சிலை வாங்கிய பூவொன்றிலே ! (100)**

அழகிய திருப்புகலூரிறைவர், திருமாலுடன், தேவர்களும் கண்டு அஞ்சத்தக்க சூலாயுதத்தைக் கையிலே யுடையவர். முற்காலத்தில் திருப்பாற்கடலில் விஷம் தோன்றியபோது அதை நாம் உண்போம் தருகவென்று, மகாமேருவாகிய பொன்மலையை வில்லாக வளைத்த மலர்போன்ற ஒரு கையிலே வாங்கியது, கற்புடைய பச்சை நிறத்தவளும், அன்னத்ததைப் போன்ற நடையினையுடைய வளுமான பார்வதி தேவியார் தம் கையில் இருக்கும்

அவ்விஷத்தின் கொடிய தன்மையை ஆற்றிடுவார் என்ற தைரியத்தினால் தானோ!

அயில-உண்ணும்படி; ஏற்றது-வாங்கினது, சயிலம்-விஷம்; அயில்-சூலப்படை; ஆற்றுமென்றோ-ஓகாரம் உறுதியைக் காட்டியது. அரியோடு+அமரர்-அரியோடமரர்; சிலை-வில்;

ஒரு கற்புடைய பெண்ணானவளைத் தனக்குத் துணையாகக் கிடைக்கப்பெற்ற ஆண்மகனுக்கு எச்செயலும் எளிதே எனக்கூறுவது இப்பாடல், இதனைத் தெளிவு படுத்தவே இக்கவிஞர், "முன்னஞ் சயிலத் தருகவென் றேற்றது முல்லைப் பச்சை யன்னஞ்சயிலத்தை யாற்று மென்றோ" வெனக் கூறினார்.

மேலும் உமையைப் பச்சை அன்னம் என்கிறார், இதனைத் தனித்தனியாகப் பிரித்து பச்சை நிறத்தை யுடையவள் எனவும் அன்னத்தைப் போன்ற நடையினை உடையவள் எனவும் பொருள் கொள்ள வேண்டுமென பாடங்கூறப்பெற்றது.

முல்லைப் பச்சையன்னம் சயிலத்தை யாற்று மென்பதை கார் வரைத் தோகை பங்கான துணிவு கொண்டே புற்றினிற் குடிகொண்டிருந்தார், மாசுணப் பூணணிந்தார் வெவ்விட முண்டார் கமலேசர் எனக் குமர குருபரசுவாமிகள் கூறியுள்ளார். மன்மதனை எரித்ததும் திரிபுரங்களை எரித்ததும் கூட சிவகாமியின் துணை கொண்டே என காளமேகம் புலவர் கூறுவர்.

# நூல் முடிவு

**வளப்பாடிலாத வெருக்குமிதழி மலருமன்ப**
**ருளப்பாடுறை புகலூரருக் காதலினோதி மிக்கோர்**
**தளப்பாடியது தமிழ்க் கென்னினும் காற்றுவன் சந்திரன் சொற்**
**களப்பாள னெற்குன்ற வாணனந்தாதிக் கலித்துறையே ! (101)**

இளையோனாகிய களப்பாள நெற்குன்ற வாணன் எனும் நான் பாடிய இத்திருப்புகலூர் அந்தாதிக் கலித்துறையை தமிழ்க் கற்ற அறிஞர்கள் வளமற்றதென வெறுக்காமல் உள்ளம் மகிழ்ந்து ஏற்றுக்கொள்ள வேணடும்.

வளப்பாடு-சிறப்பு; உளப்பாடுறை-மனத்தில் நிறைந்துள்ள. தளப்பாடு-தள்ளற்குரியது என்று; சந்திரன்-இளையவன்.

இக்கலித்துறை அந்தாதியை, எவராலும் விரும்பப் பெறாத எருக்கம்பூவையும், கொன்றை மலரையும், மெய்யடியார்களுடைய உள்ளத்திலே வீற்றிருந்தருளும் சிவபெருமானுக்கு உரிய மலராக அணிவிக்கப்பெறுவது போல இக்கலித்துறை அந்தாதியையும் புகலூரில் வாழும் எம்பிரான் ஏற்றே அருள்வார் எனக்கூறுகிறார்.

**பொற்குன்ற மனைய முலையுமை பங்கற்கு புண்ணியர்க்குச்**
**சிற்குன்றனைய திருப்புகலூரற்கு செந்தமிழால்,**
**நெற்குன்ற வாணனுரைத்த வந்தாதியை நீணிலத்தில்**
**கற்கின்ற தன்றிக் கவிபாட யாவர்க்கும் கற்பல்லவே ! (103)**

பொற்குன்ற மொத்த முலைகளையுடைய உமையாளை ஒரு பாகமாகக் கொண்ட திருப்புகலூர் இறைவனுக்காக நெற்குன்றவாணன் எனும் நான் பாடியுள்ள இவ்வந்தாதியை அனைவரும் கற்றுப் பயிலவேண்டுமேயன்றி இதுபற்றிக் குற்றங்குறை கூறுவது நல்லதல்ல.

இப்பாடல் மூலம் தன் விருப்பத்தை படிப்பவர்க்கு உறுதியாகத் தெரிவித்துக்கொள்வதோடு கற்றோறிற் சிலர் அக்காலத்து புதிதாக கவிபாடியவனை பாராட்டி உயர்த்தாது குறைகூறியே நீராக்கிவிட்டது உண்டு என்பதையும் உறுதி செய்கிறது.

கவிபாட-வசை, குற்றம் கூற; கற்பல்ல-நல்லதல்ல.

## திருப்புகலூர் இறைவனாற் பெயரில் திருவாமாத்தூர் மகான் வண்ணச்சரபம் அருள்மிகு தண்டபாணி சுவாமிகள் இயற்றியுள்ள மங்களப் பாடல்

இராகம்: ஸ்ரீராகம் தாளம்: ஆதி

**பல்லவி**

மங்களம் மங்களமே - தினம் தினம்
மங்களம் மங்களமே.

**அநுபல்லவி**

செங்கமலத் தடம் பொய்கைகள் சூழும்
திருப்புகலூரிற் சிவபெருமானுக்கும்
கங்கணக் கைக் குயிலே யெனத் தோற்றொடு
கன்னிகை யாகிய கருந்தாற் குழலிக்கும்
(மங்களம்......)

**சரணம்**

நம்பின பேர்க்கநு கூலங்கள் செய்திடும்
ஞான விநாயகனாம் முதல் மைந்தற்கும்
அம்பிகையாம் தனி வேற்படை ஏந்திக் கொண்
டாடும் மயூரத் தமர்ந்திடும் கந்தற்கும்

தும்பியும் நீற்றறையுங கடலுஞ் செயும்
துன்பங் கடந்து மெய்த் தொண்டு செய் அப்பற்கும்
வெம்பிடும் தீமிடித் தீரப் பொற் செங்கல்
விரைந்துகொண்டான் முதல் மெய்யர்தம் குப்பற்கும்
(மங்களம்......)

தண்டமிழாற் கொடும் சாரணர் தம்மைத்
தடிந்துவப் பெய்திய சம்பந்த மூர்த்திக்கும்
மண்டலத்தோர் அறியா முதல் முத்தியில்
வாழ்கின்ற மாணிக்க வாசகர் கீர்த்தி;கசும்
அண்டரும் மாதவத் தோர்களும் நம்பி
அநுதினம் சொல்லும் நல்அட்சரம் ஐந்துக்கும்
தொண்டர்தம் பாடற் சுவைமிக நாடொறும்
தூய்க்கும் செவிகளில் தூக்கிய நந்துக்கும்.
(மங்களம்...)

அல்லல் அனைத்தும் அறுக்கும் வெண்ணீற்றுக்கும்
அத்தன் ஈன்றிட்ட தாம் அக்க மாலைக்கும்
புல்லருந்தும் பசுவின்றிரள் யாவிற்கும்
பூம்புகலூர் வளர் புன்னையின் சோலைக்கும்
கொல்லத்துணிவது வேள்வியிலாயினும்
கொடுமை என்றோதுநர் கும்பிடும் கோவிற்கும்
நல்ல தமிழ்க் கவியாற் சிவலீலையை
நாடொறும் பாடி நவிலும் எந்நாவிற்கும்

மங்களம் மங்களமே-தினந்தினம் மங்களம் மங்களமே.

கௌமார சபை-திருவாமாத்தூர்-வெளியீடு எண்.116, 1971ம் ஆண்டு தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் பொருளுதவி கொண்டு வெளியிடப்பெற்ற மகான் வண்ணச்சரபம் அருள்மிகு தண்டபாணி சுவாமிகளின் கீர்த்தனைப் பாடல் திரட்டு என்ற நூலினின்றும் எடுததெழுதப்பெற்றது. இந்நூலின் கண் மொத்தம் 34 பாடல்கள் உள்ளன.

# நூலின் சுவை

*மூவுருவங்கள்:* சிவனாரின் திருவுருவங்களில், கங்காளர், பிச்சாடனர், பைரவர் எனும் மூவுருக்களும் தோற்றத்தில் ஒன்றே போல் காணப்பெறினும் மூல உருவில் வேறானவைகளே !

நெற்குன்றவாணரின் இத்திருப்புகலூர் அந்தாதிப் பாடல்கள் பற்றியும், இரண்டு பாடல்களில் மட்டும் கங்காளர் பற்றியும் குறிப்பிடப்பெறுகிறது.

1. பாடல்-10. 'அத்தக் கமலமனவைய மேற் கின்ற வையர்' பிர்மனின் தலையோடாகிய பிச்சைப் பாத்திரத்தை யேற்றுப் பிச்சையெடுப்பவர்.

2. பாடல்-11. 'சிரந்தரிக்கும் கையர்' மண்டை யோட்டினை ஏந்திய கையினர்.

3. பாடல்-32. 'வெண்டலையோட்டற்பனை மண்டை யோட்டை ஏந்திய அற்பனை.

4. பாடல்-53. 'பெற்றத்து வந்திவ் வகலிடத் தேற்கும் பிரான்' இப்பூவுலகில், காளை மாட்டின் மீதேறி வந்து பிச்சை எடுப்பவர்.

5. பாடல்-63. 'பரிக்கு உகந்து அகந்தோறும் நடந்து பெற்ற அற்ப ஆசனத்தர்'. எத்தனை வீடுகளில் பிச்சை கேட்டுப் பெற்றும் கூட கையில் இருந்த பிர்மனின் மண்டை யோடாகிய பிச்சைப் பாத்திரமானது நிறையவே இல்லை.

6. பாடல்-72. 'பே இரவுக்கு நக பூண்டவர்' மற்றவர்கள் பார்த்தும் நகைக்கக் கூடிய தான ஒரு உருவத்தை ஏற்று பிச்சை எடுக்க வந்தவர்.

7. பாடல்-99. 'பணி மொழியார் உடை, கலன் நலம் உள்ளம் பலியொடு உகந்து' தாருகா வனரிஷி மாதர் தம் செருக்கழித்தது.

8. பாடல்-24. 'கங்காளர்' எனத் தனித்துக் கூறப் பெற்றுள்ளது.

9. பாடல்-27. 'தண்டைக் காலும் கையும் பண்டரி கைக்கு பசித்து வந்தோர்' இதில் சிறுத்தொண்டநாயனாரின் கதை முழுமைக்கும் அடக்கப்பெற்றுள்ளது. ஆகிய செய்திகள் உள்ளன.

முதலில் பிச்சாடனர் பற்றியும் பின்னர் கங்காளர் பற்றியும் கூறுவோம். பைரவர் பற்றி ஏதும் கூறப்பெறவில்லை.

சிவபெருமான் தன்னை வழிபடும் அன்பர்களுக்கு அருள்புரிதலின் பொருட்டு மேற்கொண்ட திருமேனிகள் இருபத்தைந்து எனவும் அறுபத்து நான்கெனவும் கூறுவர்.

கந்தபுராணத்தில் ததீசியுத்தரப் படலத்தில் தாருகா வனத்திலிருந்த முனிவர் தமக்கு நிகரான தவங்கள் செய்தார் இல்லை என்பதாகச் செருக்குற்று இறைவுணர்வு இன்றி வாழ்ந்தனர். இவர்தம் செருக்கினை அழித்து நற்போதம் அளிக்கவேண்டி, திருமாலை அழகிற் சிறந்த மோகினி உருவம் தரிக்கச் செய்து உடன் கொண்டு, அத்தாருகவனமேகி, அங்கிருந்த முனிவர்களின் மனைவியர்களுக்கு மையல் ஊட்டி, மாழ்கச் செய்து, பின்னர் அவர்களுக்கு மெய்யுணர்வு நல்கி, ஆட்கொண்டார் எனக் கூறப்பெறுகிறது.

பிச்சாடனர், கங்காளர், பைரவர் ஆகிய மூன்று உருவங்களும் முதற்தோற்றத்தில் ஒன்றுபோல் தோன்றி னாலும் நிறைய வேறுபாடுகள் கொண்டவையாகும். சிவஞான சுவாமிகள்,

அடியிற் றொடுத்த பாதுகையும்
அசைந்த நடையும் இசைமிடறும்
வடியிற் சிறப்ப நடந்தருளி
மூழைஏந்தி மருங் கணைந்த
தொடியிற் பொலி தோள் முனிமகளிர்
சுரமங்கையரை மயல் பூட்டிப்
படியிட் டெழுதாப் பேரழ காற்
பலிதேர் பகவன் திருவுருவம் என்பர்.

தலையில் ஜடாமுடி, திரிநேத்திரம், நீலகண்டம், இடக்கையில் பிச்சைப்பாத்திரம், வலக்கையில் தமருகம், இது தவிர இரு கைகள், "அற்றம் மறைப்பது முன் பணியே" என்ற தேவார வரிகளின்படி முற்றிலும் ஆடையே இல்லாத உருவத்திற்கு இடையாடையாக இருந்து மானத்தை மறைத்து நிற்பவை பாம்புகள் என்பதாகும். மார்பிற் பூணூல், வலக்காலில் வீரக்கழல் ஒருகையில் உடுக்கையும் உண்டு. இப்படிப்பட்ட அழகிய திருமேனியின் செப்புத் திருமேனிகளை திருவெண்காட்டிலும், சிற்ப உருவை கும்பகோணம் நாகேஸ்வர சுவாமி கோவிலிலும், வழுவூர் (மயிலாடுதுறை வட்டம்) திருக்கோயிலிலும் காணலாம். இவ்வுருவு பற்றி மாணிக்கவாசகனார் "அருமையில் எளிய அழகே!" என்கிறார். சுவாமி விபுலானந்தர் அவர்கள் இவ்விறைவனார் எதைப் பிச்சையாகக் கேட்டு வருகிறார் என்பதை,

"வெள்ளைநிற மல்லி கையோ ?
வேறு எந்த மாமலரோ ?
வள்ளற் பிரா னர்க்கு
வாய்த்த மலர் எதுவோ ?
வெள்ளைநிற மல்லிகை யல்ல
வேறு எந்த மாமலருமல்ல
உள்ளக் கமலம்அடி உத்தமனார் வேண்டுவது"

எனத் தெளிவாகக் கூறுவார்.

இம்மையிற் புகழும் மறுமையில் வீடு பேறும் அடைய வேண்டுமெனில் அது கொடை அளிப்பதினால் மட்டுமே ஆகும். எனவே கொடுப்பார் ஆயிரம் பேர் ஆகும். எனவே கொடுப்பார் ஆயிரம்பேர் உண்டெனினும் அதனைக் கொள்வார் இல்லையேல் பயன் இல்லாது போகும். எனவே கொடுப்பாரிற் சிறந்த வள்ளல்கள் கொள்வாரே! அதாவது பிச்சை எடுப்பவர்களே உயர்வானவர் என்பார் முனைப் பாடியார். “பரப்புநீர் வையத்துப் பல்லுயிர்கட்கு எல்லாம், இரப்பாரின் வள்ளல்கள் இல்லை-இரப்பவரே இம்மைப் புகழும் இனிச்செல் கதிப்பயனும் நம்மைத் தலைப் படுத்தலால்” என்பார். இதன்படி நோக்கின் பிச்சாடனரின் பெருமை நன்கு விளங்கும். மேலும், திருமந்திரத்தில்,

“பரந்துலகேழும் படைத்த பிரானை
இரந்துணி என்பார்கள் எற்றுக்கு இரக்கும்
நிரந்தரமாக நினையும் அடியார்
இரந்துண்டு தன்கழல் எட்டச் செய்தானே!”

எனத் திருமூலரும்,

மணிவாசகப் பெருமானார்,

*“அம்பலத்தே கூத்தாடி அமுதுசெயப் பலி திரியும்*
*நம்பனையும் தேவன் என்று நண்ணுறுமது என்னேடீ*
*நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாம் அறியா*
*எம்பெருமான் ஈசாஎன்றேத்தின காண் சாழலோ”*

*(திருச்சாழல்)*

**துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தாம் இயற்றியுள்ள “பிச்சாடன நவமணி மாலை” என்ற சிறிய நூலிலிருந்து சில சுவையான செய்திகளைப் பார்ப்போம்.**

*“நங்குற்றம் தீர்க்கும் பழமலை நாதர்க்கு நற்பலி கொண்டு*
*அங்குற்று மென்துகில் போக்கினன் வெற்றரையாதி அந்தோ!*
*இங்குற்றனை என எம்பெருமான் இவ்விரு நிலத்தில்*
*தங்குற்றம் பார்க்குமவர் உளரோ? எனத் தாழ்ந்தனனே!” (1)*

பொருள்:- பிச்சையிட வந்த ஒரு பெண்ணைப் பார்த்து அவள் இப்பிச்சாடனரின் அழகினைக் கண்டவப் போதே நான் நினைவும் ஆடையும் நெகிழ்ந்தவிழப் பெற்றவளாயி னமையின் என்னம்மா, ஆடையேதுமின்றிப் பிச்சையிட வந்தாயே! எனக் கேட்க, அவளோ எங்குற்றம் கண்ட நீர் உம்குற்றம் கண்டீரோ! நீர் பிச்சை கேட்க வந்திருப்பதும் ஆடையின்றித் தானே? என்றாள். பிரியமனமின்றி அவ்விடத்தே காலம் தாழ்த்தினாள்.

*இப்பாத்திரம் தலைகீழாப் பிடித்தனை என்னை? முனம்*
*தப்பாப் பலி கொண்டறிந் திலையோ எனத் தாழ்குழலாள்*
*செப்பார் பணை முலையாய்! நிலத்தே பலி சிந்திட்டாய்?*
*எப்பாத்திரத்திலும் இட்டறியாய் கொல் முன்?*
*என்றனரே!(2)*

பொருள்:- பிச்சையிட வந்த பெண்ணொருத்தி பிச்சாடனரைப் பார்த்து நீர் இதற்குமுன் எங்கும் பிச்சை எடுத்ததில்லையோ? பிச்சைப் பாத்திரத்தைக் கவிழ்த்துத் தலைகீழாகப் பிடித்துள்ளீரே? எனக் கேட்க அதற்கு இறைவனார். பெண்ணே! நீ இதற்குமுன் எவருக்கும் பிச்சை யிட்டதில்லையோ? பிச்சைப் பொருளைத் தரையில் சிந்தும்படி பிச்சையிடுகின்றாயே! என்று கேட்டார். ஏளனமும் செய்தார்.

*வேட்டனம் மாதுகை தாழ்த்திட மாவமுது வெற்பர் பலி*
*ஓட்டினை நீ தொடலாமோ என, உமையும் தொடலாம்,*
*வீட்டினில்யான் எனவே, அவர்தாம் இதுவேண்டுவைகொல்*
*யாட்டினின் பால்என மூலமுமாம் என்பது என்றனரே! (3)*

பொருள்:- சோற்றைப் பிச்சையாக இடவந்த பெண்ணொருத்தி பிச்சாடனரின் உருவு கண்டு விரும்பிய வளாய் தன் கையைச் சற்றே தாழ்த்தி இறைவனாரின் கையிலிருந்த ஓட்டினைத் தொடுமாறு கொண்டு பிச்சையிட்டாள். இதனைக் கண்ட பிச்சாடனர், என்னுடைய பிச்சை ஓட்டினைத் தொட்டுவிட்டாயே இது தகுமா? எனக்

கேட்க அதற்கு அப்பெண் வீட்டிற்குள் நீர் வந்தீரானால் உம்மையும் தொடலாம் எனக்கூற, அதற்கு இறைவனார் ஆட்டின் பாலை அருந்தலாமா எனக்கேட்டாள். அதற்கு பாலை என்ன? அவ்வாட்டின் இறைச்சியைககூட சாப்பிடலாம் என்பது போலக் கூறுகிறாயே? எனக் கேட்டார். இதில் வீட என்பது வீட்டுப்பேற்றாகிய இறையடியையும் குறித்து சிலேடையாக நின்றது.

வானோர் தொழும்நின் பலிப்பாத்திரத்தை வனைந்தது நீ
தானோ எனச் சக்கரந்தான் சுழற்றத் தரும் குயத்தி!
யான் ஓர் குயவன் மெய் என்றே முதுகுன்றிறை இயம்ப
நானோ ஒரு சிற்றிடைச்சி என்றாள் அந்நறுநுதலே! (4)

**பொருள்:-** பிறைபோன்ற அழகான நெற்றியை யுடைய பெண் ஒருத்தி பிச்சையிட வந்தபோது இறைவனாரின் கைத் திருவோட்டினைப் பார்த்து, இத்திருவோட்டினை நீரே செய்துகொண்டீரோ? எனக் கேட்க, அதற்கு இறைவனார், சக்கரம் சுழற்றத் தகுந்த குயத்தியே! ஆமாம் நான் உண்மையிலேயே மண்பாண்டம் செய்யும் குயவன்தான் என்றார். இதனைக் கேட்ட அப்பெண் நானோ ஒரு சிற்றிடைச்சி என்றாள்.

இன்னும் இதுபோன்ற சுவையான செய்திகள் பல உண்டு. அடுத்து கங்காளர் பற்றிக் காணலாம். இவ்வந்தாதிப் பாடல் எண் 24ல் கங்காளர் எனத் தனியாகக் கூறப்பெற்றுள்ளது. 27ம் பாடலில் சிறுத்தொணட நாயனாரின் மகனாகிய சீராளனை அரிந்துண்ண வந்ததாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது. சிறுத்தொண்டனாரின் முழுமை யான விரிவான கதையை நமது சரசுவதி மகால் நூலக வெளியிடு எண். 234/1986 என்ற நூலிற் காணலாம்.

இனி கங்காளர் தம் தோற்றுரு பற்றிப் பெரிய புராணத்தில் சேக்கிழார் கூறுவதினை மட்டும் இங்கு காண்போம், காடவர்கோன் மன்னரிடத்து தானைத் தளபதியாய் இருந்து வாதாபியை வெற்றிகண்டு வந்த பின்னர்

மன்னர் தமது சேனைத் தளபதியாகிய பரஞ்சோதியாரை ஒரு சிவனடியார் என உணர்ந்து பொன்னும் பொருளும் கொடுத்து தருமம் செய்யவிடுத்தார். அதன்படி பண்டிதரும் தனது தீதில் குடிப்பிறந்த திருவெண்காட்டு நங்கை எனும் மனைவியோடும் அவர்தம் தோழியாகிய சந்தன நங்கையோடும் திருச்செங்காட்டான் குடித்தலமணைந்து தருமம் செய்து அதன் பலனாய் கருவிலே திருவுடையான் எனத்தகும் ஒரு ஆண் மகனையும் பெற்று வாழும் நாளில் இவர்தம் பெருமையை அம்மையப்பரும் அறிய, அடியார்க்கு அருள்புரிவான் வேண்டி. கயிலை நீங்கி செங்காடு அடைகிறார் இறைவர். இவ்வாறு வருகையில் தம்முரு கரந்து வேறுரு கொண்ட திருக்கோலமே 'கங்காளர்' எனும் திருமேனி.

கருங்குஞ்சி கொந்தளமாகப் பரப்பி, தும்பை மலர் சூடி, நெற்றி நிறைய திருநீறு சாற்றி, முடியிலிருக்கும் வெண் பிறையை சிறியதாக்கித் திலகமாக்கிச் சாற்றி, காதினிற் செவ்வரத்தை மலரினை குழையெனப் பூண்டு, மார்பினில் அரவுதனைப் பூணூலாக அணிந்து. வெண்படிங்கு மணிகளை ஆரமாகப் பூண்டு, அஞ்சுகத்தின் அணிவிளங்க அதாவது பசுமை நிற உடையணிந்து, கைகளில் அணிகொள வளையணிந்து, கால்களில் சிலம்பு ஒலிக்க, கையிற் சூலமேந்தி, முகத்தில் அருள்மிகு முருவல் தெரிய, வருமன்பின் வழி நிற்பீர்! பிரானருளே பேணுவீர் என உரைத்தவாறு வண்டமிழ் நாட்டுச் செங்காட்டங்குடி அடைந்தார் எனக் கூறப் பெறுகிறது. இத்திருமேனியை திருச்செங்காட்டன்குடித் திருக்கோயிலில் கண்டு மகிழலாம்.

தஞ்சாவூர் கும்பகோணம் வழித்தடத்தில் உள்ள திருவலஞ்சுழி என்ற தலத்தில் சில நாட்களுக்குமுன் ஆய்வாளர்களால் கோயில் இடிபாடுகளிலிருந்து ஒரு அழகிய கங்காளர் சிலை கண்டுபிடிக்கப் பெற்றுள்ளது.

(ஆனந்தவிகடன், தீபாவளி மலர் 2007 - பக்கம். 220, கட்டுரை - லலிதாராம்)

## உவமைகளின் சிறப்பு

திருப்புகலூர் அந்தாதியின் கண் அமைந்த நூறு பாடல்களில், உவமைகள் மிகக் குறைவானசு ... வே கொடுக்கப்பெற்றுள்ளன அவைகளில் ஒரே கருத்து பலமுறை அமையுமாறும் உள்ளன. மேலும் சில உவமைகள் வேறு எந்த நூலிலும் கூறப்பெறாதனவாகிய சிறப்பினைக் கொண்ட தாகவும் உள்ளன.

இரண்டாம் பாடலில், எத்தனை தான் புகழ்ந்து பாடினும் ஏதும் கொடாத கஞ்சர் முன்சென்று அவர்களைப் புகழ்ந்துப் பாடும் செயலை "பாறை வெடிப்பிற் கிடையே பாலை வார்த்த செயலை ஒக்கும்" எனப்பெறுகிறது.

மூன்றாம் பாடலில் தாமரை போன்ற விழிகள் எனத் தான் படித்துள்ளோமேயன்றி விழியே தாமரை என்பது சற்று புதிய உவமையே. உமாதேவியார் தன் கையில் வைத்திருக்கும் தாமரையானது திருமாலின் கண்கள் எனக் கூறப்பெறுகிறது.

பதினேழாவது பாடலில், நூல்கள் பலவற்றினை ஆய்வு செய்யும் புலவர்களை மலர்கள் பலவற்றையும் நாடிச் சென்றுத் தேனை உண்ணும் வண்டுகளுக்கு உவமையாகக் கூறப் பெறுகிறது.

பாடல் - 22. கற்பகச் சோலையை ஒத்த புகலூர்ச் சோலை என்பது. கண்டறியாத ஒன்று கற்பகச்சோலை. கண்ணாற் காணக்கிடைத்தக் காட்சிப் புகலூர்ச்சோலை எனவே, இப்புகலூர்ச் சோலை கற்பகச் சோலையைக் காட்டியதாகிறது. இது காணாத ஒன்றைக் கண்டது போலக் கூறும் கற்பனை வகையினதாகும். "நீர் கொடுத்த பால் தேவாமிர்தம் போல இருக்கிறது" எனக் கூறுவது ஒத்ததாகும் இது.

பாடல்-31. காம வசப்பட்ட பெண் ஒருத்தித் தன் உடல் இளைத்து ஊண் உறக்கமின்றி கிடக்கும் நிலையை கவிஞர், இளங்கன்று களினால் கடித்துத் துப்பப் பெற்ற கொடியினுக்கு உவமையாகக் கூறுவது சிறப்புடையதாகும்.

பாடல்-59. அரங்கொண்டு ராவப்பெற்ற கூர்மையான வேல்போன்ற கண்கள், மயிலிறகின் அடிப்பாகத்தைப் போன்ற வெண்மையான நிறத்தினதான பற்கள் எனப் பெறுகிறது.

பாடல்-76. வைக்கோற் போரை எரித்தழிக்கும் தீயைப் போல என் பிறவிப்பிணியை நீக்கியருள்வர் இறைவன் என இறைவனாரைக் குறித்துக் கூறுகிறார்.

மேலும் காப்புச் செய்யுள் சிலேடையணி கொம்பு, நிழல்தரல் என விளங்குமாறு அமைந்துள்ளது. தவிர சாதாரணமாக கையாளப்பெறும் உவமைகளான,1)கொடி போன்ற இடை, 4)அந்திச் செவ்வான நிறமொத்து சிவந்த வேல், 5)பொன்னங்கிரி ஒத்த கனத்த கொங்கைகள், 6)இலையைப போன்ற வடிவினதான வேல், 11)நிலவின் உதயத்தைப் போன்றுள்ள இறைவனின் புன்னகை, 16)வீணையின் இசையினைப் போன்ற மென்மையான சொற்கள், 18) மலை போன்ற உடலைக் கொண்ட யானை, 21) தாமரை மலர்களை யொத்தத் திருவடிகள், 26) இறைவன் தோன்றிய செய்தி மன்மதனை எதிர்க்க ஒரு பெண் துணை கிடைத்தது போலவும், புண்ணை ஆற்றிட மருந்து கிடைத்தாற் போலவும். 29) காதளவோடிய கண்கள் அம்புகளைப் போல உள்ளத்தைத் துளைக்கின்றன, 30) இறைவனின் கைகள் தாமரை மலர்களைப் போல சிவந்துள்ளன. 31) இறைவனின் பாதங்ககள் தாமரை மலர்களை ஒத்துள்ளன. 39) இருளைப் போன்ற கரிய விஷம், 41) மானின் கண்களைப் போன்ற கண்களையுடைய எம்பெண், 45) கல்லைப் போன்று கடினமான என்மனம், 52) தாமரை மொட்டுககளைப் போன்ற உமாதேவியின் கொங்கைகள், 56) மாவடுவின் வகிர்களைப் போன்ற கண்களையுடைய உமாதேவி, 58) மலை போன்ற மார்புடைய இறைவனார், 60) கொடிபோன்ற இடையுடைய பெண், சர்க்கரைப் பாகினைப் போன்ற இனிய சொற்களைப் பேசும் உமாதேவி, 61) கொடிபோன்ற இடையினையுடைய

உமாதேவி, 62) யானையின் தந்தங்களையும், தாமரை மொட்டுக்களையும் ஒத்த உமாதேவியின் கொங்கைகள், 64)அன்னத்தின் நடையினை ஒத்த நடையினையுடைய உமாதேவி, 69)செவ்வரத்தை மலரின் நிறமொப்ப சிவந்த மேனியராகிய இறைவர், 71)குவளை மலரின் இதழ்களை ஒத்த கண்களையுடைய தோழிகள், 74) கொடிபோன்ற இடையினையுடைய பெண், 75) பொன்போல் ஒளிவீசும் கைகள். (ஈயார் தம்மைப் பாராட்டிய பொய்யுரை), 78) தாமரை போன்ற திருவடிகள்- அன்னத்தின் நடையினை ஒத்த நடையினையுடைய பரவை நாச்சியார், 80) கெட்ட இரும்பைப் போன்று எளிதில் உருகாத மனம், 86) பச்சை மலையைப் போனற் மேனியையுடைய திருமால் (பழசு-பச்சை மாமலைபோல் மேனி), 87) வேல் போன்ற விழிகள், 90) தாமரை போன்ற திருவடிகள், 92) மலர் அம்புகள் போன்ற படுக்கை, மானின் கண்களைப் போன்ற கண்கள் 100) மலை போன்ற கை (சிவனாருக்கு) அன்னம் போன்ற நடை பார்வதி தேவிக்கு, இப்படியாக உவமானங்கள் சிறப்புற அமைந்துள்ளன.

### நெற்குன்றவாணர் தமது அந்தாதியில் திருப்புகலூரைச் சிறப்பித்துக் கூறும் செய்திகள்

1. உலகில் புகழ்பெற்ற, பழைமையான, அழகான, பொலிவுமிக்க, வளமான ஊராகிய புகலூர் தென்னாட்டில் உள்ளது. (40, 20, 57, 27, 28, 30, 26)

2. மதில்களாலும், அகழியாலும் சூழப்பெற்ற நீர் வளமிக்க ஊர்.(14,

3. கடற்கரையில் உலாவக் கூடிய சங்குகள் இவ்வூர் வயல்களில் வந்து உலாவுகின்றன.

4. அலைபாயும் நீரினையுடைய இவ்வயல்களில் தேனோடு கூடிய பூக்கள் மலர்ந்திருக்க, தேக்குமரக் கலப்பையினைக் கொண்டு உழவர்கள் நிலத்தை உழுத

காரணத்தால் அப்பூக்களில் இருந்த தேன் சேற்றோடு கலந்து வயல்கள் தேனின் வாசனை பொருந்தியுள்ளன. (88, 5, 1, 42, 44, 1, காப்புச்செய்யுள்)

5. மாடுகளை மேய்ப்பவர்கள், மரக்கொம்புகளைக் கொண்டு மாடுகளை விரட்டமாட்டார்கள் நீண்ட கரும்புகளைக் கொண்டு மாடுகளை விரட்டி மேய்ப் பார்கள்(58)

6. மிக அதிகமான விளைச்சலைத் தரக்கூடிய வயல்கள், குவளை மலர்கள் பூத்திருக்கும் (14, 5, 17, 14)

7. இப்புகலூரில் புண்ணிய தீர்த்தங்களாகிய குளங்கள் பல உண்டு. (50) இவைகளில் நிறைய மீன்கள் இருக்கும். எருமைக் கூட்டங்கள் நிறைந்திருக்கும். (12-87)

8. நீர் நிலைகளில் விரால் எனும் மீன்கள் துள்ளும்போது இரையும் நீரானது இந்திரனுடைய தேவலோக நகரமாகிய அமராவதியில் போய்த் தெறிக்கும்.(65)

9. குளங்களில் அன்னப்பறவைகள் வந்திருக்கும்-குவளை மலர்களோடு கூட தாமரை மலர்களும் மலர்ந்திருக்கும் (14, 88, 65)

10. தேவலோகத்தில் உள்ள கற்பகச் சோலையை ஒத்த சோலைகள் நிறைந்த இப்புகலூர்ச் சோலைகளில், வளர்ந்துள்ள நிழல்தரும் மரங்களில் மன்மதனின் ஐந்துவித அம்புகளுக்கும் தேவையான மலர்கள் பூத்திருக்கும்.(22,12)

11. மா, பலா, ஆகிய மரங்களோடு புன்னை மரங்கள் ஏராளமாக இருக்கும், (22, 74, 61, 54, 66)

12. செருந்தி மலர்களின் மணம் கமழக்கூடிய சோலைகள் இந்திரலோகத்தையே மறைத்திருக்கும் வண்ணம் உயரமாக இருக்கும் மேகங்களால் சூழப்பெற்றிருக்கும்.(1, 47)

*13. அன்னப் பறவைகள் உலாவரும் இச்சோலைகளில் மலர்களில் உள்ள தேனை உண்ட வண்டுகள் மயங்கி இன்னிசை பாடுகின்றன. (55, 25, 12, 2, 16, 86)*

*14. பறவைகள் பலவும் இறைதேட இவ்வூரையே நாடிவரும். எனவே பலவிதமான பறவைகள் நிறைந்து வளமான ஊர் இப்புகலூர். (7, 23, 80, 85)*

*15. நாட்டில் உள்ள வேறு ஊர்கள் அனைத்தினின்றும் வேறுபட்டது இப்புகலூர், சிவபெருமான் எழுந்தருளியுள்ள இவ்வூரில் திருமாலும் பிர்மனும் கூட வந்து தங்கி இருக்கிறார்கள். வானோர்கள் எல்லாம் சிவனைத் தொழ இவ்வூருக்கே வருகின்றார்கள். இவ்வூருக்கு வந்து வணங்கினால்தான் இறைவனின் திருவடிகளைக் காணமுடியும். (4,26,2,62)*

*16. இறைவழிபாட்டோடு கூட குடிமைத் தொழிலையும் செய்துவரும் மக்கள் நிறைந்த இப்புகலூரினர் பொய்யே பேசமாட்டார்கள். நல்ல உயர்வான நெறிமுறைகளையே கடைப்பிடிப்பவர்கள். (3, 5, 40)*

*17. செல்வ வளமிக்க இவ்வூர் மக்கள் இறைவனுடைய அருளை வேண்டி வேதங்களைப் பயில்கிறார்கள். (5, 54)*

*18. நரம்பிசைக் கருவிகளோடு விழவும் முழவம் கொண்டு, பல மொழிகளாலும் இறைவனைத் துதித்து பாடக்கூடிய இவ்வூர் மக்களின் பாடல் ஓசையானது கடல் அலைகளின் ஓசையை மிஞ்சக் கூடியதாகும். இவ்வூரில் தான் சிவனடியாரான முருகனாயனார் வாழ்கிறார். (6, 29, 25) என்பதாகும்.*

• • • • • • • • •

## சிவபெருமானாரின் திருவுருவும் அவர்தம் செயல்களும்

நெற்குன்றவாணரின் அந்தாதிச் செய்யுள் நூற்றை ஆய்வு செய்ய வேணுமாயின் மிக அதிக அளவில் சைவ சமய நூல்கள்களை மட்டுமின்றி இலக்கியங்கள் பலவற்றினையும் கற்றுக்கொள்ளவேண்டும். எனவே அதனை ஆய்வாளர்கள் ஏற்று செய்வர் எனவிடுத்து. இங்கு நெற்குன்றவாணர் பாடியுள்ள, புகலூரானைப் பாடியுள்ள, திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுநதரமூர்த்தி நாயனார் ஆகிய மூவரது தலப்பதிகங்களில் எண்பத்து எட்டு பாடல்களை மட்டும் தேர்ந்தெடுத்து, ஒப்பாய்வு செய்யும் வகையில், எதுவும் சொந்தக் கருத்துக்களை ஏற்றாமல் உள்ளது உள்ளபடி பாடல்களின் எண்களை - வெளியில் உள்ள எண்கள் நெற்குன்றவாணரின் அந்தாதியின் பாடல்களையும் அடைப்புக்குறிக்குள் உள்ளவை மூவர் பாடல்களின் எண் வரிசையையும் குறிப்பிடுவன - உடன் காட்டி, இறைவனாகிய சிவபெருமானாரின் திருவுருவ அமைப்பும் அவர்தம் செயல் களும் எவ்வாறாகக் கூறப்பெற்றுள்ளதென்பதை ஒருவாறு தொகுத்தறிய முற்படுவோமாக.

1. தாமரை மலர்களை யொத்த சிவந்த பொற்பாதன-20,90, (49)

அடியவர்கள் தம்முடைய அந்திம காலமான சாகுங் காலத்தே தொழுது பற்றும் திருவடிகள் 28, 90, (-)

திருமால் வந்து தேடியும் அவனால் காணப்பெறாத்தும். அவனால் வணங்கப்பெற்றதுமான பாதங்கள். ஆனால் அடியவர்களுக்கு எளிதில் காணக் கிடைக்கக் கூடியன. 25, 3,(20)

2. சிவனார் தமது கால்களில் வீரக்கழல்களை அணிந்திருப்பார். 23, 38, (34)

3. கைகளில் கங்கணமாக பாம்பினை அணிந்திருப்பார் கைகள் ஒளிபொருந்திய நகங்களோடு சிவந்த தாமரை மலர்களைப் போல் இருப்பன. 33, 40, 79, (35)

4. இடுப்பிலே கோவணத்தைக் கட்டி இருப்பார். - (18,58,76)

பாம்பினையும் கச்சையாக இடுப்பில் கட்டியிருப்பார்.

5. மலையைப் போன்று பெருத்த, பவளம் போன்று சிவந்த நிறத்தோடு கூட சந்தனம் பூசப்பெற்ற மார்பினர். 58,87 (--)

6. வெண்ணிறப் பூணூலோடு பாம்பினையும் பூணூலாக அணிந்திருப்பவர். 87, (18, 34)

7. கருமை நிறக்கழுத்து, திருநீலகண்டர் நஞ்சை உண்டவர்- கழுத்திலே நஞ்சையுடையவர் 9, 56, 70, (43,72,75)

கழுத்திலே பாம்பினை மாலையாக அணிந்திருப்பார். எலும்புமாலை கொன்றைப் பூ மாலை, சங்குமணிமாலை, எருக்கன் பூ மாலை, தும்பைப் பூமாலை உத்திராட்ச மாலை ஆகியவற்றோடு கூட முருகனாயனாரால் தொடுக்கப்பெற்ற கொன்றை மலர் மாலையையும் அணிந்திருப்பார். 23, 24, 29, 33, 73, 8, 40, 88, 71, 33, 31, 10, 28, 71, (37,76,41,42,14,42)

8. காதுகளில் இரத்தினங்கள் பதித்த குழைகளை அணிந்திருப்பார். 17, (1)

9. காதளவோடிய அகன்ற கண்ணினர், நெற்றியிலேயும் ஒரு கண்ணுண்டு. 29, 5, (40)

10. கைகளில்-மான், நெருப்பு, மழு எனும் ஒரு ஆயுதம், சூலப்படை ஆகியவைகளை ஏந்தியிருப்பார். ஒருகையில் பிர்மனின் மண்டையோடும் உண்டு. 10,11,13,6,33,39,31, (70,23,45,76,58,73,82,31,28,40,35,28)

*11. மின்னலின் ஒளியைப் போன்ற ஒளிமிக்க சிவந்த விரி, புரி சடையினர். 31, (1,8,28,31,34,35,36,40)*

*கொன்றை மலர், செங்கழுநீர்ப்பூ, ஊமத்தம்பூ ஆகிய மலர்களைத் தலையில் சூடியிருப்பவர். 56,19,28, (-)*

*நாகப்பாம்பு, கங்கை, பிறைநிலவு சூடியவன். 11,16,23, 33, 35, 45, 48, 50, 51, 52, 56, 69, 98 (9, 58, 59, 13, 14, 62, 37, 58,59,41,72,76)*

*12. பவளம் போன்ற நிறத்தினன், பல வண்ணத்தான் செம்பொன்னிற மேனியன், செவ்வரத்தை மலரின் நிறத்தினன், அடியார்கள் பாடிய வண்ண மானவர். 28,5,69 (5,34,46,55,22,27,58,70,76,79)*

*13. ஆடையேதும் உடுத்தாதிருப்பவர். 29 (--)*

*யானைத்தோல், கரிய மானின் தோல், புலியின் தோல் ஆகியவற்றை ஆடையாக உடுத்தியிருப்பவர். 95,76. (31,35,38,2,75)*

*நாற்றம் வீசக்கூடிய துவர் ஆடையை உடுத்தியவர்-(32)*

*14. நிர்மலமானவன், சாகாதிருப்பவன், முதுமை (மூப்பு) அடையாதிருப்பவன், ஆண்மையிற் சிங்கம் போன்றவன். பாவமேதுமில்லாதவன். 1,41,57,58,59,65, (69,72,69).*

*15. ஆண் பாதி பெண் பாதி என உடலை உடையவன். பாதி உடலை திருமாலுக்குக் கொடுத்தவன்-அதேபாதி உடலை உமாதேவிக்குக் கொடுத்தவர். 3,2,8,14,19,21,23,24, 30,32,34,36,38,39,42,52,54,56,55,60,61,62,63,66,69,70,75,76,86- (18,26,70,75).*

*16. வீரபத்திரனாய் நின்றவர்,தட்சணாமூர்த்தியாய் அமர்ந்தவர், திருமாலும், பிர்மனும் இவரே! 25,69,20. (--)*

17. இவரைப் பித்தன் என்றழைப்பர். உள்ளங்கவர் கள்வனும் இவனே. 69, 17. (--)

18. காணக்கிடைக்காதவன், கங்கைக்கு நாயகன். திருமாலுக்கும் பிர்மனுக்கும் மேலானவர், இவர்கள் சிவனின் அடிமுடியைக் காணமுயன்ற போது நெருப்புப் பிழம்பாக நின்றவர், வேதங்கள் தேடும்படி நின்றவர். தேவர்களுக்குக் காணக் கிடைக்காதபடி நின்றவர். அடியார்களுக்கு எளிமையாக எளிதில் காணக்கிடைப்பவர். 3,34,60,3,8,73,78, 13,79,20. (9,20,31,42,53,57,66,71,18)

19. புற்றை தன் இடமாகக் கொண்ட இத்திருப்புகலூர்த் தலைவர், திருநள்ளாறு, திருப்பழனம், திருவிடைமருதூர், திருவையாறு, திருவெண்காடு, வீரட்டானம், திருமறைககாடு கானப்பேர், திருக்கழுக்குன்றத்து உச்சி, திருமூலத்தானம், மீயச்சூர், திருவாரூர், மாகாளம் ஆகிய ஊர்களில் கோயில் கொண்டுள்ளவன்-கயிலையில் இருப்பவர். 22,41,63,75,50, 83,6,15. (17,73,60,48,74)

20. திருமாலே இவருடைய வெண்ணிறக் காளை யாகினார் அதன் மீது ஏறி வருவார், குதிரை மீது ஏறி வருவார், தேரில் ஏறியும் வருவார். 9,40,69,53,71,90,62,35,44. (4,22,27,35,81)

21. உமாதேவியார் அருகில் இருக்கிறார் என்ற தைரியத்தில் ஆலகால விஷத்தை உண்டவர். 9,40,51,64,100-94,29,63,69)

பிர்மதேவனின் மண்டை ஓட்டை பிச்சைப் பாத்திர மாகக்கொண்டு பூவுலகில் பிச்சை எடுத்து உண்பவர். அப்பாத்திரம் இல்லாதபோது பிச்சையை கையிலேயேயும் கூட வாங்கி உண்பார். 10,32,53,63,72,81,99- (18,37,72,32)

22. திருமாலும், பிரமனும் காணாதவாறு திருநடன மாடுவார். உமாதேவியின் முன்னேயும், பதஞ்சலி எனும்

முனிவர் காணும்படியும் ஆடுவார். சிதம்பரத்திலே, கனகசபையிலே தேவர்கள் புகழும்படி திருநடனம் ஆடுவார், நள்ளிரவு நேரத்திலே, சுடுகாட்டிலே, பேய்களுடனும் பிசாசுகளுடனும் ஆடுவார். முல்லைப் பண்ணிற்கும், உழை என்னும் பண்ணிற்கும் ஆடுவார். நெய்யாடியாகிய இவர், காதில் அணிந்துள்ள குழையைத் தொடுமாறு காலைத் தூக்கி ஆடுவார். 91,45,21,22,23,28,42,48,83,4,41-(75)

23. மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்கு வந்து கவிபாடினார், கூலியாளாக வந்து மண் சுமந்தார். 4, 14, 37, (--)

24. விநாயகரைப் பெற்றவர்-விநாயகரால் வணங்கப் பெற்றவர். 32, 31 (--)25. சுப்பிரமணியரைப் பெற்றவர், அவரை வென்றவர், வேலவன் வணங்கும்படியானவர். 31,58-(--)

26. துர்காதேவியால் புகழப்பெறுபவன். 49-(--)

27. திருமாலும் இந்திரனும் வந்து வணங்கும்படி யானவர். 82 (--)

திருமாலை வென்றவர், அவரது கண்களாகிய தாமரை மலர்களை விரும்புகின்றவர், அவருக்கு சக்கராயுதத்தைக் கொடுத்தவர், அவரை சக்கரமேந்திச் சென்று முதலையைக் கொன்று யானையைக் காப்பாற்றச் செய்தவர், பத்து அவதாரங்களை எடுக்கும்படி செய்தவர். திருமாலினால் வணங்கப்பெற்றவர், திருமாலினாலும், வேதங்களினாலும் கூறமுடியாத அளவுக்குப் பெருமை பெற்றவர். திருமாலினாலும் பிர்மாவினாலும் வேதங்களினாலும் புகழப்பட்டவர். 82,31,27,95,76,26,51,65,96,98,61,74 (--)

28. பிர்மனை வென்றவர், அவரது ஒரு தலையை வெட்டியவர். 31, 79, 82, (--)

29. சூரியனின் கண்களைப் பிடுங்கியவர், அவரது பற்களை உடைத்தவர். 79, 39 (--)

30. எமனை உதைத்தவர்- எமனுக்கு எமனானவர் 57, (39)

31. மன்மதனை எரித்தவர், அவனுக்கு அருள்செய்து அம்புகளைக் கொடுத்தவர். 5,44,55,84,97,12, (30,40,72)

32. போர் செய்வதை விரும்புகிறவர். 20 (--)

33. தக்கன் செய்த யாகத்தை அழித்து, அவனுடைய கைகளையும் தலையையும் வெட்டி அவனைக் கொன்றவர். 28,46,79,97 (39)

34. இராவணனுடைய தேரை கயிலை மலை மீது ஓடாதபடி தடுத்து, அவனுடைய தலையைத் தன் கால் கட்டைவிரலால் நசுக்கி, அவனுடைய செருக்கை அழித்து பின் அவனுக்கு அருள்செய்தவர். 15,57,67,77, (1,8,19,43,53)

35. திரிபுரங்களை எரித்தவர். 20,43,49,65,96,97, (4,12,16,41,44,71,73)

36. மேருமலையை வில்லாக வளைத்தவர். 38,43,49,65,100, (71)

37. அருச்சுனனுடன் போர் செய்து, பின்னர் அவனுக்கு அருள் செய்தார். 76, (50)

38. உமாதேவி அஞ்சும்படி ஒரு யானையைக் கொன்று பின் அதன் தோலை உரித்து தன் உடலில் போர்த்திக் கொண்டார். 6,9,18,52,53, (31,38,65,72)

39. தான் செய்துவந்த அரிய தவத்தை உமாதேவியின் பொருட்டு விட்டுவிட்டார். 97, (--)

40. முத்தொழில் புரியும் தேவர்களுக்கு மட்டுமின்றி எல்லா தேவர்களுக்கும் தலைவரானவர், தேவர்கள் தேடும் அருமருந்தானவர், தேவர்களுக்கு அமிர்தத்தைக் கொடுத்தவர். அத்தேவர்களை எல்லாம் கொன்று அழித்தவரும் இவரே! 84,59,25,70, (44,51,69)

41. அசுரர்களுக்குப பகைவனானவர்--; (44)

42. வேதநாயகன், வேதங்களுக்கெல்லாம் மேலானவன் வேதங்களால் புகழப்பெறுபவனும் இவனே! 10,13,20,32, 41,62,94, (3,63,71,73)

43. பதஞ்சலிக்கும் ஆதிசேஷனுக்கும் காட்சி தந்தருளினார். 78, (--)

44. அந்தகாசூரனின் உடலைப் பிளந்தவர்---; (38)

45. நாகர்களை அழித்தவர்---; (11)

46. சனகாதி முனிவர்களுக்கு ஞான உபதேசம் செய்தவர்.85, (--)

47. தாருகாவன ரிஷி பத்தினிகளின் ஆடை ஆபரணங்கள், கற்பு, மனம் ஆகியவற்றைப் பலியாகக் கொண்டவர். 99, (--)

48. கங்காளராக சிறுத்தொண்டனின் வீட்டுக்கு வந்து அவரது மகனான சீராளனை அறுக்கக் காரணமானவர். 24,27,(--)

49. திருஞான சம்பந்தரால் பாடப்பெற்றவர். 73, (--)

50. பறவை நாச்சியாருக்காக சுந்தரமூர்த்தியிடம் தூதுவனாக சென்றவர். 78, (--)

51. விண், மண், காற்று, நீர், தீயாகியவர், சோதி வடிவினர், ஐந்தெழுத்தினை உடையவர். 1,14,33; (-) முற்றும் உணர்ந்தவர். 5; (--)

52. அடியார்களின் குற்றங்களை ஆராய்ந்து பார்க்காத பெருந்தன்மையாளர்; பிறவிப் பிணி தீர்க்கும் மருந்தானவர், அரனே! எனப் புகழப்பெறுபவன் மூவுலகிற்கும் மூல

காரணமானவன், பூமி, வேதம், பிரபஞ்சம் ஆகியவை தோன்றக் காரணமானவர். பற்றுவதற்குத் துணையானவர், சாகுங் காலத்தேயும் அடியார்கள் முன்தோன்றி அழைத்துக் கொள்வார். செம்மையான, இனிய மனத்தினர்களான அடியார்களினாலும், பூவுலகினராலும், வானுலகினராலும் வணங்கப்பெறுகிறவர். தம்மைப் பண் கொண்டு பாடுவோர் களின் உடன் இருப்பவராகிய இறைவனார், தமது அடியார் களின் பகைவர்களை அழித்திடுவார். அவர்களின் பசியை ஒழித்து, சோறும் கூழையும் நல்கி செல்வம், மகிழ்ச்சி ஆகியவற்றைத் தருவதோடு தம்மடியார்களுக்கு பேய் பிசாசு முதலியவைகளால் உண்டாகக் கூடிய பில்லி, சூனியம் போன்ற தீவினைகள் அனுகாவண்ணம் காத்திடுவார். *45,19,26,20,6,10,30,39,70,54,67,21,43,93; (5,78,35,12,19,40,88,22,9,10,3,36,36,63,73)*

*53.* சூதாடும் கருவி, கரும்பு, மாலை, முலை, வார்த்தை கண்கள் ஆகியவற்றை ஒத்த சிவனார் ஐந்து தத்துவங்களும் விளங்கும்படியான தேகத்தினன். *53,91; (--)*

*54.* பொய்யர் தம் வார்த்தைகளுக்கு மயங்காதவர் களுக்கும், தம்மை மறந்தவர்களுக்கும் கூட அவர்களின் குறைகளைத் தீர்த்து, தமது கண்களால் பார்த்தும் சிரித்தும் உள்ள மாறுபாட்டினையும் இருளையும் அகற்றிடுவார். *14,30,43; (31,71,72)*

*55.* தம்மைப் போற்றாதவர்க்குத் தாமே எமனாவார் *29*, தன் பேரில் காதல் கொண்ட ஒரு பெண்ணுக்குத் தேமலைக் கொடுத்து அவளது மேகலையை எடுத்துச் சென்றவர், பெண் துணை வந்தது போல வந்து பயப்படாதீர்கள் என்று கூறி மறுமொழி ஏதும் கூறாது சென்றவரான இவர் பலபத்திரன் என்பவன் பற்றிடும் தூய நெறியினன். *26,44,6,43,39; (--)*

இவ்வாறு நெற்குன்றவானரொடு மூவரும் கூறியிருப் பதினை மேலும் விளக்கங்களைச் சேர்த்து பெரிய அளவில் கட்டுரை தயாரிக்கலாம்.

## நெற்குன்றவாணர் உமாதேவியைப் பற்றிக் கூறுவதாவது

1. சிவனாரின் இடப்பாகத்தினைத் தனதாக உடையவ ளான உமாதேவி, இமவான் செய்த தவத்தினாள் பிறந்தவள் (14,34,19,52)

2. கனமான கூந்தலையுடைய உமாதேவி சித்திரப் பதுமையைப் போன்று அழகானவள், மின்னற்கொடி போன்றவள்; (21,23,38)

3. பச்சை நிறத்தினள், அன்ன நடையினள். (64)

4. கழுத்திலே முத்துமாலை அணிந்திருப்பாள், யானையின் தந்தங்களையும், தாமரை மொட்டுக்களையும் போன்ற உமாதேவியின் கொங்கைகளில் குங்குமச் சாந்து பூசப்பெற்றிருக்கும். அக்கொங்கைகளின் மேல் கட்டப் பெற்றிருக்க கச்சு எனும் ஆடையானது எப்போது இற்று விடுவோமோ எனப் பயந்து கொண்டிருக்கும்.

5. கைகளில் திருமாலின் கண்களாகிய தாமரை மலர்களை வைத்திருப்பாள், தன்னுடைய வாயிதழ்களி னாலே சிவனுக்கு அமிர்தத்தையூட்டியவள். அதனா லேயே விஷமுண்டும் சிவன் சாகாதிருக்கிறான்.

நெற்குன்றவாணரின் அந்தாதிச் செய்யுள் ஒரு நூற்றில் ஒரு செய்யுளில் உள்ள நான்கு வரிகளின் முதலடியில் முதல் எழுத்தும் அடுத்த மூன்று அடிகளில் முதல் எழுத்து மட்டும் வேறுபட்டிருக்க இரண்டாவது எழுத்து முதல் மூன்று எழுத்துக்கள் மட்டும் வேறுபடாது வரும் செய்யுள் எண்.55, நான்கு எழுத்துக்கள் வேறுபடாமல் வருவது 4,9,12,22,45,75,83 ஆகிய ஆறு பாடல்கள் ஐந்து எழுத்துக்கள் ஒத்தனவாக வருபவை. 4,5,6,15,19,20,24,25,31,35,39,46,50,51, 54,58,72,81,82,84,86,88,90,93,95,99,19,20,15,6,4 ஆகிய 33பாடல்கள். இரண்டாவது எழுத்து முதல் ஏழு எழுத்துக் கள் ஒன்றாகவே வரக்கூடிய செய்யுட்கள் 3,14,23,30,

*32,33,41,42,43,52,53,59,60,63,67,69,77,78,79,85,91,100;* ஆகிய இருபத்திரண்டு செய்யுட்கள் எட்டு எழுத்துக்கள் மாறா திருப்பவை: *17,18,28,37,38,48,65,70,92,96,97* ஆகிய பதினோறு செய்யுட்கள் ஒன்பது எழுத்துக்கள் ஒன்றாய் இருப்பது செய்யுள் எண். *13.*

இவ்வாறாக எழுத்துக்கள் ஒன்றி அமைந்திடுமாறு உள்ள செய்யுட்கள் அமைந்த நூல்கள், அதுவும் நூறு செய்யுட்களும் அந்தாதியாக வரக்கூடியவை, மிக மிக அரியனவாகும். ஒன்றி அமைந்த எழுத்துக்களை செய்யுளுக்கு ஏற்றவாறு சொற்களாக்கிப் பிரித்துப் பொருள் காணுவதும் எளிதானதல்ல. கற்றறிந்த பெருந்தமிழ்ப் புலவர்க்கே கைவரும் என்க.

## ஒரு காதல் கதை

பண்டைத் தமிழர்தம் இன்பியல் வாழ்க்கை நெறிமுறைகளை நன்கு ஆய்ந்தறிந்த பெரும் புலவராகிய நெற்குன்றவாணர் அந்நெறிகளிலிருந்து வழுவாது, தம் கற்பனையை தாம் இயற்றிய இப்புகலூர் அந்தாதியில் சுமார் ஐம்பது பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

காதலன், காதலி என்பது மனித இனத்துப் பெண்ணொருத்தியும் மனித இனத்து ஆண்மகன் ஒருவனும் மனம் ஒப்பி ஏற்பதுமான நிலை. இதனைக் கடந்து இறைவன் மேல் ஒரு மானிடப்பெண் காதல் கொண்ட கதைகள் பலவுண்டு. ஆண்டாளின் காதல் "சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாள்" எனப் பெறுநிலைக்கு உயர்த்தியது என்பது அறிந்த கதை. அவற்றில் புகலூரில் வாழும் இறைவனார்ப் பேரில் காதல் கொண்ட ஒரு பெண்ணின் கதையை இக்கவிஞர் சற்றும் சுவை குன்றாது கூறியிருப்பது சிறப்புடையதாகும். இங்கு இக்கவிஞர் தம் பாடல்களின் வரிசைப்படி பார்த்தோமானால், மிகக் குறைவான அளவே குறைபாடாகக் கூறமுடியும், ஆயினும் காதலின் வளர்ச்சி முறையும் அதன் முதுமை நிலையும் நன்றாகவே கூறுப்பெற்றுள்ளது எனலாம்.

இனி செய்யுட்களின் வரிசை முறைப்படியே அக்காதலின் நிலை எவ்வாறு வளர்க்கப்பெறுகிறதென்பதை முதலிற் காண்போம்.

4. நம் கதாநாயகி இறைவனைக் காணும்போது எனது ஆவி தளர்வுற்றது என்றாள்.

இது தலைவனை முதன் முதலாக வியந்து காணும் காட்சி எனக் கொள்வோம். இப்போதப் பெண்ணின் "ஆவி தளர்வுற்றது".

5. புகலூருறை இறைவரே ! தங்களால் எரிக்கப்பட்ட மன்மதனின் காமக் கணைகள் எங்களது இரு கொங்கைகளிடையேப் பட்டுப் பெரிதும் வருத்தம் செய்கின்றன. இதனை வெளியிற் சொல்ல இயலாதாகையால், யாங்கும் சென்று எவரிடத்தும் கூறமாட்டார்கள்.

6. இப்பெண், காம வலைப்பட்டு, பிழைக்க இயலாதவளாகி உயிர் துறக்கும் நிலையினள் ஆயனள் என்று தலைவனாகிய இறைவனாரிடம் கூறியபோது, அவர் ஒரு யானையைக் கொன்று காட்டி, “பயப்படாதீர்கள் போய் வாருங்கள்” என்றார். இது தலைவன் தலைவியின் காதலை முதல் நிலையில் உணர்ந்து அப்பெண் அவ்வாறு உயிர் துறக்காதிருக்கச் செய்வேன் என சொல்லால் மட்டும் கூறாது தனது வீரத்தை வெளிப்படுத்திக்காட்டி அப்பெண்ணை நம்பச்செய்த செயல் என்போம்.

7. மாலை நேரம் வந்துற்ற போது காமத்தின் வேகம் அதிகரித்த காரணத்தால் அப்பெண் மனம் வெந்துருகித் துதித்துக் கிடந்தாள். இன்னும் எப்போது தான் வந்து இவளது தனிமையை நீக்கி இவளுக்கு மகிழ்வைக் கொடுப்பீரோ! என்றது.

8. தலைவன் வருங்காலத்து அவனது கழுத்திலே அணிவிப்பதற்காக அப்பெண் கொன்றை மலர்களால் தொடுக்கப்பெற்றதான மாலை ஒன்றை வைத்திருந்தாள். இதனைக் கண்டுவிட்ட அவளது தாயார்கள் அப்பெண்ணின் மீது கோபங்கொண்டனர். இறைவனாவது வருவதாவது வீணே இவ்வாறெல்லாம் செய்யாது மனந்திருந்துவாயாக எனக்கூறியது.

9. மன்மதனின் அம்பு பட்டு அப்பெண் துடிக்கின்றாள். இனியும் தாமதித்தால் அவளது உடல் இளைத்து அவள் கையில் அணிந்துள்ள வளையல்கள் தாமாகக் கழன்று விழுந்து விடும் நிலையினளானாள் என்றது.

13. இப்பெண் இப்போது பைத்தியம் பிடித்தவள் போல் ஆகி, உடல் வெளுத்து, கொன்றை மலர்களின் மேல் வெண்ணிற சாம்பற் பூத்தாற்போல் ஆகினள். இதனைப் பசலை நோய் என்பர். எனவே கொன்றை மலர்களைப் பார்த்து "உங்களுக்குமா பசலை நோய் வந்துற்றது. என்னை நாடி எம் தலைவன் இன்னும் வராதது போல உங்களை நாடி வந்து உங்களிடத்தேயுள்ள தேனையுண்ணும் வண்டுகள் இன்னும் வரவில்லை போலும்" என்பது கருத்து.

17. இப்பெண், இறைவனாரின் வலது பாகத்தைத் தொழலாம், ஏனெனில் இடதுபாகத்தைத் தனக்கென உமையவள் கொண்ட காரணத்தால் இனி இருப்பது வலது பாகம் மட்டும்தான் என்பது. ஆட்டை வெட்டுவதால் ஏற்படக்கூடிய கொலைப் பழியாகிய பாவமானது வெட்டுகிற வெறியாட்டக்காரனுக்காகாது, எந்தக் கடவுளுக்குப் பலியாக அந்த ஆடு வெட்டப்பெறுகிறதோ அந்த இறைவனுக்கே அப்பழியும் பாவமும் சென்றடையும். எனவே உமாதேவியார், இப்பெண் இவ்வாறு தனது காதலின் காரணமாக இறைவனின் வலது பாகத்தைக் கேட்கிறாளே என்று இப்பெண்ணின் மீது கோபம் கொள்ளுதல் முறையல்ல, அவ்வாறு அமைந்த அவளுடைய செயலுக்கு இறைவனாரே காரணம் ஆகையால் நீ கோபம் கொள்வதானால் இறைவன் பேரில்தான் கோபங்கொள்ள வேண்டுமேயன்றி இப் பெண்ணின் பேரில் அல்ல என்பது.

18. இறைவனார் இத்திசையில் உள்ளார் எனத் திசையைக் காட்டிய போதே அப்பெண் அத்திசை நோக்கித் தொழுதாள் ஆம், ஆம்! அவர்தான் என் கடவுள், அவர்தான் ஈசன் என்று பலவாறுங் கூறத்தொடங்கியதோடு மாலை வந்துற்றபோது தோன்றும் நிலவின் ஒளிக்கிரணங்கள் தன்னை நெருப்பெனச் சுடுவதாகத் தன்னிலையையும் கூறுவாள்.

22. இவ்வாறு இறைவனை நோக்கிய வணங்கி நின்றவப் பெண் "சங்கரனே! உம் மனம் மகிழ்ந்து என்றைக்கு என்னை

நாடி வ்நது உனது அன்பினைக் காட்டும் வகையில் நீர் அணிந்துள்ள கொன்றை மாலையை எடுத்து என் கழுத்தில் அணிவிக்கப் போகிறீர்களோ? என நேரிற் கேட்பது போல் கேட்பது.

23. பலவிதமான வீரதீரச் செயல்களை செய்தவரான அத்தலைவன் இப்போது மன்மதன் வந்து இப்பெண்ணின் மீது மலர்க் கணைகளை வீசித் துன்பப்படுத்துவதைப் பார்த்துங்கூட பாராதவர்போல் இருப்பது ஏனே? என்பது.

25. மனவருத்தங் கொண்ட அப்பெண் தன் ஆசையை நிறைவேற்றும் பொருட்டு தலைவனின் கொன்றை மாலையைக் கொடுத்தாலன்றித் தன் வருத்தம் தீராதென்பது.

26. இப்போதப் பெண் இறைவனாரை நேரிற் காணுகிறாள், அவளது மனம் அமைதி கொள்கிறது. மன்மதனின் போர்ச் செயலைத்தனியே எதிர்க்க இயலாத அப்பெண்ணிற்குத் தமக்குத் துணையாக மேலும் ஒரு பெண் துணை கிடைத்தது போலவும், மன்மதனின் அம்புகளினால் ஏற்பட்ட காமப் புண்ணிற்கு ஒரு மருந்து கிடைத்தது போலவும் எண்ணி அமைதி கொள்கிறாள். இது "இடந்தலைப் பாட்டுக்கிளவி முந்துறக் காண்டல்" என்னும் இன்பியல் வகை இலக்கணம் சார்ந்தது.

27. தோழியின் கூற்றாக அமைவது;- இலக்குமிக்கு நிகரான தலைவியைக் காண, இடர்மிக்க காட்டுவழியாக வர வேண்டாமென தலைவனை விலக்குகிறாள். இது "இரவுக்குறி, இறை மகளிர் இறைவனைக் குறிவழியின் விலக்கல்" என்னும் வகையது.

28. வெண்ணிலவின் தண்ணொளியே கூட சுட்டெரிக்கும் தீயாக இப்பெண்ணிற்காகிய இந்நிலையிலும் கூட தலைவனார் வாராதுள்ளாரே என்றது. நிலவொளியே தீயானா தால் இதனைச் "சந்திரோபாலம்பனம்" என்பர்.

31. மன்மதனால் வீசப்பெற்ற தென்றற் காற்றே இப்பெண்ணை நலிவடையச் செய்து "கன்று கடித்துத்துப்பிய கொடிபோல" நைந்து போயினள். இன்னிலையிலும் கூட அம்மன்மதன் தன் கொடுஞ்செயலை நிறுத்தாது மேலும் பல கணைகளைத் தொடுக்கின்றான். இதன் காரணம் புரியாது அப்பெண் தவிக்கின்றாள். எனவே தென்றற் காற்றினாலே மட்டுமின்றி மலர் அம்புகளினாலும் மேலும் துன்புற்றாள் என்பது.

32. இது தோழியின் கூற்றாக அமைவது. தலைவியிடம் "அப்பெருமான் அணிந்துள்ள கொன்றை மாலை உனக்குக் கிடைக்காது. நீ வீணே அதனை விரும்பிக் கண்ணீர் வடிப்பதால் பயன் இல்லை. ஏனெனில் அவர் முன்னமே இடப்பாகத்தே ஒரு பெண்ணையும், தலைமுடியிலே ஒரு பெண்ணையும் உடையவராக உள்ளவராதலால் மூன்றாவ தாக உன்னை ஏற்கமாட்டார்" எனக்கூறுவது.

35. தோழி, தன் தலைவியிடம் சிவபிரானைத் துணையெனக் கொள்ளாதவர் அடையும் துன்பத்தைப் போல் நீ இனியும் துன்பம் கொள்ளத் தேவையில்லை, நம் தலைவனார் ஏறிவரும் தேர் இதோ வந்துவிட்டது. அதற்கும் முன்னதாக அத்தலைவனார் எழுப்பும் வலம்புரிச்சங்கின் ஓசையும் கேட்கிறது. உன் முந்தானையை விரித்து உன் கையை மடக்கித் தலையணையாக வைத்துக்கொண்டு தூங்கு கிறாயே. அத்தூக்கத்தை நீக்கிவிட வேண்டிய நேரம் வந்து விட்டது என்கிறார்.

36. தன் பெண்ணின் நிலை கண்டு தாய் வருந்துவத- இலக்குமி தேவிக்கு முன்னால் இப்பெண் சென்றாளோ என்பது அழகு மிக்க இலக்குமி தேவிக்கு முன் அழகிற் குறைந்தவளான இப்பெண் செல்லின் இவளுக்கு மதிப்பு குறையும் என்பதால் மேலும் அவ்விலக்குமியோ பரிக்குமரி இவளோ வெறும் மானிடப்பெண் என்பதுங் கூட.

37. புல்லாங்குழல் கொண்டு இசைக்கப்பெறும் இனிய கொல்லிப் பண்ணே இவளுக்குத் துன்பத்தைக் கொடுத்தது. உடல் வெந்து, கண்ணீர் வழிய, மேனி இளைத்து நின்ற இவளை அக்காமனின் கணைகள் விடாது போலல்லவா உள்ளது.

38. இப்பெண்ணின் காமவேதனை ஒழிந்தால் தானே என் துயரம் நீங்கும் என மகளின் நிலைகண்ட தாய் கூறுவது.

40. திருப்புகலூர் வீதியில் இறைவனார் வீதி உலா வரும் போது எம்பெண் இறைவனைக் கண்டாள்-அதன் காரணமாக இப்பெண்ணிற்கு தேமல் நோயைக் கொடுத்த இறைவனாரைப் பார்த்த பார்வையினாலேயே உடல் மெலிந்த தன் காரணமாக இப்பெண்ணின் இடையில் அணிந்திருந்த மேகலை என்னும ஆபரணம் தானாகவே கழன்று விழுந்து காணாமல் போயிற்று, இறைவன்தான் அதனைத் தனக்குத் தேவை என எடுத்துக்கொண்டு போய்விட்டார் போலும் என்பது.

41. இப்பெண் தனது இடையில் உடுத்தியுள்ள சேலையானது நெகிழ்ந்து வீழ்ந்தாலும் உணராத நிலையினள் ஆயினாள். இவ்வாறான இவளது நிலைக்கு நீர்தான் காரணம், மேலும் மன்மதன் உமது பேரில் கூட தனது பலத்தை இப்போது காட்டினாலும் காட்டுவாள் போல் உள்ளது இதனால் உமக்கு மீண்டும் ஒருமுறை பழிவந்து சேர்ந்தாலும் அவ்வாறே ஆகும் போல் தோன்றுகிறது.

43. இது கிளிவிடு தூது:- "நான் எனது மனத்தை ஒருநிலைப்படுத்தி காதலின் வேகத்தைக் குறைத்துக் கொள்ள முயற்சி செய்தாலும் கூட அந்த மன்மதன் தானாக எந்த காரணமுமின்றி வீண் வம்புக்கு வருகிறான். இதனை நம் இறைவனாரிடம் நீ எப்போது போய் சொல்லப் போகிறாய்? எனக்கேட்டாள் அப்பெண். தோழியைத் தூது விடுப்பதை விடுத்து கிளியை தூதாக அனுப்பமுயல்வது-இறைவன்

இளகிய மனத்தினன் ஆதலால் இக்கிளி போய் சொன்னாலே போதும் என்ற தலைவியின் நம்பிக்கையைக் காட்டுவதாகும்.

44. தலைவன் ஏறிவரும் தேர், இன்னும் வரக் காணோமே! என்ற ஏக்கத்துடன் வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கும் தலைவியின் நிலையைக் காட்டுவது. வருவார் என்ற நம்பிக்கையை உடையவள் தலைவி:

46. இதுவும் தோழியின் கூற்றாக அமைவது. தலைவியின் நிலையைக் கூறி அவளது துன்பத்தை நீக்கிட வேண்டுமென தலைவரிடம் வேண்டுவது-"சொல்ல வேண்டிய தெல்லாம் முன்னமேயே சொல்லிவிட்டேன் இனியும் உம்மிடம் கூற ஏதுமில்லை" என்றாள்.

47. இது தலைவியின் கூற்று- ஒரு நிலவின் ஒளியானத பல சூரியன்கள் ஒன்று சேர்ந்து தன் கிரணங்களை வீசுவது போன்று என்னைச் சுட்டெரிக்கின்றது. ஆலகால விஷத்தைப் போல கொடுமை மிக்கதாக அனலைக் கக்குகின்றது. இது இப்படி இருக்க மன்மதனோ தன் கையில் வில்லும் மலர் அம்புமாக என்முன் தோன்றிவிட்டான். அவனது செயலால் மேலும் என் நிலை என்னவாகுமோ அறியேன்" என்றாள்.

48. இது "தலைவி இரங்கல்" என்னும் வகையது. இதுவும் தலைவியின் கூற்று "மடற்குதிரையை பெற்றுக்கொண்ட தாகவும் இனி இதனை மன்னர் அவைமுன் ஏற்றுவேன் என்றதுமாகும்.

"மடலேறுதல்" என்பது இன்பியலில் மிகச் சிறப்புடைய ஒன்றாகும். ஒருவன் காமத்தால், பனங்கருக்காற் குதிரையும், பனை மரத்திலிருந்து கிடைக்கும் வேறு பல பொருட்களைக் கொண்டு வண்டி முதலானவுஞ் செய்து அக்குதிரையின் மேல் ஏறுவது. மடலேறுவோன் உடலில் ஆடை ஏதுமின்றி, உடலெங்கும் திருநீறு பூசிக்கொண்டு, வேறு எவரேனும் ஒரு ஓவியனைத்துணைக்குக் கொள்ளாது, தானே தன் பெயரை எழுதித் தலைப்புறத்தே பிடித்துக்கொண்டு, ஊரின்

நடுப்புறத்தே நான்கு சாலைகள் கூடுமிடத்தில், ஒரே மனத்தினனாய், உணவும், தூக்கமும் இல்லாது, ஆடு மாடுகள் வந்து மேலே ஏறி மிதித்துச் சென்றாலும், தீ முதலானது உடலில் பட்டாலுங்கூட அதனை உணராதவனாயும் மழை, காற்று, வெய்யில் இவற்றுக் கெல்லாம் அஞ்சிடாமல், இருக்கும் நிலையில், ஊர் மக்கள் இவனது செயலைக் கண்டு, வியந்து இவனிடம் வந்து "நீ மடலேறுவது உறுதியோ? என்ன சோதனைக்குட்படுத்தி னாலும் ஒப்புவாயோ" எனக் கேட்டு அப்பெண்ணை உனக்கே தருகிறோம் எனக் கூறியபின் பூனையின் எலும்பு, எருக்கம் பூ இவைகளாற் கட்டிய ஒரு மாலையை அணிந்து கொண்டு, தான் முன்பே செய்திருந்த மடலை வீதி வழியாக இழுத்துக்கொண்டு போக, பனங்கருக்கினால் செய்யப் பெற்ற மடல் ஆதலால் அதனால் ஏதும் உடலில் கீறல்கள் உண்டாயின் அப்போது இரத்தம் வராது வெறும் வீங்கிய கீறல்கள் மட்டுமே தோன்றும்படியான உடல் உறுதியுடன் அவன் தோன்றினால் அவனால் விரும்பப்பெற்ற பெண்ணை வாரார் ஒன்று கூடி அலங்கரித்து, இவ்வாண் மகனிடம் ஒப்படைப்பர். அவ்வாறல்லாது உடலில் இரத்தம் வெளிப்படுமேயானால் இம்மடலேறிய ஆண்மகனைக் கொலை செய்து விடுவது. இவ்வாறு மடலேறுத்தல் பற்றி தஞ்சைவாணன் கோவையிற் கூறப்பெற்றுள்ளது. மேலும் குறுந்தொகை செய்யுளும் (17)

"மாவென மடலுமூர்ப பூ வெனக்
குவி முகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகினார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங் காழ்க் கொளினே"

எனவும்,

மேலும், (182)

விழுத்தலைப் பெண்ணை விளையன் மாமடன்
மணியணி பெருநதார் மார்பிற்பூட்டி
வெள்ளென பணிந்துபிற ரெள்ளத் தோன்றி
யொரு காண் மருங்கிற் பெருநா ணீக்கித்
தெருவி னியலவுந் தருவது கொல்லோ

கலிங்கவி ரசை நடைப்பேதை
மெலிந்திலணாம் விடற் கமைந்த தூதே"

எனவும் கூறுகிறது. இதுவும் தவிர நற்றிணைப் பாடல்(220) ஒன்று,

"சிறுமணி தொடர்ந்து பெருங்கச்சு நிறீஇக்
குறுமுகி ழெருக்கங் கண்ணிசூடி
யுண்ணா நன்மாப் பண்ணி யெம்முடன்
மறுகுடன் திரிதருஞ் சிறுகுறு மாக்கள்

எனவும், மடலேறுதல் பற்றிய செயதிகளைத் தருகிறது.

49. "புனத்துளதோ கணி சொல்லுகவே" என்றது தலைவன் கூற்று. "என்னை விட்டுப் பிரிந்த தலைவி இன்னும் இத்தினைப் புலத்தே வாராதிருப்பதேனோ" என்றது. "பாங்கியர் ஆடிடம் விடுத்துக் கொண்டகலப் பின்னாள் நெடுந்தகை குறிவயினீடு சென்றிரங்கல்" என்னும் இலக்கண வகையது.

51. தலைவி கூறுவது:- "அன்றொரு நாள் உம்முடன் போர் செய்த மன்மதன் இன்று என்னையும் விடாது என்னுடன் போர் செய்ய வந்து விட்டான், அவனது செயலால் எனது உயிரே போய்க் கொண்டிருக்கிறது. இதனைக் கண்ட எம்மூரார் என்னைப் பகைக்கின்றனர். என்னிலை கண்டு நீர் இரக்கம் கொண்டாலும் சரி அவ்வாறன்றி என்னை இப்படியே விடுத்தாலும் சரி எதுவானாலும் அது அவ்வாறே ஆகட்டும்" என்கிறாள்.

55. அன்றொருநாள் மன்மதன் தன்னை வந்தெதிர்த்த போது மட்டும் அவனைத் தமது நெற்றிக் கண்ணால் எரித்தார். ஆனால் அதே இறைவனார் அதே மன்மதன் இன்று இப்பெண்ணுடன் போர்ப் புரிவதால், அவள் போகத்தில் இச்சை கொண்டு சோர்வடைந்துள்ளான். எனினும் இப்போது அம் மன்மதனை ஏதும் செய்யாதுள்ளரே! என்பது.

56. மன்மதனின் அம்புகள் என்னை மட்டுமல்லாது சிவனாரையும் தான் துன்பஞ் செய்தது. என்றாள் தலைவி,

57. காதல் மிக்க எனது உள்ளத்தில் நின்று அருள்பவரே! இன்றைய தினம் உதித்த நிலவின் ஒளி, ஆலகால விஷத்தின் அக்கினிச் சுவாலையைப் போல் என்னைச் சுடுகின்றது. ஆயினும் உன்னைக் கண்டு வணங்கியவர்களுக்கு துர்மரணம் என்பது இல்லை, ஆதலால் நானும் இறக்கமாட்டேன் என்ற உறுதியுடன் உள்ளேன்.

58. சந்தனம் பூசப்பெற்ற தங்களின் மலையைப் போன்ற மார்பினைக் கண்ட இப்பெண்ணிற்கு, உலகத்தில் உள்ள துன்பமெல்லாம் ஒருசேர வந்து சேர்ந்து விட்டது. இவள் இறந்துபோகும் வண்ணம் மன்மதன் வந்து இவளுடன் கூடப் போர் செய்வதைத் தாங்கள் பார்க்காதவர் போல் இருக்கிறீரே!

59. சிவனார் இருக்கும் இமயமலையில் ஒருபெண் இருந்தாள், அவள் சிரித்தபோது அவளுடைய பற்கள் மயிலிறகின் அடிப்பாகத்தைப் போல வெண்மையாக இருந்தன. இது ஆச்சரியப்படும்படியாக இருந்தது. இது தலைவன் தலைவியின் தன்மை விளம்பல் எனும் "களவியற்பாற்பட்டது".

61. இரவு முழுதும் இப்பெண் தன் தலைவனை நினைததிருந்த காரணத்தால் அவளது, முலைகளானது விம்மியதன் காரணமாக அழுத்தம் மிகவாகி கழுத்தில் அணிந்திருந்த முத்துமாலை முலைகளை உறுத்தியது இதன் காரணமாக அவள் இரவு முழுதும் தூங்கவே இல்லை, இப்பெண் படுத்திருப்பதைப் பார்த்தால் இறந்து கிடப்பவள் போலத் தோற்றத்தினளாக உள்ளாள் என்பது.

இது காதல் வயப்பட்ட பெண்ணின் பத்தாவது அவத்தையான, மரணாவத்தையைக் குறித்தது. இவளது உடலின் உயிர் இருக்கிறதா இல்லையா எனத் தெரியவில்லை எனக்கூறுவது.

62. இமய மலையில் இறைவனார் உலாவரின் அதனைக் கண்ணுறும் பெண்களுக்கு ஏதும் ஆகாது. ஆனால் பூலோகத்தில் அவ்விறைவனார் ஒரு குதிரையின் மீது ஏறி உலாவரின் அவர் அழகினைக் கண்ணுறும் பெண்கள் இறந்தே படுவர். ஆயினும் அவ்வுலாக் கண்ட இப்பெண் இன்னும் சாகாது உயிருடன் இருக்கிறாளே! இதுவும் உம் திருவருள்தானோ என்றது.

64. தலைவியைத் தேடி வருவதாக உள்ள தலைவனை இரவு நேரத்தில் ஆபத்து மிக்க வழியில் வரவேண்டாம் என விலக்கி நல்ல வழியாகவே வரவேண்டும் எனத் தோழி கூறுவது. தலைவனின் வரவை தோழி விலக்கல் எனும் "களவியல் இரவுக்குறி" என்னும் இலக்கண வகையது.

66. தலைவன் தாமாகவே வந்து தன்னைச் சந்திக்க வேண்டுமென்று ஆவல் கொண்டவளாக இருக்கிறாள். ஆனால் அவ்வாறு அத்தலைவன் வந்தபாடில்லை எனவே இச்செயல் நியாயமல்ல வெனத் தலைவி கூறுகின்றாள்.

67. தலைவன் ஏறி வரும் தேரை வழிமறித்து நின்றுத் தொழுது, "நமது கைகளுக்கு வளையல்களை வேண்டிப் பெறுவோம் வாருங்கள்" எனத் தலைவி தம் தோழியரை அழைக்கின்றாள்.

72. இறைவன் மேற்கொண்ட காதலின் காரணமாக, அப்பெண்ணின் உள்ளத்தே காமத்தீ மூண்டது. இதனை அவிக்கும் வழியைக் கூறுங்கள் எனத் தோழியரைத் தலைவி வேண்டுவது. இது மாலை இரத்தலின் விரவிய காமமிக்க கழிபடர்க்கிழவி எனும் இலக்கண வகை சார்ந்தது.

81. இப்பெண்ணானவள் இரவு முழுதும் கண் விழித்திருந்து இறைவனைத் தன் காதலை ஏற்றதற்கடையாள மாக அவர் அணிந்துள்ள கொன்றை மாலையைத் தரும்படி வேண்டியும் கூட அவ்விறைவனார் இப்பெண்ணிற்கு ஒரு காய்ந்து சருகாய்ப் போன தும்பை மாலையைக் கூடத் தரவில்லை என்றது.

*84.* தலைவன் இப்பெண்ணின் காதலை ஏற்றதன் அடையாளமாக அவனது கொன்றை மாலையைத் தரவேண்டும் என்றது. பேதையைப் போல அழுது புலம்பிய நிலையில் உள்ள இப்பெண்ணின் பேரில் கருணை காட்ட வேண்டும் என்றது.

*85.* கட்டிய கணவனையன்றி வேறெவர்க்கும் ஒருபெண்ணின் ஆடைகளைக் களைந்தெடுக்கும் உரிமை கிடையாது எனும் விதிக்கொப்ப, எம்பெண்ணின் ஆடைகளை நீர் எடுத்துக்கொள்ளவேணும் என்றது இப்பெணணை நீர் திருமணஞ் செய்துகொள்ள வேண்டும் என்றது. திருமணஞ் செய்துகொண்டாயினும் உமது கொன்றை மாலையை நீர் கொண்ட காதலை உறுதிப்பட அப்பெண்ணிற்குத் தெரிவிக்கும் வகையில் உமது கொன்றை மாலையை அப்பெண்ணிடம் தர வேண்டும் எனக் கேட்பது.

*86.* தலைவி தலைவன் மேற்கொண்ட காதலின் காரணமாக நள்ளிறவு நேரத்தில் விரகதாபம் ஏற்பட்டுத் துன்பங் கொண்டாள். இறைவனிடம் தாங்கள் என் முன் வந்து எனது விரகதாபத்தைத் தீர்க்கவேணடும் எனவும், அவ்வாறில்லாவிடின் இரவுப் பொழுதையாவது குறைத்து வெகு சீக்கிரமாகப் பொழுதினை விடியும்படிச் செய்திட வேண்டும் எனவும் தலைவி வேண்டுவது.

*87.* இறைவனாரின் ஆதரவும், அன்பும் இப் பெண்ணிற்குக் கிட்டுமாயின் அவ்விறைவனார் என்ன வெல்லாஞ் செய்வார் எனக் கூறுவது. அவ்வாறெல்லாம் அவர் செய்யாதிருப்பதால், இன்னும்கூட உன்பேரில் அவருக்கு காதல் உண்டாகவில்லை என்பதை உணர்வாயாக எனக் கூறுவது.

*89.* உம்பெயரையே சதாகாலமும் சொல்லிச் சொல்லி யழும் இப்பெண், உம்மை நினைந்து வருந்துகிறாள், சில நேரங்களில் சிரிக்கிறாள், ஏக்கப்பெருமூச்சு விடுகிறாள். நீர்

இவளது காதலை ஏற்றுக்கொண்டு உமது கொன்றை மாலையை என்றைக்குத் தருவீரோ எனவும் தனது துன்பம் நீங்குவது எந்நாளோவென்றும் பலவாறு கூறி ஏங்கி நிற்கிறாள் என்றது.

91. இப்பெண்ணின் பொருட்டு "மடல் மா" வெனும தாளி நாளைய தினம் மலர்கின்றதென்றது.

92. இப்பெண்ணானவளின் படுக்கை மலர்க் கணை களால் ஆனது போல நோவுற்றழுகின்றாள், மனத்திற்கு இனிமையைத்தரும் புல்லாங்குழலால் இசைக்கப்பெறும் உழை எனும் பண் கூட இவளுக்கு பெருந்தீயினைப் போலச் சுடுகின்றது. இனியும் இவ்வாறே இப்பெண்ணை விடுக்காது உமது கடைக்கண காட்டி அருள் செய்வாயாக என இறைவனாரை வேண்டி நின்றது.

98. தனியாளாகி நின்ற இப்பெண்ணை மன்மதன் வந்து துன்புறுத்திகின்றான் அப்போதும் அவள், நீர் அவள் பேரில் அனபு கொள்ளாதிருக்கும் நிலையிலும் கூட உம்மைப் புகழ்ந்து "எந்தலைவனின் மேனி பவளம் போன்றது என்றே கூறுகின்றாளே யன்றி உம்மை வெறுத்தேதும் தவறாகப் பேசினாலில்லை, ஆகவே அவளது அன்பு உள்ளத்தைப் புரிந்துகொண்டு அவளை ஏற்றுக்கொள்வாயாக என்றது.

நெற்குன்றனாரின் வாழ்க்கை வரலாற்றை நோக்கும் போது அவருக்குப் பொருள் கொடுத்து உதவியதோடு இவ்வாறு ஒரு அந்தாதியைப் பாடவேண்டுமென்று கேட்டுக் கொண்டவளும் ஒரு, பெண் என்பதை நன்கு அறியலாம். அப்பெண் பதியிலாக் குலத்தவள். இறைவனையேத் தம் கணவராகக் கொள்ளும் தன்மையினள். என்றும் அவ்விறைவனாரின் நினைவொன்றையே மனத்தில் கொண்டு வாழ்பவள். இப்பெண்ணைப் பார்க்கும் போது காதல் வசப்பட்ட பெண்ணின் நிலை இவ்வாறென்பதை உணர்ந்து கொண்ட கவிஞர், அவள்பால் அன்பு கொண்டு அவளுக்காக

அவ்விறைவனாரிடம் அவளது நிலையைக் கூறும் வகையில் - பாடல்களை இயற்றியுள்ளார். மேலும் இன்பியல் துறையின் இலக்கணம் வழுவாது தோழியின் கூற்றெனவும், தாயார் நிலை, கிளிவிடுதூது, தீ வழிவிலக்கி, நல்வழி வரக்கூறல், காதல் வயப்பட்ட பெண்ணின் அவத்தைகள் ஆகியவற்றைத் தெளிவாகப் படம்பிடித்தாற் போல் காட்டியுள்ளார். ஐம்பது பாடல்களை இக்காதல் கதைக்காக பாடியும் கடைசியில் கூட அப்பெண்ணை அவ்விறைவனார் ஏற்றுக்கொண்டதாகக் கூறி முடிக்காது விடுத்துள்ளார் எனவே தமக்குதவிய அப் பெண்ணின் நிலை இவ்வாறே ஆகி நின்றதென்பதை நமக்குக் கூறுவது போல உள்ளது.

மேலும், அப்பெண்ணே கூட தன்னுடைய உணர்வு களைக் கவிஞரிடம் தெரிவித்திருக்கக்கூடும் எனக் கொள்ள முடிகிறது. ஏனெனில், ஒரு பெண் காதல் வசப்படும் போது அவள் அடையும் உணர்வுகளை ஆண் கவிஞர்கள் கற்பனை செய்து எழுதுவார்கள் என்பது நாம் அறிந்ததே என்றாலும், ஒரு சில இடங்களில் மிகவும் நுட்பமான செய்திகளை எல்லாம் இக்கவிஞர் கூறுவதைப் பார்ததால் இவரது கற்பனை மட்டுமின்றி, அப்பெண் தனது உணர்வுகளை இவரிடத்தே விளக்கமாகக் கூறியிருந்தாலன்றி இவ்வாறெல்லாம் எழுத முடியாதென்று எண்ணத் தோன்றுகின்ற வகையில் மிகவும் நயம்படப் பாடியுள்ள இவரது பாடல்களைப் பாராட்டாது இருக்கமுடியாது என்றே கூறலாம்.

---

சிவக்கொழுந்து தேசிகர் என்பார் இயற்றியுள்ள - கோடீச்வர கோவை என்னும் நூலில் காதலின் இலக்கண வகை அனைத்தும் வரிசையாகக் கூறப்பெற்றுள்ளது. (த.ஸ.ம. நூலகம்-எண்.10904)

## மாரன் கதை

புலவர் நெற்குன்றவாணர் தமது "புகலூர் அந்தாதியின்" நூறு பாடல்களில் (9) "கடற்றானை" எனத் தொடங்கும் பாடலில் "மாரன் கை அம்பு பெற்றாள்" எனவும், பாடல்-12ல் மாரற்கு அம்பு தரும் காவிரிக்கும் புகலூர், மன்மதனுடைய வில்லிற்கான அம்புகள் ஐந்துவித மலர்களைக் கொண்ட ஐந்து அம்புகள் எனவே இவவைந்துவிதமான பூக்களும் புகலூர் வனங்களில் நிறைந்திருக்கின்றன என்கிறார்.

பாடல் 26ல் "மதன் முந்த" எனவும், பாடல் 31ல் "குன்றர் உந்தும் திரை வேலையர்" என்ற பாடலில் "தும்பையும் வாகையும் சூடிய வில்லி" என மன்மதனைக் குறிப்பிடுகிறார். போரில் வெற்றிபெற்ற மன்னன் சூடும் மாலைகள் இவை, சிவனின்மேல் போரைத் தொடுத்த மாரன் மாண்டான் எனினும் அவனது நோக்கம் நிறைவேறினமையல் அம்மாரன் வெற்றியே பெற்றான் என்பது பாடல்-37ல் "மெல்லியலை வந்தவேள் கணை விடுமோ" என்றும், பாடல்-41ல் "வெய்ய காமன் நின்ற நிலை" எனவும், பாடல் 42ல் ஆலைச் சிலை கொண்ட அனங்கள் எனவும் பாடல் 44ல் சிவனின் நெற்றிக் கண்ணின் அனலை அம்பாகப் பெற்றவன் மாரன் எனவும், பாடல்-47ல் "விற் குவித்த மாரன் தோன்றினான்" எனவும், பாடல்-51ல் "போராக வன் படை எய்தவன்" எனவும், அடுத்த பாடல்-52ல் "செங்கை அம்பு மதன்" "செயம் பெற்றதே-வெற்றிபெற்றவனே" எனவும், பாடல்-54ல் மதுமலர் அம்பு-மாரன் எனவும் பாடல்-55ல் வில் கரும்பாக- வடிவிலி எனவும், பாடல்-56ல் கடுங்கணை-மாரன் எனவும், 58ல் "போகைக்கு மாரன் பொருதுவான்" எனவும், பாடல்-72ல் மாரனின் கரும்பு வில்லைப் பற்றியும், பாடல்-84ல் காமன் எரிந்த செய்தி யையும், கடைசியாக 98ம் பாடலில் "பேதை நெஞ்சம் பருக-இரா-உருவமில்லாத-மன்மதன் வருவது பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

ஆக நூறு பாடல்களில் இருபது பாடல்களில் மாரனைப் பற்றிய செய்திகள் வந்துள்ளமையைக் காணலாம். எனவே அந்த மன்மதனைப் பற்றிய சில செய்திகளை நாம் அறிய முயல்வோமாக.

1. தொல்காப்பியத்தில் காமனைப் பற்றிய செய்தி ஏதும் இல்லை, ஆதலால் "மன்மதன்" என்ற காமதேவனின் படைப்பு, தொல்காப்பியரின் காலத்திற்கும் பிற்பட்டதே என அறிஞர்கள் கூறுவர்.

2. கலிங்கத்துப்பரணி, வில்லிப்புத்தூராரின் மகாபாரதம், குற்றாலக் குறவஞ்சி ஆகிய நூல்களில் மன்மதன் தன்னுடைய மலர்க் கணைகளால் சிவனின் தவத்தைக் கலைத்த செய்திகள் கூறப்பெற்றுள்ளன.

3. இளங்கோ அடிகள் தமது சிலப்பதிகாரத்தில், (கானல்வரி-9, வரி-59-62)

"வெங்கண் நெடுவேள் வில்விழாக் காணும்
பங்குனி...............
சோம குண்டஞ் சூரிய குண்டந்துறை
மூழ்கிக் காமவேள் கோட்டம் தொழுதார்
கணவரொடு தாமின் புறுவர் உலகத்துத்
தையலார் - போகஞ்செய் பூமியினும் போய்ப்
பிறப்பர்"-என்பார்.

4. "எண்ணமதலாமை பண்ணு, பிற்பிறப்பிடிய
நூறும் மண்ணியல் புகழை மாய்த்து-வருபழி
வளர்க்கு மானத்தின் மையை யுடைக்கு மாண்மை
திருவொடு சிதைக் குஞ்சிந்தை கண்ணொடு கலக்கு
மற்றிக் கடைப் படுகாம மென்றாள்

என யாசோதர காவிய-பாடல் 126 கூறும்.

5. கலித்தொகையில்-உயர்ந்தவன் விழவு, வில்லவன் விழவு எனவும் குறிப்புகள் உண்டு.

6. சீவக சிந்தாமணியிலும் பெருங்கதையிலும் காமவேள் கோட்டம் என்ற செய்தியுண்டு.

7. நாச்சியார் திருமொழியில் காமனின் தம்பியாகிய "சாமன்" என்பானை வணங்கும் பாடல் உண்டு.

8. கந்தபுராணத்தில் காமதகனப் படலத்தில் மன்மதன் சிவனின் தவத்தைக் கலைத்து எரிந்த கதையைக் காணலாம்.

9. நான்குவேதங்களில் முதல் வேதமாகிய "ருக்" வேதம், காமனை ஆன்மாவின் முதற்பிறப்பு என்று கூறி இம்மன்மதன், தருமத்தின்-உண்மையின் புதல்வன் எனவும்-திருமாலாகிய கிருஷ்ணனுக்கும் ருக்மணிக்கும் பிறந்தவன் எனவும் இவனது பெயர் "பிரத் யும் னன்" எனவும் கூறும்.

10. வாமன புராணம்-சிவனின் தவத்தைக் கலைக்க வேண்டி மலர்களை எய்த காமனை நெற்றிக்கண் கொண்டு சிவன் எரித்த பின்னர் தான் கிருஷ்ணனுக்கும் ருக்மணிக்கும் பிள்ளையாக மன்மதன் பிறந்தான் என்று கூறி கதையைத் தொடர்கிறது.

11. பாகவதமும், விஷ்ணு புராணமும் வாமனபுராணக் கதையைத் தொடர்ந்து, இறந்துபோன மன்மதன் வைகுண்டத்தை அடைந்து ரதியை மணந்து வாழ்ந்தனர் எனக்கூறும்.

12. கிரேக்கக் கடவுளான "ஈராஸ்" என்பவனுக்கும், இலத்தீனியக் கடவுளான "கூபிட்" என்பதற்கும் ஒப்பான தெய்வமாக மன்மதனைக் குறிப்பிடுவர். மனித இனப் பெருக்கம் அடைவதறகான காம உணர்வைத் தூண்டக் கூடிய தெய்வம் என மன்மதனைக் கூறுவர்.

13. புத்தமதக் கோயில்களில் ஒன்றான "புத்த அபிதாபா" என்ற கோயிலில் மன்மதன்-ரதி சிறபம் உண்டு. ஆயினும் மன்மதனை புத்தமதம் தீய கடவுள் என்று கூறும்.

14. மீன் சின்னமுடைய ஜைனக் கடவுளாகிய யக்ஷினி-குசுமாலினி என்ற கடவுளுக்கு இணையாக மன்மதனைக் கூறுவர்.

15. மகாகவி காளிதாஸர் "குமார சம்பவம்" என்னும் நூலை எழுதும்போது மன்மதனின் அழகில் மயங்கி கவிதை வரிகளையே தவறாக எழுதிவிட்டார்.

16. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பெற்ற காளிகாபுராணம் எனும் சமக்கிருத நூலில், காமனின் தோற்றம் பற்றியும, தட்சப்பிரஜாபதி என்பவனின் வியர்வை யிலிருந்து தோன்றியவள் தான் ரதி எனவும் கூறும்.

இந்நூலில் -மன்மதன்-காமன்-மதனன், தர்பகன், கந்தர்பன் என ஐந்து பெயர்களை மாரனுக்கு கூறுகிறது. இக்காவியத்தின்படி மன்மதன் பிர்மாவின் மனதிலிருந்து பிறந்தவள் எனக்கூறும்-இது ஒரு பெரிய கதை சொல்லும புராணம்.

17. **பிங்கல நிகண்டு:-** மன்மதனின் பெயர்களைப் பற்றிக் கூறும்-மான் மகன்-மதனன், மகரக்கொடியோன், வேனிலாளி, வேள், வசந்தன், அங்கசன், அனங்கன், ஐங்கனைக் கிழவன், திங்கட்குடையோன், தென்றல் தேரோன், மதிசகன், இரதிகாந்தன், மாரன், மனோபவன், மனோசன், மனோபு, மன்மதன், திருமகன் மைந்தன், சம்பர சூதனன், உருவிலி, கடன் முரசோன், கை தைச்சுரி கையன், கந்தர்ப்பன், சித்தசன், பூவாளி, பூமன், கருப்பு வில்லி என முப்பத்திரண்டு பெயர்களைக் கூறுகிறது.

18. **அபிதான சிந்தாமணியில்** கூறப்பெறும் செய்திகள். காமன் ஒரு அரசன். அவனுடைய கையில் வில், கரும்பு, அவன் அணிந்திருக்கும் மாலை இலஞ்சிப் பூக்களால் கட்டப் பெற்றது. வில்லுக்கு நாணாக இருப்பவை வண்டுகள்; ஐந்துவித அம்புகள் உண்டு. கொடி-மீன், படைவீடு, சோலைகள்; பெண்கள் அவனது படை வீரர்கள்; தென்னம்

பாளையைக் கொண்டு கவரி வீசுவர்; தாழை மடல் கை வாள்கள். அவனது தேரை இழுப்பவை, குதிரைகளுக்குப் பதில், கிளிகள், தென்றலே தேராகியது. இருள் மன்மதனின் பட்டத்து யானை, கடல் முரசு, குயிலின் ஒலியே எக்காளம்; சந்திரன் வெண்கொற்றக் குடையாய் நிற்கிறான். மன்மதனின் விற்கள் மூன்று பூவில் இது கொண்டு தேவர்களின் மேல் அம்பு எய்வது, கரும்பு வில் மானுடர்க்காக, அசுரர்களின் மேல் அம்பு விட இரும்புவில் உண்டு, அம்பாகும் ஐந்து மலர்கள் அரவிந்தம், இதனை நெஞ்சிற் குறி வைத்துவிட, மாம்பூ கொங்கைகளை நோக்கி விடுவான். அசோகம்-கண்களுக்கு, அசோகம் பெண்களின் தலைக்கு, நீல மலர் அம்பு பெண்களின் அல்குலை நோக்கி எய்தப்பெறும்.

அரவிந்த அம்பினால் அடிபட்ட ஆண்மகன் தன் காதலியைப் பற்றிய ஓயாத நினைப்பிலே வெந்துருகுவான். பெண் தன் காதலனின் நினைவறாதிருப்பாள். மாம்பூவின் அம்பு பசலை நோயைத தருவது, அசோக மலரம்பு-உணவு செல்லாமல்-பாலும் கசந்ததடி படுக்கையும் நொந்ததடி என்ற நிலையைத் தருவது, முல்லை சோகத்தைத் தருவது நீல மலரம்புபடின் மரணமே ஆகிடும்.

இனி மாரனின் பெயற்கேற்ப அவனது செயல்களைக் காணின்-மதன்- அதிகமான காமத்தில் அமிழச் செய்பவன் மன்மதன்-மணத்தை சலனப்படுத்துவான். ஸ்மரன்- ஆண் மாவின் இச்சையிலிருந்து தோன்றுபவன்; கர்ஸனி-கிருஷ்ணனின் மகன்; தர்பகன்-தீபகன்-இளமைத் தோற்றத் துடன் கையில் பூச்செண்டு வைத்திருப்பான்; பிரத்யும்னன், அனைவரையும் வெற்றிகொள்பவன்-குசுமேசு-மலர்க்கணை களைக் கொண்டிருப்பவன்-காமனன்-காம வடிவினன்; காலக்கேளி-மகிழ்ச்சி வடிவினன்; மாயன்-மயக்குபவன்-மது தீபன்-தேனொழுகும் மலர்களால் ஆன வில்லையுடையவன்-முகிரன்-காம உணர்வினைத் தூண்டுபவன்; முர்முரன்-அணையாத காதல் வடிவினன்; இராகவிந்தன்-காமத்தோடு ஒளிந்து விளையாடுபவன், ருபேந்திரன்-அழகின்

ஆயுதமானவன். சாமந்தகன்-மனதை நிலைகொள்ளாது அலைக்கழிப்பவன், சம்சார குரு-உலக ஆசிரியன்; வாமன்-அழகன், இரதமாரீசன்-சிற்றின்பத்தே தோய்ந்து கிடப்பவன்.

இளவேனிற் காலமே காம உணர்ச்சியின் உச்சகட்ட வெளிப்பாட்டிற்கு ஏற்ற காலம். இது உழவர்களின் ஓய்வுக் காலம். திருமணம் ஆகாத பெண்கள்-தங்களுக்கு சிறந்த கணவனைத் தரவேண்டியும், திருமணம் ஆன பெண்கள் தங்களின் கணவர் தங்களைவிட்டுப் பிரியாது என்றும் அன்போடு இருக்கவேணுமெனவும் வேண்டி நோற்பதுவே "காமன் நோம்பு"-(மஞ்சரி இதழ், ஜூன் *1980*, கட்டுரை "வசந்த விழா" - நாராயணசாமி-ஆர்-பார்க்க) Kaman Nonbu By Seethalakshmi-Inter National Institute of Tamil Studies - Madras-20-*1980* பார்க்கவும்.

மதன மகாவிழா-மதன சதுர்த்தி-இது காமனின் பிறந்தநாள் விழாவைக் குறித்தவிழா-சித்திரை மாதம் வளர்பிறை பதினான்காம் நாள் இதற்கும் முதல் மதன திரியோதசி என்பர். பலவிதமான பொருட்களை ஏழை எளியவர்களுக்குத் தானமாகக் கொடுத்து இவ்விழாவினைக் கொண்டாடுவர். கேரள நாட்டில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது. நாகை மாவட்ட வேதாரண் யத்தை அடுத்த ஆறுகாட்டுத்துறை எனும் மீனவ கிராமத்தில் ஆண்டுதோறும் மாசி மாதம் பௌர்ணமியன்று காமன் கதை நாடகமாக இரண்டு நாட்கள் நடத்தப்பெறுகிறது. தொடர்ந்து விழாக்களும் சிறப்பாக கொண்டாடப் பெறுகிறது.

தன்னுடைய காமக் கணைகளை ஈசன் பேரில் விடுத்து, அவர்தம் தவத்தைக் கலைத்த குற்றம் நீங்கும் பொருட்டு, எரிந்து போன தன்னை மீண்டும் உயிர்ப்பித்தமைக்காகவும் நன்றி செலுத்தும் வகையில் மன்மதன் இப்பூவுலகில் பல இடங்களில் சிவனுக்கு கோயில் அமைத்து வழிபட்டான். அவைகள்,

1. காமேஸ்வரம்-இது பாண்டிச்சேரிக்கு அருகில் உள்ள வில்லியனூர் - இவ்வூரின் புராணப்பெயர் வில்வநல்லூர்- வில்வ மரக்காட்டின் இடையே இருந்தமையால்- பின்னர் வில்லிய நல்லூர் ஆகியது.

2. திருச்சிராப்பள்ளியை அடுத்துள்ள லால்குடிக்கு வடக்கே 3 கி. மீ. தொலைவில் உள்ள பூவாளூர், மன்மதனைப் "பூவாளியன்" என்பர். (வாளி-அம்பு) இவ்வூரின் புராணப் பெயர்கள்: மன்மதபுரம், புஷ்பதனுபுரம், காயாபுரி, வில்வவனம் என்பன. மேலும் பெரிய புராணத்தில் இவ்வூர் "காமர் பதி" எனக் குறிப்பிடப்பெறுகிறது. மூலவர் பெயர் திருமூலநாதர் - அம்பாள் - குங்கும சுந்தரி- ரதி அம்பாளை குங்குமததினால் அருச்சித்து வழிபட்டமையால் இப்பெயர்.

3. கும்பகோணத்திற்கும் மயிலாடுதுறைக்கும் இடையில் உள்ள குத்தாலம் - சிவன்-மன்மதேஸ்வரர்- அம்பாள்-ஆதிசத்தி-இங்குள்ள சிவன் கோவிலுக்கு அருகில் "காமுட்டிகோயில்" என்ற சிவாலயத்தில் ஆண்டுதோறும் மன்மதன் விழா கொண்டாடப்பெறுகிறது.

4. காஞ்சீபுரம் - இங்குள்ள சர்வ தீர்த்தக் குளத்தின் தென்கரையில் சிவாலயம் உள்ளது. காமேஸ்வரம் என்று பெயர்.

5. அட்டவீரட்டானத் தலங்களில் ஒன்றான கொருக்கை- இதுவே சிவன் மன்மதனை அழித்த தலம் என்பர்- வில்லியனூருக்கு அருகில் உள்ளது.

6. சிற்பங்கள்: 1. திருவல்லிக்கேணி பார்த்தசாரதிக் கோயில், இங்கு கிருஷ்ணர் தமது மனைவியாகிய ருக்மணியுடன், அண்ணன் பலராமன் தம்பி சாத்தகி, மகன் பிரத்யும்ணன் எனும் மன்மதன், பேரன் அநிருத்தன் ஆகியோருடன் கூடிய சிற்பத்தைக் காணலாம்.

2. சிதம்பரம் நடராஜர் ஆலயம்: தென்னிந்திய புராணங்களின்படி, மன்மதனுக்கு ஒரே மனைவி ரதி என்பதாகத்தான் உள்ளன. ஆனால் வட இந்திய புராணக் கதைகள் மன்மதனுக்கு "பிரக்ரதி" என்ற இரண்டாவது மனைவி உண்டு எனக் கூறுகின்றன. இதன்படி சிதம்பரம் நடராஜர் ஆலய கோபுர சிற்பத்தில், மன்மதன் தமது இரு மனைவியர்களுடனங் ஊர்வலம் வருவதான சிற்பம் கோபுர மாடத்தில் காணலாம்.

## திருப்புகலூர் அந்தாதி
## செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

**(எண்: செய்யுளெண்)**


அஞ்சக்கரவரி 33
அடைக்கலனா 99
அத்தக்கமல 10
அரச மலங்கு 68
அரிய தரத்த 64
அருந்தவரந்தணர் 59
அருளோதனம் 93
அலங்கலையிற்கயல் 35
அவசங்கராசல 95
அழவிடைக்கேயுரல் 90
அறிவரியாரு மயனும் 24
அன்பரத்துக்களை 21
அன்றரத்தக்கவின் 28
அன்றிருக்கைக்கும் 67
ஆண்டவம்பஞ்சு கொண்டு 42
ஆதரவா மனம் 88
உகந்தந்த வாமத் திடத்தே 66
உழைக்கையிலைத்தரு 6
உள்ளத்திருக்கு 30
உரைசெய் காப்பு
உரைத்த வப்பாவை 14
ஊராக வன் பகை 51
எய்த வந்தப் புரம் 97
என்பணி யத்தர் 40
என்றை யலங்கலை 85
என்னை யன்பால் 73
ஏற்றர விந்தப் புனிதை 49
கங்கையம் போருகம் 52
கடற்றானை மானும் 9
கடுங்கால கால 57
கண்டரிகைக்கு 27
கலைக்கு முழைக்கும் 41
கற்பதையத்தனை 32
காணப்பணி மன்றுள் 45
கிடைப்பர வைக்கும் 78
குனித்தரங்கத்துறை 48
குன்றருந்துந்திரை 31
கெட்ட விருப்பு மனமே 80
கொடியா தரிக்கும் 61
கொள்வன சங்கத்த 17
கோமள வாமத்த 19
சங்க மலைக்கும் 36
சங்குக் கைக்குத்தர 43
சாவிலையாக வக்காமனை 84
சிரந்தரிக்கும் கையர் 11
சூலத்திருப்புக்கு 70
சேவகராக வத்தக்கன் 25
சேவடி வந்திருப்பவர் 4
சொல்லலை யாறு சமய 50
சொல்லியலைச் சங்கம் மேவி 37
தகைமாலை யாகத்தை 46
தந்தமருந் துயர் 26

தலைக் கண்ணியன்
சடை 34
தாரக் கடுக்கை யவர்கசு 8
திருப் பதத் தத்தி கிரி 96
துயரந்த காமலெவரும் 39
தேரிரவிக்கு முன்
காகளம் 72
தொண்டகலா
மதியன்பர் 16
தொழுந் துதிக்கைக்கு 18
தோகைக்குமாரவரை 58
தோற்றந்த
மாவிவனசம் 62
தோற்றுவராகவரி 87
நங்களங்கம்பித்திட 13
நடுக்கண்டனை
யல்லை 56
நளி நகத் தாமரை 79
நிலாவம்பராவிதழ் 29
நினையா வருந்து
நகைக்கு 89
நின்னகத்தைப்பணிந்து15
நோக்கமருக்கும் விழி 2
படவரவப் பணிமெய் 23
படையிலங் கைக்
குரங்கை 77
பணிப் பாயலையுடை86
பதியையன்றானு
மரியும் 82
பத்தரத்தத்தி லறுகு 89
பரிக்குமரிக்குவிழியான 3
புரிதவத்தைக்குறித்து 94
பூக்கமலத்து விழி 1
பெற்றத்துவந்திவ் வகல் 53
பேதம் பலவன் பிதாவும் 74
பொழுதுகத்தும் பெரிதான81
போதகத் தாவர் புணரி 20
போமென்று வந்திப்
புதுமாலை 7
மலரப் பணையி
லுழை 92
மலராக வைங்கணை வில்55
மற்றிலை யாவி தளரும 83
முருக விராமன் முடியா 98
முழங்காரணம்
பயிலும் 54
முன்னஞ் சயிலத்தருக 100
மைக்குவளைத்துயில் 71
மொழிப்பாகருந்தியும் 60
வருகாவிரிக் கெதிர் 12
வரைத்தவ ராலமரார் 65
வல்லிக் குழைமுலை
வார்த்தை 91
வன கனகற்பகக் கா 22
வாசவ னந்தரந்
தூர்க்கின்ற 47
வித்தக னத்
துப்பனைய 5
விழியன லங்கணை
மார 44
வெற்பாசனத்தார்
திருப்புகலூர் 63
வேய்ந்த சலஞ்சலம் 38
வைப்போ ரரிக்கு
மழல் 76

நெற்குன்றவாணர் சமக்கிருத மொழியை நன்கு கற்றவர். அவர்தம் நூறு அந்தாதிப் பாடல்களில் எண்பதுக்கும் மேற்பட்ட சமக்கிருதச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். அவைகளைப் பற்றிய செய்திகள் - பொருளுடன்.

| சொல் | பாடல் எண் | பொருள் |
|---|---|---|
| அகிலாண்ட வல்லி | 22 | உலகநாயகி - உமை. |
| அங்கம் | 13,37 | உடல் |
| அசம் | 77 | ஆடு - (பிராணி) |
| அசலம் | 5,38 | மலை |
| அசனம் | 63 | ஆசனம், இருக்கை |
| அதரம் | 64 | கீழ் உதடு |
| அத்தம் | 10,32,69 | கை |
| அதிசீதளம் | 16 | மிக குளிர்ச்சியான |
| அந்தகாரம் | 38 | இருள் |
| அநுசம் | 94 | உடனே, அப்போதே |
| அகால மரணம் | 57 | இளவயதில்-விபத்தில்-இறத்தல் |
| அம்பரம் | 29 | ஆடை (பட்டுப்பீதாம்பரம்) |
| அம்புயம் | 63,68 | தாமரை |
| அமலம் | 1 | மிகத்தூய்மையான |
| அமுதாசனத்தர் | 63 | அமிர்தத்தையுண்ட-தேவர்கள் |
| அயன் | 3 | பிரமன் (பிர்மதேவன்) |
| அரத்தம் | 28,64 | இரத்தம் |
| அரவிந்தப் புனிதை | 49 | துர்க்கை (பெண் தெய்வம்) |
| அரன் | 87 | சிவன் |
| அரி | 96, 76,82,61,11,24,64 | திருமால் |
| அவசம் | 94, 95 | வசமின்மை-தன் கட்டுப்பாட்டில் இல்லாமை |
| அற்பாசனத்தார் | 63 | தேவையான அளவு உணவு கிடைக்காதவர்-அரைவயிறு-கால் வயிறு-உணவு |
| அனக | 22, 75 | பாவங்கள் செய்யாதவன் |

| | | |
|---|---|---|
| அனங்கன் | 42 | உடலிலி-உருவிலி-(மன்மதன்) |
| அனந்தரம் | 47 | உடனே, அப்போதே |
| அனந்த ரவி | 47 | கோடி சூரியர் |
| இக்கு | 7,72,76,91 | கரும்பு |
| இட்ட இருப்பு | 80 | தங்குவதற்கு விருப்பமான இடம் |
| உகத்தும் பெரிதான் | 81 | யுகத்தைவிட நீண்ட காலம் |
| உத்தரம் | 43 | வடக்கு-திசை |
| கங்காளர் | 24 | முழு எலும்பு மாலை அணிந்த சிவன் |
| கஞ்சக் கரவர் | 33 | செந்தாமரையை கையில் உடையவர் |
| கபாலி | 81 | மண்டை ஓட்டைக கையில் ஏந்திய சிவன் (காபாலிகன்-ஒருவகை அடியார்கள்) |
| கமலம் | 10 | தாமரை மலர் |
| கராசலம் | 95 | யானை |
| கலாமதி | 15 | நிலா, கலை-வளர்தல் |
| களங்கம் | 13 | குற்றம் |
| கனகம் | 22 | பொன் |
| காலகாலன் | 57 | எமனுக்கு எமன்-சிவன் |
| கிரிக்குமரி | 3 | மலைமகள்-உமை-பார்வதி |
| கோமளத்தர் | 31 | தாமரை மலரினைக் கையில் உடையவர் |
| கோமளம் | 18 | அழகிய பெண் |
| சங்கரர் | 42 | சிவன் |
| சங்கரன் | 24,94 | சிவன் |
| சடாடவியர் | 31 | அடர்ந்த தலைமுடியினன்-சிவன் |
| சதுமுகன் | 26 | நான்முகன்-பிரமன் |
| சலம் | 35,38 | நீர் - (ஜலம்) |
| சீதர வாமன | 88 | திருமால்-வாமன அவதாரம் |
| சேகரம் | 19 | தலைமுடி |
| சேவகர் | 25 | பணியாட்கள்-உதவி செய்வோர் |
| தக்கன் | 39 | தட்சன்(பார்வதியின் தந்தை) |
| தகனம் | 5 | எரியூட்டுதல் |

| | | |
|---|---|---|
| தாண்டவம் | 42 | ஆடுதல்-ஆடல்-நடனம் |
| துட்டவிருப்பு | 80 | கெட்ட-தீய-ஆசை |
| துவசம் | 97 | கொடி (கம்பத்தில் ஏற்றும் துணிக்கொடி |
| நகம் | 22,75 | மலை |
| நிரந்தரி | 11 | என்றும் நிலையாக இருப்பவள் |
| நிருத்தம் | 41 | ஆடல், நடனம் |
| நின்மலன் | 29,41 | குற்றமில்லாதவன் |
| பங்கயம் | 3, 90 | தாமரை |
| பரதம் | 21 | நாட்டியம், நடனம் |
| பவன் | 83 | பிறப்பு, பவசாகரம்-பிறவிக்கடல் |
| பன்னகம் | 15 | பாம்பு |
| பாகீரதி | 11 | பகீரதனால் கொண்டுவரப் பெற்ற கங்கை |
| பாவகர் | 25 | தூய்மையானவன்-தீயைப் போன்ற |
| பிதாமகன் | 74 | பிரமன் |
| புண்டரீகம் | 63 | தாமரை |
| பூதரம் | 88 | மலை |
| பேதம் | 74 | வேறுபாடு,வேற்றுமை |
| மத்தகம் | 5 | நெற்றி |
| மதி | 16,82 | நிலா |
| மது | 1 | தேன் |
| முராரி | 44 | முரனைக்கொன்ற திருமால் |
| ரதம் | 21 | சுவை, நவரசம், அறுசுவை |
| ராகம் | 25 | ஆசை-விருப்பு |
| ரணமுகம் | 20 | போர்க்களம் |
| ராகவன் | 25 | இராமன் |
| வராகம் | 87 | பன்றி |
| வனசம் | 17, 62 | செந்தாமரை |
| வாமம் | 19,66 | இடப்பாகம் |
| விந்தப்புனிதை | 49 | துர்க்கை |
| வெற்பாசனத்தர் | 63 | மலையை இடமாகக் கொண்ட ஈசன் |
| வேதகத்தா | 20 | வேதத்திற்குக் காரணமானவன். |

## திருஞான சம்பந்த மூர்த்தியின் சுவாமிகளின் திருப்புகலூர்த் திருப்பதிகங்கள்

*இராகம்: நாட்டை பண்-நாட்டை தாளம்-ரூபதம்*

குறிகலந்தவிசை பாடலினானசை யாலிவ்வுல கெல்லாம்
நெறிகலந்ததொரு நீர்மையனாயெரு தேறிப் பலிபேணி
முறிகலந்ததொரு தோலரை மேலுடை யானிடம் மொய்ம் மலரின்
பொறிகலந்த பொழில் சூழ்ந்தலே புய லாரும் புகலூரே! (1)

*பொருள்: இசையோடு கூடிய பண் எனும் பாடல் களால் புகழப்பெற்றவனும் முறையான சமய நெறி வழி நின்று வாழ்பவர்களுடன் கூட ஒன்றியிருந்து அவர்களுக்கு அருள்செய்யும் ஒப்பற்ற தன்மையனும், எருதெனும் ரிடப வாகனத்தேறிடுவோனும், பலியினை விரும்புகிறவனும், புலித்தோலை இடையாடையாக அணிந்தவானுமாகிய சிவபெருமான் வாழுகின்ற இடம், வண்டுகள் நிறைந்த (மலரினின்றும்) தேனை எடுத்துண்ண வேணடி) மலர்கள் செறிந்த வனங்கள் நிறைந்த, மேகங்கள் தவழ்கின்ற புகலூர் ஆகும்.*

*கலந்த + இசை-கலந்தவிசை; நீர்மையன் - குற்ற மில்லாதவன்; முறி - புலி; பொறி - வண்டு; புயல் - மேகம்; தோல்+அரை+மேல்+உடையான் - தோலரை மேலுடையான். பலிபேணி என்பது அசுரர்களையும் தீயோர்களையும் அழித்தல் என்பதே அன்றி, வழிபாட்டின் போது உயிர்ப் பலிகள் இடப்பெறுவதை ஏற்பவள் எனப்பொருள் ஆகாது.*

காதிலங்குகுழை யன்னிழை சேர்திரு மார்பன் னொருபாகம்
மாதிலங்குதிரு மேனியினான் கருமானின் னுரியாடை
மீதிலங்க வணிந் தானிமையோர் தொழ மேவும் மிடஞ்சோலைப்
போதிலங்கு நசையால்வரி வண்டிசை பாடும் புகலூரே ! (2)

பொருள்: காதுகளில் குழை எனும் அணிகலன்களை அணிந்திருப்பவன் உமையை ஒரு பாகமாகக் கொண்ட உடலினன், கரிய நிற மானை உரித்த தோலை ஆடையாக அணிந்தவன், இப்படிப்பட்ட இறைவனை வானோர்க ளெல்லாம் தொழவேண்டி வருகின்ற இடம், இங்குள்ள சோலைகளில் உள்ள மலர்களிலிருந்து, தேனை உண்ண வேண்டி உடலில் வரிகளுடன் கூடிய வண்டுகள் ரீங்கார இசைபாடும் ஊராகிய புகலூரே !

இழை-மார்பில் அணியும் பூணூல்; இமையோர்-வானவர்; போது-சோலை; நசை-தேன்; கருமை+மான்+உரி+ஆடை - கருமா னின்றுரியாடை; இலங்கு-விளங்குகின்ற.

**பண்ணிலாவும்மறை பாடலினானிறை சேரும் வளையங்கைப்**
**பெண்ணிலாவ வுடையான் பெரியார் கழலென்றுந் தொழுதேத்த**
**உண்ணிலாவியவர் சிந்தையுணீங்கா வொருவன்னிடமென்பர்**
**மண்ணிலாவும்மடி யார்குடியைத் தொழின் மல்கும் புகலூரே ! (3)**

பொருள்: பண் எனும் இசையுடன் கூடிய, வேதத்தில் நிறைந்த பாடல்களால் புகழப்பெறுபவன், அழகிய வளையல்களையணிந்த கையினளாகிய உமையை உடலின் ஒரு பாகமாகக் கொண்டவன் தமது திருவடியினை நாளும் தொழுதேத்தும் பெரியோர் எனும் அடியார்களது மனத்தில் என்றும் நீங்காது உறைபவன், ஆகிய இப்படிப்பட்ட தன்மையனாகிய இறைவன் வாழும் இடமாகிய இப்புகலூரில் வாழும் அடியார்கள், இறைவழிபாட்டுடன்கூட தமது சீவனத்திற்குரிய குடிமைத் தொழிலையும் நன்முறையில் செய்து வாழ்கின்றனர்.

மறை-வேதம்; கழல்-அடிகள்; வளை+அம்+கை-வளையங்கை;

குடிமைத் தொழில் என்பது அவ்வவர்குடிக்கு ஏற்ற தொழில் என்பதாகும். வழிவழி செய்துவரும் தொழில், குலத்தொழில் எனவும் ஆகும்.

நீரின்மவ்குசடை யன்விடையன்னடை யார் தம் மரண் மூன்றுஞ்
சீரின்மல்கு மலை யேசிலையாக முனிந்தா னுலகுய்யக்
காரின்மல்குகட னஞ்சமதுண்ட கடவுள்ளிட மென்பர்
ஊரின்மல்கிவளர் செம்மையி னாலுயர் வெய்தும் புகலூரே ! (4)

பொருள்: கங்கை எனும் நீர் நிறைந்த சடையோனும் காளை வாகனத்தை உடையவரும், மலையை வில்லாகக் கொண்டு கோபத்தினால் திரிபுரங்களை எரித்தவரும், கடலில் தோன்றிய விஷத்தை உலகம் உய்ய வேண்டி உண்டவனு மாகிய கடவுள் இருக்கும் இடமாகிய புகலூரில் வாழுகினற் மக்களின் செம்மையான வாழ்க்கை முறைமை காரணமாக, வேறு அனைத்து ஊர்களினின்றும் வேறுபட்டு உயர்வெய்தி நிற்கும் ஊர் புகலூர் என்பர்.

இடம் என முதலில் குறிப்பிடப்பெற்றமையால் அவ்விடம் புகலூர் எனவும், மீளவும் "ஊரின் மல்கி" எனக் குறிப்பிடப்பெறுவது ஊரில் வாழும் மக்களைக் குறிப்ப தாகியது. "செம்மையினால் உயர்வெய்தும்" என்றது. இவ்வூர் மக்கள் தீத்தொழில்களை விடுத்து நற்றொழில்களை மட்டுமே செய்து மேம்பட்டவர் என்பது.

அரண் மூன்று-முப்புரங்கள்; சிலை-வில்; முனிந்த-கோபங்கொண்டு,

நா ஹம் வாசாமி வைகுண்டே
ந யோகி இறிருதயே - நாரதா
மபக்தா எத்ர காயதி தத்ர
திருஷ்ட் யாமி.

என்பது- திருமாலும் கூட தம்மை இசையால் பாடு வோரிடத்தே கூடியிருப்பான் எனத்தெரிவிக்கும்.

செய்யமேனிவெளிய பொடிபூசுவர் சேரும் மடியார் மேல்
பையநின்றவினை பாற்றுவர், போற்றிசைத் தென்றும் பணிவாரை
மெய்யநின்ற பெருமானுறையும், மிடமென்ப ரருள் பேணிப்
பொய்யிலாத மனத்தார் பிரியாது பொருந்தும் புகலூரே ! (5)

பொருள்: செந்நிறமாகிய தமது உடலானது வெண்ணிற மாகத் தெரியும்படி உடல் முழுவதும் திருநீற்றினைப் பூசிக் கொள்பவனும், தம்மை நாடி வந்த அடியார்களின் தீவினைகளை நீக்கியருள்பவனும், தம்மைப் போற்றி இசை கூட்டிப் பாடுவோர் தம், உடன் உறைபவனுமாகிய இறைவன் பொருந்தி வாழுகின்ற இப்புகலூரில் உள்ள மக்கள் தம் உள்ளத்தில் பொய்மை என்பதே சிறிதும் இல்லாது இறைவனது அருள் ஒன்றையே வேண்டியவாறு வாழ்கின்றனர்.

*பண்ணியல்பாக, பக்திமையாலே பாடியும் ஆடியும்*
*பயிலவல்லோர்கள், விண்ணவர் விமானம் கொடு*
*வரஏறி வியனுலகாண்டு வீற்றிருப்பரே !*

என்ற வரிகளை ஏற்று நோக்குக.

செயய-சிவந்த; வெளிய-வெண்மையாக; பொடி-திருநீறு; பாற்றுதல்-நீக்குதல்.

**கழனினோசை சிலம்பினொலி யோசை கலிக்கப் பயில்கானில்**
**குழலினோசை குறட்பாரிடம் போற்றக் குனித்தா ரிடமெனபர்**
**விழவினோசை யடியார் மிடை வுற்று விரும்பிப் பொலிந்தெங்கும்**
**முழவினோசை முந்நீரயர்வெய்த முழங்கும் புகலூரே ! (6)**

பொருள்: காட்டில், குள்ளவுருவமுடைய பூத கணங்கள் குழல்ஊதி ஓசையெழுப்பக் கால்களைத் தரையில் தட்டுவதனாலும், கால்களை வீசி ஆடுவதினாலும், ஓசை உண்டாகும்படி, ஆட்டமாடும் இறைவனார், விருமபிப் பொருந்திய ஊர் புகலூர், முழவும், விழைவும் கொண்டு உள்ளன்புடன் அடியார்கள் இறைவனைப் போற்றிப் பாடும் ஓசையைக் கேட்டு, ஓசைமிக்க அலைகளை எழுப்பக்கூடிய கடலானது அயர்வுரும்படியாக அமைந்ததும் இப்புகலூரே!

குனித்தார-பொருந்தி; நின்றார்; முந்நீர்-கடல்; அயர் வெய்தல் - சோர்வடைதல்; குழல்-துளைக்கருவி; புல்லாங் குழல் எனினும் தகும். முழவும் விழவும்- தோற்கருவிகளாகும்.

முழவும் விழவும் கொண்டு அடியார்கள் பாடும ஓசையானது கடலலைகளிலும் மிக்கதான ஓசையாக கற்பனை செய்தது சிறப்பு.

**வெள்ளமார்ந்து மிளிர் செஞ்சடை தன்மேல் விளங்கும் மதிசூடி**
**உள்ளமர்ந்தவடியார் தொழுதேத்த வுகக்கும் மருடந் தெம்**
**கள்ளமர்ந்து கழியப்பழி தீர்த்த கடவுள் ளிடமென்பர்**
**புள்ளை யார்ந்த வயலின் விளைவால் வள மல்கும் புகலூரே ! (7)**

*பொருள்:* கங்கையை அணிந்து ஒளி வீசும் செஞ்சடையில் நிலவையும் அணிந்துள்ள இறைவன், உள்ளமாரத் தொழுது வணங்கும் அடியவர்களுக்கு அருள்தந்து மகிழ்பவன், தமது அடியார்களின் தீவினை களையும், பழியையும் நீக்கியருள்பவன், இத்தன்மையனான வனின் இருப்பிடமாகிய புகலூர் பறவையினங்கள் பலவும் நிறைந்து அதிகமான விளைச்சலைத் தரக்கூடிய வயல்கள் நிரம்பியதுமாகும்.

வெள்ளம்-கங்கை; மதி-நிலவு; உகக்கும்-மகிழும்; புள்-பறவை; மல்கும்-நிறைந்த; புகலூரின் வளம் கூறப் பெற்றுள்ளது.

**தென்னிலங்கை யரையன் வரை பற்றி யெடுத்தான் முடி திண்டோள்**
**தன்னிலங்கு விரலா னெரிவித் திசை கேட்டன் றருள்செய்த**
**மின்னிலங்கு சடையான் மடமாதொடு மேவும் மிடமென்பர்**
**பொன்னிலங்கு மணிமாளிகை மேன்மதி தோயும் புகலூரே ! (8)**

*பொருள்:* இலங்கையின் மன்னனாகிய இராவணன், தன்னுடைய தோள்களின் வலிமையினால் கயிலை மலையே தூக்கிவிட்டான், அப்போது சிவபெருமான், தன் கால் கட்டைவிரலால் நெரித்து இராவணனைக் கயிலை மலையின் அடியில் நசுங்கிடச்செய்தான். அப்போது இராவணன் சாமவேதமெனும் இசையைப் பாட அதனைக் கேட்டு மகிழ்வுற்ற இறைவனார், அவ்விராவணனை துன்பத்தி னின்றும் விடுவித்து அருள்செய்தார், மின்னொளி யொத்த

சடையிணையுடைய இறைவன், தமது தேவியாராகிய பார்வதியோடுங் கூட அமைந்துறையும் இடமே புகலூராகும். பொன்னும் மணியுமாகிய செல்வங்கள் நிறைந்து உயர்ந்த மாடங்கள் அமைந்த மாளிகைகளின் மீது நிலவு உரசும் படியாக அமைந்த பெருமை மிக்கதிப்புகலூர்.

தென்னிலங்கை யரையன் - இலங்கை வேந்தனாகிய இரவணன்; வரை - மலை; முடி-தலை; திண்டோள்- உறுதியான தோள்கள்.

திருவையாறு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் தமது "நாத தநு மநுசம்" என்ற சித்தரஞ்சனி ராக, ஆதிதாளக் கீர்த்தனையில் இராவணன் கயிலையை எடுத்ததையும் சாமகானம் இசைத்த தையும் அற்புதமாகக் கூறியுள்ளார். இது தவிர திருவையாறு கதாகாலட்சேப வித்வான் ஸ்ரீமான் அண்ணாசாமி பாகவதர் அவர்கள் கூறிய கதையும் ஒன்று உண்டு. கயிலையைத் தூக்கிய இராவணனின் கர்வத்தை அடக்கவேண்டி தன் கால் கட்டைவிரலால் அழுத்தி அவனை மலையின் கீழ் நசுங்கிடச் செய்தபோது அவ்விராவணன் தனது குடலை உருவி நரம்புகளாக்கி பத்து தலைகளில் ஒன்பதைக் கொய்து அந்நரம்புகளை இழுத்துக் கட்டக்கூடிய பிருடைகளாக்கி சாமவேதகானத்தை இசைக்க, அதனைக் கேட்டு இன்புற்ற சிவனார் இராவணனை விடுவித்து அவன் கேட்கும் வரத்தையும் அளிப்பதாகக் கூறினார். அப்போது இராவணன், சிவபிரானின் அருகில் அமர்ந்திருந்த உமாதேவியை தரவேண்டுமெனக் கேட்க சற்றும் யோசிக்காமல் தன்னருகில் இருந்த பார்வதிதேவியை இராவணனிடம் ஒப்படைத்து விட்டார். இராவணனும் அப்பார்வதிதேவியை ஒரு விமானத்தில் ஏற்றிக்கொண்டு வான் வழியாக இலங்கை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். அப்போது வழியில் சமுத்திரக்கரையில் ஒரு கிழட்டுப் பிராமணன் துளசிச் செடியை கடற்கரை மணலில் தலை கீழாக நட்டு வைத்து உடைந்த கிளிஞ்சல் ஒன்றினால் கடல் தண்ணீரை முகந்து அந்த செடிக்கு ஊற்றிக்கொண்டிருக்கும் காட்சியைக் கண்டு

வியப்புற்று வானிலிருந்து அக்கடற்கரைக்கு இறங்கி வந்து அந்தப் பிராமணனிடம், "பார்த்தால் வயோதிகராயும் அறிவிற் சிறந்தவர் போல் தோற்றமுள்ள நீர் இப்படி ஒரு செடியை கடற்கரை மணலில் வேர் மேல்புறமாகவும் செடியின் மேல் பாகத்தை பூமியில் புதைத்திருப்பதோடு மட்டுமல்லாது ஒரு ஓட்டைச் சிப்பியைக் கொண்டு கடல் தண்ணீரை முகந்து ஊற்றிக்கொண்டிருக்கிறீரே உமக்கு ஏதாவது புத்தி பிசகு ஏற்பட்டு விட்டதோ?" எனக் கேட்க அதற்கு அக்கிழப் பிராமணர், "நீர் ஏமாந்து வந்திருக்கும் செயலை விட நான் செய்வது ஏதும் குறைவானது அல்ல" என்றார். உடனே கோபங்கொண்ட இராவணன் "நான் என்ன ஏமாந்து போனேன்?" என்று கேட்க, அதற்கு அந்தப் பிராமணர் "நீ உன் பலத்தை எல்லாம் திரட்டி கயிலாயத்தையே தூக்கினாய், அதுவுமல்லாமல் உன் உடலையே தியாகம் செய்து அதி அற்புதமான சாமவேத கானம் செய்தாய் ஆனால் அதற்குப் பரிசாக நீ பார்வதி தேவியைக் கேட்க, அந்த சிவபிரான், தன் அருகில் தன்னை மட்டும் வலம் வந்து கொண்டிருந்த வண்டு வடிவில் இருந்த மாண்டூக ரிஷி என்பவரை பார்வதியின் உருவமாக உன்னிடம் கொடுத்து அனுப்பிவைத்துள்ளார். நீயும் நன்றாக ஏமாந்து இந்தப்போலி பார்வதிதேவியுடன் கூட இலங்கைக்குச் சென்று கொண்டிருக்கிறாய். இதைவிட நான் ஒன்றும் முட்டாள்தனமான காரியம் செய்துவிட வில்லை" என்று கூறினார். கயிலையில் நடந்த செய்தியை உடன் இருந்து கண்டவர்போல் உரைக்கும் இவர் உண்மையில் ஒரு பெரிய மகாத்மாவாகத்தான் இருக்கமுடியும் எனவே இவர் கூறுவதும் உண்மையாகத்தான் இருக்கும் என நம்பிய இராவணன், பார்வதிதேவியுடன் விமானத்தில் ஏறி மீண்டும் கயிலைக்கே திரும்பிச் சென்று, சிவபெருமானிடம் பார்வதி; தேவியை ஒப்படைத்து "நீர் எனக்குக் கொடுத்த இப்பார்வதி உண்மையான பார்வதி அல்ல என்பதையும் மாண்டூகரிஷி என்பவரையே பார்வதி உருவாக மாற்றிக் கொடுத்து என்னை ஏமாற்றியுள்ள செய்தியையும் ஒரு கிழட்டு பிராமண மகான் எனக்குத் தெரிவித்துவிட்டார், ஆகையால் இனியும் என்னை ஏமாற்றாமல் உண்மையான பார்வதிதேவியைக் கொடுக்க

வேண்டுமெனக் கேட்டான். அப்போது மனமகிழ்ச்சியில் தம்மை மறந்த நிலையில் தான் செய்துவிட்ட தவறை உணர்ந்த சிவபெருமான், தனக்குச் சரியான சமயத்தில் சரியான உபாயத்தையும் கூறி இராவணனை திரும்பவும் கயிலைக்கு அனுப்பி இருப்பவர் திருமாலே என்பதை உணர்ந்து, அவரால் கூறப்பெற்ற உபாயத்தின்படி தம்மருகில் தன்னை மட்டும் வண்டு உருவில் வலம் வந்து கொண்டிருந்த மண்டூக ரிஷியை பார்வதி தேவியாக உருமாற்றி இராவணனிடம் கொடுக்க அவனும் அப்புதுப் பார்வதியை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு இலங்கைக்குச் சென்றான் என்பதாகக் கதை. இதில் முக்கியமான செய்தி, வால்மீகியோ, கம்பனோ இராவணனுக்கும் மண்டோதரிக்கும் திருமணமான செய்தியையோ, மண்டோதரியின் தாய், தந்தையர் இன்னார் என்பதையோ கூறாது விடுத்துள்ளனர். ஆகவே சந்தர்ப்பவசமாக இக்கதை கூறப்பெற்றுள்ளது என்பதேயாகும்.

**நாகம் வைத்த முடியானடி கைதொழு தேத்தும் மடியார்கள்**
**ஆகம் வைத்த பெருமான் பிரமன் னொடு மாழுந்தொழுதேத்த**
**ஏகம் வைத்த வெரியாய் மிகவோங்கிய வெம்மானிடம் போலும்**
**போகம் வைத்த பொழிலின் னிழலான் மது வாரும் புகலூரே ! (9)**

பொருள்: நாகப்பாம்பினைத் தன் சடாமுடியில் அணிந்தவனும், இருகைகளாலும் தொழுது ஏத்துகின்ற அடியார்களின் உள்ளத்தில் வைத்துப் போற்றப் பெருகின்ற பெருமானும், பிரமனும், திருமாலும் தொழ விழைய, ஆங்கு அவர்களுக்குத் தன் அடியையும் முடியையும், காண இயலா வண்ணம், ஒரே தீப்பிழம்பினனாக நின்றவனுமாகிய சிவனார் வாழுமிடமாகிய இப்புகலூர், தன் இனிய நிழலால் யாவரும் இன்புற்று மகிழும் வண்ணம் அமைந்த சோலைகள் நிறைந்த ஊராகும்.

ஆகம்-அகம்-உள்ளம்; ஏகம்-ஒன்று; எரி-தீப்பிழம்பு; போகம்-இன்பம், சுகம்; மதுவாகரும்-தேன்னிறைந்த மலர்களைக் கொண்ட மரங்களும் செடிகளும் நிறைந்த;

செய்தவத்தார் மிகு தேரர்கள் சாக்கியர் செப்பிற் பொருளல்லாக்
கை தவத்தர் மொழியைத் தவிர்வார்கள் கடவுள்ளிடம் போலும்
கொய்து பத்தர் மலரும் புனலுங்கொடு தூவித் துதி செய்து
மெய் தவத்தின் முயல்வாருயர் வானக மெய்தும் புகலூரே ! (10)

பொருள்: தவங்களைச் செய்வோர், ஒரு பொருளாகக் கொள்வதற்கல்லாத, தேரர், சாக்கிய மதத்தினர்களாகிய சமணர்களின் சொற்களைக் காது கொடுத்துக் கேளாது. தவிர்ப்பவர்கள், வணங்கி வழிபடும் கடவுளாகிய சிவபெருமான் இருக்குமிடம் புகலூர் ஆகும. இங்கு இவ்விறைவனாரை, நீர் கொண்டாட்டி, மலர்தூவி, புகழ்பாடி வழிபடுவோர்களாகிய உண்மையான தவத்தினை இயற்று வோர் சுவர்க்கத்தை எய்துவர் என்பது உறுதி.

“எய்து புகலூரே” என்னாது “எய்தும் புகலூரே” என்றது உறுதிப்பாட்டினைக் காட்டியது- தேரர்-தேறாதவர்-இது இன்னதே என அறியும் திறன் அற்றவர். சாக்கியர்-சாக்கிய மதத்தவர், கொய்து-பறித்து-மலரை அணுகி வண்டுகள் அதன் கண்ணுள்ள தேனை அருந்து முன் பறித்தல் என்க. புனல்-நீர்; வானகம்-சுவர்க்கலோகம்.

## நூற்பயன் கூறல்

புற்றில் வாழுமர வம்மரை யார்த்தவ்ன மேவும் புகலூரைக்
கற்று நல்லவர் காழியுண் ஞானசம்பந்தன் றமிழ்மாலை
பற்றி யென்றும் மிசைபாடிய மாந்தர் பரமன்னடி சேர்ந்து
குற்றமின்றிக் குறை பாடொழியப் புகழோங்கிப் பொலிவரே ! (11)

பொருள்: புற்றில் வாழும் பாம்பின் இனத்தவர் எனும் நாகர்களை அழித்த இறைவனாகிய சிவபெருமான் இருக்கும் இப்புகலூர் பற்றிய பாடல்களைக் கற்ற நற்பெரியோர்கள் பணிந்தேத்தும், சீர்காழியிற் பிறந்த ஞானசம்பந்தன் புகழ்ந்து பாடிய இத் தமிழ் மாலையாகிய பாடல்களை இசையுடன் கூட்டிப் போற்றிப் பாடிய மாந்தர்கள், பரமனடி சேர்ந்து, குற்றங் குறைகள் ஏதுமின்றி என்றும் நீங்காத ஓங்கிய புகழோடுப் பொலிவுற்றுத் திகழ்வார்கள்.

அரவம் + அரை+ஆர்த்தவன் - அரவம்மரையார்த்தவன்- பாம்பினை இடையாக உடுத்தவர். இசைபாடிய- இசை கூட்டிப் பாடிய.

திருச்சிற்றம்பலம் !



## சம்பந்தர் – புகலூர்ப் பதிகம்

இராகம்:எதுகுல காம்போதி பண்:செவ்வழி தாளம்:திரிபுடை

வெங்கள் விம்மு குழிலைளைய ராடவ்வெறி விரவுநீர்ப்
பொங்கு செங்கட் கருங்கயல்கள் பாயும் புகலூர்தனுள்
திங்கள் சூடித் திரிபுர மொரம்பா லெரியூட்டிய
எங்கள் பெம்ம னடிபரவ நாளும்மிடர் கழியுமே ! (1)

தேன் நிறைந்த மலர்களைச் சூடிய கூந்தலையுடைய இளம்பெண்கள் நீராடுவதால் மணம் பரவியுள்ள நீர் நிலைகளில், அப்பெண்களின் அழகிய கண்கள் தங்களின் உருவத்தைப் போலவே இருந்ததால் கோபம் கொண்டு, கண்கள் சிவக்க, எழுந்து பாய்கின்ற பெரிய மீன்கள் நிறைந்த வளம் மிக்க புகலூரில் உறைகின்ற இறைவன் முடியிலே நிலவைச் சூடியவன், ஒரே அம்பினால் முப்புரங்களையும் எரித்தவன், இப்படிப்பட்ட எங்கள் இறைவனது திரு வடிகளை நாளும் தொழுபவர்களுக்கு துனபங்கள் நீங்கும்.

குழிலிளையர்-கூந்தலையுடைய இளம்பெண்கள். வெறி-கோபங்கொண்டு, விரவி=பரவி, செங்கண்-சிவந்த கண்கள், பரவ-தெழ, பொங்கு-கோபம் கொண்டு, இடர்-துன்பம், கழியும்-நீங்கும்.

வாழ்ந்த நாளும் மினிவாழு நாளும் மிவையறிதிரேல்
வீழ்ந்தநாளெம் பெருமானை யேத்தாவிதி யில்லீர்காள்
போழ்ந்த திங்கட்புரி சடையினான்றன் புகலூரையே
சூழ்ந்தவுள்ளம் முடையீர்க ளுங்கடுயர் தீருமே ! (2)

எம்பெருமானாகிய இறைவனைத் தம் உள்ளத்தே எண்ணி வாழ்த்திடாத நல்விழியில்லாதவர்களே! இதுவரை நீங்கள் வாழ்ந்த நாட்களையும் இனியும, வார இருக்கின்ற நாட்களையும் உணர்வீர்களாயின், இறைவனை வழிபடா திருந்த நாட்கள் யாவும் வீணான நாட்களாகிப் போயின,

ஆகையால், பிளந்த, பிறையையணிந்த சடையினையுடைய, புகலூரில் உறைகின்ற சிவனைப் பற்றிய உள்ளம் உடையவர் களாக ஆவீர்களாயின் உங்களது துன்பமெல்லாம் தீரும்.

வீழ்ந்த-வீணாகிக் கழிந்த; போழ்ந்த-பிளந்த; உஙகள்+ துயன்-உங்கடுயர்.

மடையினெய்தல் கருங்குவளை செய்யம் மலர்த்தாமரை
புடைகொள் செந்நெல் விளைகழனி மல்கும் புகலூர் தனுள்
தொடைகொள் கொன்றை புனைந்தானொர் பாகம் மதிசூடியை
அடையவல்லா ரமருலக மாளப் பெருவார்களே ! (3)

நெய்தல் நிலமாகிய புகலூர், கருங்குவளை, தாமரை ஆகிய மலர்கள் நிறைந்தும், செந்நெல் விளைவு மிகுந்த வயல்களின் வளம் செறிந்ததுமாகும். கொன்றை மாலையை அணிந்தவரும், தன் சடையின் ஒரு பக்கத்தில் பிறைமதியைச் சூடியவனுமாகிய இங்குறையு; எமதிறைவனை அடைந்து புகழ்ந்தேத்துபவர்கள் தேவர் உலகத்தினை ஆளப்பெறுவர்.

செய்யம்-சிவந்த, கழனி-வயல்கள்; தொடை-மாலை; அமரர் உலகு-உயர்தேவர் வாழும் உலகம்.

பூவுந்நீரும் பலியுஞ் சுமந்து புகலூரையே
நாவினாலே நவின்றேத்த லோவார் செவித்துளைகளால்
யாவுங் கேளாரவன் பெருமையல்லா லடியார் கடாம்
ஓவுநாளும் முணர்வொழிந்த நாளென் றுள்ளங் கொள்ளவே! (4)

புகலூரில் உறையும் பெருமானது, பெருமைகளை யல்லாது வேறெதுவும் தங் காதுகளாற் கேளாதும் அவனது திருப்புகழையேயன்றி நாவினால் நவின்று ஏத்தாதும், கைகளிலே பூவும், நீரும், பலியும் கொண்டு பூசிக்காதும் இருந்த நாட்களை வீணாய்க் கழிந்த நாட்கள் என்றும், அவ்வாறு செய்த நாட்களே உண்மையான நாட்கள் என்றும் உள்ளத்தே எண்ணி அடியார்கள் அவ்வாறு செய்து நிற்பர்.

நவின்றேத்தல்-வாயினாற் பாடிப்புகழ்தல், செவித் துளைகளால்-செவிகளால், யாவுங் கேளார்-வேறெதவுங் கேட்கமாட்டார்கள். ஒவுநாள்-உண்மையாய்ப் பயன்பெற்ற நாட்கள்.

**அன்னங் கன்னிப் பெடைபுல்கி யொல்கியணி நடையவாய்ப்**
**பொன்னங்காஞ்சி மலர்ச்சின்ன மாலும் புகலூர் தனுள்**
**முன்னம்மூன்று மதிலெரித்த மூர்த்திதிறங் கருதுங்கால்**
**இன்னரென்னப் பெரிதரிய ரேத்தச்சிறிதெளிமரே ! (5)**

ஆண் அன்னங்கள் தங்கள் பெடைகளுடன் கூடி அழகினோடு கூட ஒடுங்கியதுமான நடையினை உடையன வாய் உலாவவும், பொன்னிறங்கொண்ட காஞ்சி மலர்கள் கிளைகளிலே அசைந்து ஆடுகின்றதுமான வனங்களின் வளம் நிறைந்த புகலூரில் வாழும் இறைவனார், முன்னொரு காலத்தில் முப்புரங்களை எரித்தவர் எனும் அவனது திறத்தை இன்னதிதுவென கருதுவோர்க்குக் காண அரியவன். ஆனால் கருதித் தொழுவோர்க்கு எளிமையாய்க் காட்சியருள்பவன்.

பெடை-பெட்டை; புல்கி-சேர்ந்து, யொல்கி-இணைந்து; சின்னம்-அடையாளம்; மூன்றுமதில்-முப் புரங்கள்; திறம்-பெருமை, திறமை.

**குலவரர்கக் குலமிலருமாகக் குணம் புகமுங்கால்**
**உலகினல்ல கதிபெறுவரேனும் மலரூறுதேன்**
**புலவமெல்லாம் வெறிகமழ மந்தண் புகலூர்தனுள்**
**நிலவமல்கு சடையடிகள் பாதந் நினைவார்களே. (6)**

மலர்களில் ஊருகின்ற தேன் வழிந்து நறுமணம் எங்கும் கமழத்தக்க குளிர்ச்சியான புலங்களையுடைய புகலூரில் உறையும், இறைவனின் சடைமுடியில் நிலவொளி வீசுகின்றது. அவனது திருவடிகளை நினைப்பவர்கள்தான் உலகில் நற்கதியைப் பெறுபவரும், பெறத்தக்கவரும் ஆவர்.

மலரூறுதேன்-மலர்கள் ஊறுகின்ற தேன்; புலவம்-புலங்கள்; தண்-குளிர்ச்சி; நிலவமங்கு-நிலவு ஒளிவீசுகின்ற;

**ஆணும் பெண்ணும் மென நிற்பரேனும் மரவாரமாப்**
**பூணுமேனும் புகலூர்தனக்கோர் பொருளாயினான்**
**ஊணுமூராரிடு பிச்சை யேற்றுண்டுடை கோவணம்**
**பேணுமேனும் பிரானென்ப ரெலாம் பெருமானையே ! (7)**

புகலூரையே ஒரு பொருட்டாகக் கருதியுறையும் எம் இறைவனார் ஆண் பாதி பெண் பாதியென உடலைக் கொண்டவர். பாம்பினைப் பூணுலாகக் கொண்டு அணிந்திருப் பார், ஊரார் இடும்பிச்சையை ஏற்று உண்டு வாழும் இவர் உடையாகக் கொண்டது கோவணத்தை மட்டுமே ஆயினும் ஆன்றோர்கள் இவரையே தங்களின் தலைவரெனக் கொள்வர்.

அரவம்-பாம்பு; பூணும்-அணியும்; ஊண்-உணவு; பிரான்-தலைவன்.

**உய்யவேண்டில் லெழுபோத நெஞ்சேயுய ரிலங்கைக்கோன்**
**கைகளொல்கக் கருவரை யெடுத்தானை யோர்விரலினால்**
**செய்கைத் தோன்றச் சிதைத்தருள வல்லசிவன் மேயபூம்**
**பொய்கை சூழ்ந்த புகலூர் புகழப் பொருளாகுமே ! (8)**

நீர் நிறைந்த அகழி சூழ்ந்து அழகொடு திகழும் புகலூரில் உறையும் சிவனார், கயிலாய மலையைத் தன் கரங்களால் தூக்கிய இராவணனது வலிமை கெட்டழியும்படி ஒரு விரலினால் அழுத்தி அருளினார்.

புகழ்வதற்குரியனாய் நிற்பவரும் அவரே! பிறவிப் பயன் பெற்றுய்ய வேண்டின், நெஞ்சே! சென்றவரை வழிபட எழுவாயாக:

இலங்கைக்கோன்-இராவணன்; கருவரை-கயிலாய மலை; சிதைத்த-அழித்த; பொய்கை-அகழி-நீர்நிலை.

இராவணனின் அகங்காரத்தை அழித்தாரேயன்றி இறைவனார் அவரை அழிக்காது அருள் செய்தார் எனப் பொருள் தருவது.

**நேமியானும், முகநான்குடையந்நெறி யண்ணலும்**
**ஆமிதென்று தகைந்தேத்தப் போயாரழ லாயினான்**
**சாமிதாதை சரணாகு மென்றுதலை சாய்மினோ**
**பூமியெல்லாம் புகழ்செல்வ மல்கும் புகலூரையே ! (9)**

திருமாலும், பிரமனும், அடியையும், முடியையும் காணவேண்டித் தேடிய காலத்து, அனல் வடிவாகி நின்று அவர்களாற் காண இயலாது, இவரே தலைவர் ஆவார் எனக் கொண்டு கைதொழுது ஏத்தும்படி நின்றவனும், சுவாமிநாதனின் தந்தையானவனுமாகிய இறைவனார் உறையுமிடம், உலகத்தோர் புகழ்கின்ற செல்வம் நிறைந்த புகலூரே! அவ்விறைவனாரின் திருவடிகளே, பற்றுதற்குரிய தெனக் கொண்டு வணங்குவீர்களாக !

நேமியான்-கையில் சக்கரத்தையுடைய திருமால்; முகநான்குடையன்-நான்கு முகங்களையுடைய பிரம்மன்; அழல்-அனல்-தீ; சாமிதாதை-சுப்பிரமணியரின் தந்தை; சாய்மினோ-வணங்குவீர்களாக (தலைசாய்த்து).

**வேர்த்த மெய்யருருவத் துடைவிட்டுழல் வார்களும்**
**போர்த்த கூறைப் போதிநீழலாரும் புகலூர்தனுள்**
**தீர்த்தமெல்லாஞ் சடைக்கரந்த தேவன் றிறங் கருதுங்கால்**
**ஓர்த்துமெய்யென் றுணராது பாதந் தொழுதுய்ம்மினே ! (10)**

வியர்வையூரும் உடலுக்கு ஆடையேதும் அணியாது நிர்வாணமாக அலைபவர்களாகிய சமணர்களும், ஆடையால் உடலைப் போர்த்திக்கொண்டு போதி மரத்தின் நிழலின் கீழ் அமர்ந்த புத்தரின் மதத்தினரும், கூறும் பொய்களை யெல்லாம் மெய்யென்று கருதிடாமல், தீர்த்தமெனும் கங்கையைச் சடையில் ஒளித்த புகலூரில் உறையும் நமது இறைவனாரின் பெருமைகளை உணர்ந்து உறுதியுடன் கூட அவரது திருவடிகளை வணங்கி உய்வீர்களாக !

உடைவிட்டு உழல்வார்-ஆடையின்றித் திரிபவர்; கூறை-ஆடை; போதி நீழலார்-போதிமரத்தின் நிழலில் அமர்ந்த புத்தன். கரந்த-ஒளித்த; திறம்-பெருமை; ஓர்த்தும்-பொய்யாய்க் கூறும்.

புந்தியார்ந்த பெரியோர்களேத்தும் புகலூர்தனுள்
வெந்த சாம்பற்பொடிபூசி வல்லவிடை யூர்தியை
அந்தமில்லா வனலாட லானையணி ஞானசம்
பந்தன் சொன்ன தமிழ்பாடி யாடக் கெடும்பாவமே ! (11)

*அறிவிற் சிறந்த பெரியோர்களேத்தி வழிபடும் புகலூரில் வாழும் சிவனார் வெந்த சாம்பற்பொடியினைப் பூசிக் கொள்ளும் உடலினையுடையவன், வலிமையான காளையின் மேலேறி வருபவன்; முடிவு அற்றவன், நெருப் பிடையே ஆடுவோன், அவனைப் போற்றிப் பாடிய ஞான சம்பந்தனுடைய தமிழ்மாலையாகிய இதனை அன்புடன் கூட பாடி ஆடிடும் அன்பர்கள் பாவங்கள் யாவும் நீங்கப்பெறுவர்.*

*புந்தி-அறிவு; விடை-காளை; அநதம்-முடிவு; அனல்-தீ.*

# திருஞான சம்பந்த மூர்த்திகள் அருளிய வர்த்தமானீசர் திருப்பதிகம்

இராகம்; *நவரோஸ்* பண்: *பியாந்தைக் காந்தாரம்* தாளம்: *ஆதி*

பட்டம் பானிற மதியம் படர் சடைச் சுடர்விடு பாணி
நட்ட நள்ளிருளாடு நாதனார் நவின்றுரை கோயில்
புட்டன் பேடையொடாடும் பூம்புகலூர்த் தொண்டர் போற்றி
வட்டஞ் சூழ்ந்தடி பரவும் வர்த்தமானீச் சரத்தாரே ! (1)

*ஆண் பறவைகள் தங்களின் பெண் பறவைகளோடு கூடி விளையாடுகின்ற, வளமிக்கப் பொழில்கள் சூழ்ந்த புகலூரில் வர்த்தமானீசத்துறையும் சிவனார், பட்டங்களை யுடையவர் பாலொத்த வெண்பிறை சடையினை உடையவர். சுடர்விடுகின்ற அனலைக் கையிலே ஏந்தியவர், நள்ளிரவின் இருளில் நடனம்புரியும் நாதர். அவரைத் தொண்டர் கூட்டங்கள் வலம்வந்து சூழ்ந்து இணையடிகளைப் பரவிப் போற்றுகின்றனர்.*

*பானிற மதியம்- பால்நிற நிலவு; புட்டன் பேடையொடு-புள்+தன்+பெடையோடு-பறவைகள் தங்களின் பெண்களோடு; வட்டஞ்சூழ்ந்து-வலம் வந்து கூடி.*

முயல்வளாவிய திங்கள் வான்முகத் தரிவையிற் றெரிவை
இயல்வ ளாவிய துடைய இன்னமு தெந்தை யெம்பெருமான்
கயல்வளாவிய கழனிக் கருநிறக் குவளைகண் மலரும்
வயல்வளாவிய புகலூர் வர்த்தமானீச்சரத் தாரே ! (2)

*நீர் நிலைகளில் மீன்கள் நிறைந்து உலாவிவர, கருநிறக் குவளை மலர்கள் விரிந்து நிற்க வளம் மிக்க வயல்களை யுடைய புகலூரில், முயலின் உருவத்தை ஒத்த கறைபடிந்த நிலவினைப் போன்ற முகத்தினையுடைய பெண்களிற் சிறந்தவளாகிய உமையோடும் கூடி இருப்பவர். இனிய அமுத மொத்த எம்பெருமானாராகிய வர்த்தமானீசர்.*

முயல்வளாகிய-முயல் போன்ற உருவத்தை கறையாகக் கொண்ட; அரிவையிற் றெரிவை-பெண்களிற் சிறந்த பெண். கயல்-மீன்கள். என்றும் காணாத அமுதத்தை இனிய தென்கிறார்.

**தொண்டர் தண்கய மூழ்கித் துணையலுஞ் சாந்தமும் புகையும்**
**கொண்டு கொண்டாடி பரவிக் குறிப்பறி முருகன் செய் கோலம்**
**கண்டுகண்டு கண்குளிரக் களி பரந்தொளி மல்கு கள்ளார்**
**வண்டு பண் செயும் புகலூர் வர்த்தமானீச்சரத்தாரே ! (3)**

தேனுண்ட வண்டுகள் இன்னிசைபாடும் திறத்ததாய் அமைந்த புகலூரின் வர்த்தமானீசரை குறிப்பறிந்து தொண்டு செய்யும் பண்பினரான முருகநாயனார் அழகிய கோலத்தராய் ஆக்கியிருப்பதைக் காண குளிர்ந்த நீரில் மூழ்கி சந்தனமும் நறுமணப் புகையோடும் வந்த தொண்டர்கள் கண் குளிரக் கண்டு மகிழ்ச்சியுடன் கூட வழிபட்டனர்.

தணகயல்-குளிர்ந்த நீர் உடைய குளம் ஆறு முதலியன. சாந்தம்-சந்தனமெனவும், அமைதியோடு எனவும் இருவகைப் பொருள் கூறுவர்; செய்கோலம்-செய்வித்த அழகு; களி-மகிழ்ச்சி; கள்ளார்-தேன் உண்ட; பண் செயும்-பண்ணிசை போன்ற ஒலியை எழுப்ப.

**பண்ண வண்ணத்த ராகிப் பாடலொ டாடல றாத**
**விண்ண வண்ணத்தராய விரிபுகலூரரொர் பாகம்**
**பெண்ண வண்ணத்தராகும் பெற்றியோ டாணிணை**
**பிணைந்த**
**வண்ண வண்ணத்தெம் பெருமான் வர்த்தமானீச் சரத்தாரே !(4)**

அடியார்கள் பண்ணிசைத்துப் பாடியாட, அப் பண்ணின் வண்ணமே ஆகியவர் இறைவனார். வானின் நீல வண்ணத்தராய திருமாலை பெண் வண்ண உமையாக ஒரு பாகத்திலே உடையவர். இவ்வாறு பல வண்ணத்தாராகிய நம் இறைவர் அருள்திரு வண்ணக் கோலத்தவராவார்.

பாடலொடு+ஆடல்+அறா-பாடலொடாடலறா-பாட்டும் ஆட்டமும் குறையாத; விண்ண வண்ணத்தார்-வானின் நீல நிற வண்ணத்தையுடைய; ஆணிணைப் பிணைந்த-ஆணாகிய திருமாலை உமையாக இணைந்த; வண்ண வண்ணத்த - பல வர்ணத்தார்க்கும் எனவும் பொருள் கூறுவர்.

**ஈசனேறமர் கடவுளின்னமு தெந்தை யெமபெருமான்**
**பூசுமரசில் வெண்ணீற்றர் பொலிவுடைப் பூம்புகலூரில்**
**மூசுவண்டறை கொன்றை முருகன் முப்போதுஞ்செய் முடிமேல்**
**வாசமாமலருடையார் வர்த்தமானீச்சரத்தாரே !** (5)

பொலிவுடைய புகலூரிற் பொருந்திய வர்த்தமானீசப் பெருமான், இன்னமுதொத்த எந்தை, காளை வாகனத் தேறுபவர், தூய வெண்ணீற்றைப் பூசுபவர், முப்போதும் முருகனாயனார் அணிவிக்கும் வண்டுகள் ரீங்காரம் செய்கின்ற வாசமிக்க நல்ல கொன்றை மலர் மாலைகளை முடிமேல் அணிந்தவர்.

இன்னமுது-இனிய அமுது; மாசில்-குற்றமற்ற; வண்டறை-வண்டுகள் ஓசை எழுப்புகின்ற.

**தளிரளங்கொடி வளரத்தண் கயமிரிய வண்டேறிக்**
**கிளரிளம்முழை நுழையக் கிழிதரு பொழிற் புகலூரில்**
**உளரிளஞ்சுனை மல்குமொளிதரு சடைமுடியதன் மேல்**
**வளரிளம்பிறை யுடையார் வர்த்தமானீச்சத்தாரே !** (6)

குளிர்ந்த நீர் நிறைந்த குளத்தில், இளந் தளிர்க்கொடி வழியாக ஏறிய வண்டுகள் அடர்ந்து நிறைவாயுள்ள பொழில்களின் வளமானது, செறிவு, கிழியும்படி நுழைகின்ற அழகுமிக்கப் புகலூர் வர்த்தமானீச்சரத்துறைந்து எழுந்தருளுகின்ற எம்பெருமான்,சுனையில் நிறைந்த செங்கழுநீர்ப் பூக்களொடு, ஒளிமிக்க சடைமுடியின் மேல் வளர்பிறைச் சந்திரனையும் அணிந்தவர்.

தண்கயமிரிய-குளிர்ந்த நீர் விலகும்படி; இளம் முழை-இளந்தண்டுகள்; கிழிதரு-இரண்டாகக் கிழியும்படி; வளர்+இளம்+பிறை- வளரிளம்பிறை, வளர்பிறை காலத்துப் பிறைச்சந்திரன்.

**தென்சொல் விஞ்சமர் வடசொற் றிசைமொழி யெழினரம் பெடுத்துத்**
**துஞ்சுநெஞ்சிரு ணீங்கத் தொழுதெழு தொல் புகலூரில்**
**அஞ்சனம் பிதிர்ந்தனைய வலைகடல் கடையவன் றெழுந்த**
**வஞ்ச நஞ்சணி கண்டர் வர்த்தமானீச்சரத் தாரே ! (7)**

புகலூர் வர்த்தமானீச்சரத்துப் பெருமான், கடலிடையே தோன்றிய, கரிய மையினை ஒத்த ஆலகால விஷத்தை உண்ட திருநீலகண்டர். பயனில்லாது, வீணே இறந்துபடுவதற்குக் காரணமாகிய, நெஞ்சினைப் பற்றி வருத்துகின்ற, ஆணவ மல இருள் நீங்கிட வேண்டி தென் சொல்லாகிய தமிழ் மொழியொடுங் கூட வடசொல் மட்டுமல்லாது வேறு பலதிசைகளுக்குமுரிய எல்லா மொழியினாலும் நரம்பிசைக் கருவிகளின் இணையோடு யாவரும் தொழுதெழுகின்ற சிறப்பினையுடையது புகலூர்.

திசைமொழி-பல திசைகளில் வழங்கப்பெறும் பல்வேறு மொழிகள்; நரம்பெடுத்து-நரம்பிசைக் கருவிகளின் துணை யொடு; அஞ்சனம்-கண்ணிற்கிடும் கரிய மை; அலைகடல்-அலைகளையுடைய கடல்; நஞ்சு-விஷம்.

**சாமவேதமொர் கீதமோதியத் தசமுகன் பரவும்**
**நாமதேய மதுடையார் நன்குணர்ந்தடிகளென் றேத்த**
**காமதேவனை வேவக் கனலெரி கொளுவிய கண்ணார்**
**வாமதேவர் தண் புகலூர் வர்த்தமானீச்சரத்தாரே ! (8)**

இராவணனால், சாமவேதத்தை இசையுடன் கூட்டிப் பாடப்பெற்ற பெருமையை உடையவன், நல்லறிவார்ந்து நன்கு இறைவனை உணர்ந்த அடியார்களால் தொழப் பெறுபவன். மன்மதனைக் கனலால் எரித்து அருளியவன், வாமதேவரால் புகழப்பெற்றவன்.

தசமுகன்-பத்துமுகங்களையுடைய இராவணன்; சாம வேதம்-இசையுடன் கூடிய வேதம் சாமவேதம்; ஏத்த-புகழ; வேவ-எரிக்க; கொளுவிய-அருளிய; தண்-பெருமை மிக்க, குளிர்ந்த வளமிக்க;

**சீரணங்குற நின்ற செருவுறு திசைமுக னொடு**
**நாரணன் கருத்தழிய நகைசெய்த சடைமுடி நம்பர்**
**ஆரணங்குறு முமையை யஞ்சுவித் தருளுதல் பொருட்டால்**
**வாரணத்துரி போர்த்தார் வர்த்தமானீச்சரத்தாரே ! (9)**

சடைமுடியினை உடைய நமது இறைவனாரின் அடியையும், முடியையும் காண்போம் எனச் செருக்குற் றெழுந்த, திருமாலோடு, பிரமனின் கருத்தழியும்படி அனல் வடிவாய் நின்று பின்னர் சிரித்து அருளியவன் நம்பெருமான், உடன் உறையும் உமாதேவியை அஞ்சும்படிச் செய்துப் பின் அருளுதல் பொருட்டு யானையைத் தோலுரித்து அதைப் போர்த்திக்கொண்டவன்தான் புகலூர் வர்த்தமானீச்சரத்தான். இதே கருத்து அஞ்சும்படி செய்து அருளுதல், வேறு ஒரு பாடலில் வருகிறது காண்க.

செருவுறு-கர்வம் கொண்ட; திசைமுகன்-பிரம்மன்; நாரணன்-திருமால்; கருத்தழிய-செருக்கு நீங்க; நகை செய்த-சிரித்த; ஆரணங்கு-உமாதேவி; வாரணம்-யானை.

**கையிலுண்டுழல் வாருங் கமழ் துவராடையினாற்றம்**
**மெய்யைப் போர்த்துழல் வாருமறைப்பன மெய்யென விரும்பேல்**
**செய்யில் வாளைகளோடு செங்கயல் குதிகொளும் புகலூர்**
**மைகொள் கண்டத்தெம் பெருமான் வர்த்தமானீச்சரத்தாரே ! (10)**

வாளை மீன்களோடும், வேறுவகை மீன்களும் குதித்துத் தாவுகின்ற வயல் வளமிக்கது புகலூர், அங்கு வர்த்தமானீச் சரத் துறையும், சிவபெருமான் திருநீலகண்டர் கையில் பிச்சை வாங்கியுண்டுத் திரிபவர். நாற்றம் வீசும் துவராடையை உடுத்தியவர். இப்படிப்பட்ட நமது இறைவனாரை வணங்கும் அடியவர்களே, உடலில் ஆடையைப் போர்த்தித்

திரியும் "தேரர்" மற்றும் சமணர்கள் உரைத்திடும் பொய் யுரைகளை உண்மையென்று நம்பி விரும்பாதீர்கள்.

கமழ்-வாசனை; நாற்றம்-வாசனை; செய் - வயல்; மைகொள்-கருமை நிறத்ததாகிய; கண்டம்-கழுத்து; வாளை-வாளை வகைமீன்.

**பொங்கு தண்புனல் சூழ்ந்து போதணி பொழிற் புகலூரில்**
**மங்குண்மாமதி தவழும் வர்த்தமானீச்சரத் தாரைத்**
**தங்குசீர்திகழ் ஞானசம்பந்தன் றண்டமிழ் பத்தும்**
**எங்குமேத்த வல்லார்க ளெய்துவ ரிமையவ ருலகே! (11)**

நீர்வளம், பொழில் வளஞ்செறிந்து, நிலவு தவழும் எழில் திகழ், திருப்புகலூர், வர்த்தமானீச்சரத்துப் பெருமானை, பொருந்திய, சீர்திகழ் ஞானசம்பந்தன் போற்றியருளிய, தமிழாலாய பாடல்கள் இப்பத்தும் கொண்டு எங்கும் ஏத்திட வல்லவர். இமையவர்களில் உலகில் சென்று இன்புறுவர்.

தன்புனல்-குளிர்ந்த நீர்; தண்டமிழ்ப் பாடல் பத்து-வளமிக்க தமிழால் பாடிய பத்து பாடல்கள்; ஏத்த வல்லார்-புகழ்ந்து பாட வல்லவர்; புனல்-நீர்.

## திருநாவுக்கரசர் இரண்டாம் பதிகம்

இராகம்: *நவரோஸ்* பண்: *திருநேரிசைக்கொல்லி* தாளம்: *ஆதி*

**பகைத்திட்டார் புரங்கண் மூன்றும் பாறி நீறாகி வீழப்**
**புகைத்திட்டார் தேவர் கோவே பொறியிலே னுடலந்தன்னுள்**
**அகைத்திட்டங் கதளை நாளுமைவர் கொண்டாட்டவாடித்**
**திகைத்திட்டேன் செய்வதென்னே திருப்புகலூரனீரே ! (1)**

*திருப்புகலூரிலிடங் கொண்ட ஈசனே! அறிவில்லேன், என் உடலில் அமைந்த ஐம்பொறிகளும் என் உடலை அயர் வுறும்படி ஆட்டிவைக்கின்றனர். அவர்களின் ஆட்டம் கண்டு திகைப்புறுகின்றேன். உம்மைப் பகையாகக் கொண்ட அசுரர்களின் முப்புரங்களையும் தீப்பற்றி எரிந்து நீறாகி வீழ்ந்து புகையும்படிச் செய்த தேவர்களின் தலைவரே! இனியான் என்ன செய்வேன்?*

*பகைத்திட்டார்-பகையகக் கொண்டவர்; புரங்கண் மூன்று-முப்புரங்கள்; நீறாகி-சாம்பலாகி; ஐவர்-ஐம்புலன்கள்-பொறிகள்; கொண்டாட்ட மாடல்-மகிழ்வோடு-தருக்குற்று ஆடல்; திகைத்தல்-ஆச்சரியப்படுதல்- என்ன செய்வதென தெரியாது திகைப்படைதல்.*

**மையரி மதர்த்த வொண்கண் மாதரார் வலையிற்பட்டு**
**கையெரி சூலமேந்துங் கடவுளை நினைய மாட்டேன்**
**ஐநெரிந் தகமிடற்றே யடைக்கும் போதாவி யார்தாம்**
**செய்வதொன்றறிய மாட்டேன் திருப்புகலூரனீரே ! (2)**

*மை தீட்டிய கவர்ச்சியுடைய ஒளிமிக்க கண்களை யுடைய பெண்களின் காமவலையில் வீழ்ந்து அதனால் ஏற்பட்ட மயக்க மேலீட்டால், அனலோடு சூலத்தையும் கையில் ஏந்தும் கடவுளை நினைக்கமாட்டாதான் ஆயினேன்.*

*உடலிளைத்து, சாகுங்காலம நெருங்கிட தொண் டையில் சளி எனும் சிலேத்துமம் அடைத்து ஏதோவென*

திகைத்து நிற்கும் போது என்ன செய்வதென்றே அறியமாட்டேன்! ஆகவே புகலூரில் இடம்கொண்ட எமதிறைவரே அருள்வீராக!

மையரி-மைபூசி கொழுத்த; வொண்கண்-ஒளிமிக்க கண்கள்; வலை-காமமெனும் வலை; மிடற்றே-தொண்டையில்

பெரியாழ்வாரின், "துப்புடையாரை அடைவதெல்லாம்" என்ற பாசுரத்தின் வரிகளாகிய, "எய்ப்பென்னை வந்து நலியும் போது அங்கேதும் நானுன்னை நினைக்க மாட்டேன். அப்போதைக்கிப் போதே சொல்லி வைத்தேன் அரங்கமா நகருளானே!" என்பதனை நினைவிற் கொள்க.

**முப்பது முப்பத்தாறு முப்பது மிடுகுரம்பை**
**அப்பர் போலைவர் வந்துவது தருகிது விடென்று**
**ஒப்பவே நலியலுற்றா லுய்யுமா றறிய மாட்டேன்**
**செப்பமே திகழுமேனித் திருப்புகலூரனீரே ! (3)**

செம்மையான திருமேனி கொண்டு திருப்புகலூரில் பொருந்தி வாழும் இறைவா! இவ்வுடம்பு தொண்ணூற்றாறு தத்துவங்களால் ஆகியது, அதனுள் வாழும் குடிலின் தலைவர்களாகிய ஐந்து இந்திரியங்கள், "இதைவிட்டு அதைக் கொடு! அதைவிட்டு இதைக் கொடு!" என்று உத்திரவிட்டு என்னை நலியும்படிச் செய்கின்றனர். இப்போது நான் உய்யும் வழி காண்கிலேன்! அருள் செய்வீராக !

முப்பது முப்பத்தாறு முப்பது - 30+36+30=96. (96 தத்துவங்கள்); குரம்பை-குடிசை; அப்பர்-தலைவர்; செப்பம்-செம்மை-அழகு, திருத்தமான.

உடலின் தொண்ணூற்றாறு தத்துவங்கள் பற்றிய செய்திகளை நானாசீவ வாதக் கட்டளை கைவல்லிய நவநீதம் ஆகிய நூல்களும் இராமலிங்க அடிகளாரும் விரித்துக் கூறியுள்ளனர்.

## தொண்ணூற்றாறு தத்துவங்கள் இவை என வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் கூறுவது

*1. பூதங்கள் 5:* ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்,

*2. கர் மேந்திரியங்கள் 5:* வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபஸ்தம்.

*3. கர்மேந்திரிய விஷயங்கள் 5:* வசனம், கர்மம், கமனம், விசர்ஜம், ஆனந்தம்.

*4. ஞானேந்திரியங்கள் 5:* துவக்கு, சக்ஷீ, சுரேத்திரம், ஜிஹ்றவை, ஆக்கிராணம்.

*5. தன் மாத்திரைகள் 5:* சப்த, ஸ்பரிஸ, ரூப, ரஸ, கந்தம்.

*6. அந்தக்கரணம் 5:* மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உள்ளம்.

*7. நாடிகள் 10:*

1. இடை கலை - வலது கால் பெருவிரலிலிருந்து இடது நாசி வரை இருப்பது.

2. பிங்கலை: இடதுகால் பெருவிரலிலிருந்து வலது நாசி வரைக்கும் இருப்பது.

3. சுழும் நா: எல்லா நாடிகளுக்கும் ஆதாரமாய் மூலாதாரத்திலிருந்து நடுநாடியாய் சிரசு வரைக்கும் இருப்பது.

4. கண்டம்: தண்ணீர் சோறு முதலியவைகளை உண்ணாக்கினால் விழுங்கச் செய்வது.

5. அக்ஷிகள்: வலது கண்ணில் இருப்பது.

6. காந்தாரி: இடது கண்ணில் இருப்பது.

*7. அலம்புடை: இடது காதில் இருப்பது.*

*8. சங்கினி: உபஸ்த் தத்தில் இருப்பது.*

*9. அத்தி: வலது காதில் இருப்பது.*

*10. குரு: அபானத்திலிருப்பது.*

***8. வாயுக்கள் 5:*** *பிராணன், அபாணன், வியானன், உதாணன், சமானன்.*

***9. உபாவாயுக்கள் 5:*** *நாகன், கூர்மன், க்ருகரன், தேவதத்தன், தனஞ்சயன்.*

***10. ஆச்சர்யங்கள் 5:*** *அமராச்ரயம், விபஜனாச்சரியம், ஜலாச்ரயம், மலாச்ரயம், சுக்கிலாச்சர்யம்.*

***11. கோசங்கள் 5:*** *அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞான மயம், ஆனந்த மயம்.*

***12. ஆதாரங்கள் 5:*** *மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாதகம், விசுத்தம், ஆக்ஞேயம்.*

***13. தோஷங்கள் 3:*** *வாத, பித்த, சிலேத்துமம்.*

***14. ஈஷாணாத்திரயங்கள் 3:*** *தாரேஷண, புத்திரேஷண, வித்தேஷண,*

***15. குணங்கள் 3:*** *சாத்வீகம், ராஜஸம், தாமஸம்.*

***16. துர்க்குணங்கள் 14:*** *இராக, துவேஷ, காம, குரோத, லோப, மோக, மத, மாச்சர்ய, டம்ப, தர்ம, ஈர்ஷை, அசூயை, அகங்காரம், மமகாரங்கள்.*

***17. வினைகள் 2:*** *நல்லினை - தீவினை.*

***18. அவத்தைகள் 5:*** *ஜாக்கிரத், சுவப்ன, சுழுப்தி, துரியம், துரியாதீதம்.*

இவைகள் உடலில் எந்த எந்த பாகத்தில் இருந்து இயங்குகின்றன என்ற விஷயங்களை வேறு நூல்களில் கண்டு தெளியலாம்.

**பொறியிலா வழுக்கை யோம்பிப் பொய்யினை மெய்யென் றெண்ணி**
**நெறியலா நெறிகள் சென்றே னீதனே நீதியேதும்**
**அறிவிலே னமரர்கோவே யமுதினை மனனில் வைக்கும்**
**செறிவிலேன் செய்வதென்னே திருப்புகலூரனீரே !** (4)

*திருப்புகலூரெனும் பதியிலுரை இறைவா! ஒழுங்கில்லாத, அழுக்கு உடலைப் போற்றிப் பாதுகாத்தேன், நீதியேதும் அறியாத காரணத்தால், நன்னெறியில் செல்லாது தீய வழிகளில் சென்றேன். நானே நீசன், அமரர்க்குத் தலைவா! அமுதனே! உன்னை மனத்தில் வைத்து சிந்திக்கும்படியான அளவுக்குக் கூட அறிவு அற்றவனானேன்; என் செயவேன்?*

*பொறி-ஐம்பொறி; அழுக்கை-அழுக்கடையும் தன்மையுடைய உடலை; ஓம்பி-பாதுகாத்து; செறிவு-அறிவின் உயர்வு.*

**அளியினார் குழலினார் களவர்களுக் கன்பதாகிக்**
**களியினார் பாடலோவாக் கடவூர் வீரட்டமென்னும்**
**தளியனார் பாத நாளுந் நினைவிலாத் தகவில் நெஞ்சம்**
**தெளிவிலேன் செய்வதென்னே திருப்புகலூரனீரே!** (5)

*வண்டுகள் சூழும் மலர்களையணிந்த கூந்தலையுடைய இளம்பெண்களுக்கே அன்புடையவனானேன்! மகிழ்வோடு பாடும் பாடல்களின் ஓசை ஓங்கிய கடவூர் வீரட்டானத்து இறைவனின் மலரடிகளை நாளும் நினைத்தேனல்லேன். ஆதலினால் என் நெஞ்சம் தெளிவிலாதாகியது புகலூர் வாழ் புனிதனே! நான் இனி என் செய்வேன்!*

*அளி-வண்டு; குழல்-கூந்தல்; களி-மகிழ்வு.*

*இறைவனிடத்து அன்பு கொள்வார் தம் நெஞ்சம் தெளிவாக இருக்கும் எனவும் அவ்வாறு அன்பு கொள்ளாதார் நெஞ்சம் இருள் சூழ்ந்து தெளிவற்றதாய் அமையும் என்பதம் கருத்து.*

**இலவினார் மாதர்பாலே யிசைந்துநா னிருந்து பின்னும்**
**நிலவு நாள் பலவென்றெண்ணி நீதனே னாதியுன்னை**
**உலவி நானுள்கமாட்டேனுன்னடி பரவு ஞானம்**
**செலவிலேன் செய்வதென்னே திருப்புகலூரனீரே! (6)**

*புகலூர் இறைவா! இவ்வுலகில் நான் நீண்ட நாள் உயிர் வாழ்வேன் என்று எண்ணி இலவம் பூவும், பஞ்சும் போன்ற மென்மையான வாயும், அடியும் கொண்ட மாதர்பால் ஆசை கொண்டு அவரோடுங் கூடி நான் இருந்துவிட்டேன்! நானே நீசன்! ஆதியாய நின்ற இறைவா! நான் உன்னை என் மனத்தே நினைக்காமல் இருந்துவிட்டேன்! என்னுடைய அறிவினை உன்னிருப்பொற் பாதங்களை வணங்கிட வேண்டுமெனும் வழியிலும் செலுத்தாமல் இருந்துவிட்டேன் என் செய்வேன்!*

*இலவினர்-இலவம் பூ-பஞ்சு: நிலவு நாள்-உயிரோடு இருக்கும் நாள்; உள்க-மனத்தில் எண்ண; ஞானம்-அறிவு.*

**காத்திலே னிரண்டுமூன்றுங் கல்வியே இல்லை யென்பால்**
**வாய்த்திலே னடிமை தன்னுள் வாய்மையாற் றூயே னல்லேன்**
**பார்த்தனுக் கருள் கள்செய்த பரமனே பரவுவார்கள்**
**தீர்த்தமே திகழும் பொய்கைத் திருப்புகலூரனீரே! (7)**

*புண்ணிய நீர்த்தடாகங்கள் நிறைந்த புகலூரா! நான் எனது ஐம்புலன்களையும் அடக்கியவனல்லேன்! நற்கல்வி ஏதும் கற்றவனுமில்லை, உண்மை பேசும் தூயவனுமில்லேன், உன்னடியார் தம் கூட்டத்தில் ஒருவனாய் இருந்தேனில்லை! அருச்சுனனுக்கு அன்று இருமுறை அருள் செய்தவனே! பரமனே! என் செய்வேன்!*

*இரண்டும்மூன்றும்-2+3=5. ஐம்புலன்கள்; வாய்மை-உண்மை; பார்த்தன்-அருச்சுனன்; பரவுவார்கள்-அடியார்கள்;*

*அருச்சனர்க்கு அருள்கள் செய்த எனப் பன்மையிற் கூறியது: முதல்முறை பார்த்தனுடன் சண்டையிட்டு அவனது வில்லால் அடிபட்டபோது அதனைப் பொருத்தருளியது.*

இரண்டாவதாக அவனுக்கு பாசுபதாஸ்திரம் எனும் வீரியமிக்க அம்பினைக் கொடுத்தருளியது என்பர்.

**நீருமாய்த் தீயுமாகி நிலனுமாய் விசும்புமாகி**
**ஏருடைக் கதிர்களாகி யிமையவ ரிறைஞ்ச நின்று**
**ஆய்வதற் கரியராகி யங்கங்கே யாடுகின்ற**
**தேவர்க்குந் தேவராவர் திருப்புக லூரனாரே ! (8)**

திருப்புகலூர் இறைவர், இமையவர் இறைஞ்ச நீர், தீ, நிலம், காற்று, விசும்பு, ஞாயிறு, திங்கள், உயிர் ஆகிய எட்டுவாய் நிற்பவர். எவராலும், ஆய்ந்து உணர்வதற்கு அரியவன், தத்துவ புவனங்களில் ஆங்காங்கே நின்று, முத்தொழில் புரியும் தேவர்க்கும் தேவனானவர் ஆவார்.

விசும்பு-வான்; இமையவர்-இமய மலையிடை இருப்பவர்; ஆடுகின்ற-தொழில் செய்கின்ற

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய்
இன்மையுமாய் கோனாகி யான் எனதென்று
அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி
வாழ்த்துவனே!

என்ற பாடலை நிறைவிற் கொள்க.

**மெய்யுளே விளக்கை ஏற்றி வேண்டா வுயரத்தூண்டி**
**உய்வதோ ருபாயம் பற்றி யுகக்கின்றே னுகாவண்ணம்**
**ஐவரை அகத்தே வைத்தீ ரவர்களே வலியர் சாலச்**
**செய்வ தொன்றறிய மாட்டேன் திருப்புகலூரனீரே ! (9)**

உடம்பின் உட்புறத்தே ஞானமெனும் தீபத்தை ஏற்றி வைத்து, மும்மலங்களைக் கடக்க வேண்டிய அளவு அதனைத் தூண்டிவிட்டு மகிழ்வடைகின்றேன். ஆனால் அவ்வாறு என்னுள்ளே ஒளிமிகாவண்ணம் செய்ய மிகவும் வலியவர்

களான ஐந்து இந்திரியங்களை என்னுள்ளேயே வைத்தீர். அவர்கள் அவ்வொளியை வேண்டிய அளவு மிகச் செய்யா வண்ணம் இன்னல், செய்து என்னை மகிழ்வுறாவண்ணம் செய்கின்றனர் என் செய்வேன்! தெரியவில்லையே!

மெய்-உடல்; உக-மகிழ்வடைய; ஐவர்-பஞ்சேந்திரி யங்கள்; வலியர்-வலிமை மிக்கவர்; சால-முற்றிலும்.

ஞான தீபத்தை, துவாத சாந்தத்தின் எல்லைவரை ஒளிபெறச்செய்து, நிட்டையைக் கடைப்பிடித்த தன் அளவில், மும்மலங்களும் நீங்கப்பெற்று வீடுபேறு அடையாலம் என்பர், அப்போது பஞ்சேந்திரியங்கள் தடையாக நிற்காதெனவும் கூறுவர்.

**அருவரைத் தாங்கினானு மருமறை யாதியானும்**
**இருவரும றியமாட்டா ஈசனா ரிலங்கை வேந்தன்**
**கருவரை எடுத்த ஞான்று கண்வழி குருதி சோரத்**
**திருவிரல் சிறிதுவைத்தார் திருப்புகலூரனாரே ! (10)**

ஆயர்குலத்தாரைக் காக்க வேண்டி கோவர்த்தன கிரியை குடையாய்ப் பிடித்து தாங்கிய திருமாலும், நான்கு வேதங்களின் ஆதியான பிரம்மனும் அறிய முடியாத மாண்பினர் நம்புகலூர் இறைவர் அவரே இலங்கை வேந்தனாகிய இராவணன், கயிலை மலையைத் தூக்கியபோது அவனது இருபது கண்களிலிருந்தும் இரத்தம் கசியும்படியாக, மலையின்மீது தன் ஒற்றை விரலை வைத்துச் சற்று அழுத்தியவர்.

அருவரை-அரியமலை-கோவர்த்தனகிரி; மறையாதி யான்-பிரம்மன்; கருவரை-கரிய கயிலாயமலை; சிறிது வைத்தார்-சிறிது அழுத்தி வைத்தார்.

## திருநாவுக்கரசர் மூன்றாம் திருப்பதிகப் பாடல்கள்

### பத்தில் - கிடைததவை 4 மட்டுமே, 3, 5, 6, 7, 8, 9 ஆகியன கிடைக்காது நிற்பவை

**தன்னைச் சரணென்று தாளடைந்தேன் றன்னடி யடையப்**
**புன்னைப் பொழிற் புகலூரண்ணல் செய்வன கேண்மின்களோ**
**என்னைப் பிறப்பதுத் தென்வினை கட்டறுத் தேழ்நரகத்**
**தென்னைக் கிடக்கலொட்டான் சிவலோகத்திருத்திடுமே! (1)**

*புன்னைமரப் பொழில்கள் சூழ்ந்த புகலூர் இறைவனாரின் திருவடிகளைத் துணை எனக்கொண்டு சரணடைந்த என்னை அவ்விறைவனார் என்ன செயவான் என்று கேளுங்கள்? இப்பிறவியோடு மறுபிறவி யிராவண்ணம் என் பிறப்பறுத்து, எனது தீவினைகளினால் கிட்டவேணடிய ஏழ் நரகத்துழலும் நிலையை எனக்குக் கிடைக்கப்பெறாமல் செய்து சிவலோகத்திலே என்னை இருக்கச் செய்திடுவான்.*

*தாள்- திருவடிகள்; கேண்மின்-கேளுங்கள்.*

*பிறவியின் தீவினைக் காரணமாக ஏழ் நரகம் எய்துவர் என்பது கருத்து. நரகத்துள்ளோர் துன்புறுவர் என்பதும் சிவலோகத்துள்ளோர் இன்புறுவர் என்பதும் கருத்தாகும்.*

**பொன்னை வகுத்தன்ன மேனியனே புணர்மென் முலையாள்**
**தன்னை வகுத்தன்ன பாகத்தனே தமியேற்கிரங் காய்**
**புன்னை மலர்த்தலை வண்டுறங்கும் புகலூரரசே**
**என்னை வகுத்திலையே விடும்பக்கிடம் யாதுசொல்லே! (2)**

*பொன்னார் மேனியனே! நீ புணரும் மென்மையான முலைகளையுடைய உமாதேவிக்கு, ஒரு பாகத்தை அளித்தவனே! புன்னை மலர்களின் மீது மது உண்ட வண்டுகள் மயங்கியுறங்கும் வளமிக்க புகலூரரசே! என்னை மட்டும் துன்பத்திற் காளாகாமற் படைக்கவில்லையே! என்ன காரணம் என்று கூறுவாய்! என்மேல் இரக்கம் கொண்டு அருள்வாயாக!*

மென்முலையாள்-மென்மையான முலைகளையுடைய உமாதேவியார்; பாகத்தன்-ஒரு பாகத்தே வைத்தான்; மலர்த்தலை-மலர்களின் மீது; இடும்பை-துன்பம்.

"இவ்வளவும் செய்த நீ, இதை மட்டும் செய்யா திருந்தனையே!" என்றது.

பொன்னளவார் சடைக் கொன்றையினாய் புகலூரரசே
மன்னுள தேவர்க டேடு மருந்தே வலஞ்சுழியாய்
என்னை வேயுனக் காட்பட் டிடைக்கலத்தே கிடப்பார்
உன்னள வேயெனக் கொன்று மிரங்காத உத்தமனே! (4)

கொன்றை மலர்களை யணிந்த பொன்னொத்த நீண்ட சடையினையுடைய பூம்புகலூர் அரசே! தேவர்கள் தேடும் அருமருந்தே! உனக்கும் எனக்கும் இடையே வலஞ்சுழியாய் நிறைந்து உனக்கே ஆட்பட்டு நிற்பவர்கள் உன்னளவு உயர்வானவர்களே எனவே என்னையும் அவ்வடியார்தம் அளவாகக்கொண்டு அருள்புரிவீராக!

கொன்றையினாய்-கொன்றை மலர்களை அணிந் தவனே! தேவர்கடேடு-தேவர்கள்+தேடு; வலஞ்சுழியாய்-வலப்புறமாகச் சுற்றி; இடைக்கலம்-இடைப்பட்ட இடத்தில்.

"நல்ல மருந்து மருந்து, சுகம் நல்கும் வைத்திய நாத மருந்து" எனும் அருட்பெருஞ்சோதியாரின் பாடலை நினைவிற் கொள்க.

ஓணப் பிரானு மொளிர்மா மலர்மிசை யுத்தமனும்
காணப்பராவியுங் காண்கின் றிலர்கர நாலைந்டைத்
தோணப்பிராண வலிதொலைத் தோன்றொல்லை
நீர்ப்புகலூர்க்
கோணப்பிரானைக் குறுகக் குறுகார் கொடுவினையே ! (10)

திருவோண நட்சத்திரத்தன்று வழிபடச் சிறப்புடைய திருமாலும், ஒளிமிகு வெண்தாமரை மலர் மீது அமர்ந்த

பிர்மதேவனும், அடிமுடியைக் காண முயற்சித்தும், காண இயலாதவாறு நின்றவனும், இருபது தோள்களையுடைய இராவணன் கயிலை மலையை எடுத்தபோது அவனது வலிமையை அழித்தவன் தான் பழமையான, நீர் சூழ்ந்த புகலூர்க் கோணப்பிராணாகிய இறைவனார் அவனருளை வேண்டி அருகடைந்தோர்க்கு கொடுந்தீவினை ஏதும் அணுகாது.

ஓணம்-திருவோண நட்சத்திரம்; கரநான்கைந்து-4+5=20 கரங்களையுடைய இராவணன்; குறுகக் குறுகார்-அணுகினால்-சிவனை அணுகாது தீவினை.

"வந்தால் கிடைக்கும் வராவிடில் கிடைக்காது" என்றது.

## திருநாவுக்கரசர் நான்காம் திருப்பதிகம்
## திருக்குறுந்தொகை

**இராகம்:** *நாத நாமக்கிரியா* **தாளம்:** *சாபு*

**துன்னக் கோவணச் சுண்ணவெண் ணீறணி**
**பொன்னக் கன்ன சடைப்புக லூரரரோ**
**மின்னக் கன்னவெண் டிங்களைப் பாம்புடன்**
**என்னுக் கோவுடன் வைத்திட் டிருப்பதே ! (1)**

*கோவண ஆடையையும், வெண்ணீற்றுப் பொடி யணிந்த மேனியையும், பொன் விரிந்து மலர்ந்தது போன்ற சடையையும் உடைய புகலூர்ப் பெருமானே! தங்களின் திருச்சடையில், மின்னல் ஒளி யொத்த வெண்ணிலவை எதற்காகப் பாம்புடன் கூட சேர்த்து வைத்துள்ளீர் ?*

*துன்ன-சிறிய; சுண்ண-சுண்ணாம்பு போன்ற; பொன்+ நக்க+-பொன் விரிந்தது போல; மின்+நக்க+அன்ன=மின்னல் சிரித்தது போன்ற; வெண்டிங்கள்-வெண்+திங்கள்.*

*"பாம்பு, நிலவை விழுங் கினாலும் விழுங்கி விடுமே!" என ஐயுற்றது.*

**இரைக்கும் பாம்புமஎறிதரு திங்களும்**
**நுரைக்குங் கங்கையும் நுண்ணிய செஞ்சடைப்**
**புரைப் பில்லாத பொழிற் புகலூரரை**
**உரைக்குமா சொல்லி யொள்வளை சோருமே! (2)**

*பொழில்கள் நிறைந்த புகலூராரே! சீறி ஒலியெழுப்பும் குணம் கொண்ட பாம்பையும், அப்பாம்பினால் எந்நேரமும் விழுங்கப்பட்டு விடக்கூடிய நிலவையும், நுரைப் பொங்கும் கங்கையையும் ஒருசேர உம் நுண்ணிய செஞ்சடையில் வைத்துக்கொண்டிருந்தும் தீங்கு ஏதும் நேராது உள்ளீரே! இதன் காரணம் யாதெனக் கேட்டு, ஒளிபொருந்திய வளையல்களை அணிந்த இப்பெண் சோர்வடைகிறாள்*

இரைக்கும்=புஸ்=புஸ்! என்ற ஒலியெழுப்பும்; புரைப்பு-குற்றம்-தீங்கு. ஒள்வளை-ஒளி பொருந்திய வளையல்களை அணிந்த பெண்; சோருமே-சோர்வு அடைவாள்.

இப்படி இருந்தும் ஏதும் ஆகாதுளதே! இதுஎவ்வாறு என வியப்புறல்.

**ஊச லாமர வல்குலென் சோர்குழல்**
**ஏச லாம்பழி தந்தெழில் கொண்டனர்**
**ஓ சொலாய் மகளே முறையோ வென்று**
**பூச னாமிடுதும் புகலூரார்க்கே! (3)**

அசைந்தாடும் அரவத்தின் படத்தையொத்த அல்குலை யுடையவளும் ("ஊசலொத்து ஆட்டுறுகின்றனள்" என ஒரு பாடம் உண்டு) சரிகின்ற கூந்தலை உடையவளுமாகியப் பெண்ணை, ஊராலெல்லாம் ஏசிப் பழிசுமத்திப் பேசியதால், அவள் தன் அழகினை இழந்தாள், ஆதலால்: ஓ மகளே! இது முறையோவென்று சொல்வாயாக! புகலூர்த் தலைவரிடத்தே சென்று நாம் பூசலிடுவோம்.

சோர்குழல்-சரிந்த கூந்தல்; ஏசல்-இழித்துப் பேசுதல்; எழில்-அழகு; பூசல்-சண்டை. (ஆயுதமின்றிப் பேசிச் சண்டையிடல்)

**மின்னின் நேரிடையாளுமை பங்கனைத்**
**தன்னை நேரொப்பிலாத தலைவனைப்**
**புன்னைக் கானற் பொழிற் புகலூரனை**
**என்னுளாக வைத்தின் புற்றிருப்பனே ! (4)**

மின்னலை ஒத்த இடையை உடையவளாகிய உமாதேவியை ஒரு பாகமாக வைத்தவனை, தனக்குச் சமமானவர் இவரெனக் கூற இயலாத தனிப்பெருந் தலைவனை, புன்னை மரங்கள் நிறைந்த பொழில்கள் சூழ்ந்த புகலூரில் உறையும் எம் இறைவனை என் உள்ளத்தின் உள்ளே வைத்து இன்புற்றிருப்பேன்!

*மின்-மின்னல்; புன்னைக் கானற்பொழில்-புன்னை மரங்கள் அடர்ந்த வனங்கள்.*

*"யான் மட்டும் இன்புற்றிருப்பேன்" என்றது.*

**விண்ண னார்மதி சூடிய வேந்தனை**
**எண்ணி நாமங்களோதி யெழுத்தஞ்சுங்**
**கண்ணினார்க் கழல் காண்பிடமேதெனில்**
**புண்ணியன் புகலூருமென் நெஞ்சுமே! (5)**

*பிறைமதி சூடிய எந்தலைவனை, நாமங்களைக் கூறியும், திருவைந்தெழுத்தாகிய "நமசிவாய" எனக் கூறியும், அவ்விறைவனின் திருவடிகளைக் காணத்தக்க இடங்கள் எவை எனின், அப்புண்ணியன் எழுந்தருளியிருக்கும் புகலூரும், என் நெஞ்சுமே!*

*விண்ணினார் மதி-ஆகாயத்தே உள்ள நிலவு; வேந்தன்-தலைவன்; கழல்-திருவடிகள்; நாமம்-பெயர்(புகழும்படியான)*

**அண்ட வாண ரமுதுண நஞ்சுண்டு**
**பண்டு நான் மறையோதிய பாடலன்**
**தொண்டராகித் தொழுது மதிப்பவர்**
**புண்டரீகத் துளார் புகலூரே ! (6)**

*புகலூருரை இறைவனார், தேவர்களை அமுதுண்ணும்படி விடுத்து தாம் நஞ்சினை உண்டவர், முந்நாளில் நான்கு வேதங்களும் பாடிய பாட்டுடைத் தலைவன். இச்சிவனாரின் செயல்களை மதித்து இவருக்கே தொண்டனாகி தொழுபவர்தம் தாமரை போன்ற நெஞ்சத்தே நீங்காது நிற்பவர்.*

*அண்டவாணர்-தேவர்கள்; அமுது+நஞ்சு; பண்டு-முந்நாளில்; நான்மறை-நான்கு வேதங்கள்; பாடலன்-பாடலுக்குரிய தலைவன்; புண்டரீகம்-தாமரை மலர்.*

தத்து வந்தலை கண்டறி வாரிலைத்
தத்து வந்தலை கண்டவர் கண்டிலர்
தத்து வந்தலை நின்றவர் கல்லது
தத்துவனலன் தண்புகலூரானே ! (7)

தத்துவங்கள் இவையெனக் கண்டவர் இல்லை; அவ்வாறு தத்துவங்களின் தலைமையையும் முடிவையும் கண்டவர்கள், தத்துவ வடிவானவனைக் கண்டாரில்லை, தத்துவங்கள் அனைத்திற்கும் தலைமையாய் நின்றவனை உணர்ந்தார்க்கே அல்லது மற்றவர்க்கு தத்துவன் அல்லன் இத்திருப்புகலூரிறைவன்.

தத்துவம் இதுவென அறிதல் இறைவனை அடையும் வழியன்று. தத்துவங்களுக்கெல்லாம் தத்துவமானவன் இவன் என உணர்தலே திருவடிக்காண வழியாகும். ஏனெனில் இறைவனே தத்துவ வடிவாயும் தத்துவங்களின் தலைமை யாயும் விளங்குபவன் என்பது பாடம்.

பெருங்கை யாகிப் பிளிறி வருவதோர்
கருங்கை யானைக் களிற்றுரி போர்த்தவர்
வருங்கை யானை மதகளி றஞ்சினைப்
பொருங்கை யானை கணடீர் புகலூரரே! (8)

புகலூரில் உறையும் இறைவனார், பெரிய கையாகிய துதிக்கையினை உடைய கரிய யானையை அது எதிர்த்து வரும்போது அதன் தோலை உரித்து உடலில் போர்த்திக் கொண்டவர். இவ்விறைவரே ஒரு யானையைப் போன்றவர், அவர் நம்மை வருத்துகின்ற மதம் பிடித்த யானைகளைப் போன்ற ஐந்து இந்திரியங்களையும் தீங்கு ஏதும் செய்ய இயலாதவண்ணமாக்கி வெற்றி கொள்பவர் எனத் தெரிந்து கொள்ளுங்கள்!

பெருங்கை - பெரிய கை - துதிக்கை; களிற்றுரி- யானையை உரித்து; மதகளிறஞ்சினை - மதம்பிடித்த யானையைப் போன்று திரியும் பஞ்சேந்திரியங்களை; பொருங்கையான்- எதிர்த்துப் போரிட்டு வெல்பவன்.

பார்ப்பான் வீட்டு பாற்பசு
ஐந்தும் மேய்ப்பார் இன்றித்
தறி கெட்டுத் திரியுமே
மேய்ப்பாரும் உண்டாமால்
பார்ப்பான் வீட்டு பாற்பசு
ஐந்தும் பாலாய்ச் சொரியுமே!

என்பது திருமூலர் வாக்கு. இந்திரியங்களை நல்ல பசுக்களுக்கு ஒப்பிடுவது காண்க.

**பொன்னொத் தநிறத்தானும் பொருகடல்**
**தன்னொத் தநிறத்தானு மறிகிலாப்**
**புன்னைத் தாது பொழிற்புக லூரை**
**என்னத் தாவென வென்னிடர் தீருமே! (9)**

பொன்னை ஒத்த நிறமுடைய பிரமதேவனும், அலைகள் வீசும் கடலின் நிறத்தினை ஒத்த, திருமாலும், முயன்றும் அறிய இயலாத, புன்னைமர மலர்களின் பூந்தாது நிறைந்த பொழில்கள் சூழ்ந்த புகலூர் ஐயனைக் கூவி, என் தந்தையே! என்றால் என் துன்பங்கள் யாவும் தீருமே!

பொன்னொத்த நிறத்தான்-பிரம்மன்; பொருகடல் தன்னொத்த நிறத்தான்-கடலின் நீல நிறம் கொண்ட திருமால். அறிகிலா-(இருவரும் சேர்ந்து முயன்றும்) அறிய முடியாத, அத்தா-தந்தையே.

**மத்தனாய் மதியாது மலைதனை**
**எத்தினான்றிர டோண்முடி பத்திற**
**ஒத்தினான் விரலாலொருங் கேத்தலும்**
**பொத்தினான் புகலூரைத் தொழுமின். (10)**

அறிவிழந்தவனாகி இறைவனாரை மதியாது, கயிலாய மலையை தன் தோள்களினால் தூக்கியவனாகிய இராவணனது இருபது தோள்களும், பத்துத் தலைகளும், இற்றுப் போகும்படி, தன் ஒருவிரலை மெலிதாக ஊன்றின

இறைவன், அவ்விராவணன் பின் அழுது தொழுத காரணத்தால் அவன் வாயைப் பொத்தி அருள் செய்தவனாகிய புகலூரானைத் தொழுமின்!

மத்தன்-உன்மத்தன்; அறிவிழந்தவன்; மதியாது-உரிய மரியாதை கொடுக்காமல்; எத்தினான்-எடுத்தான்; பத்திற-பத்துத் தோள்களும் இற்றிட, ஏத்தினான்-மெதுவாக அழுத்தினான்; ஏத்தலும்-துதிக்கவும்; பொத்தினான்-அழும் வாயைப் பொத்தி அருள்செய்தான்.



## திருநாவுக்கரசர் ஐந்தாம் திருப்பதிகம் - திருத்தாண்டகம்

இராகம் - அரிகாம்போதி

எண்ணுகேன் என்சொல்லி யெண்ணு கேனோ
எம்பெருமான் றிருவடியே யெண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைக ணில்லேன்
கழலடியே கைதொழுது காணிலல்லால்
ஒண்ணுளே யொன்பது வாசல் வைத்தா
யொக்க வடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே ! (1)

அழகிய புகலூர் வாழ் புண்ணியனே ! யாவையும் எண்ணும் தன்மையுள்ள நான், இறைவனாகிய உன் திருவடியையன்றி வேறு எதனையும் விரும்பி, நினைக்க மாட்டேன். உன் திருவடிகளைக் காண மட்டுமே என் இரு கண்களைப் பெற்றுள்ளேன். பற்றுதற்கு ஒரு துணை உன்னையன்றி வேறில்லை, உன் திருவடிகளைத் தொழுவ தன்றி என் கைகளால் தொழ வேறெதும் இல்லை.

என் உடலிலே ஒன்பது திறப்புகளை வைத்துள்ளாய். அவ்வொன்பது வாசல்களும், இறுதிக் காலத்தில், ஒருசேர அடைத்துக்கொள்ளும்போது, உன்னை, நினைக்கவோ, காணவோ எனும் உணர்வின்றிப் போவேன். ஆகையால் அப்படிப்பட்ட நேரம் வரும் முன்னரே உன் திருவடிகளைப் பற்றிக்கொள்கின்றேன். அடியேனை ஏற்றருள்வாயாக !

களை கண்-பற்றுக்கோடு; போதுதல்-பற்றுதல்;

யாருளர் "களைகண் அம்மா" - என்பது பாசுரம். "அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன்" என்ற ஆழ்வாரின் நினைவிற் கொள்க.

அங்கமே பூண்டா யன் லாடினா
யாதிரையா யானிழலா யானே றூர்ந்தாய்
பங்க மொன்றில்லாத படர் சடையினாய்
பாம்போடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கை யொன்றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தி னஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே யுன்னடிக்கே போது கின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே ! (2)

*தேவர்க்கெல்லாம் தேவனாகிய புகலூரரே! எலும்பு மாலையை அணிந்தவரே! திருவாதிரை நாளில் வழிபடச் சிறப்புற்றோனே! அனலைக் கையில் ஏந்தி ஆடியவனே! ஆலமர நிழலில் அமர்ந்தவனே! காளை மீதேறுவோனே! குற்றமற்ற படர்ந்த சடைமுடியை உடையவனே! பாம்பிற்கும், நிலவுக்கும் உள்ள பகையைத் தீர்த்தவனே! தேவர்கள் வேண்டிக்கொண்டபோது கொஞ்சமுந் தாமதியாமல், கடலில் தோன்றிய ஆலகால விஷத்தை உண்டும் சாகாமலும் மூப்பினையடையாமலும் நின்று அருளும் சிங்கம் போன்றவனே! உன் திருவடியை தொழும் என்னை ஏற்றருள் வீராக!*

*அங்கம்-உடல்-எரிந்த உடலின் எலும்புகளுக்கு ஆகி வந்தது. அனல்-தீ; யாதிரை-திருவாதிரை மீன்; ஆநிழல்- ஆலமர நிழல்-(சிறப்புக்கருதி); பங்கம்-குற்றம்; சங்கை-பயம்; வெட்கம்.*

பையரவக் கச்சையாம் பால் வெண்ணீற்றாய்
பளிக்குக் குழையினாய் பண்ணாரின் சொல்
மைஇரவு கண்ணாளைப் பாகங் கொண்டாய்
மான்மறி கை யேந்தினாய் வஞ்சக் கள்வர்
ஐவரையு மென்மேற்றர வறுத்தா
யவர் வேண்டுங் காரிய மிங்காவதில்லை
பொய்யுரையா துன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே ! (3)

திருப்புகலூர் மேவிய புண்ணியனே! படம் பொருந்திய பாம்பைக் கச்சையாக உடுத்தவனே! பால் போலும் வெண்ணீற்றை உடலில் பூசியவனே! பளிங்கு போலுங் குழையைப் பூண்டவரே! இனிய சொல்லையும், மையுண்ட கண்களையும் கொண்ட உமாதேவியைப் பாகமாகக் கொண்டவரே! மான்மறியைக் கையில் ஏந்தியவரே! ஐம்புலன்களால் உண்டாகும் தீவினை ஏதும் செய்யாவண்ணம் என்னைக் காத்தவரே! பொய்யேதுங் கூறாது உன் திருவடியைப் பற்றினேன்! என்னை ஏற்றருள்வீராக !

பையரவம்-விஷப்பாம்பு; பண்ணாரின் சொல்- பண்ணின் இசையளிக்கும் இனிமை, தரும் சொல்; மை விரவு- மை தீட்டிய; வஞ்சக்கள்வர்-தீவினைகளையே செய்யும் தீத் தொழிலுடைய பஞ்சேந்திரியங்கள்; மேற்றரவறுத்தா- மேல் சூழ்ந்து தீமை செய்யா வண்ணம் நீக்கியருளினாய்; பொய்யர்களுக்கு திருவடி கிட்டாது என உணர்த்தும்.

**தெருளாதார் மூவெயிலுந் தீயில் வேவச்**
**சிலை வளைத்துச் செங்கணையாற் செற்றதேவே!**
**மருளாதார் தம் மனத்தில் வாட்டந் தீர்ப்பாய்**
**மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க்கென்றும்**
**அருளாகி யாதியாய் வேதமாகி**
**யலர்மேலா னீர்மேலா னாய்ந்துங் காணாப்**
**பொருளாவா யுன்னடிக்கே போதுகின்றேன்**
**பூம்புகலூர் மேவிய புண்ணியனே ! (4)**

பூம்புகலூரில் உறையும் புண்ணியத் தேவே! அறிவில் தெளிவில்லாத, மூன்று அசுரர்க்குமுரிய மூன்று கோட்டைகளையும், மேருமலையை வில்லாக வளைத்து அதில் தீக்கணையைப் பூட்டி எறிந்துவேவச் செய்து அழித்த தேவே! மாற்றார் சொற்கேட்டு மயங்காது நின்றவர்தம் குறைகளைத் தீர்ப்பவரே! பிறவிப்பிணி தீர்க்கும் மருந்தே! வானவர்க்கு அருளும் தெய்வமாகி, முழுமுதலுமாகி வேதமே யாகி; அரியும், அயனும் முயன்றும் காண இயலாத அரும்பொருளாய் நின்றவரே! உன் திருவடிகளையே பற்றி நின்றேன்! என்னை ஏற்றருள்வீராக !

தெருளார்-அறிவற்றவர்; மூவெயில்-முப்புரங்கள்; சிலை-வில்; செற்ற-அழித்த; மருள்-மயக்கம்; வாட்டம்-துன்பம்; அலர்மேல்-தாமரையின் மேல் அமர்ந்த பிரம்மன்; நீர்மேல்-திருப்பாற் கடலில் அமைந்த திருமால்; ஆட்டும்-தேடியும்.

நீரேறு செஞ்சடைமே னிலா வெண்டிங்க
　　னீங்காமை வைத்துகந்த நீதியானே!
பாரேறு படுதலையிற் பலி கொள் வானே!
　　பண்டநங் கற்காய்ந்தானே பாவநாசா
காரேறு முகிலனைய கண்டத்தானே
　　கருங்கைக் களிற்றுரிவைக் கதறப் போர்த்த
போரேறே யுன்னடிக்கே போது கின்றேன்
　　பூம்புகலூர் மேவிய புண்ணியனே ! (5)

புகலூர் மேவிய புண்ணியனே! கங்கையை உடைய சடையின்மேல் இளம்பிறையையும் சூடி மகிழ்ந்த நீதி வடிவானோய்! பெரிய மண்டையோட்டில் பிச்சை கேட்டு உண்ணுபவனே! அன்று மன்மதனை எரித்தவனே! பாவங்களை அழிப்பவனே! கரிய மேகமொத்துக் கருத்த கழுத்தினை உடையவனே! யானையைக் கொன்று அதன் தோலை உரித்து உடலில் போர்த்திக் கொண்ட பெருவீரனே! உன் திருவடிகளையே பற்றி நின்றேன். என்னை ஏற்றருள் செய்வீராக.

நீர்=கங்கை; வெண்டிங்கள்-வெண்+திங்கள்; உகந்த-மகிழ்வுற்ற; பாரேறு படுதலை-பிரம்மனின் தலை; பலி-பிச்சை; அனங்கள்-மன்மதன்; முகில்-மேகம்; களிறு-யானை.

விரிசடையாய் வேதியனே வேதகீதா
　　விரிபொழிற் சூழ் வெண்காட்டாய் மீயச் சூராய்
திரிபுரங் களெரி செய்த தேவ தேவே
　　திருவாரூர்த் திருமூலட்டான மேயாய்
மருவினியார் மனத்துளாய் மாகாளத்தாய்
　　வலஞ்சுழியாய் மாமறைக்காட் டெந்தாயென்றும்
புரிசடையா யுன்னடிக்கே போதுகின் றேன்
　　பூம்புகலூர் மேவிய புண்ணியனே! (6)

பூம்புகலூர் உறைப் புண்ணியத்தேவே! திருவெண்காடு, மீயச்சூர், திருவாரூர், திருமூலட்டானம், மாகாளம், திரு மறைக்காடு ஆகிய திருத்தலங்களிலெல்லாம் நின்றுறை வோனே! வேதங்களால் புகழப்பெறுபவனே! வேதமே ஆகியோனே! விரித்த சடையை உடையவனே! திரிபுரங்களை எரித்தவனே! இனிய பண்புடையவர்களின் மனத்தில் இருப்பவனே! சடையுடைய்யனே! உன்னடிக்கே போதுகின்றேன். அருள்வீராக !

வேதியன்-வேதவடிவானவன்; வேதகீதன்-வேதங்களாற் பாடப்பெறுபவன்; மேயாய்-மேவி இருப்பவனே; மருவினி யார்-இனிய பண்புடையவர்.

**தேவார்ந்த தேவனைத் தேவரெல்லாந்**
**திருவடிமே லலரிட்டுத் தேடி நின்று**
**நாவார்ந்த மறைபாடி நட்டமாடி**
**நான்முகனு மிந்திரனும் மாலும் போற்றக்**
**காவார்ந்த பொழிற் சோலைக் கானப் பேராய்**
**கழுக் குன்றத் துச்சியாய் கடவுளே நின்**
**பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்**
**பூம்புகலூர் மேவிய புண்ணியனே! (7)**

பூம்புகலூர்ப் புண்ணியனே! தெய்வத்தன்மை வாய்ந்த தலைவனே! உம்மைத் தேவர்களெல்லாம் உன் திருவடிகளில் மலர்தூவி உன்னைத்தேடி நின்றனர்.

பிர்மன், இந்திரன், திருமால் ஆகியோர், வேதங்களைப் பாடியும், ஆடியும் போற்றி நின்றனர்! கானப்பேர், மற்றும் திருக்கழுக்குன்ற மலையுச்சி யாகிய இடங்களில் தோன்றி நின்றவனே! உன் பொன்னடிகளைப் பற்றி நின்றேன்! எனக்கருள் செய்வாயாக!

தேவார்ந்த-தெய்வத்தன்மை வாய்ந்த; தேவன்-தலைவன்; நாவார்ந்த-நாவினால்; பூவார்ந்த-பூப்போன்ற;

நெய்யாடி நின்மலனே நீலகண்டா
நிறைவுடையாய் மறைவல்லாய் நீதியானே
மையாடு கண்மடவாள் பாகத் தானே
மான்தோல் உடையாய் மகிழ்ந்து நின்றாய்
கொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
கொண்டாடியே னானிட்டுக் கூறிநின்று
பொய்யாத சேவடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே ! (8)

*புகலூர்வாழ் புண்ணியனே! நெய் அபிஷேகத்தை விரும்பி ஏற்பவரே ! குற்றமேதுமில்லாதவனே; திருநீல கண்டனே! நிறைவுடைய குணத்தோனே! நான்மறைகளும் உணர்ந்தவனே! நீதிதேவனே! கருத்த கண்களையுடைய இளநங்கையாகிய உமையை ஒரு பாகத்தேயுடையவனே! மானின் தோலை உடுத்தவனே! கொன்றை மலர் மாலையை உனக்கணிவித்து, உன்புகழ்பாடிக் கொண்டாடி, என்றும் பொய்யாத உன் திருவடிகளைப் பற்றி நின்றேன் என்னை ஏற்றருள்வீராக!*

*நெய்யாடி-பாலில் நெய்போல வெளியில்- ஊனக் கண்களுக்குத் தெரியாதபடி ஆடினமை; நின்மலன்-தூய்மை யானவன்; மடவாள்-உமையாள்; கொய்யாடு-கொய்திட ஆடும்; கொண்டாடி-புகழ்பாடி, கூத்திட்டு, பொய்யாத- என்றும் இல்லையெனாது (காய்க்காத, பூக்காத என்பதொக்க)*

*"நொய்யாடி என்ற சொல்லுக்கு நெய்தல் நிலப்பகுதியில் அமைந்த புகலூரில் நின்றாடி யவனே" என ஒரு பாடம் உண்டு. நெய்யாடி-"கிருதாபிஷேகப் பிரியன்" என சிவனை வேதம் கூறும் "கிருதம்" என்றால் நெய். நெய்யினால் அபிஷேகம் செய்யப்பெறுவதை விரும்புகிறவன் என்பது பொருள்.*

*தஞ்சாவூர் மாவட்டத்து திருவையாற்றை அடுத்த "தில்லைத் தானம்" என தற்போது வழங்கப்பெறும் ஊருக்கு "திருநெய்த்தானம்" என்பது சரியான பெயராகும். இவ்வூர்க்*

*கோவிலில் உறையும் சிவனார் நெய்யாடியப்பர் - நெய்யினால் அபிஷேகம் செய்யப்பெற்று, பின்னர் நெய்யின் பிசுபிசுப்பு நீங்கவேண்டி வெந்நீரால் அபிஷேகம் செய்கின்றனர்.*

துன்னஞ்சேர் கோவணத்தாய் தூயநீற்றாய்
துதைந்திலங்கு வெண்மழுவாள் கையிலேந்தித்
தன்னையுந் தண்மதியும் பாம்பு நீருஞ்
சடைமுடிமேல் வைத்துகந்த தன்மையானே!
அன்னநடை மடவாள் பாகத்தானே
யக்காரம் பூண்டானே யாதியானே
பொன்னங் கழலடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே ! (9)

*பூம்புகலூர்ப் புண்ணியத்தேவே! துண்டுத் துணிகளைத் சேர்த்து கோவணமாய் அணிந்தவனே! வெண்ணீரு பூசியவனே! ஒளிமிக்க மழுவாயுத மேந்தியவனே! நிலவு, பாம்பு, கங்கை ஆகியவற்றை சடையில் வைத்து மகிழ்பவனே! அன்னத்தின் நடையை உடைய உமாதேவியை ஒருபாகமான உடலைக் கொண்டவனே! எலும்பு மாலையைத் தரித்தவனே! ஆதியே! உன் திருவடியைப் பற்றி நின்றேன். அருள் செய்வீராக!*

*துன்னம்-துண்டு-கிழிந்த துணி, துதைந்து-கூர்மையாக் கப்பட்டு; அக்காரம்-அக்கம்+ஆரம்+=அக்காரம்-எலும்பு மாலை.*

ஒருவனையு மல்லா துணரா துள்ள
முணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையு மூவரையு மென்மேலேவி
யில்லாத தரவனுத்தாய்க் காலாற் செற்ற
கருவரைசூழ் கான விலங்கை வேந்தன்
கடுந்தேர் மீதோடாமைக் காலாற் செற்ற
பொருவரையா யுன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே ! (10)

பூம்புகலூர் மேவிய புண்ணியனே! ஒப்பற்ற பரம் பொருளாகிய உன்னையன்றி என் உள்ளம் பிறரை நினையாது, உணர்ச்சிகளைத் தூண்டி கலக்கத்தைச் செய்கின்ற இருவினைகளையும், முக்குணங்களையும் என்மேல் ஏவி, பொய்யான, யான், எனது என்னும் செருக்கினை நீ விளைவித்தலால், உன் மீது, நிரம்பிய அன்பு இல்லாதவனானேன்! ஏலக்காய் போன்ற நறுமணச் செடிகள் நிறைந்த வனங்களையுடைய இலங்கை மன்னனாகிய இராவணனுடைய தேரானது, கயிலைமலை மீது ஓடாதவாறு, அவனை மலையின் கீழ் அகப்படுத்திக் கால்விரலால் மிதித்து செருக்கழித்த கயிலை மலையானே! உன் திருவடிக்குப் போதுகின்றேன்! ஏற்றருள் செய்வீராக!

இருவர்-நல்வினை-தீவினை எனுமிருவர்; மூவர்-மும் மலங்கள்-முக்குணங்கள்; இல்லேன்+ஏலக்கருவரை இல்லே னேலக் கருவரை.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்

இராகம்: நவரோஸ் பண்: கொல்லி தாளம்: சாபு

தம்மையே புகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்வினுந்தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறுங் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோக மாள்வதற் (கு)
யாதுமையுற வில்லையே ! (1)

புலவர்களே! பொருள் வேண்டிப் பொய்யர்களை அணுகி அவர்களைப் புகழ்ந்து பேசியும், அவர் எதனைப் பேசினால் மகிழ்ச்சி அடைவாரோ அதனையே பெரிதாகப் பேசியும், அவரையே சார்ந்திருந்தாலுங் கூட அடியார்களுக்கு அவர் ஏதும் கொடுக்கமாட்டார் ஆதலால்,

இப்பிறவியில், உங்களுக்குத் தேவையான சோறும், இருக்க வீடும், கொடுத்து உங்களை நாடிவரும் துன்பங்களை நீக்கிடும் தன்மையரான எம் இறைவனார், இறப்பிற்குப் பின் சிவலோகபதியாளும் தன்மையையும் தருவார். இதில் ஏதும் சந்தேகம் கொள்ளாமல், இப்புகலூரில் உறைந்தருளும் ஈசனையே புகழ்ந்து பாடுங்கள்!

இச்சை- விருப்பம்; கூறை-வீடு;

“வறிய புலவர்க்கு வாரி வழங்கக்கூடிய வள்ளல் ஒருவன் இன்ன ஊரில் உள்ளான்” எனக் கூறி ஒரு புலவரை மற்றொரு புலவர் ஆற்றுப்படுத்துவர் அதுபோல இவரது பாடல்கள்- புகலூரரைனைச் சென்றடைந்தால் சோறும் வீடும் நற்பேறும் கிடைக்கும் எனக் கூறி வழிப்படுத்துகின்றன.

மிடுக்கிலாதானை வீமனே விறல்விசையனே
விவ்லுக் கிவனென்று
கொடுக்கிலா தானைப் பாரியே யென்று
கூறினுங் கொடுப்பாரிலை
பொடிக்கொண் மேனியெம் புண்ணியன் எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
அடுக்குமேலம ருலக மாள்வதற்
கியாது மையுற வில்லையே! (2)

வலிமையும் வீரமும் இல்லாத ஒருவனை வீமனே எனவும், வில்லிற்கு விசயன் போன்று நீரும் வீரமிக்கவரே என்றும், கேட்போர்க்கு கிஞ்சித்தும் கொடுக்காதவனை, வள்ளல் பாரி எனவும், புகழ்ந்து பேசியும்கூட ஏதும் பொருள் கொடுப்பார். இவ்வுலகில் இல்லை. ஆனால் புலவர்களே!

திருநீறணிந்த மேனியனும், புண்ணியனுமாகிய திருப்புகலூர் இறைவனாரைப் புகழ்ந்து பாடுவோர்க்கு அமரர் உலகம் ஆளுதற்கான பதவியினைத் தருவார் என்பதில் ஏதும் சந்தேகம் கொள்ளாது எமதிறைவனாரைப் பாடுவீர்களாக!

மிடுக்கு-வீரம்; பொடி-திருநீற்றுப்பொடி; அடுக்கு மேல்-அடுக்கடுக்காய் அமைந்த உலகத்திற்கும் மேலான.

காணியேற் பெரிதுடையனே கற்று நல்லனே
சுற்ற நன் கிளை
பேணியே விருந்தோம்புமே யென்று
பேசினுங் கொடுப்பாரிலை
பூணிபூண்டுழப் புட்சிலம்புந்தன் புகலூர்
பாடுமின் புலவீர்காள்
ஆணியா யமருலக மாள்வதற்
கியாது மையுற வில்லையே. (3)

புலவர்களே! காலடி நிலமும் தனக்கென இல்லாதானை நிலமும் ஏறும் நிறையப்பெற்றவனே எனவும் நீட்டோலை வாசியா நெடுமரம் போன்றானை கற்ற நற்கவிஞனே என்றும்;

சோறுண்ணும்போது அக்கையாற் காக்கையும் விரட்டாத கருமியை சுற்றத்தாரை எல்லாம் பேணியும் விருந்தோம்பியும், வாழும் சிறப்புடையவனே எனப் புகழ்ந்துங்கூட ஏதும் தருவார் இப்பூவுலகிலில்லை. ஆனால், ஏரைப் பூட்டி நிலத்தைப் புறட்டி உழும்போது மேல் வரும் பூச்சிகளை உண்ணவந்த பறவையினங்கள் ஓசை மிக எழுப்பும் வளமிக்க புகலூர் உறை எமதிறைவனாரைப் பாடின் அமரர் உலகு ஆளும் தன்மை அருள்வான். இது சத்தியம். சந்தேகம் ஏதும் கொள்ள வேண்டாம்.

காணி-உழுநிலம்; கிளை-உறவினர்; பூணி-ஏர்; புள்-பறவை (புட்சிலம்பு=புள்+சிலம்பு); சிலம்பல்-ஓசை எழுப்புதல்; ஆணி-சத்தியம்-உண்மை-உறுதி (ஆணித்ரமாக)

**நரைகள் போந்து மெய்தளர்ந்து மூத்துடல்**
**நடுங்கி நிற்கு மிக்கிழவனை**
**வரைகள் போற்றிரள் தோளனே யென்று**
**வாழ்த்தினுங் கொடுப்பாரிலை**
**புரை வெள்ளேறுடைப் புண்ணியன் புக**
**லூரைப் பாடுமின் புலவீர்காள்**
**அரையானாயம ருலக மாள்வதற்**
**கியாது மையுற வில்லையே. (4)**

புலவர்களே! தலைமுடி நரைத்து, உடல் தளர்ந்து, வயது மூப்பின் காரணமாக உடல் நடுங்க நிற்கும் கிழவனை, மலைகளைப் போன்ற திரண்ட தோள்களையுடையவனே என வாழ்த்திக் கூறினும் பொருள் ஏதும் கொடுப்பாரில்லை. ஆனால், வெண்காளையின் மீதேறும் புண்ணியனாகிய புகலூர் உறையும் எமதிறைவனாரைப் பாடின் தேவர் உலகிற் கரசனாகி ஆளலாம். இதற்கு ஏதும் சந்தேகம் கொள்ள வேண்டாம.

மூத்துடல்-மூத்து+உடல்=முதுமையுற்ற உடல்; வரை-மலை; திரள்-திரண்ட, வலிமையான; வெள்ளேறு-வெண்ணிறக்காளை; அரையன்-அரசன்;

வஞ்ச நெஞ்சனை மாசழக்கனைப்
பாவியை வழக்கில்லியை
பஞ்சதுட்டனைச் சாதுவே யென்று
பாடினு,ங் கொழுப்பாரிலை
பொன்செய் செஞ்சடைப் புண்ணியன்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
நெஞ்சில் நோயனுத் துஞ்சு போவதற்
கியாது மையுற வில்லையே ! (5)

புலவர்களே! வஞ்சக எண்ணங் கொண்டவனை, பொய்யன்றி மெய்யே பேசாதவனை, பாவச் செயல்கள் அனைத்தையும் அஞ்சாது செய்வோனை, நீதியான செயல் ஏதும் செய்யாதானை பஞ்சமா பாதகம் செய்வோனை- நீரே மிகவும் சாதுவான குணங்கொண்டவர் எனப் புகழ்ந்து பாடினாலும் கிஞ்சித்தும் பொருள் கொடுப்பார் இவ்வுலகில் இல்லை, ஆனால், பொன்னொத்த செஞ்சடையையுடைய புண்ணியனாகிய எம்புகலூர் உறை இறைவனாரைப் போற்றிப் பாடினால் மனத்தில் தோன்றும் துன்பங்களை எல்லாம் ஒழித்திடுவான் என்பதற்கு சிறிதும் சந்தேகம் இல்லை.

மாசு-குற்றம்; அழக்கன்-குற்றமுடையவன்; வழக்கிலி-நல்லது செய்யும் பழக்கமே இல்லாதவன்; பஞ்சதுட்டன்-ஐந்துவித பாவங்களையும் அஞ்சாது செய்யும் தீயவன்-பஞ்சமா பா[illegible]-எவ்வுயிர்க்கும் தீமை ஏதும் செய்யாப் பண்பினன்.

நலமிலாதானை நல்லனே யென்று
நரைத்த மாந்தனை யிளையனே
குலமிலாதானைக் குலவனே யென்று
கூறினுங் கொடுப்பாரிலை
புலமெலாம் வெறிகமழும் பூம்புக
லூரைப் பாடுமின் புலவீர்கா
அமலமராதம ருலக மாள்வதற்
கியாதுமையுற வில்லையே ! (6)

புலவர்களே! நற்குணமேதும் இல்லாதவனை குண வானே! எனவும், நரைத்து இளைத்தவனை இளமை பொருந்தியவனே என்றும், நற்குலக் குடிப்பிறப்பு இல்லாத வனை, உயர்குடிப்பிறந்தவனே! எனவும் பொய்யுரைக் கூறிப் புகழ்ந்தாலுங் கூட பொருள் ஏதும் கொடுப்பார் இப்பூவுலகில் இல்லை. இதனை விடுத்து வயல்வெளிகளிலெல்லாம் தேனின் நறுமணம் கமழுகின்ற வளமிக்க புகலூர் இறைவனைப் பாடினால், அயற்சியின்றி அமரருலகம் ஆளலாம் என்பதற்கோர் ஐயமில்லை !

மாந்தன்-மனிதன்; குலவன்-நற்குடிப் பிறந்தவன்; புலம்-வயற் பகுதி; வெறி-வாசனை; அலமரா-அயற்சியற்ற.

**நோயனைத் தடந்தோளனே யென்று**
**நொய்ய மாந்தரை விழுமிய**
**தாயன்றோ புலவோர்க்கெலா மென்று**
**சாற்றினுங் கொடுப்பாரிலை**
**போயுழன்று கண்குழியாதே யெந்தை**
**புகலூர் பாடுமின் புலவீர்காள்**
**ஆயமின்றிப் போ யண்டமாள் வதற்**
**கியாது மையுற வில்லையே! (7)**

புலவர்களே! நோயால் வருந்தி உடல் மெலிந்தவனை தடந்தோள் வீரனே எனவும், எவர்க்கும் சற்றும் பொருள் கொடாத சிறுமைக் குணமுடையவனை, புலவர்களுக் கெல்லாம் வாரி வழங்கித் தாயெனப் பேணுபவன் எனவும் கூறிப் புகழ்ந்தும் பொருள் ஏதும் கொடுப்பாரில்லை, அவ்வாறு ஈயாதோர் வாசற்களுக்கு சென்றலைந்து பசிமிக அதிகமாகி கண்கள் குழிவிழுந்திட வருந்தாதீர் - இதனை விடுத்து, எந்தை யாகியப் புகலூர்ப் பெருமானைப் பாடினால், அண்டங் களையே ஆளும் பெருமையடையலாம் என்பதில் சந்தேகமே இல்லை.

நொய்ய-ஈயாத; விழுமிய-சிறந்த; சாற்றினாலும்-பலர் அறியக்கூறினாலும்; போயுழன்று-போய் அலைந்து; கண் குழிய-பசியின் காரணமாக கண்கள் பஞ்சடைந்து குழிதல்.

எள் விழுந்திடம் பார்க்கு மாகிலும்
ஈக்கு மீகில னாகிலும்
வள்ளலே யெங்கள் மைந்தனே யென்று
வாழ்த்தினுங் கொடுப்பாரிலை
புள்ளெலாஞ் சென்றுசேரும் பூம்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அள்ளற் பட்டழுந்தாது போவதற்
கியாது மையுற வில்லையே ! (8)

*புலவர்களே! ஒரே ஒரு எள் கீழே விழுந்து விட்டாலுங் கூட அதனை விடாது தேடிப் பார்ப்பவர்களாகிய கருமியையும், ஈ போன்ற சிற்றுயிர்களுக்குக் கூட ஏதும் கொடுக்க மனம் இல்லாதவனைப் போய் வள்ளலே! எம்மைக் காக்கவல்ல மைந்தனே எனப் பலவாக வாழ்த்திக் கூறினும் கடுகளவும் பொருள் தருவார் எவருமில்லை எனவே; பறவைக் கூட்டங்கள் எல்லாம் தங்களின் இரைக்காகச் சென்று சேரும். வளமிக்க புகலூர் இறைவனைப் பாடினால் அவன் இப் புவியில் பொருள் வேண்டி அலைந்து துயர் அடைந்து துன்பத்தில் அழுந்தாதபடி எல்லா நலமும் அருள்வான் என்பதில் சந்தேகம் வேண்டாம்.*

*புள்-பறவை; அள்ளர்-துயர்; அழுந்தாது-துன்பமுறாது; போவதற்கு-சாகும்வரை நலம்பெற்று நலமுடனே சாவதற்கு என ஒரு பாடம் உண்டு.*

கற்றிலாதானைக் கற்ற நல்லனே
காமதேவனை யொக்குமே
முற்றிலாதானை முத்தனே யென்று
மொழியினுங் கொடுப்பாரிலை
பொத்திலாந்தைகள் பாட்டறாப் புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அத்தனா யமருலக மாள்வதற்
கியாதுமையுற வில்லையே ! (9)

புலவர்களே! கல்லாதானைக் கற்றோன் எனவும் காமதேவனே எனவும், அறிவற்ற முட்டாளை அறிவிற்றேர்ச்சி யுற்ற முத்திக்குரியவனே என்றும் பொய்யுரை கூறிப் புகழினும் பொருள் ஏதும் கொடுப்பாரில்லை. எனவே மரப் பொந்துகளிலெல்லாம் ஆந்தைகள் கூடி மகிழ்வுடன் கூட அலறல் ஓசை யெழுப்பும் வளமிக்க எம் புகலூர் அண்ணலைப் பாடினால் தேவர் உலகிற்கே தலைவனாய் இருந்தாட்சி செய்யலாம் என்பதற்கு ஏதும் சந்தேகம் இல்லை.

ஆந்தைகள் தங்களின் உணவாகிய எலிகளை அதிகமாகப் பிடித்துண்டதால் மகிழ்வடைந்தன. பயிர்களை அழிக்கும் எலிகள் ஒழிந்ததன் காரணமாக வயல்கள் வளமிக்க தாயிற்று எனக் கொள்க. ஆந்தையின் அலறலை அமங்கல மாகக் கொள்ளுதல் பாடமன்று.

**தையலருக்கோர் காமனே சால**
**நல்வழிக்குடை யையனே**
**கையுலாவிய வேலனே யென்று**
**கழறினுங் கொடுப்பாரில்லை**
**பொய்கை வாவியின் மேதிபாய் புக**
**லூரைப் பாடுமின் புலவீர்காள்**
**ஐயனாய மருலக மாள் வதற்**
**கியாது மையுற வில்லையே ! (10)**

புலவர்களே! அழகில்லா குரூபியை, பெண்கள் விரும்பும் அழகுமிக்க மன்மதனே என்றும், முருகனைப் போன்றுள்ளவனே என்றும் பலவாராகக் கூறினும் பொருள் ஏதும் கொடுப்பார் இப்புவியில் இல்லை. ஆகவே, குளங் குட்டைகளிலெல்லாம் எருமைகள் கூட்டங் கூட்டமாய்ப் பாய்ந்துழல்கின்ற வளமிக்க புகலூர் அய்யனைப் பாடினால் தேவர் உலகிற் சென்று அதற்குத் தலைவனாய் நின்று ஆளலாம் என்பதற்குச் சந்தேகம் இல்லை.

தையல்-பெண்; காமன்-மன்மதன்; வேலன்-முருகன்; வாவி-சிறு குட்டை; மேதி-எருமை.

செறுவி னிற்செழுங் கமலம் ஓங்குதென்
புகலூர் மேவிய செல்வனே
நறவம் பூம்பொழில் நாவலூரன்
வனப் பகையப்பன் சடையன்றன்
சிறுவன்றொண்ட னூரன் பாடிய
பாடல்பத்தியை வல்லவர்
அறவானாரடி சென்று சேர்வதற்
கியாதுமையுற வில்லையே ! (11)

*செந்தாமரை மலர்கள் செழிக்கின்ற வயல்கள் நிறைந்த அழகிய திருப்புகலூரில், விரும்பி எழுந்தருளியுள்ள, செல்வனாகிய சிவனாரை, தேனிறைந்த பூம்பொழில்களை யுடைய திருநாவலூரனும், வனப்பகைக்குத் தந்தையும், சடையனார்க்கு மகனும், தொண்டனுமாகிய, நம்பி யாரூரான் பாடியுள்ள இப்பத்துப் பாடல்களையும் பாட வல்லவர்கள், அறத்தின் உருவினனாகிய அப்பெருமானது திருவடிகளை அடைவார்கள் என்பதற்கு சந்தேகம் ஏதும் இல்லை என்க.*

*செறு-வயல்கள்; கமலம்-தாமரை மலர்கள்; நறவம்-தேன்; வல்லவர்-பாடக்கூடிய திறம்படைத்தவர். அறவனாரடி-அறத்தின் வடிவமாகிய இறைவனார் திருவடிகள்.*

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோர்களின் திருப்புகலூர்த் தலப்பதிகங்கள் எட்டினை மட்டும் எடுத்தாய்வு செய்ததில் சுமார் எண்பது சொற்கள் நெற்குன்றவாணரின் அந்தாதியில் உள்ளது உள்ளவாறே எடுத்தாளப் பெற்றிருப்பது தெரிந்தது. மேலும் நுணுக்கமாக ஆய்வோர்க்குப் பல அதிக சொற்கள் ஒத்திருப்பதை அறியமுடியும்.

**ஒத்த சொற்களின் பட்டியல்-பாடல் எண்களுடன்**

*(அடைப்புக் குறிக்குள் இருப்பவை மூவர்தம் பாடல்களின் வரிசை எணகள்)*

அங்கம் 13,37,(69)
அணங்கு 54,87,(73)
அத்தர் 60 (40)
அம்பு 12,29,52,54 (9,12)
அமரர் 51,100 (65)
அரவம் 23 (11)
அரா 29 (5)
அரி 11,24,61,96 (77)
அருள் 14,87,93(48)
அலம் 44 (10)
அழல் 28,14,76 (28)
அன்பர் 16,30,73 (3,21)
அன்னம் 37 (16)
அனங்கன் 42 (72)
ஆயிழை 55 (43)
ஆரம் 38 (38)
ஆவி 29,4,62 (53)
இச்சை பேசி 93 (78)
இம்மை 93 (78)
இமையோர் 40 (2-23)
ஈசன் 18 (27)
ஐயர் 69,100 (10)

உயிர் 61 (77-90)
கயல் 35 (24)
களிறு 6 (72)
காமன் 41,84 (87)
குழை 17,60 (70)
குறித்து 18 (78)
கொன்றை மலர் 22 (42-75)
சடை 34,50,(21,29,56,58)
சிந்தை 11,67 (3)
சிலை 24 (71)
கொள்வது 47 (17)
கொன்றை 29,31,72,81,84,89
(13-56-14-27)
செல்வர் 43 (2)
சேவகர் 25 (24)
சேவடி 4,19 (3,39)
சோறு 93 (78)
தக்கன் 25 (39)
தனம் 93 (5)
தாள் 15, 94 (54)
திங்கள் 13 (13-14-59)
தெய்வம் 82 (49)

தேன் 12 (12)
தொண்டர் 93 (25-63)
தோற்றம் 78 (61)
துய்ய 37 (63)
முந்நீர் 60 (6)
நக 72 (79)
நான்முகன் 33 (74)
நின் மலன் 29 (75)
நீர்மை 70 (1)
நெஞ்சம் 98 (7)
பகை 20, 74 (69-72)
பண்டு 27 (63-72)
பணி 45, 51 (23-82-88)
பதி 70 (81)
பலி 17, 63, 99 (72)
பவனி 54 (54)
பழி 4 (60)
பாகத்தன் 86 (55)
பிரான் 8 (-18-36-53)
புகழ்ந்து 93 (78)
புலம் 13 (13)
புலவீர்காள் 93 (78)
புள் 17 (85)
பெருந்தகை 45 (8)
பொன்னடி 87 (74)
மருந்து 26 (56-71)
மலர் 91 (69)
மறை க.செ (3)
மால் 26 (9-74)
வண்டு 12 (25-28-55)
வயல் 22 (24-38-47)
வாள் 33 (76)
விசயன் 76 (79)
விசும்பு 3, 9 (51)
வெண்ணீறு 48 (58)
வேலோன் 17 (17)

## மூவர் பாடல்களின் அகர வரிசைப் பட்டியல்


| | |
|---|---|
| அக்காரணி வடமாகத்தார் | 37 |
| அங்கமே பூண்டாயனலாடியா | 69 |
| அண்டவானரமுதுண நஞ்சுண்டு | 63 |
| அருவரைத் தாங்கி னானு | 53 |
| அளியினார் குழலினார் | 48 |
| அன்னங்கன்னிப் பெடைபுல்கி | 16 |
| ஆணும் பெண்ணும்மென நிற்பர் | 18 |
| ஆர்த்தாருயிரடுமந்தகன் | 38 |
| இரைக்கும் பாம்பும் எறிதருதிங்களும் | 59 |
| இலவினார் மாதர்பாலே இசைந்து | 49 |
| ஈகனேறமர் கடவுளின்னமுது | 27 |
| ஈண்டாரழலினிருவரும் கைதொழ | 42 |
| உதைத்தார் மறலி யுருள | 39 |
| உய்யவேண்டில் எழு போத நெஞ்சே | 19 |
| ஊசலாமர வல்குல் என்சோர் குழல் | 60 |
| எண்ணுகேன் என் சொல்லி | 68 |
| எள் விழுந்திடப் பார்க்குமாகில் | 85 |
| ஒருவனையுமல்லாதுணரா | 77 |
| ஓணப்பிரானுமொளிர் | 57 |
| காத்திலேன் இரண்டும் மூன்றும் | 50 |
| காதிலங்கு குழையன் | 2 |
| கரிந்தார் தலையர் | 41 |
| கழனினோசை சிலம்பினோசை | 6 |
| கற்றிவிலாதானைக் கற்று நல்லனே | 86 |
| காணியேற் பெரிதுடையனே | 80 |
| குலவராக குலமிலருமா | 17 |
| குறிகலந்தவிசை | 1 |
| கையிலுண்டுழல்வார் | 32 |
| சாமவேதமொர்கீதமோதி | 30 |
| சீரணங்குற நின்ற செருவுறு | 31 |
| செய்தவத்தர் மிகுதேரர்கள் | 10 |
| செய்யமேனி வெளிய | 5 |

| | |
|---|---|
| செய்யார் வெண்ணுலர் | 34 |
| செறுவினிற் செழுமங்கலம் | 88 |
| தத்துவந்தலை கண்டறிவார் | 88 |
| தம்மையே புகழ்ந் திச்சைபேசி | 73 |
| தளிரிளங்கொடி வளர | 28 |
| தன்னைச் சரணென்று | 54 |
| துன்னக்கோவணச் சுண்ண | 58 |
| துன்னஞ்சேர் கோவணத்தாய் | 76 |
| தூமன் சுறவந்துதைந்த | 40 |
| தெருளாதோர் மூவெயில் | 71 |
| தென்சொல் விஞ்சமர் | 29 |
| தென்னிலங்கையரையன் | 8 |
| தேவார்ந்த தேவனைத்தேவர் | 74 |
| தையலருக்கோர் காமனே | 87 |
| தொண்டர்தண் கயமூழ்கி | 25 |
| நரைகள் போந்துமெய் தளர்ந்து | 81 |
| நலமிலாதானை நலனே | 83 |
| நாகம் வைத்த முடியான் | 9 |
| நீரின் மல்கு சடையன் | 4 |
| நீருமாய்த் தீயுமாகி நின்றாய் | 51 |
| நீரேறு செஞ்சடைமேனிலா | 72 |
| நெய்யாடி நின்மலனே நீலகண்டா | 75 |
| நேமியானும் முக நான்குடைய | 20 |
| நோயனைத் தடந்தோளனேயென்று | 84 |
| பகைத்திட்டார் புரங்கள் மூன்றும் | 44 |
| பட்டம் பானிறமதியம் | 23 |
| பண்ண வண்ணத்த ராகி | 26 |
| பண்ணிலாவும் மறை | 3 |
| புந்தியார்ந்த பெரியோர்கள் | 22 |
| புற்றில் வாழும் அரவம் | 11 |
| பூவும் நீரும் பலியும் சுமந்து | 15 |
| பெருங்கையாகிப் பிளிறி | 65 |
| பெருந்தாழ்சடைமுடிமேல் | 36 |
| பையரவக் கச்சையாய் | 70 |

பொங்கு தண்புனல் சூழ்ந்து 33
பொன்னளவார் சடைக்கொன்றை 56
பொறியிலா வழுக்கையோம்பி 47
பொன்னை வகுத்தன்னமேனி 55
பொன்னொத்த நிறத்தானும் 66
மடையினெய்தல் கருங்குவளை 14
மத்தகனாய் மதியாது மலைதனை எத்தி 67
மிடுக்கிலாதானை வீமனே 79
மின்னின் நேரிடையாக ளுமை 61
முப்பது முப்பத்தாறு முப்பது 46
முயல்வளாவிய திங்கள் 24
மெய்யுளே விளக்கை ஏற்றி 52
மேக நல்லூர்தியர் 35
மையரி மதர்த்த வொண்கண் 45
வஞ்ச நெஞ்சனை மா 82
வாழ்ந்த நாளும் இனிவாழும் 13
விண்ணினோர் மதிசூடிய 62
விரிசடையாய் வேதிய 73
வெங்கள் விம்முகுழலி 12
வெள்ளமார்ந்து மிளிர் 7
வேர்த்த மெய்யர் உடைவிட்டு 21

இவ்வெண்பத்தெட்டு பாடல்களைக் கொண்டு அநதாதியுடன் ஒப்பாய்வு செய்யப்பெற்றுள்ளது.

# அந்தாதி நூல்களின் பட்டியல்

| நூலின் பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|
| 1. அகத்தீசர் அந்தாதி | -சா. வேங்கடராமன் |
| 2. அகமது கபீனூற்றிலாகி ஆண்டகை மீது அந்தாதி | -இஸ்லாமியநூல் |
| 3. அகிலாண்ட நாயகி நிரோட்டக யமக அந்தாதி | -வடிவேல் சாமிப்பிள்ளை |
| 4. அகாரரந்தாதி | -சா. சிவானந்தன் |
| 5. அங்காளேஸ்வரியம்மன் அந்தாதி | -சண்முகனார் |
| 6. அத்திகிரியந்தாதி | -GOML-R-7338-7364 |
| 7. அத்திகிரிவரதன் அந்தாதி | -உ.வே.ச. நூலகம்,சென்னை. |
| 8. அந்தரி அந்தாதி | -காளிதாசர் |
| 9. அபிடேகநாதர் மாலை அந்தாதி | -வீரமாமுனிவர் |
| 10. அபிராமி அந்தாதி | -அபிராமி பட்டர் |
| 11. அம்பிகை அந்தாதி | -பிரபாகரன் |
| 12. அம்மை பாதி அப்பன் பாதி அந்தாதி | -கே. எம்.பாலசுப்பிரமணியன் |
| 13. அரங்த்திகதழகலந்தாதி | -தண்டபாணிசுவாமிகள் |
| 14. அரசிலியந்தாதி | -அ. சிதம்பரநாத முதலியார் |
| 15. அரிஏக பாதத்தந்தாதி | -தண்டபாணிசுவாமிகள் |
| 16. அருகன் அந்தாதி | -நரசிங்கப்பெருமாள் |
| 17. அருட்பெருஞ்சோதி | -சிவசெல்வராஜ்-2005 |
| 18. அருணகிரி அந்தாதி | -குகை நமச்சிவாய முதலியார் |
| 19. அருள்வேட்டல் அந்தாதி | -அண்ணாமலையார் |
| 20. அழகர் அந்தாதி | -GOML-R-2580 |
| 21. அவிநாசிக் கருணை அந்தாதி | -சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| 22. அற்புதத்திருவந்தாதி | -காரைக்கால் அம்மையார் |
| 23. அறப்பளீசர் அந்தாதி | -மு.அ.அருணாசலமுதலியார் |
| 24. அன்னை அழுங்கல் அந்தாதி | -வீரமாமுனிவர் |
| 25.அன்னை கருமாரி அந்தாதி | -அருட்கவி.அரங்க சீனிவாசன் |

25. அன்னை கருமாரி அந்தாதி -அருட்கவி.அரங்க சீனிவாசன்
26. அன்னிபெசன்ட் அந்தாதி -கே. எஸ். ராமசாமி அய்யர்
27. அன்னை மீனாட்சி அந்தாதி -சோமசுந்தரன்
28, அன்னை வேளாங்கண்ணி அந்தாதி -ஞான ஜோசப் ஜவஹர்
29. ஆங்கிலியர் அந்தாதி -தண்டபாணி சுவாமிகள்
30. ஆத்திச்சூடி அந்தாதி -சக்தி முத்துக்குமாரபிள்ளை
31. ஆயிரம் காளியம்மன் அந்தாதி -த. தட்சணாமூர்த்தி
32. ஆறெழுத்து அந்தாதி -ரெ. பரமசிவம்-1739, சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்
33. ஆரேழ் அந்தாதி -அகத்தியர்-1874, ரோஜா முத்தையா நூலகம், சென்னை
34. ஆவினன்குடி அந்தாதி -இராமநாதன் செட்டியார்
35. ஆதிபுரி நிரோட்டக ககர யமக அந்தாதி -க. தி. கந்தசாமி கவிராஜர்
36. ஆவினங்குடி அந்தாதி -இராமநாதன் செட்டியார்
37. ஆரூர் வயலூர் வெண்பா அந்தாதி -சுந்தரநாதப்பிள்ளை
38. ஆளுடை பிள்ளையார் திருவந்தாதி -நம்பி ஆண்டார் நம்பி
39. ஆறெழுத்து அந்தாதி (2) -அகத்தியமுனிவர்
40. ஆறைப் பதிற்றுப் பத்தந்தாதி -ஏ.டி.இராமலிங்கம் பிள்ளை.
41. ஆன்மநாதன் பதிற்று நூற்றந்தாதி -ஆயிரம் செய்யுட்கள்
42. இரண்டாந்திருவந்தாதி -பூதத்தாழ்வார்
43. இராமபிரான் நூற்றந்தாதி -வித்வான் தே. வீரராகவன்
44. இராமானுஜ நூற்றந்தாதி -திருவரங்கத்துமுதனார்
45. இலக்குமி அந்தாதி -உ.வே.சா. நூலகம், சென்னை.
46. இளசை பதிற்றுப் பத்தந்தாதி -சிவஞான சுவாமிகள்
47. இளமுலை அம்பிகை அந்தாதி -வி. சாமிநாதப்பிள்ளை-1928
48. ஈங்கோய்மலை அந்தாதி -கே.எம்.பாலசுப்பிரமணியம்
49. உலகந்தாதி -GOML-M.ss.239
50. உலகம்மை கலித்துறை அந்தாதி -நமச்சிவாயக் கவிராயர்

51. எட்டெட்டு அந்தாதி -சுவடி-240-GOML- சென்னை
52. எதிராசரந்தாதி -மணவாள மாமுனிவர்
53. ஏகத்தாள் இதழகலந்தாதி -தண்டபாணி சுவாமிகள்
54. ஐயாற்று யமக அந்தாதி -உ.வே.ச.நூலகம், சென்னை
55. ஒரு தொடைச் செய்யுள் நிரோட்டகக் குகனந்தாதி -GOML-1126
56. ஒற்றைக்கடை விநாயகர் அந்தாதி -முரா. அருணாசலககவிராயர்
57. ஓங்காரத் திருநூற்றந்தாதி -கந்தகோட்டம்-டாக்டர்- பி. பாண்டியன்
58. கங்கை அந்தாதி - GOML - சென்னை
59. கலைமகளந்தாதி -செ. சீனித்தம்பி
60. கச்சி ஆனந்த ருத்திரேசர் பதிற்றுப்பத்தந்தாதி -கச்சியப்பசுவாமிகள்
61. கச்சி இதழகழந்தாதி -ப. கார்த்திகேய முதலியார்
62. கடவுளந்தாதி -இராம சுவாமியாபிள்ளை
63. கணபதி அந்தாதி -GOML-MSS-492
64. கந்தர் வெண்பா பதிற்றுப்பத்தந்தாதி -கணபதி சுப்பிரமணிய அய்யர்
65. கந்தரந்தாதி -அருணகிரிநாதர்
66. கம்பரந்தாதி -சிவஞானமுனிவர்
67. கருணாம்பிகை அந்தாதி -GOML R. 4398-7419
68. கருணை அந்தாதி -கருணைதாசர்
69. கருணையம்மன் அந்தாதி -ந. பாக்யசுந்தரி
70. கருவைக் கலித்துறையந்தாதி -GOML-MSS-492
71. கருவைநாதர் வெண்பா அந்தாதி -GOML R. 8773
72. கருவை பதிற்றுப்பத்து வெண்பா அந்தாதி -GOML PB 8707
73. கல்வளை அந்தாதி -சின்னத்தம்பிப் புலவர்
74. கலசைப்பதிற்றுப் பத்தந்தாதி -சிவஞானசுவாமிகள்
75. கலிவிடந்தாதி -உ.வே.சா. நூலகம், சென்னை.
76. கழுக்குன்ற நாயகி அந்தாதி -கவிஞர் இளம்பூரணன்
77. கழுகுமலைத் திருப்புகழ் அந்தாதி -புலவர் நீலமணி

78. களந்தைக் கயிலாயநாதர் வெண்பா அந்தாதி -உ.வே.சா. நூலகம், சென்னை
79. களந்தைக் கலித்துறை அந்தாதி -பள்ளிகொண்டான்
80. கற்பகவிநாயகர் பதிற்றுப் பத்தந்தாதி -சொக்கலிங்கஞ்செட்டியார்
81. கற்பகாம்பிகை அந்தாதி -என். குருசாமி
82. காசி ராமேஸ்வரம் வெண்பா அந்தாதி -சோமசுந்தரன்
83. காந்தி கலித்துறை அந்தாதி -ராய சொக்கலிங்கம்
84. காமகோட்டத்தபிராமி அந்தாதி -தியாசபிகல் சொசைடி நூலகம் H.255-Ka-Ta
85. காமாக்ஷியம்மன் அந்தாதி -எஸ். ஆர். கணபதி செட்டியார்
86. காமாக்ஷியம்மை திருவந்தாதி -காமாக்ஷிதாசர்
87. காழி அந்தாதி -அருணாசலக்கவிராயர்
88. குடந்தை அந்தாதி -மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை
89. குணங்குடிநாதர் பதிற்றுப் பத்தந்தாதி -குணங்குடிதாஸர்
90. கும்பேசர் வெண்பா அந்தாதி -டாக்டர் உ.வே.சாமிநாதய்யர்
91. குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி -குமரகுருதாச சுவாமிகள்
92. குமரன் அந்தாதி -மாம்பழக் கவிச்சிங்க நாவலர்
93. குமரி பகவதியம்மன் அந்தாதி -மா. பகவதியம்மன்
94. குருந்தாசலப் பதிற்றுப் பத்தந்தாதி -கந்தசாமி சுவாமிகள்
95. குருநாதன் அந்தாதி -தண்டபாணி சுவாமிகள்
96. குளத்தூர் பதிற்றுப் பத்தந்தாதி -மாதவச் சிவஞான யோகிகள்
97. குளத்தூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி -மீனாட்சி சுந்தரம்பிள்ளை
98. குன்றுதோறாடும் சண்முகப் பெருமான் நிரோட்டக யமக அந்தாதி -சௌந்தர பாரதி
99. குன்றைத் திரிபந்தாதி -பாலசுப்பிரமணிய அய்யர்
100. கூடலந்தாதி -எம். எஸ. பிச்சுவையர்
101. கைலைபாதி காளத்திபாதி அந்தாதி -நக்கீரதேவனார்

102. கொடுமுடிவெண்பா அந்தாதி -பி. ஆர. கிருஷ்ணமாச்சாரியார் 1909
103. கோமதி அந்தாதி -சங்கரனார்
104. கோயில் அந்தாதி -கல்கத்தா தேசீய நூலகம்
105. சக்திப் பிரவாக அந்தாதி -அருள்நம்பி
106. சங்கரன் திருவந்தாதி -வி. மு. சண்முகனார்
107. சங்கர நயினார் கோவில் அந்தாதி -தியாசபிகல் சொசைடி நூலகம் H..080-S.T.60
108. சடகோபர் சதக அந்தாதி -தண்டபாணிசுவாமிகள்
109. சடகோபரந்தாதி -கம்பர்
110. சடாக்கர அந்தாதி - GOML No. 250-T.
111. சந்தக் கலித்துறை அந்தாதி -தண்டபாணி சுவாமிகள்
112. சமயாதீத ஏழுகூற்றந்தாதி -சரசுவதி மகால் நூலகம்,
113. சமரச சந்தக் கலித்துறை அந்தாதி -உ.வே.சா.நூலகம், சென்னை
114. சமரபுரி போரூர் அந்தாதி -சுப்பராயலு உபாத்தியாயர்
115. சரசுவதி அந்தாதி -கம்பர்
116. சற்குருவெண்பா அந்தாதி -ச. மு. கந்தசாமிப்பிள்ளை
117. சித்தர் அந்தாதி -GOML TD-145
118. சித்திர யமக அந்தாதி -தொழுவூர் வேலாயுத முதலியார்
119. சிதம்பரக் கலித்துறையந்தாதி -தியாகேச முதலியார்
120. சிதம்பரம் இதழகலந்தாதி -தண்டபாணிசுவாமிகள்
121. சிதம்பரம் நடேசர் அந்தாதி -ஷண்முக முதலியார்
122. சிதம்பர வெண்பாவந்தாதி -தியாகேச முதலியார்
123. சிராமலைத் தாயுமானவர் அந்தாதி -வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார்
124. சிராமலைப் பதிற்றுப்பத்தந்தாதி -உ.வே.சா.நூலகம், சென்னை
125. சிலம்பைப் பதிற்றுப்பத்தந்தாதி -சின்னயச்செட்டியார்
126. சிவகாமி அம்மன் அந்தாதி -உ.வே.சா.நூலக வெளியீடு
127. சிவகிரி ஒலியலந்தாதி -தேவநேயப் பாவாணர் நூலகம், சென்னை.
128. சிவகிரிப் பதிற்றுப்பத்தந்தாதி -பாலகுருசாமி
129. சிவசீரிய பதிற்றுப்பத்தந்தாதி -உ.வே.சா.நூலகம், சென்னை
130. சிவகிரி யமக அந்தாதி -மாம்பழக் கவிச்சிங்க நாவலர்

131. சிவபூசை அந்தாதி -அழகிய சொக்கநாதவரோதயன்
132. சிவபெருமான் ஏகபாதத்தந்தாதி-உ.வே.சா.நூலகம், சென்னை
133. சிவபெருமான் தனித்திரு அந்தாதி -அ.வி. கிருஷ்ணசாமி அய்யர்.
134. சிவபெருமான் திருவந்தாதி -பரணதேவநாயனார்
135. சிவபெருமான் திருவந்தாதி -கபிலதேவ நாயனார்
136. சிவயோக நாயகி அந்தாதி -கு. செ. இராமசாமி
137. சிறைவிடந்தாதி -கன்னிமாரா நூலகம், சென்னை.
138. சிஷ்டரந்தாதி -சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்
139. சுந்தரவல்லி அந்தாதி -பெ. கோவிந்தசாமி
140. சுப்பிரமணியரந்தாதி -GOML -R-351-3771.
141. செந்தமிழத்தாய் அந்தாதி -பண்ணை ஷண்முகம்
142. செம்பொனந்தாதி -உ.வே.சா.நூலகம், சென்னை
143. செளுவை அந்தாதி -சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்
144. சென்னைக் கந்தசாமி வெண்பா அந்தாதி -தண்டபாணி சுவாமிகள்
145. சென்னைக் கந்தசாமி இதழகல் அந்தாதி -தண்டபாணி சுவாமிகள்
146. சென்னைத் திரிபந்தாதி -பாண்டிச்சேரி நூலகம்
147. சென்னை முருகன் பதிற்றுப் பத்தந்தாதி -தருமபுர ஆதீன நூலகம்
148. சேக்கிழார் நூற்றந்தாதி -வே. ரா. மாதவன்
149. சேடமலை அந்தாதி -பள்ளிகொண்டான்பிள்ளை
150. சேடமலை பதிற்றுப் பத்தந்தாதி -ரோஜா முத்தையா நூலகம் சென்னை
151. சொரூபானந்தர் கலித்துறையந்தாதி -தத்துவராயர்
152. செளந்தரநாயகி அந்தாதி -தருமபுர ஆதீன நூலகம்
153. செளந்தரி அந்தாதி(வேறு) -தருமபுர ஆதீன நூலகம்
154. ஞான அந்தாதி (வேறு) -வேதநாயக சாஸ்திரி
155. ஞான அந்தாதி (வேறு) -குமாரசுவாமி முனிவர்
156. தணிகை அந்தாதி -அ.மு.பரமசிவானந்தம்
157. தர்மதேவி அந்தாதி -அவிரோதி ஆழ்வார்.

158. தவத்துறையந்தாதி –சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்
159. தன்னையந்தாதி –யாழ்ப்பானத்து முருகேசய்யர்– கல்கத்தா தேசீய நூலகம்
160. தாயுமானேஸ்வரர் பதிற்றுப் பத்தந்தாதி –நாகமுத்துப் பாவாணர்
161. திண்ணபுர அந்தாதி –சோ. சிங்காரவேலன்
162. திருக்கச்சித்தேப்பெருமாள் அந்தாதி –சீனிவாசய்யர்–1908
163. திருக்கருகாவூர் பதிற்றுப் பத்தந்தாதி –கோவிந்தபிள்ளை (கரந்தை தமிழ்ச்சங்க நூலகம்)
164. திருக்கருவை வெண்பா அந்தாதி –பண்டித இராம சுப்பிரமணிய நாவலர்
165. திருச்சுழியல் வெண்பா அந்தாதி–கி. சுவாமிநாதன்
166. திரிசிராமலை அந்தாதி –வேம்பை நாராயணன்
167. திரிசிராமலை பதிற்றுப் பத்தந்தாதி –உ.வே.சா.நூலகம், சென்னை
168. திரிபுரை அந்தாதி –ஈங்கோய்–லலிதா–1964
169. திருஅருள் அந்தாதி –கிருத்தவ சமயநூல்
170. திருஏகம்ப உடையார் திருவந்தாதி –பட்டினத்தார், புதுவை நூலகம்
171. திருஏரகம் வெண்பா அந்தாதி –சிவஞான சுவாமிகள்
172. திருக்கடன் மல்லைப் பதிற்றுப் பத்தந்தாதி –பையனூர் வரதராசப்பிள்ளை
173. திருக்கருவைக் கலித்துறை அந்தாதி –அதிவீரராமபாண்டியன்
174. திருக்கருவை பதிற்றுப் பத்தந்தாதி –அதிவீரராமபாண்டியன்
175. திருக்கருவை வெண்பா அந்தாதி –அதிவீரராமபாண்டியன்
176. திருக்கருவை வெண்பா அந்தாதி (வேறு) –பண்டித ராமசுப்பிரமணிய நாவலர்
177. திருக்கழுக்குன்றத் திரிபந்தாதி –ஜகந்நாத நாயகர்

178. திருக்குடந்தைத் திரிபந்தாதி -மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

179. திருக்குற்றால யமக அந்தாதி -திருமூலர்

180. திருக்குற்றால யமக அந்தாதி(வேறு) -திரிகூடராசப்பகவிராயர்

181. திருக்குறள் அந்தாதி -சிதம்பரம்-அண்-பல். நூலகம்

182. திருக்கோகர்ண அந்தாதி -சுப்பிரமணிய அய்யர்

183. திருச்சிராப்பள்ளி சிவன் திரிவந்தாதி - உ.வே.சா.நூலகம், சென்னை

184. திருச்சிராமலை யமக அந்தாதி -மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

185. திருச்சிற்றம்பல யமக அந்தாதி -சபாபதிப்பிள்ளை

186. திருச்சிற்றம்பல் வெண்பா அந்தாதி -சி. தியாகராஜ செட்டியார்

187.திருச்சிற்றம்பல வெண்பா அந்தாதி (வேறு) -தியாகேச முதலியார்

188. திருச்சுழியியற் கொம்பிலா அந்தாதி -உ.வே.சா.நூலகம், சென்னை

189. திருச்சுழியியற் வெண்பா அந்தாதி -பி. ஆர். கிருஷ்ணமாச்சாரியார்

190. திருச்செங்காட்டன்குடி யமக அந்தாதி -நல்லூர்த் தியாகன்

191. திருச்செந்தூர் யமக அந்தாதி -அ. சிவசம்புப் புலவர்

192. திருச்செந்திநிரோட்டக யமகவந்தாதி -சிவப்பிரகாச சுவாமிகள்

193. திருச்செந்தில் வெண்பா அந்தாதி -சிவானந்த சாகர யோகி

194. திருச்செந்தூர் திரிவந்தாதி -உ.வே.சா.நூலகம், சென்னை

195. திருச்செந்தூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி -தேவநேயப்ப ாவாணர் நூலகம், சென்னை

196. திருச்சேறை நிரோட்டக யமக அந்தாதி -GOML -R-3765.

197. திருஞான சம்பந்தர் பதிற்றுப்
பத்தந்தாதி -GOML -R-4848.
198. திருத்தணிகை யமக அந்தாதி -சொக்கலிங்கதேசிகர்
199. திருத்தணிகை வெண்பா
அந்தாதி -சண்முக முதலியார்
200. திருத்தவத்துறைக் கலித்துறை
அந்தாதி -உ.வே.சா.நூலகம், சென்னை
201. திருத்தவத்துறை திரிபந்தாதி -உ.வே.சா.நூலகம், சென்னை
202. திருத்தவத்துறைப் பெருந்திருப்
பிராட்டியார் அந்தாதி -ந. அழகர்சாமி
203. திருத்தில்லை யமக அந்தாதி -மகாவித்வான்
மீனாட்சிசுந்தரம் பிள்ளை
204. திருத்தென்சேறை
யிதழகரலந்தாதி -உ.வே.சா.நூலகம், சென்னை
205. திருத்தொண்டர் திருவந்தாதி -நம்பியாண்டான் நம்பி
206. திருநாவுக்கரசர் பதிற்றுப்
